தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு

# திருவையாற்றுப் புராணம்

## பஞ்சநத மான்மியம்

அருஞ்சொல் உரையுடன்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம்
தஞ்சாவூர்.

1991

விலை ரூ. 44/-

# திருவையாற்றுப் புராணம்

## பஞ்சநத மான்மியம்

பதிப்பாசிரியர்
பேராசிரியர். சி. கோவிந்தராசனார்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல் நிலையம், அரண்மனை
தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் உரை

திருவையாறு என்னும் இத்தலம் தஞ்சாவூர் திருமானூர் சாலையில் தஞ்சைக்கு வடக்காக 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இது சோழ நாட்டுத் தேவாரத் தலங்கள் வரிசையில் காவிரியின் வடகரைத் தலமாகப் போற்றப் பெறுகின்றது. அப்பர் சுவாமிகளுக்குக் கயிலை தரிசனம் அளித்தது இத்திருத் தலமாகும். சோழப் பெருமன்னர்களால் எடுக்கப் பெற்ற ஐயாறப்பர் திருக்கோயில், வடகயிலாயம், தென்கயிலாயம் (லோகமா தேவீச்சரம்) ஆகிய மூன்று கற்றளிகளை உடையது திருவையாறு ஆலயமாகும். நாதப் பிரம்மம் என்று அழைக்கப் பெறும் ஸ்ரீ தியாகய்யர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பதியும் இவ்வூராகும்.

ஸ்ரீ தியாகய்யர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராவர். இவர் வடமொழி-யிலும், தெலுங்கிலும் சிறந்த புலமை பெற்றவர். இவர் கடைசிக் காலத்தில் சந்நியாசம் வாங்கிக் கொண்டதால் இவருக்கு ''நாத பிரம்மானந்தர்'' என்கிற பெயர் கொடுக்கப்பட்டது. இவர் சமாதி இத்திருத்தலத்தில் இருப்பதால், ஆண்டு தோறும் இவருடைய நினைவு நாள் புஷ்ய பகுள பஞ்சமியன்று இவ்வூரிலும், மற்ற ஊர்களிலும் வெளிநாடுகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அது சமயம் தொடர்ந்து தியாகராஜ ஆராதனை பல இசை வித்துவான்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

பஞ்சநதம் என்று வடமொழியில் கூறப்பெறும் திருவையாறு திருத்தலத்தின் புராணப் பெருமையினைப் பஞ்சநதமான்மியம் என்னும் வடமொழி நூல் விரித்துரைக்கின்றது. தஞ்சை நாயக்க அரசர்களின் மதி அமைச்சராய்த் திகழ்ந்த கோவிந்த தீட்சிதரின் வேண்டுகோளுக்கிணங்க பஞ்சநத மான்மியம் தமிழில் பாடல் வடிவில் எழுதப் பெற்றதை இந்நூலின் பாடல் ஒன்று கூறுகின்றது நூலாசிரியரின் இயற்பெயர் குறிக்கப்பெறவில்லையாயினும், அவரது பிற பெயர்களாக வேதப்-பிரியன், சிரவண மன்னன் என்ற பெயர்களை நூலின்கண் உள்ள குறிப்புகளால் அறியமுடிகிறது.

கி. பி. 17-ம் நூற்றாண்டில் மலர்ந்த இத்தமிழ் நூலினை ஏட்டுச் சுவடியிலிருந்து நூல் வடிவாகக் கரந்தைப் புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள் செம்மையுற நன்கு பதிப்பித்துள்ளார். அவருக்கு எம் மனமார்ந்த பாராட்டுக்கள்.

இதுபோன்ற பல அரிய நூல்களை வெளியிட நிதியுதவி புரிந்து வரும் நடுவண் அரசுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்.

26–10–91

**தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர் (பொ)
சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

# வேண்டுகோள்

கருணை உள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களைப் பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்துள்ளனர். அவை பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடை-வதற்கு முன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்து உதவினால் மக்களுக்குப் பயன்படும் வகையில் புத்தக உருவில் வெளியிடப்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும் சுவடி எழுதியோரும் அழியாப்புகழைப் பெறுவர். அவை பதிப்பாக வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர் பொறுப்பு
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

# முகவுரை

பாரதபூமி புண்ணியத் தலங்கள் நிறைந்த பூமியாகும். இமயத்திலமைந்த திருக்கயிலாயம் முதலாக, தென்கோடிமுனையிலமைந்த கன்னியாகுமரி அம்மன் திருக்கோயில் வரையில் எண்ணிலாத திருக்கோயில்கள் விளங்குகின்றன. மூர்த்தி எழுந்தருளிய அற்புதத்துடன் புண்ணியம் தரும் தீர்த்தங்களும் பொருந்திய நல்லிடங்களே தலங்களாகும்.

அவை சைவ வைணவ சமயங்களின் சார்பில் பெருகி நிற்பனவாயினும், இந்திய மக்களின் சமய ஒருமைப்பாட்டிற்குரிய சான்றாகவே விளங்குகின்றன. இவ்வாறமைந்த பழமைக்குரிய திருக்கோயில் தலங்களுள், தமிழகத்தில் காவிரியாற்றின் இருகரைகளிலும் அமைந்துள்ள சிவத்தலங்கள், தென்கரைத் தலங்கள் வடகரைத் தலங்கள் என்ற குறிப்புடன் வகை செய்யப்பட்டுள்ளன. அவற்றுள், சோழநாட்டில், காவிரியின் தென்கரையிலமைந்த சிவத்தலங்களுள் திருவையாறு மிகச்சிறந்த பழமைநிறைந்த புண்ணியத் தலமாகும்.

இத்தலத்தினைத் தேவாரமுதலிகள் மூவரும் பாடி வழிபட்டுள்ளனர். காவிரிக் கரையில் சிவத்தலங்கள் பலவிருந்தும், இத்தலத்தை மட்டும்

''அழகார் திரைக் காவிரிகோட்டத்
தையா றுடைய அடிகள்''

என்ற சிறப்புடன் சுந்தரர் பாடலில் குறித்திருப்பது இதன் மாண்பினைக் குறிப்பதாகும்.

இத்தலத்தின் அழகிய இயற்கை வளத்தினையும், பக்திக்கும் முத்திக்கும் இடமாகும் தனிச்சிறப்பினையும்.

முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளம் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்கள் எம்பெருமான் எனஇறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறற்கே ஆளாய் நான் உய்ந்தேனே.

என்று திருநாவுக்கரசர் அகங் குழைந்து பாடியுள்ளார்.

திருவையாற்றுத் தலத்தின் தெய்வச் சிறப்பியல்புகளை விளக்கும் புராணமே இந்நூலாகும். தலங்களைப் பற்றிய தெய்வீகச்சிறப்பினையும் சமயநெறியில் மக்கள் அடையும் பயனையும் கூறும் நூல்களே புராணங்கள் என்று பெயர் சூட்டப் பெற்றுள்ளன. புராணம் என்பதற்குப் பழமையைக் கூறுவது என்பது பொருளாகும். இதனைத் ''தொன்மம்'' என்று தொல்காப்பியம் கூறும். புராணங்கள் தமிழ் வழக்கிலும் வடமொழி வழக்கிலும் மிகுதியாக வெளிவந்துள்ளன. அவற்றில் தெய்வீகச் செயல்களையும் வேதாகம நியதிகளையும் விளக்கும் புராணங்கள் பதினெட்டென்று தொகுத்து வழங்கியுள்ளனர்.

தமிழ்ப்புலவர்களைக் கொண்டு பண்டைய அரசர்கள் தாம் அமைத்த கோயில்களுக்குப் புராணம் செய்யச் செய்துள்ளனர். அம்முறையிலேயே பழமையான கோயில்கட்டும் அரசர்களின் விருப்பத்தாலும், புலவர்களின் பக்தித்திறத்தாலும் கி. பி. 19 - ஆம் நூற்றாண்டு வரையில் புராணங்கள் தோன்றியுள்ளன

தமிழில் புராணம் பாடிய புலவர்கள், கடவுள் வாழ்த்துக்கள், நாட்டுச்சிறப்பு, நகரச்சிறப்பு, தலச்சிறப்பு, மூர்த்திச் சிறப்பு, தீர்த்தச்சிறப்பு ஆகிய அமைப்புடன் கதை நிகழ்ச்சிகளையும் இலக்கண விதிமுறைப்படி செய்யுள் வடிவில் செய்துள்ளனர். அத்தகையசார்பிலேயே திருவையாற்றுப் புராணம் செய்யப்பட்டுள்ளது.

இப்புராணம், ''திருவையாற்றுப் புராணம் - பஞ்சநத மான்மியம்'' என்ற பெயரால் குறிக்கப் பெறுகின்றது. திருவையாற்றுப் புராணத்தின் உள்ளுறையனைத்தும் தலத்தின் மகிமையினை தர்மதான நெறிமுறைகளினால் காட்டப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும். அவை, இத்தலத்தில் வசித்தல், வந்து தங்குதல், துன்பகாலத்தில் தஞ்சம் புகுதல், வயது மூப்படைந்த காலத்தில் வந்து தங்கியிருந்து இயற்கையடைதல். முதலிய செயல்களால் பெறப்படும் புண்ணிய பலன்கள் நன்மைகள் ஆகிய அனைத்தினையும் இப்புராணம் நன்குபுலப்படுத்துகின்றது. மற்றும்,

இத்தலத்தில் வாழும் வேதியர்கட்கு, அன்னதானம், நெல் வயல் தானம், அரிசி தானம், பொன் தானம், தான்ய வகை தானம், பட்டாடை தானம், குடியிருப்பு மனை வீடு தானம், மா பலா வாழை தோட்ட தானம் ஆகிய சிறந்த தானங்களை வேதாகம யாகாதி நியதிகளின் வழி செய்யின் செய்தார் பெறும் பலன்களை இப்புராணம் மகரிஷிகளின் வாசகமாக உணர்த்துகின்றது.

மூதாதையர்க்கு இத்தலத்தில் வேதியர் வழி கர்மாதிகள் செய்யின் பிதுர்க்கள் பெறும் நிறைவினை விளக்குவதுடன், எத்தகைய பாபம் செய்தாராயினும் இத்தலத்தில் வேதியர் வழி ஸ்மிருதி நெறியில் கிருச்சிரவிரத பிராயச்சித்தம் அனுட்டிப்பார்களாயின், பாபங்கள் அனைத்தும் நீங்குதலோடு, அவர்கட்குக் கண்ணோய் விலகி, முத்தியும் சித்திக்கும் என்ற பாபவிமோசன பிராயச்சித்தங்கள் கிரிச்சிரவத்தியாயத்தால் கூறப்பட்டுள்ளது. மேலும்,

மக்களேயன்றி, இத்தலத்திற்கு வந்து காவிரி நதியில் நீராடி, பிரணதார்த்திகரராம் ஐயாறப்பனை வழிப்பட்ட எவ்வுயிரும் நற்பேறு பெறுமென்பதனை நால்வகை விலங்குகள் நற்கதி பெற்ற சருக்கத்தால் ஆசிரியர் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

இப்புராணத்தினை இயற்றிய ஆசிரியர் பெயர் சுவடியில் குறிக்கப்பெறவில்லை. ஆயினும், வேதப்பிரியன், சிரவணமன்னன் என்ற பெயர்களால் ஆசிரியர் தமது சிறப்புப் பெயர்களைப் பாடல்களில் வழங்கியுள்ளார்.

ஆசிரியர் வடமொழிப்புலவராகவும் வேதாகம நெறிமுறைகளில் தேர்ச்சி பெற்றாராகவும், தமிழில் பாடல்கள் இயற்றும் பயிற்சியுடையாராகவும் இருப்பதனை நூன் முறையால் அறியப் பெறுகின்றது.

ஆசிரியர், அவையடக்கமாகக் கூறியுள்ள பாடலொன்றில்.

''மலிபுனல்சூழ் சோணாடு தஞ்சையிற்
காத்திடு மரசர் மதியமைச்சன்
ஒலிமறைதேர் கோவிந்த தீக்ஷதராயன்
திருவாக் குடைமையாலே
கலியுகத்துச் சகனாண்டு
மூவைஞ்ஞூற்றிருபதின்மேல் காணுமேழாய்
பொலிவருடத் தையாற்றுப் புராணம்
வடமொழி தமிழாற் புகலலுற்றேன்.''

என்று கூறுவதால், தஞ்சையை ஆண்ட விசயநகர நாயக்கமன்னர் அவையில் தலைமை மந்திரியாக இருந்த கோவிந்த தீட்சதர் காலத்தில் நூலாசிரியர் இருந்தவரென்பதும், தீட்சதரின் வேண்டுகோளின் படியே திருவையாற்றுப் புராணம் செய்தாரென்பதும், இக்காலம், கலியுகத்துச் சகவாண்டு - 1527 என்பதும் புலனாகின்றது.

கோவிந்த தீட்சதர் பன்மொழிப்புலமை பெற்ற மதிநுட்பம் வாய்ந்த அமைச்சராவார். தஞ்சையரசர் சேவப்ப நாயக்கரின் மகன் அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் தீட்சதர் அமைச்சராக இருந்துள்ளார். அச்சுதப்ப நாயக்கர் ஆட்சிக் காலம் கி. பி. 1605-ல் திருவையாற்றுப் புராணம் செய்யப்பெற்றுள்ளது.

இத்தலத்திற்குத் தமிழில் அச்சாகியுள்ள புராணம் ஒன்றுள்ளது. அந் நூல் காலவழக்கில் அருகியுள்ளது. அப்புராணச் செய்திகளினின்றும் இப் புராணம் முற்றிலும் வேறுபட்டதாகும்.

இப்புராணத்தின் மூலச்சுவடியில் பல ஏடுகள் சிதிலமடைந்துள்ளதனை அறிய முடிகின்றது. படியெழுதிய போதமைந்த பேதங்களைத் திருத்தஞ் செய்வதற்கு அமைவின்மையினால், Copied Volume - எனும் கைப்பிரதியிற் கண்டுள்ளவாறே சில பாடல்கள் தரப்பட்டுள்ளன.

பொதுநோக்கில் இப்புராணம் திருவையாற்றுத் தலத்தின் தருமதான பிராயச்சித்த மகிமையினை மக்கட்கு உணர்த்துவதாகவே இருப்பதனை சிவநெறியாளர் யாவரும் அறிந்து பயன்பெறுவதற்குரியதாகும்.

இப்பணியினை யான் மேற்கொள்ளுதற்குதவிய மாவட்ட ஆட்சியர் அவர்கட்கும் அண்மையில் பதவி ஏற்று அரும்பணியாற்றிவரும் சரசுவதிமகால் நூலக இயக்குநர் பேராசிரியர். **மு. சதாசிவம்**, எம். ஏ., எம். லிட்., அவர்கட்கும், நூலக நிர்வாகர் திரு. **அ. பஞ்சநாதம்** எம்.ஏ., எம். லிங். சயி., அவர்கட்கும், தஞ்சை ராம் பிரிண்டர்ஸ் அவர்கட்கும், எனது அன்பு நிறைந்த நன்றி உரியதாகும்.

10 - 12 - 1989.
தஞ்சாவூர்.

**ஸ்ரீ. கோவிந்தராசனார்**
கரந்தை.

# திருவையாற்றுப் புராணம்

பஞ்சநதமான்மியம்

முதல் பாகம்

## பொருளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | |
| 2. | அவையடக்கம் | 6 |
| 3. | புராண வாழ்த்து | 8 |
| 4. | ஆச்சிரமச் சிறப்பு | 9 |
| 5. | ஆலயச் சருக்கம் | 18 |
| 6. | பாயிரம் | 18 |
| 7. | பிரியவிரதன் காதை | 19 |
| 8. | நால்விலங்கு கதிபெற்றச் சருக்கம் | 40 |
| 9. | ததீசி அத்தியாயம் | 40 |
| 10. | சுரதனத்தியாயம் | 51 |
| 11. | இந்திரரத்தியாயம் | 71 |
| 12. | திருமகளத்தியாயம் | 78 |
| 13. | கவுதமனத்தியாயம் | 84 |
| 14. | சதானந்தனத்தியாயம் | 94 |
| 15. | சிவசருமனத்தியாயம் | 121 |
| 16. | சிவதாசனத்தியாயம் | 133 |
| 17. | சுசிகரனத்தியாயம் | 148 |
| 18 | சுசரிதனத்தியாயம் | 163 |
| 19. | பிரணதார்த்திகர் சருக்கம் | 163 |
| 20. | சருவ விசையன் தவப்பேறு | 189 |
| 21. | முறைப்பாடு | 189 |
| 22. | அஞ்சலென்றல் | 206 |
| 23. | தேவனத்தியாயம் | 229 |
| 24. | அனித்தியரத்தியாயம் | 236 |
| 25. | கிரிச்சிரரத்தியாயம் | 251 |
| 26. | பிரதக்கணயோகம் | 269 |

# திருவையாற்றுப் புராணம்

## ஆடவல்லான் துதி

1 உலகெலாம் படைத்தேந்து மிருவர்விழி யருளுங்கற்
பகமு மாகி
பலவெலாம் படைத்துடைய வொருகரும்பி
னிருசுரும்புக் கருளுங் கோவாய்
வலமெலாம் படைத்தடைந்த வண்டிரண்டு
மகிழ்ந்தாட ஆடா நிற்கும்
நலமெலாம் படைத்தசுவை யானந்தப் புதுத்
தேனை நாவிற் கொள்வாம்.

## பரம்பொருள் துதி

2 எழுத்தேறும் பொருள்போன்றும் பொருளேறும்
அணிபோன்று மிருள்வான் போன்றுஞ்
செழுத்தேறு முலகுரைக்கும் பேதமெலாங்
கடந்திருந்த செம்மற் றாகிக்
குழுத்தேறுங் குறிக்கொண்டு நெஞ்சழுத்து
மஞ்செழுத்தாற் குழைந்திழைந்து
பழுத்தேறுஞ் செழுஞ்செம்பொற் சோதியையா
தியையோதிப் பணிதல் செய்வாம்.

---

1. இருவர் - பிரமன், திருமால். கற்பகம் - வேண்டிய பொருளை நல்கும் தெய்வமரம். இருசுரும்பு - கம்பளன், அசுவதரன் ஆகிய கந்தருவர். வண்டிரண்டு - பதஞ்சலி, வியாக்கிரபாதர். புதுத்தேன்- புதுமைக்கும் புதுமையாக இருந்து அன்பர்கள் உள்ளத்தே இனிக்கும் சிவமாகியதேன்.

2. எழுத்தேறும் பொருள் - எழுத்துக்களாலான சொற்கள் தரும் பொருள்போன்று. எழுத்தேறும் - எழுத்தில் பொருந்தி நிற்கும். அணி - செய்யுளுக்கமைந்த ஒப்பனை - அழகு. செழுத்து ஏறு - கல்விகேள்விகளில் வளம்பெற்று உயர்ந்த. ஐஞ்செழுத்து - சிவன் நாம ஐந்தெழுத்து.

## சிவபெருமான் துதி

3 அருகரா யையா றடைந்தாடி நின்றாடுனர்க்
கன்பாய் நம்
முருக ராடலிற் பராவக மொழிகென மொய்ம்பின் மே
லொருகரம் புயத்துமைய வளோச்சலு முளமகிழ்ந்து
அருளோங்கும்
மருகரா மேதிலொப்பி லாநாயகர் மலர்ப்பதந்
தொழுவோம் யாமே.

## ஐயாறப்பர் துதி

4 பஞ்ச நதீசுரன் செப்பேசன் பிரண தாத்திகர
பைரவி னோர்தந்
தஞ்சமெனு நோக்கரிய திருமேனி தளர்ந்தகுடி
தாங்கு நாதன்
விஞ்சுமுப கைலாய மோடு மாறாட வல்லான்
விண்ணோர்க் கெல்லாம்
அஞ்ச லென்ற பெருமானென் றளவில்பே
ருடையானுக் கன்புசெய்வாம்.

## தலப்பெருமை

5 பிறப்பும் பிணியும் பிணக்கும் பகையும் பிழைப்பும்
கவியும் பிரித்தம் புவிநின்
றிறக்கும் துயருண் டிருக்கும் பிவிழுந் திளைக்குந்
தலநின் றடுக்குந் தவமுந்
துறக்கங் கமலங் கட்குன் றிவைமுன் சுரக்குஞ்
சுகமுண் டிருக்குந் திருவுஞ்
சிறக்கும் பயனுங் கொடுக்கும் பதியும் திருப்பஞ்
சநதம் பஞ்ச நதமாம்.

---

3. மொய்ம்பு - வலிமை பெற்ற தோள். பராமுகம் - பார்வை செலுத்தாதநிலை.

4. தளர்ந்தகுடி - வறுமையால்வாடிய குடி. உபகைலாயம்-தென் கயிலாயம். விண்ணோர் - தேவர்.

5. பிணக்கு-மனமாறுபாடு. துறக்கம்-சிவபதம். திரு-பொருட் பேறு. பஞ்சநதம் - ஐந்து ஆறுடையதலம்.

## அறம் வளர்த்த நாயகி துதி

6 திறம் வளர்த்த முலைசள் சிவபோகம் பூப்பச்
செல்வமொடு கல்விவிழி பூப்ப ஞானம்
புறம் வளர்த்த குழல்பூப்பத் தான்முன் பூத்த
புவனமெலாம் நளினமிகு வாம்பற் பூப்ப
பறம் வளர்த்த மணிநீல கண்டர் பங்காள் மங்கல
நாண்பூப்ப வருள்பூப்ப யார்க்கும்
அறம் வளர்த்த நாயகியா ரழகுபூத்த அடிக்கமல
முடிக்கருள அன்பு சேர்ப்பாம்.

7 அத்த னையாறுடையா னெவ்வுருவங் கொள்ளு
மவ்வுருவு மாங்கே கொண்டு
வந்தணையு மறவளர்த்த நாயகியை வடிவுடைய
மங்கை தன்னை
கந்தணையும் முலைவண்டார் குழலாளை தேனுற்ற
சொல்லி தன்னை
பந்தணைமென் விரலாளை யழகியபொன்
னனையாளை பணிதல் செய்வாம்.

## விநாயகர் துதி

8 இந்திரன் கைதோட்டி பறித்துயமன் பாசமீர்த்து
இறைவன் கையில்
சிந்துரமென் கனிகவர்ந்து சித்தசன் சிலைக்
கரும்பைச்
சிதைத்துக் கோட்டால்
தந்திரமே ருபொழிந்துதவும் தண்பொன்னி
விலாழியெனத்
தந்தை யாற்று
வந்திருவல் வினைகவர்ந்து வரமருளும்
மதக்களிற்றை வசஞ்செய் தோமே.

---

6. சிவபோகம் - சிவானுபோகம். பூப்ப - சிறப்ப. ஞானம்-தத்துவமுணர்ந்த பேரறிவு. புவனம்-உலகம். நளினம்-குளிர்ச்சி ஆம்பல் - தாமரை, அல்லி.

7. கந்து - பற்றானகச்சு. பந்தணை-இறைவனோடு ஒன்றுதல்.

8. சிந்துரமென்கனி-சிவந்த பழுத்த மாங்கனி. சித்தசன்-காமன். சிலைக்கரும்பு - வில்லாகக்கொண்ட கரும்பு. விலாழி - நுரை, மதமாகிய நுரை, தந்தையாறு-தந்தை சென்ற நெறி. மதக்களிறு-மதநீர்பெருக்கும் யானைமுகக்கடவுள்.

## ஆட்கொண்டார் துதி

9 கண்ட துண்டிலை யெனாமே கணடவ பொய்க்கரி
கூறாமே
அண்ட நாயகனைக் கண்டார்க் கறிகரி காட்டுந்
தன்கை
யொண்டிற்ற பிரமன் செங்கோ லொருவனை
யாற்றுப் பெற்ற
தொண்டருக் கினியான் பாதந் தொழுதுநாம்
துயரந் தீர்ப்போம்.

## திருஞானசம்பந்தர்

10 தோடு காட்டியு மிசைத்தமிழ் தூக்கினார் சுருதிக்
காடு காட்டியுங் கூடலிற் கசடர்மு னகன்ற
சேடு காட்டியு மிறைவழி நீரிவை காட்டி
வீடு காட்டினோ னெமக்கிருள் தூர்க்குமோர்
விளக்காம்.

## திருநாவுக்கரசு

11 அளக்கர்நீர் தகளிநெய் யருக ரிட்டகல்
விளக்கருந் திரியென வமண மாசிரு
டுளக்க வைஞ்செழுத் தெனும் தூண்டு கோலினால்
விளக்கென விளங்குநா வேந்தைப் போற்றுவாம்.

---

9. கரி - சான்று, அண்டநாயகன் - உலக நாயகன்.

10. தோடு காட்டி - ஞானப்பாலளித்த அம்மையின் காதணியாம் தோட்டினை முதலிற் சுட்டிக்காட்டி, இசைத்தமிழ் - பண்ணும் பாணியும் கூடிய தேவாரப்பாடல். கூடல் - மதுரைமாநகர். நீர்-புனல் (புனல் வாதம்)

11. அளக்கர்நீர் - உப்பமைந்த கடல் நீர். அருகர் - அருகராய துறவியர். நாவேந்து - திருநாவுக்கரசு, வாக்கீசர்.

### சுந்தரர்

12 வந்தா னாவலூரர் வலிதகப் படுத்
திந்திரப் பரவையை கலக்கி யின்ப மார்ந்
தந்திவோர் சங்கிலி யணைத் திருக்கிய
சுந்தரக் களிற்றினைத் தொழுது போற்றுவாம்.

### மணிவாசகர்

13 தேசிகன் ஞானபோத மந்திரச் சிறையிற் பட்டுப்
பாசவெண் டோலுரித்து பவுத்தர மேலாலங் கான்று
வாசக மாணிக்கங் களுமிழ்ந்து மண்டலத் தினாடி
ஆசில் மன்றகத் தடங்குஞ் சேடனுக் கன்புசெய்வாம்

### சண்டேசுவரர்

14 அமர ரெக்கற மூட்டிய பரிகலத் தமுதும் பெற்றுக்
குமர ரெக்குறச் சூட்டிய கொன்றையும் பதமும் பெற்றுப்
பமர வாரிச சந்தந் தண்ணெனத் தரும்பரிசால்
நமரை யாட்கொளப் பெற்றவன் பதந்துணை நவில்வாம்

### சைவாச்சாரிய சந்தான குரவர்

15 ஐவ ராய் தஞ்சத்தியா லகெலா மளிக்குந்
தெய்வ ராயரே யொருவராய் திருமுறைக் காணிப்
பொய்வ ராயவகை நிறுத்திய புகழ்மைசேர் புதுமை
சைவ ராயரெண் மூவர்தா ளெமக்கொரு சரணால்.

---

12. வலிதகப்படுத்தி - வலிய வந்து தடுத்தாட்கொண்டு. இந்திரப் பரவை-ஐந்து இந்திரியமாகிய கடல். சங்கிலி-சங்கிலியார்.
13. தேசிகன் - ஞானகுரு. ஞானபோதம் - சிவஞானபோதம் மந்திரச்சிறை-சின்முத்திரையார் காட்டிய தத்துவச் சிறை. பாசம்-உலகப்பற்று. பவுத்தரம் - மிகு தூய்மை. மண்டலத்தினாடி-சுழு முனையில் கண்டு. ஆசில் மன்றம் - தூயதான பொன்னம்பலம்.
14. அமரர்-தேவர். குமரரேக்குற - முருகன் ஏக்கம் பெற. நமர்-உயிர்களோடு ஒன்றிப்பிரிப்பவர். எமன்.

## நூல் செய்ய அருளியவன்

16 வடியுமணி குழைக்காதி னந்தணனால் வந்தமலன்
வழங்க கங்குல்
விடியுமள வில்சைவர் வைதிகர் மயேசுரர்மெய்த்
தானத் துள்ளோர்
முடிவில்சிவ கணத்தொருவ னானதிரு வம்பலவன்
மொழிய வன்றோ
அடிதொழுது பஞ்சநதிப் புராணமிதை
யறையலுற்றே னகிலம் போற்ற.

## நூல் செய்த காலம்

17 மலிபுனல்சூழ் சோணாடு தஞ்சையிற்
காத்திடு மரசர்மதி யமைச்ச
னொலிமறைதேர் கோவிந்த தீக்ஷதராயன்
திருவாக் குடமை யாலே
கலியுகத்துச் சகராண்டு மூவைஞ்ஞாற்
றிருபதின்மேற் கானு மேழாய்ப்
பொலி வருடத் தையாற்றுப் புராணமிதை
வடமொழி தமிழாற் புகலலுற்றேன்.

## அவையடக்கம்

1 வெங்க ளங்கமுங் குறைவுமென் றிகழ்ந்திடார்
மேலோர்
திங்க ளங்குள வமுதமே பருகுவர் தெளிந்தோ
ரெங்க ளங்கமு மேதுசொற் குறைவுமென்
றிகழார்
தங்க ளங்கமாஞ் சிவன்புகழுக் கிடனென
தளிர்ப்பார்.

---

17. ஒலிமறை - ஒலிக்கின்ற வேதம் (சாமவேதம்).
கோவிந்ததீட்சதர்-விசயராகவநாயக்கரின் அமைச்சர். சகராண்டு-சாலியவாகன ஆண்டு கலியுகத்தில் சாலியவாகன ஆண்டு 1527ல் நூல் செய்யப் பெற்றமை. (கி. பி. 1605).

1 களங்கம்-குற்றம். தெளிந்தோர்-ஆய்ந்துதெளிந்தஅறிவுடையோர்

2 புலிப்பு லன்களிற் புல்லியோம் போலியா புகலுங்
கவிப்பு லங்களைக் கயங்கிலேன் சுவைக்கிலேன் கடனீ
ரவிப்புலம் பெறப்புய லின்வாய்ப் படுதல்போ லான்றோர்
செவிப்பு லன்களிற் புகுதலுந் தீஞ்சுவைப் படுமால்.

3 சுவை யடக்கிய கவிஞர்சொல் லடக்கில் யான் சொல்லு
மவை யடக்கிலோர் பயன்தரு மவையடக் கியபோ
லிவை யடக்குமென் றெண்ணியுண் ணுழைவரெண்ணியபி
னவை யடக்கிலே மெனிலென் நவையடக் குவரால்.

4 நாக்க ளாயிரஞ் செவிக ளீராயிரம் நண்ணிய
பாக்க ளாயிரங் கோடியோர் முகம்பெறப் படினுந்
தேக்கள் வார்பொழில் திருவையாற் றியல்பெலாஞ் சேர்
மாக்கள் கூறவுங் கேட்கவும் வல்லரோ மதிக்கில்!

அவையடக்கம் முற்றும்.

---

2. புல்லியோம் - அறிவில் மெலிந்தயாம். கயக்குதல்-கலக்கம் செய்தல். அவிப்புலம் - உணவுக்காம் நெல்விளையும் நிலம். புயல் - காருண்டு காற்றால் உந்தப்பெறும் மேகம்.

3. சுவை-பொருட்சுவை. நவை-ஏளனத்திற் கிலக்கான குற்றம்.

4. தேக்கள் - தேனீக்கள் பொருந்தும் மலர்த்தேன். மாக்கள் - மாக்கள் போன்றறி விலாத மக்கள்.

## புராண வாழ்த்து

1 நாத னருணந்தி சனககுமாரன் வியதரன்
சூதன் நற்றவத்தோர் போதமுறைக் கூறக்கேட்டு
ஓதரிய பிரமனது வதனத்துதித் ததீதத்தின் தொடர்ச்சிக்
காதலுரு காதையிது பஞ்சநதி மேன்மைப் பகருங்காலே.

2 நற்றவ ரொருகா லத்து நைமிசா ரணியந் தன்னில்
சொற்றகு சூதனாலே தொல்கதை யாவுங் கேட்டார்
மற்றவர் திருவை யாற்று மான்மியம் விதந்து கேட்ப
விற்றவர்க் குரவொன்ஞது முரைத்தனன் உரைக்கும்போது.

3 தவந்தரு சுமந்து வெய்யோன் றவகுலத் தெய்வ வன்மர்க்
குவந்திடச் சொற்றா னப்போ...........ஞுரைத்த வாறு
நவந்தரு நாத சன்மன் நவின்றனன் விருத்திக் குன்றா
நிவந்த வித்தொடர்ச்சி மேன்மை யெம்மனோர் நிகழ்த்த வன்றோ!

---

1. போதம் - புகட்டுமறிவு. அதீதம் - குறிப்பில்லாத ஆன்மா. ''எண்ணமொன்றில்லாததீதம்'' (சிவப்பிரகாசம்)

2. சூதன் - சூதமாமுனிவன். தொல் கதை - புராணம். மான்மியம் - அற்புதம். உரவு - அறிவுத்திண்மை.

3. நவம் - புதுமை. விருத்தி - விளக்கம். நிவந்த - மேலான. பெருகிய.

4 சூதனே சுமந்து நம்பன் சொல்வகை யிஞ்ஞ
ணிற்ப
நாதமா முனிவன் கூற நங்கை கேட்கின்ற வண்ணங்
காதை கண்முறை நிறுத்தி கழறுகே னிவனி ருக்கும்
போதக விருக்கை யோடு புகன்றிடு மரபு
சொல்வேன்.

புராண வாழ்த்து முற்றும்.

---

## ஆசிரமச் சிறப்பு

### பொன்னி யாறு

1 வெய்ய மால்வினைப் பசிகெட மடியின்
மேல்வளர்க்கும்
வையக மாதெனுந் தாயவள் மானுடங் காக்குஞ்
சைய்ய மாமுலை சுரந்து வார்ந்தொழு
கியதகைத்தாற்
பொய்யிலா வாற்புனித நீர் பொன்னிமா நதியாம்

2 வெண்ணுரைக் குழாங்கள் கங்கையாய்
வேழமுத வண்
டொண்ணி றத்தகா லுந்தியா யூடெழக் கிளர்ந்த
வெண்ணில் செம்மணி யவற்றிடைப்
பாதலத் தெழுந்த
புண்ணியப் பெருஞ்சுனை யாய் புகுந்த பொன்னி.

---

4. கழறுகேன் - கூறுகின்றேன். போதக விருக்தை - ஞானந்தரும் இருப்பு.

1. வெய்ய - கொடிய. மால்வினை - உண்மைபுலப்படாவாறு மயக்கும் தீவினை. சைய்யம் - மலை, விந்தயம். பொன்னி-பொன் கொழித்துவரும் காவிரியாறு.

2. வெண்ணுரை - வெண்மையான நுரை. குழாம் - கூட்டம், தொகுதி. எண்ணில் - எண்ணிக்கை இல்லாத. சுனை - தானே நீர் சுரக்கும் மலைப்புழை.

3 இறைவனைத் துறைதொருந் தழீத்தண் ணளிபதி
நிறையளர்க் குநெல்வளர்த் துயிர்ப்பசிப் பிணிநீக்கி
முறைதிறத் தொடுசெல்வ மூதறி வுறவாநல்
லறம் வளர்த் தவனிகாத் ததுகாவிரி யாறு.

4 கற்ப நிற்பவர்க் குதவிய கவிஞருட கல்வி
பொற்ப நல்விளக் கெண்ணில் புரிந்தபூ விளக்குச்
சிற்ப ரானபல வருளுருக் கொண்டருள் சீர்போற்
பொற்ப பல்கால்களாய்ப் பிரிந்து மப்படி வருதலால்.

5 இலஞ்சி கோட்டக மோடை பட்டந் தடமேறி
புலஞ்செய் கால்வயல் மனைக்கிண றியாவையும் புகுந்து
நிலஞ்செய் யன்பினோர் மனத்தள வானருள் நீங்கா
நலஞ்செய் தென்னநின் றெங்குமாய் விரிவ தன்னதியே

6 பொன்னி றைத்திடு துறையார் பதிப்புதுப்பூ
முன்னிறைத்து மன்மதன் சரசாலை முக்கனியின்
பன்னிறைத் துரைசந்திரன் பதிநிதி யளகை
மின்னிறைத்த பன்மணி யிறைத்திடுவியன் றுறையே.

---

3. துறை - இருகரையும் பொருந்த தலங்கள், மூதறிவு-அனுபவ அறிவு, அவனி - மண்ணுலகம்.

4. கற்ப - கல்வி கற்பதற்கு, பொற்ப-அழகுபெற. கால்-பாசன வாய்க்கால், சிற்பர் - மாந்தரின் அறிவுக்கு அப்பாற்பட்டவர்.

5. மனைக்கிணறு-வீடுகளிலுள்ள கிணறு, நிலஞ்செய்யன்பினோர் -ஈத்துவக்கும் வேளாண்குடியினர்.

6. சரசாலை - காமவேள் தொழில் செய்யும் இடம், அளகை-அளகாபுரி, குபேரனது நகர். மின்னிறைத்த - ஒளிவீசின.

7 மலையிற் சந்தரைத் தருஞ் சுரமான மதம்வரன்றி
முலையிற் பாலனை யனையும் வயற்றியற்
கடைசியர்
முளைமஞ்ச ளிலையிற்கொண் டுராய்க்கருங்கழி
நெய்தல்
தலையிற் சேரலாற் றேரலா (தென்ப) தியம்பினர்

8 உரைத்த காவிரிக் கடற்புணர் தலையொரு சாரத்
தரைத்துழாய்வரு தருமமும் புனிதமும் தடுப்ப
நிரைத்த கையரித் திட்டமர் நின்ற கேதகையின்
வரைத்த மாதவ ரிருக்கையொன் றிருந்தது
மன்னோ!

9 துள்ளு மீன்களும் கடற்றிரை தருபொரு மீனும்
புள்ளு முண்கிலா புலவென வத்துறைப் பூவிற்
றெள்ளு தாதொடு மணமலர்க் கெழுஞ்சிறை
வண்டுங்
கள்ளு முண்கிலா களிமயக் குறுமெனக் கருத்தால்.

10 ஈன்ற நித்திலப் பந்தரி லிருந்தவெண் சங்கஞ்
சூன்ற சூலுயிர்த் தவைதழுவுந் துணைப்பெடை
தூக்க
மான்ற செறுநர் மருளவும் மருள்கிலா மடற்றென
கான்று விப்பன தாமரைச் செழுங்களி யன்னம்.

---

7. சந்து - சந்தனம், கடைசியர் - மருதநிலமகளிர். கருங்கழி - ஆழ்ந்த உப்பங்கழி, நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்.

8. புனிதம் - தூய்மை. கேதகை - தழைத்த தாழை. மாதவர் - மிக்கதவமுடைய ஞானியர். இருக்கை - வாழ்விடம்.

9. திரை-அலை, கள்-இனிய தேன். களிமயக்கு-அறிவு அற்று மகிழும் மயக்கு.

10 நித்திலம் - முத்து, பந்தர் - பந்தல் (போலி) சங்கம் - சங்கு, சூன்ற - வளர்ச்சி பெற்ற.

11 அளிய மாதவர் தீண்டவும் வளைப்பவு மவைகொண்
டெளிதி லீசனைச் சேர்க்கவும் வறிகிலேம் யாமே
தெளிவி லெய்தின பிறவெனச் செறிமடற் றாழை
வெளிறி வார்ந்துகண் ணீர்கவிழ்ந்த தொப்பதே
வேலை.

12 மாதவத் திருமடந்தை மார்மாசிலா மனத்துக்
கோத முத்தமும் புன்னைவா ளரும்புமொய்ம்
புறுமால்
சீத நித்திலம் பாலென மிதித்திலார் சிவனுக்
காதல் பற்றிய வரும்யினு மடியிடா ரம்மா!

13 இருட்ருடி மாணவின் நிகர்த்தன புன்னைகளிடையே
பொருட்கோண மாயையிற் பொற்பொதிய விழத்
தண்போது
மருட்ட வீழுயி ரொத்தன மதுகர மவற்றை
தெருட்டு மூழ்வினை யொத்தன திசையுலாந்
தென்றல்.

14 ஞாழலொன்று கல்லாலென நகைநிறைப் புளின்
நீழ லங்குறை நீருறுமேனிய னெனநிமிர்
சூழல்வார் பவளக்கொடி சடையெனச் சுரிசங்கூத
தவழ்ந்த வெண்மதி பிறையெனத் தோன்றுவ
தொருபால்.

---

11 அளியமாதவர் - அன்பே உருவான தவத்தோர். தீண்டவும்-கையாற்றொடவும், வெளிறி - வெளிர்த்து.

12 சீதநித்திலம்-குளிர்ச்சி தரும் முத்து, அலைதரு முத்துக்களையும், புன்னை உதிர்ந்த மலர்களையும் சிவனுக்குரியவை என்பதால் மிதித்திடார் என்பதாம்.

13 மாண் - செறிவு, பொருட்கோண மாயை-உண்மைப் பொருள் இதுவெனக்காட்டாது மயக்கும் மாயையின் நெறிப்பாடு. தன்போது--தனது வினைப்போது, மருட்ட - ஆசை மயக்கம் தர

14 ஞாழல் ஞாழல் மரம், நகை மெல்லோலி, நீழல் - நிழல், சுரிசங்கு-சுழித் தமைந்த சங்கு, பிறை - மூன்றாம் பிறை.

15 கரிய நெய்தலங் காடுமா லாயிடைக் கமல
மரிய பொன்னிற வன்னமம் மலர்மயி லயலே
சுரிமுகத்தொடு நேமியுந் துஞ்சுவ நெடியோர்க்
குரியவன்படை யெனகழி கிடந்ததாங் கொருபால்.

16 பூத்தகொங்கு நான்முகனென பொலிந்த தாம்மலர்
வாய்த்துதைந்த வண்டிசைமறை யிசையெனத் தெழித்த
மீத்தவழ்ந்த சங்குமிழ்ந்தமுத் தொழுகுவ வெண்ணூல்
சேத்ததங் கையிற்கரக மொத்தசைந்தது செழுங்காய்.

17 ஆறுகாலமு மைந்தென நிலத்தி லாய பொருளும்
நாறு நாண்மலர் நான்குமூ வுலகுள் நல்கும்
பேறிராப் பகலிரண்டுமோர் பெற்றியாற் பிறழா
தேறுமேலுக கணையதவ் விருடியாச் சிரமம்.

18 கொந்தார்தரு மலர்கிட்டிய குழைகின்றன வரையா
வந்தாமரை குறுவார்வறல் போழவன் வழியாய்த்
தந்தாழ்மலர் தருகென்றுவரு தாவிற்கொடி தடுப்ப
நந்தாவனந் தவர்கொய்துழி நயந்துய்ப்பன புயலே.

---

15 நெய்தலங்காடு திருமாலுக்கும் பொன்னிற வன்னம் செந்தாமரையுறை திருமகளுக்கும் - உருவகம். நேமி - சக்கரப்படை, கழி - உப்பங்கழி

16 துதைதல் - பொருந்துதல், மறை - வேதம், தெழித்த-ஆரவாஞ்செய்தன. கரகம் - கமண்டலக்குடுவை.

17 ஆறுகாலம் - வைகறை, காலை, நண்பகல், மாலை, இரவு, யாமம். நாள்மலர் - அப்பொழுது மலர்ந்த மலர், விருடி - முனிவன்.

18 கொந்து-கொத்து, குழைகின்றன-தாழ்ந்து நிற்கின்றன, குறு-மென்மை, நந்தாவனம் - தூய்மையில்லாதார் உட்புகாத மணமலர் சோலை, கொய்துழி-பறித்த போது, நயந்து - விரும்பி, புயல் - மழைதருமேகம்.

19 குளநெற்கிளி கொய்தேந்து புகுகின்றன முன்றி
லுளநற்பொறி ளிளிவாயணி லுமிகண்டன வொதுங்கச்
சுளகிற்பொலி திரள்வித்தன சுழலுங்களி மயிலே
வளமைத்தவ மடவார்விரல் வருந்தாவகை மனைவாய்.

20 குடமின்றியும் குளிர் நற்புனல் குலவுற்றன குழிசிக்
கிடலின்றியும் அரிவல்சியி னெழப் பொங்கின தொடலும்
விடலின்றெவ ரெவர்க்கும் பதமிசையத் தொலைகில்
வரலொன்றுயி ரெனமாதவ ருடனாமனை யறமே.

21 முடிவெண் பாவடி காதினர் முதிர்கண்டி வெண்பொடி மேனியர்

மடி நூலின ருடுசீரையர் புலமாஞ்.........................
செடிவோரிய வேராமொரு திருவாளினரு..............பேணிய
நடையாரவ ரகலாததவ்.......................விடமே

22 பூதம்புல மன்மாருயிர் புருடஞ்சிவ மறிவே
வேதம்படு மிவையன்னிய முயிரீதிது பரமென்
றோதும் பொருள் மறையாகம முணர்கின்றவர் தெளிவார்
போதம்பெறு வனதும் பிசு கம்பூவையு மவனே

23 அவ்வாச் சிரமத் தந்தணர் வருட்டலை மையி
னொவ்வாச்சம யங்கண்டுயர்க நின்றொரு குரவோன்
மெய்யவர் தெளித்திரி புண்டர வெண்ணீற்றி னுள்ளங்கை
வாய்த்த நெல்லியின் யாவையும் கரைகண்டவ னொருவன்

---

19 பொறி - பொறி போன்ற, சுளகு - தாற்றும் முறம், மடவார் - மனைப் பெண்டிர்.

20 குழிசி - குடம், வல்சி - உணவு, மனையறம் - இல்லறம்.

22 போதம் - பக்குவஞானம், பிலசுகம்பூ - பசைப்புத்தன்மையுள்ள பூ, பக்குவ ஆன்மாவைப் பற்றிக் கொள்ளும் பதிப்பூ.

23 ஒவ்வாச் சமயம் - மாறுபட்ட சமயம், குரவோன் - ஆசான், திரிபுண்டரம் - நெற்றியணி முச் சுவடாம் நீற்றுக் குறி, கரைகண்டவன் - ஐயம் திரிபு அற முழுதும் கற்றவன்.

24 மோனந்தரு மஞ்சக்கர மொழியுசெப முதிர்வான்
ஞானந்திரண் டனையானவன் பெயர்நாத சன்மாவாந்
தானம் பொறை நெறிவாய்மை தயாநற்குண மின்பம்
மானந்தரு மந்தான்திரண் டனையாளவன் மனையாள்.

25 அனவத்தி யெனுபேரின ளன்னாணிழ லன்னாள்
மனவற்புத னெடுநாள்மிக வாழ்கின்றவள் கேள்வன்
பனவத்தவ மனையானெதிர் பணியாமொழி பணியா
வினவத்தக வொன்றுண்டென வேட்டாளிது கேட்டாள்.

26 ஞாலந்தனி லே புண்ணிய தவமுத்தம தவமோ
சீலந்தரு தீர்த்தத்தெவை தெய்வப்புனல் யாதோ
மேலங்கது கேட்கின்றவர் வினைதீர்ப்பதுண் டிலென்
பாலன்புடை யாயென்று பணிந்தீது பகர்வாள்.

27 பாவமூட்டுவாள் பற்பல சொல்லெதிர் பறைவாள்
கோலமூட்டுவா ளாண்மைபோற் கூறிய கொடியா
ளாவமூட்டிய கணைவிழி யகலிய லெனுஞ்
சாப மூட்டிய தீயெனத் தணப்பதே தருமம்.

---

24 மோனம்-மௌனம், பஞ்சு அக்கிரம் - ஐந்து எழுத்தாலாம் சிவ மந்திரம், பொறை - பொறுமை, நெறிவாய்மை - ஒழுக்கத் தூய்மை, தயா - கருணை, இரக்கம்.

25 கேள்வன் - கணவன், பனவத்தவம் - நெடிதாக வளரும் தவம்.

26 சீலம் - நற்குண நல்லொழுக்கம், தீர்த்தம் - பாபம் தீர்க்கும் தெய்வநீர், பகர்வாள் - சொல்லுவாள்.

27. ஆவம் - வில் நாண் தணப்பு - நீக்குதல்.

28 கொழுநனைத் தொழுதெழுபவள் கொழுநன்முன் பின்னோர்
கெழுநலத் துள்கருணைய ளிருமுது குர வோர்த்
தொழுநலத் தவளிங்குத் தங்குறிப்புத் துறக்கினுந்
தழுநலப்பயன் கெடுக்கினுந் தணப்பரோ தக்கார்.

29 எக்குணங்க ளுண்டில்லை யெனுமிடை விடாது
தக்கநின் சரண்வருவுந் தாழவும்போ கின்றேன்
தொக்க தெய்வமுங்குரவருஞ் சுற்றமு மற்று
மொக்க நின்றநீ யலகிலாதுடையா யெனுடையாய்.

30 ஆதலாலெனக் கருள்திரு வுள்ளம்வைத் தாள்கென்
றோதலாலவ னன்புகொண் டுரைத்த துரைக்கும்
போதலார் குழலணங்க னாள்மகிணனைப் போற்றி.
ஈதலாம் விரித்தனை யெனத்தொருத் திசைப்பாள்.

31 இமயகிரி கயிலைதேவ ரிருங்கிரி நீலகண்ட
முமயவள் மகிழ்கேதாரம் பர்வதமுயர் காளத்தி
சிமயநற் கழுக்குன் றண்ணாமலைதிரு முதுகுன்றோங்கு
மமைசிரா மலைபொருங்கிரி மேன்மை சொற்றாய்.

---

28. தொழுநலம்-தொழத்தக்க பண்புகள். தழுநலம் - பின்பற்றும் நலன்கள். தணப்பரோ - நீக்கிவிடுவார்களோ?

30. மகிணன் - (மகிழ்நன்) மனையாளின்பம் நுகர்ந்து மகிழ்பவன். ஒருத்து - மனம் ஒன்றுபட்டு.

31 கேதாரம் - இமயமலையில் அமைந்த சிவத்தலம்.

32 வளம்பெறு சோமநாதங் கோகரண மற்றையஞ்சைக்
களங்கடல் பாற்றேன்பார் கன்னியாங் குமரியோடு
கிளந்திசை முழங்கிராமீச் சரங்கோடி கீழ்பானாகை
தளங்கமழ் முல்லைவாயி லாதிநற் றலங்க ளென்றாய்.

33 சிதம்பர மாரூர்காசி காஞ்சிசீர் விருப்பாக்கந்தே
விதம்பர விரிஞ்சை கோவல் வெண்காடு காழி
இதம்பர மளிக்குநம் புள்ளிருக்கும் வேளூர்மாயூர
முதம்பர மளிக்கத்தக்க முத்திமெய்த் தலங்களென்றாய்,

34 அருமறைக் காடுமத்தியாச் சுனங்கும்ப கோணம்
வருவலஞ்சுழி சுவாமிமலை வேதிகுடி நெய்த்தானந்
திருவளர் பழனஞ்சோற்றுத் துறைதிருப் பூந்துருத்தி
யருள்வளர் கண்டிதந்தி வனங்கூட லறைந்தப்பால்,

35 திருவையாறு யென்றுசெப்பேச் சுரந்தலந்தீர்ந்த மேன்மை
மருவிய ஏவர்க்கு முத்திதரு மெனவகுத்தா யாங்கு
மொருவையான் கேட்ககேட்க ஊறிய வமுதாமன்பின்
அருவியார் குணக்குன் றொப்பாயின்னு நீ யருள்கவென்றாள்.

---

32 கோடி - கோடியக்கரை, நாகை - நாகர்பட்டினம், முல்லைவாயில் முல்லைவாயில் - திருமுல்லைவாயில்

33 இதம் - இம்மையிலின்பம், பரம் - மறுமையில் வீடுபேறு, முதம்பரம். முதன்மையான பேறு.

34 கண்டி - திருக்கண்டியூர். கூடல் - வெஞ்சமாக் கூடல்.

35 ஒருவையான் - ஒரே மனத்தான். ஊறிய - மேலும் மேலும் பெருகிய

36 பெரும்பசிக் கவிழ்புல்மேய்ந் தாகத்துக்கு பெருநீர்விட்டு
வரும்பசு நிறைந்தவேரி மடைதிறக் கென்று நின்றாங்
கரும்பவிழ் நறுமென்கூந்த லனவத்தியளிக்கு முன்சொல்
விரும்பலுந் தவத்தின் மேலோன் மிகமகிழ்ந்தக மலர்ந்தான்.

37 பெண்மை நுண்ணறிவு பெற்ற தெமதருந்தவப் பேறென்றாங்
குண்மையா ரருளையுண்ணி யொருவனை நினைந்து பாகம்
பண்முக மொழியைப் போற்றி கணபதிப்படிவு கண்டு
சண்முகற் றொழுதுநந்தி கணாதிபர்க் குச்சி தாழ்ந்து

38 மற்றுள சிவனன்பர்க்கு மனமிடங் கொடுத்து நின்ற
பொற்றொடி தன்னைநோக்கி குரவனைப் புந்தி கொண்டு
முற்றுமங் குரைக்குமுன் னாலுளங்கொண்டு மொழியப்புக்கா
னற்றவன் வாக்கில்யானு மாசையா னவிலப்புக்கேன்.

ஆச்சிரமச் சிறப்பு முற்றும்.

---

## ஆலயச் சருக்கம் (பாயிரம்)

1 ஆலையம் பிரணதார்த்தி கரத்துட னஞ்ச லென்றல்
மாலையற் கரிய யோக மாரன மங்க மூர்த்தி
மேலையாஞ் செப்பேசர் மிகுமஞ்ச நதி காவேரி
காலையஞ் சங்கிராந்தி கருதுமாதந் துலாமே

2 இம்முறைச் சருக்க மீறாரென வகுத்திவற்றுண் முன்ன
மெய்ம்மை மாமனுவின்நீதி விலங்குகள் நான்கின்வீடு
செம்மைசேர் சுரதின்காதை தேவர்கோன் பணிகளான
பொய்மை தீராலயத்தின் புதுமையைப் புகலலுற்றாம்.

---

36 ஆகத்துக்கு - உடம்பினுகக. மடை - நீர்மடை.

37 உண்மையார் - உண்மையான நெறிதரும் சிவாகம முடையார், ஒருவன்- சிவன், நந்தி கணாதிபர்-நந்தியெம்பெருமான் வழி முறைத் தொடர்ந்த சமயக் குரவர்கள்.

38 குரவன் - தன் ஆசான். நற்றவன் - நல்ல தவமுடைய நாதசன்மன்.

1 மால் அயற்கு - (மாலையற்கு) திருமால் பிரமன் ஆகியோர்க்கு, ஆரணம் - தமிழ்மறை.

2 சருக்கம் - உட்பிரிவு, மாமனு - பெருர் புகழ் படைத்த மனுமன்னன்.

## பிரிய விரதன் காதை

பூட்டாச் சிலையு மச்சிலை யின்வழி பொழியாக்
கணையுங் கணையிலாந்

தீட்டாத் துதியும் படைத்துடைய செந்தா
மரைபோல் முகத்தினனாய்

சூட்டார் சுடராச் செழுஞ் செம்பொற் சோதி
யிலிங்கம் பெருமையிது

கேட்டார்க் கிறும்பூ தூறுங் காதை கேளா யென்று
கேளாயென்று கிளக்குமால்

2 இன்ன காலத்தித் தலத்தில் இலிங்க வுருவ
மெழுந்ததெனச்

சொன்ன கால மின்மையினாற் சோதி யுருவாம்
பரமசிவ

னென்ன காலத் துளன்றே யிலிங்க வுருவு
யிப்பதி

மன்ன லாயிற் றென்ப தல்லால் மற்றோர் வகையி
லுரைப்பரிதால்

3 பூத மைந்து மொன்றோ டொன்று பொன்றுங் கால
மப்பதியில்

நாத மொன்று சிவலிங்க நலியா தழியாச்
சுடருருவா

யேத மின்றி மேல் கீழா மீரே முலகு மொன்றாகிப்

பேத மொன்று படைப்பமைப்பிற் பின்னு மதுவாய்ப்
பிறங்குமால்.

---

1. பூட்டாச்சிலை - எதிரிட்ட புருவங்கள். பொழியாக்கணை - கண்கள். துதி - பார்வைகவர்ச்சி. இறும்பூது - பெருமகிழ்ச்சி.

2. பரசிவன் - எங்கும் நிறைந்துள்ள சிவன். மன்னலாயிற்று - நிலைபெற்றது.

3. பூதம் ஐந்து - வான், நிலம், நீர், காற்று, தீ, என்பன. பொன்றுங்காலம் - ஒன்று சேரும் காலம். நாதம் - இனிய ஒலி.

4 ஊழி யூழி பேதத்தி லும்பர் முனிவர் மனுமுதலா
மாழி வேந்தர் பொருட்டாக வங்கணி லிங்க மாயடங்கி
வாழி யவராற் செய்பணிகள் மகிழ்ந்து நல்கும் பயனீய்ந்து
சூழு ஞாலத் துயிர்முற்றும் தொடர்ந்து போற்ற வைகுமால்

5 ஆய பேதத் தொருகாலத் தவனி முதலாம் படைப்பமைந்து
ஞாயி றாதி மனுமுதல்வர் நண்ணி யுலக நடத்துநாட்
சேய கதிரோன் வழி மனுவின் செல்வனிரண்டா மனுமன்னற்
றாய பிரிய விரதனெனத் தோன்றிப் புரந்தோன் தொல்லுலகம்

6 நேரி வரையும் பொன்வரையும் நிலக்கீழ் வரையு மேழ்வரையும்
பூமி வரையுந் தன்பொறியே பொறித்து வேந்தர் யாவரையும்
தோமி லுடுவின் வரையாக்கிச் சுடரோ னென்னத் தனியாழி
தாமின் புறவே யெவ்வுயிருந் தானே தாங்கிச் செலுத்தினான்.

---

4. உம்பர் - தேவர். ஆழிவேந்தர் - ஆணையாகிய சக்கரத்தினை உடைய அரசர். சூழுஞாலம் - கடலாற்சூழப்பட்ட உலகம்.
5. பேதம் - வேறுபாடு. ஞாயிறாதிமனு - ஞாயிற்றை முதன்மையாக்கொண்டு தோன்றிய மனுமுதலிய மன்னர். சேய - சிவந்த புரந்தோன் - பாதுகாத்தோன்.
6. தன்பொறி - தனது அரச இலச்சினை. உடு - விண்மீன். சுடரோன் - சூரியன். தனியாழி - தனி ஆட்சி.

7 மனுவின் ஞானச் செங்கோலான் மாறா நிலவின்
வெண்குடையான்

குனிவிற் கலைநூல் வாலறிவன் குலவுத் தோளான்
குணமிக்கான்

பனுவற் சுவையுண் செவிவாயான் பருமக் கலுழிக்
கடகளிற்றா

னனிகக் கடலா னம்பொன்மணி யாழி திகிரி
நெடுந்தேரான்.

8 முகட்டுக் குவவு முலைநுடங்கு கொடிநுண் ணுசுப்பு
மொய்த்தமணிப்

பகட்டுப் பரும்பணை யல்குற் பாவைய ரேருடைப்
பண்பினான்

சுகட்டுத் திகரிக் கிரியண்டக் கோளக் கொடிஞ்சித்
தனிநெடுவா

னகட்டுக் கிடுகிற பொருப்பகட்டு நெடுந்தேர்
செலுத்தியானா நான்

9 புடவிக் கிடையே யோரெழுகாற் பொலன் பூட்கலின்
நெடுமான் றேர்

கடவிப் பெரியோன் வலனேர்பு திரிகாற் காலாழ்
காறேறுந்

தடமைக் கயமா யாழியெனச் சான்ற நடுவிற்
றிடரேழு

மிடமொத் தெடுதீ வெனச் சிறந்த தென்றா
லுரைப்ப தெமக்கெளிதோ!

---

7. வாலறிவன் - தெளிவும் நிறைவும் பெற்ற அறிவுடையவன். குலவுத்தோள் - திரண்ட அழகியதோள். பனுவல் - நீதிநூல்கள். அனிகக்கடல் - கரைபொரும் கடல்.

10 வைய மாழ்ந்த கடல் கண்டு வைய மேழு பேரிடந்
தோறுந்
செய்ய புதல்வ ரிருக்க வெனத் தினமும் தீது
நீக்கிடுவான்
வெய்ய தாலுங் காலுணவின் (வேகம்) புடைத்த
சிறகைக்
கய்ய கோவு மெனுங் கவளப் பரிமேற் கொண்டு
காக்குமால்.

11 விண்ணிற் றலிக்காற்றொடு நீங்கி விரையேழ்
பரியுமொன் றாக்கி
மண்ணிற் செலுத்தும் பரிதிபோற் வலியோன்
வருநா ளொருநாளில்
கண்ணுற் றிலங்கை யிமையநடுக் கீழ்மேல்
கடற்கு னடுத்தலையாய்
நண்ணிக் குணபாற் றெழுந்தவொளி புணரிமேற்
கைந்தோ டாகுங்கால்,

12 காயமேற் காய மில்லா கட்டுரை யுருமிற்
றோன்றித்
தூயதெள் ளமுத மென்னத் துணுக்கென வின்ப மூற
நாயக மனுவின் மைந்த நராதிப நினக்கு நன்மை
நேயமேல் வைத்துண் டாக நிகழ்த்துவங்
கேண்மோ வென்றான்.

---

11. பரிதி - சூரியன். புணரி - கடல்.

12 காயம் - காட்சிக்கமைந்த உடல், உரும் - இடியேறு - நேயம்
அன்பு.

13 கேட்டவன் வியந்து நின்று கிழக்குமத் திசையை நோக்கி
வாட்டமுற் கடைநா ணின்ற வடிவெனச் சொலித்து வான்போய்
நீட்டமுற் றுலகீ ரேழு நிறைந்தெளி துளும்பக் கண்டு
தேட்டமா லயர்க்கு நின்ற செறிதழ றழும்பி தென்றான்.

14. என்றவன் குறுகு மேலவை யிலிங்கமாய் குறுக வாங்கு
நின்றொரு புருட மூர்த்தி நிருமியா வடிவிற் றோன்றி
நன்றியில் சிறந்த நாம நாமிவ னழைத்தோ மிப்பா
லொன்றுசெய் கரும நின்றா லுண்டென வுணர்த்து கின்றான்.

15 பற்பல வுயிரு நாமே நமையலாற் பதிவே றில்லை
சிற்பர வுருவம் யாமே காரணஞ் செகத்துக் கெல்லாங்
கற்பனைக் கடந்தோ மாயை. கற்பித நமது மற்றைச்
சொற்பயில் சரா சரங்கள் தோற்றமு நம்மி னாகும்.

16 கால மூன்றாகி யாவும் யாவருங் காணக் கண்டோம்
ஞாலமே லனேக கோடி நான்முகற் கண்டே நாமே
கோலமாய்க் கணிப்பில் காலங் குரைகடற் றுயின்று காக்குஞ்
சீலமால் கோடா கோடி செல்லவுங் கண்டேங் கண்டாய்.

---

13 சொலித்து-பளபளத்து, தேட்டம்-தேடுதல், தழல்-வளர்ந்ததீ

14 புருட மூர்த்தி - எல்லா ஆற்றலும் முதன்மையும் பெற்ற தலைவன், நிருமியா வடிவு-இன்னவாறிதுவுள தென்று அளவிட்டுப் பேசவியலா நுண்வடிவு, நாம - நற்பெயருடையானே.

15 சிற்பரவுருவம் - ஞானவெளியான உருவம். செகம் - உலகம், சராசரங்கள் - நிலையியற் பொருள்களும் இயங்கியற் பொருள்களும்

16 காலம் மூன்று-சென்றன நின்றன நிகழ்வன. ஞாலம்-உலகம். நான்முகன் - பிரமன் கணிப்பில் - ஆய்ந்து கணக்கிடுவோமாயின், சீலமால் - சிறப்புப் பொருந்திய திருமால்.

17 ஒன்றுபத் தொன்று நூறு ஆயிர மாதி ஐந்திற்
பின்றிய வண்ட கோடி பேரண்டம் பிறழ வேறாய்
குன்றுடன் மிதப்ப நீரிற் குயக்கலம் போலக் காண்போ
மன்றுமப் பிரளை யத்து மசைவிலா திருப்போ மப்பா.

18 கோத்தநீ ரண்ட மெல்லாங் குமிழியின் மாயக் காண்மோ
மாய்த்தநீ சுவரத் தீய்ந்து மற்றெலா மொடுங்க வூழித்
தீத்தெரிக் காண்போம் தீயிற் றிரட்டிய நீறு பூசி
கூத்துநின் றாடி மீட்டோர் கூத்தினா னுதிப்பக் காண்போம்.

19 ஞானதே சிகர்பாற் கேட்ட வேதசாத் திரஞா னத்துள்
மோனமோ டுணர்விற் கானு முத்தரே யெளிதிற் காண்பா
ரானவா றன்றிக் குன்றி லறையிலைங் கனலி னின்று
கானமேற் றவஞ்செய் தாலு காண்பவர்க் கெளியோ மல்லோம்.

20 எங்கு மாண்டிடினும் மாளா தித்தல மதனா லிங்கே
எங்குமா யிருந்து நீங்கா திருந்தன மிப்பால் மன்னா
எங்குநம் மிடமென் றாலு மிதுநமக் கிடமா மென்று
மெங்குநம் முருவமே யெமக்கு நயந்தகுரு விலிங்க மீதால்.

21 ஊர்களெண் ணிலைவுண் டேனுந் திருவையா ரூரா யுள்ளோம்
பேர்களெண் ணிலவென் னிலுஞ்செப் பேச்சுர னென்னும் பேரேம்
சீர்க்ளெண் ணில்யுகங்கள் சேரலால் சீர ணித்துப்
பார்களெண் ணில்சூழ் தேரோய் பழகிய திந்தக் கோயில்.

---

17. ஐந்தில் பின்றிய - விண், நீர், காற்று, தீ, மண் ஆகியவற்றின் மாறுபாடாகிய. பேரண்டம்-திரண்ட பெரிய கோளுலகம். குயக்கலம்-மண்பானை பிரளையம் - ஊழிக்காலத்து வெள்ளம்.

18. தீத்தெரி-தீயாற்படுதல் நிலை. நீறு-வெண்ணீறு. உலகங்களெல்லாம் அழிய ஆடும் கூத்து - கொடுகொட்டி. உலகங்களெல்லாம் தோன்ற ஆடும் கூத்து - துடிநிலைக்கூத்து.

19. ஞானதேசிகர் - தத்துவநூற்பேரறிவும், மெய்யுணர்வும் பெற்ற குரு. வேதம் - தமிழ்மறை, ஞானசாத்திரம் - சிவஞானபாடியம் முதலாய மெய்ஞ் ஞான சாத்திரங்கள். அறை - குகை. கனல் - தீ. கானம் - காடு.

20. எங்கும் மாண்டினும் - எல்லா இடங்களும் அழிந்து போனாலும். நமக்கு இடமாம் - நமக்கு உரிய இடமாம்.

21. செப்பேசுவரன் - திருவையாறுடைய சிவன் திருநாமம். சீரணித்தல் - தம்முள்ளடக்குதல். பழகிய - விரும்பி நிலவிய.

22 இப்படிப் பழகி முன்னு மிழைத்தன ரளவி லன்பர்
பொய்ப்படி தவிர்த்த நீயும் புதிதென புரிந்து செய்தி
மெய்ப்படி நன்மை மேன்மேல் வேண்டினன் முனக்கென் றன்றோ
னப்படி சொலித்த செம்பொற் சோதியுள் ளொளித்தா னம்மா!

23 மறைதலு மிறைவன் கிட்டி வாளொளிப் பிழம்புள் ளாக
உறைசிவ லிங்கங் கூர்த்து பார்த்தலு மோட வைத்த
கறைதவிர் செம்பொன் போலக் காணவா மூன்றி ரேகை
நிறைபல துவார மோடக் கண்டதி சயித்து நின்றான்

24 புழைப்படு துவாரந் தோறும் புத்தமு தூரக் கண்டான்
பிழைபடா மறைச் சொல் வாய்மை பெருந்துரு வரத னாதிக்
குழைபடு மனத் தவத்துக் கோதமன் வசிட்ட னீடு
நுழைபவ ராங்கு நீங்கா திருப்பது நோக்கிக் கண்டான்.

25 அன்னவன் பயந்து பின்னர் அதிசய மெய்தி நின்று
தன்னுள மகிழ்ந்து ரோமஞ் சலிகொளத் தடக்கை கூப்பி
முன்னரஞ் சலி புரிந்து முறைமுறை வணங்கி யாங்கு
பொன்னகர் சிகர மாடம் புரிசைகோ புரங்கள் செய்தான்.

---

22. பொய்ப்படி-நிலையில்லாத வாழ்க்கை. மெய்ப்படி-நிலையான பேரின்ப வாழ்வு. சொலித்த - கதிரொளியாகிய. ஒளித்தான் - உருவொளிகரந்தான்.

23. வாளொளிப் பிழம்பு - அருகிய ஒளித்திரட்சி. ஓடவைத்த உருக்கி-ஓடவிட்ட. கறைதவிர் - குற்றமில்லாத. இரேகை - வரிச்சுவடு.

24. புழை - துளை, புத்தமுது - புதிய அமிர்தம். துரு - துருவாசன். நீடு-நெடுங்காலம்.

25. ரோமாஞ்சலி - மயிர்க்கூச்செறிதல். முறை முறை வணங்கல்-சைவாகம நெறிப்படி வணங்கல். சிகரம் - விமானம். புரிசை-திருச்சுற்று மாளிகை.

26 சூளிகை மண்ட பங்கள் சுடர்நவ மணியிற் செய்து
மாளிகை வீதி கண்டு மனமிட மியற்றி யங்கண்
வேள்வியின் மறையோர் மன்னர் வணிகர்வே ளாளர் மற்றைக்
கேளியல் சாதி யாவுங் கிளையுட னிருத்தி னானே.

27 பிரியமா விரத னென்பான் பிரக்கிய கோயி றன்னை
புரியையாம் புகல வேண்டிற் பொன்னுல களகை தன்னை
சுரிகுழல் மடவார் தேவர் சூழ்வொடு சூழ்ந்தாற் போலுஞ்
தெரியிலப் மதிகள் போற்றுஞ் சிவபுரி தானும் போலும்!

28 செம்பொற் சோதி செழுஞ்சுடர் சூழ்ந்தெழுந்
தும்பர்ப் போகிய வொண்மையிற் றோன்றுமா
லம்பொற் கோயிலு ளாதியிற் றூவியின்
பைம்பொற் சோதி பறந்து நிமிர்ந்தவான்

29 தலத்தினோ டொளி தங்கிய சூழெலா
மலத்து நீடு மனத்திருள் மாய்வபோற்
குலத்து நீடிய கோயிற் சோதியாற்
புலத்து நீடு புறத்திருள் போவதால்.

30 நீல மாளிகை நித்திலப் பத்திபாய்ச்
சால மாலிருட் டாரகை யென்பதொன்
றேல மால்விசும் பில்லென வல்லெலாங்
கோல மார்முகிழ் பதக் கோயிலே.

---

26 சூளிகை-பெருமுற்றம், மாளிகை வீதி-திருமாளிகை நடைவீதி. கேளியல் சாதி - திருக்கோயில் பணிச் சுற்றமான உவச்சர், மாணி, திருமஞ்சனத்தார், அலகிடுவார், ஆகியோர்.

27 பிரக்கிய - விளக்கமாகச் செய்த. அளகை - குபேரன் நகர், சுரி குழல் - சுரித்துக்கட்டிய கூந்தல். மடவார்-இளமகளிர், தேவமகளிர், சிவபுரி-கயிலை

28 செம்பொற் சோதி-மாசற்ற பொன்னொளி. தூவி-மென்மையாகப் பரவிய.

29 மலம்-ஆணவ மலம், குலம்-தேவகுலம், புலம் - காட்சிக்கமைந்தவுலகம்.

30 நித்திலம் - முத்து. தாரகை - விண்மீன்கள், விசும்பு - வானம், மால் - இருள், கோலம் - அழகு, முகிழ்பது - புலப்பாடுறுவது.

31 மாசிலா மதிற் பச்சை மணிச்சுடர்
தேசு லாவ தெரிவது வானமே
லாசிலா மிசை யாறுளாந் தொடராற்
பாசி யூறிப் படர்ந்தது போலுமே.

32 மாணிக்கக் கல்லிழைத்த பொன் மண்டப
மாணிக் கட்டழல் விட்டெரித் தம்பொன்வாள்
வேணிக் கட்பயில் வேலையும் வேலையிற்
பாணிக் கப்பயில் பாண்மையிற் றோன்றுமே.

33 மட்டிலா நவமா மணிக் கோபுரம்
விட்டவாய் நிலை விண்ணுழை வெண்மதி
யொட்டி வெள்ளிடை யொள்வயி ரங்களா
முட்டி நின்று முயங்க மயங்குமே.

34 மரகதப் பச்சிலை மாண வண்ணமாய்
கருமணித் தொடர் சாழக ஞானமா
வெரிமணிக் கதி ரின்மணித் தாமரை
வரநதிக்குள் மலர்ந்தது போலுமே.

---

31 ஆசுஇல் - குற்றமற்ற, தேசு - அழகு, ப்ாசி - பச்சை நிறப்பற்று. இப் பாடல் தற்குறிப்பேற்ற அணிபெற விளங்கிற்று.

32 மாணிக்கத்தழல் - மாணிக்கத்தின் ஒளியாகிய தழல். வேணி - சடைமுடி. வேலை - வான கங்கை, பாணிக்கப்பயில் - தாள மிசைக்கக்கற்கின்ற.

33 நவமாணிக்கம் - ஒன்பது வகை இரத்தினங்கள், விண்ணுழை - விண்ணி டத்துவழி, முயங்க - ஒன்றுசேர.

34 மாண - சிறப்பமைந்த. கருமணி - நீலமணி சாழக ஞானம் - யோகப் பயிற்சியால் பெறும் ஞானம் வரநதி - தெய்வநதி.

35 மழைத்த நீல மரகதப் பன்மணி
இழைத்த செம்மணி யெங்கு மெரித்தலாற்
குழைத்த பாசொளி கூண்டெழு செவ்வொளி
தழைத்த சோலையா தளிர்த்தது போலுமே.

36 துங்கமேரு விற்கவின் றொடுத்தகோ புரத்தலை
சிங்கமே லுரிஞ்சுகார் கள்சீயமே னடக்குமா
தங்கமே நிகர்த்தவத் தலைப்பசும்புண் வாய்தொறும்
பொங்கு சோரிபோலவ் விண்பொலிந்த சோதி மின்னலாம்.

37 ஆனுயர்த்த அண்ணல் கோயி லறிகுறிக்கு மதகெலாம்
மேனிரைத்த விடையினோடு விண்ணுலாவு வெண்டுகிற்
கோனிரைத்த கொடிநுடங்கல் கொடியமால் விடைக்குலம்
வானதிப் புனற்குநா வளைத்துநின்ற மானுமே.

38 துஞ்சுவா னெழுந்து வான் மதிற்புறஞ் சுமக்கவீழ்
மஞ்சுவர் யுமிழ்ந்தநீர் மலிந்தநுண் டுளிப்பர
பஞ்சுவாய் வேதமோது மந்தணாளர் வீதிவாய்
விஞ்சுவாய் பிரமவிந்து விமலமே விளைப்பவே.

---

35 மழைத்த - குளிர்ந்த நீரோட்ட முள்ள, செம்மணி-இரத்தினம், பாசொளி - பச்சை நிறவொளி.

36 துங்கமேரு - அழகிய மேருமலை, உரிஞ்சுகார் - படிந்த மேகம், சீயம் - சிங்கம், சோரி - இரத்தம்.

37 ஆனுயர்த்த அண்ணல்-இடப இலச்சினையுடைய கொடியை உயர்த்திய சிவபெருமான், விடை-இடபம், கோன்-இந்திரன், வானதி-ஆகாயகங்கை.

38 துஞ்சுவான் - படிந்த மேகம், வான் மதில் - உயர்ந்த மதில், மஞ்சு - படர்மேகம், பஞ்சுவாய் - மென்மையான வாய், அந்தணாளர் - வேத பிராமணர், விமலம் - தூய்மை.

39 வான நாடு மாளிகைக்கண் மாடசூளிகைக்குழாந்
தான நாடு தேவரூர் விமாமகோடி தடைசெயப்
பானல் வாயம் பேச்சினார் பரிந்துருட்டு சிறியதே
ரேனையாக முற்றினோ ரெடுத்ததேர் தடுப்பவே.

40 புள்ளு மானிலத்தர் தேவ பூதராதி பேதமா
யள்ளு மாவடைத்த நாழி கைப்புடைப் பணித்தலாற்
றெள்ளு மாரணத் திறத் தெழிக்கும் வேதிகைத்தல
முள்ளுமாவி யாவையும் படைப்புலோக மொக்குமே.

41 விதியுணர்த்தும் விஞ்சையால் விரிஞ்சன் வேதனாலென
புதிய தூய திருவினாற் புயல் நிறத்தன் மார்பெனக்
கதிவிளைத்த தருமமிக்க காட்சியாலவ் வேதிகை
விதிதறித்த மதிமுடித்த செம்பொன்மேனி மானுமே.

42 ஓமதூபம் விம்ம விம்மவோதி மங்கள கனகரிந்
தேமகூட மன்ன மன்னர் வீதிமரட மிறைகொளாத்
தாமவார் குழற்குமாதர் தருமகிற் புகைவெரீயிக்
காமர் காவகம்புகும் புறாவொடுங் கலப்பவே.

---

39. வானநாடு - வானளாவிய. தானநாடு - எல்லா செல்வங்களுமுள்ள தேவவுலகம். பானல் - குவளை மலர் போன்ற.

40. புள்ளு மானிலம் - நிலையில்லாது சுழலும் உலகம். பேதம்-வேறுபாடு தெள்ளும் ஆரணம் - தெளிந்த வேதம். வேதிகை - வேள்விமாடம். படைப்பு லோகம் - பிரம உலகம்.

41. விரிஞ்சன் - பிரமன். புயல் நிறத்தன் - மேகவண்ணன், திருமால். மதிமுடித்த - மேனி - சிவபெருமான். மானும் - ஒக்கும்.

42. ஓமதூபம் - வேள்வித்தீயிலிடும் நறும்புகை. தாமவார் - (தாமம் வார் குழல்) மலரணிந்த நீண்ட கூந்தல்.

43 இரைத்த புட்கொடிக்குழா மிரண்டுபாலு மிருபெருங்
கரைத்தடம் புனற்பெருக்கு மொய்மணிக் கதிர்க்குலாம்
திரைத் திறங்க டோரணங்க ளென்னவின்ன வாற்றினாற்
புரைத்தபொன் கொழித்த பொன்னி யாறுவெள்ளம் போலவே.

44 மகரவாயில் மாரனூர் மனைப்பொதும்ப ரும்பர்கோ
வகரவம்பொன் மேடைவேத னாடுவெண் பளிக்கரை
புகரில் முற்ற மால்பதம் புதுச்சுதைப் பரப்பொளிச்
சிகர சூளிகைத் தலங்கள் கயிலையிற் சிறக்கவே.

45 யாழ்நிரைத்த மாதர்முன்கை யேந்துகிள்ளை யினியப்பா
றூணிரைக் கொருத்தாயை யூடியோடி நீடுசீர்
வாணிகன் மாமணிப் பசும்பொன் மாளிகைத்
தூணிரைத்த பாவையாம் சுகங்களோ டொளிப்பவே.

46 சூழ நீணிற்றுவான் சுடர்நிலா வுடுக்கள் போலுங்
காழகத் துகில்வான முத்தினகம் பலமணிக்கேசந்
நீழல்வா யளகையாளி நிதிச்சரக் கறைதிறந்தாங்
கூழறாச் செல்வக் குப்பையொழிவற்றா தென்றும்

---

44. மகரவாயில் - மகரதோரணவாயில். மாரனூர் - மன்மதன் வாழிடம். புகரில் - குற்றமற்ற.

45. கிள்ளை - கிளி. ஊடி - பிணக்கு. பாவை - பதுமை. சுகம் - கிளி.

46. நிதிசரக்கறை - செல்வமாகும் சரக்குகளுள்ள அறை. கூழ் - உணவு. குப்பை - தொகுதி.

47 பெறற் கருந் தலத்தின் மேன்மை பெருந்திருக்கிழவன் வீடுந்
துறக்கமு மடிப்படுத் தொன்மைய தெனுமாலங்கு
வறற்பரு நிதியின் மல்கும் வைசிகர் மறுகுமின்பம்
சிறக்கவே பதிகட்கீழ் செறியதா தூக்கும் போலும்!

48 கோவள மகளிர் கூந்தற் குறையளி குறிஞ்சி பாட
பூவள வேள்வீ வேளாண் புரவல ரிருக்கை யாங்குத்
தாவள மேக மாழ்கித் தண்கடற் றுகிரு முற்றும்
தூவள வளையுஞ் சீந்தி சோனையிற் சொரியு மாதோ!

49 மாந்தர் கற்பகங்கள் சிந்தாமணி சீரார் மாதா தேனு
வாய்ந்த ருணிதிகுற்றாட்டி றொட்டிட்டுச் சூழ்வோர்
போந்து தெள்ளமுது நல்கும் புதுமதி யாகவங்கண்
ஏய்ந்தபுன் பசியினோரை யிமையவர்க் கரசனாக்கும்

50 பாங்க மாதடந் தாட்டாழை பச்சிள நீரின் மீது
தூங்குவ துண்மென் பாளை துயல்வாறோகை போல்வ
வாங்குபு வல்லி யொல்கும் மருங்கற் பணைத்த கொங்கை
தாங்கிய முத்தின் றொத்துந் தாள்வடம் புரள்வ போலும்!

---

47. பெருந்திருக்கிழவன் - குபேரன். துறக்கம் - இன்பவுலகம். வறற்பழி - குறைவுஅற்ற. தூக்கும் - அளவிட்டு நிற்கும்.

48. கோவள மகளிர் - அரச செல்வமுடைய பெண்கள். புரவலர்-உலகைப் புரப்பவர். சோனை - கார்மேகம்.

51 வேளுழ வாளர் மாட மேலிருந் தாடு மஞ்ஞை
வாளுழ வாளுகு செங்கோல் மனுபர னெடுத்த கோயி
லாளுடை பரனுக்கின்ப வடியவா நியம மன்னார்
தாளுடை தடங்கடங்கள் சார்வெனச் சார்வதாமே.

52 அவிநயம் ரம்பை கொல்லிப் பாவை அவய வங்கள்
செவிகவ ரமுதகீதந் தெய்வ காந்தாரி போற்பிறக்க
கவின் பயக் கிக்கூடற் பன்னகக் கன்னி காமங்
குவிமுலை யிரதி யன்னார் குழீயது தெருவினோர்பால்

53 கோணயக் கடல்கார் வாங்குங் குளிறொளி கடுக்குப் பேரி
வீணை கைத்திரிகை தாளம் வேள்வளை துடி தடாரி
தோணயத் தொலிக்கு மாந்தர் தொல்குடி யோர்மால் மாயை
யாணையிற் பிரிந்த தன்ன வகம்படித் தொண்ட ரோர்பால்.

54 பாவையுங் கழங்கும் பந்தும் பாடுமம் மனையும் யாழுங்
கோவையந் தமிழு மீசன் குரைகழற் கன்பும் பூண்டார்
பூவையர் பேதை முன்னோர் பொதுமனை மகவான் செல்வம்
யாவையும் நல்கி வைகு மின்பத்தி னியைந்த தோர்பால்.

---

52. அவிநயம் - பொருள்தரும் ஆடல்.

53. பேரி - பேரிகை. துடி - உடுக்கை. தடாரி - பறை.
அகம்படித்தொண்டர் - உடனிருந்து பணிசெய்யும் மக்கள்.

54. பாவை - மகளிர் விளையாடும் பதுமை கழங்கும் - உருட்டி விளையாடும் கருவி கோவை - சீராகவமைந்த மகவான் - இந்திரன்.

55 பால்வரை பொதும்பர் முழைவைத்த பேரிறாற் றெனமுச்
சீலவரிச் சுரும்புந் தேனும் நிமிரு நின்றிமிர்வ தேய்ப்ப
கோல்வரித் திவவின் யாழுங் குழலுந் தண்ணுமையு மேங்க
நூல்வரி கழக கேள்வி நுகர்ச்சியிற் பயின்ற தோர்பால்.

56. மலையகழ்ந் தெடுக்கத் தக்கார் மறிகடல் கவிழ்க்க வல்லார்
நிலைதளர் பூதமைந்து நிறுத்துமா கணத்தோ டொப்பா
ரலைபுனல் வேணியன்ன லாலய பணிமேற் கொண்டார்
தொலைவிலா வேறாழ் வலித்தேர் னிவந்தரதஞ்
சூழலோர்பால்

57 ஏழ்வகை யுலோக மாக்கி யெழில்பெற யிருத்தி யவ்வா
றாழ்வர வழிக்குந் தன்மை யுடைமையாற் றெய்வத் தன்மை
தாழ்வற மயனை யென்னார் தபதியர் சிற்ப ராவர்
ஆழ்வரு மதினுண் மாந்த ரனைவரு மிகுந்த தோர்பால்.

58 சந்தியுஞ் சதுக்கமுஞ் சார்வுஞ் சித்திரப்
பந்தியும் பந்தரு பளிக்குத் தோன்றிய
மந்திரப் பொதியிலு மன்றுமா வாயிலுஞ்
செந்திருப் பொலிவுறச் சிறந்த தெங்குமே.

---

55. பொதும்பர்-மரச்செறிவு. முழை-பொந்து. பேரிறால்-பெரியதேனடை சுரும்பு - கருவண்டு. தேன் - தேனீ. நிமிரு - வரிவண்டு. திவவுயாழ் - விரலால் திறஞ்செய்யும் யாழ். நூல்வரி கழகம் - நூல்களை முறையாக ஆய்ந்த தமிழ்ச்சங்கம்.

59 பழுத்த செந்தமிழ் சேந்த பதக்கமே
லழுத்துவ மணியெனப் பொலிந்த தல்லது
வழுத்தருந் திருமகள் வாழ்தற் கத்திசைச்
செழுத்த பூம்பொருட் டெனச் சிறந்ததப்பதி.

60 பணிக்க மணிமுடிப் பைம்பொன் மெள்ளமேல்
மணிக் கிணையல்லதிப் புவன மாமனை
அனுக்க தீவினை யிருளகற் றவோர்
தனிப் பருந்திரு விளக்கென் னத்தக்கதே.

61 தெறுகதிர் பகல் விளக்காக்குஞ் செம்பொனின்
மறுகணி வளநகர் வளைத்த பைம் போதும்
புறழ்நவ மணிப்பணி நிதியை யுள்ளுடையப்
பிறழ் மணி மரகதப் பேழை போன்றதே.

62 வில்வ மாசினி பலாவேங்கை பச்சிலை
குல்லை கேதகை யிருவேரி கூதளம்
மல்லிகைச் சாதி செவ்வந்தி பித்திகை
முல்லையே முதலிய மொய்த்த சோலையே.

---

62. வேங்கை - வேங்கைமரம். பச்சிலை - மரு, மருக்கொழுந்து முதலியன. கேதகை - தாழை. குல்லை - துளவம். இருவேரி - வெட்டிவேர். சாதி - சாதிமுல்லை. பித்திகை - பிச்சிப்பூ (முல்லை வகை என்பர்.)

63 திக்களப் பனபணை வேர்கள் சேடனூர்
புக்களப் பனசுரத் தருவைப் போலியாய்
மக்களாற் றுவதென்ன மதித்த ளக்கெனத்
தக்களப் பனசினை தான்வா னெலாம்.

64 மடற் கமுகுஞ் சலவாய்வஞ்சி மாதரும்
துடக்கிய கொடிக்கிடை யாடுந் தோகையை
மிடைத்த மகளிர் வந்திறங்கு கொம்பரு
முடற்பஞ் சுஞ்சோலையோ டொன்று போலவே.

65 மாயவ னடிவடிவென வளர்ந்த சோலையூ
டேய்வன மனமேய்ந்த பூந்தடஞ் சேயவள்
புலவியிற் சிந்தைவைத் துப்புலப்படுத் திணைந்த
நலமிகு மகளிர்போ லன்னஞ் சேர்ந்ததுவே.

66 கஞ்சமுங் குவளையும் காவியும் கயற்
புஞ்சமு முடங்கியப் புரியின் மாதரார்
நஞ்சமுங் காலனும் போலு நாட்டவே
லஞ்சலி னீரா னடைந்த போலுமே.

---

63. பணை - பெருத்து நீண்ட. சேடனூர்-நாகவுலகம். சுரதரு-கற்பகமரம் சினை - கிளைகள்.

64. கமுகு - பாக்குமரம். சலவாய் - ஓசையிடும் வாய். தோகை - மயில்.

65. பூந்தடம் - தாமரைக்குளம். சேயவள் - திருமகள்.

66. கஞ்சம் - தாமரை. குவளை - நீலோற்பலம், (செங்கழுநீர்) காவி - கருங்குவளை. புஞ்சம்-திரண்ட நிலை. நஞ்சமும் காலனும்-விடமும் எமனும் போன்ற. நாட்டம் - கண்பார்வை.

67 பொய்கையந் திருமகள் புனல்வஞ் சிக்கொடிக்
கைகளிற் றுணர்த்தபூங் கொம்பர் காதலர்
வைகலிற் றழுவலின் வணங்கியாம் பல்வாய்
மொய்கொடே னூறனீர் மூசி யுண்பவே.

68 கொன்றைவாழ் சடையினோர்க் கேலுங் கொள்கையாற்
றென்றலார் பதமனைந் தெழுந்தே மகிழ்ந்
தொன்றலா ஞானவா னுலகுண் டாலென
மன்றலார் நந்தா வனமுஞ் சூழ்ந்தவே.

69 இவையிவை சிவபதி சிறப்ப நாற்கவி
கவிஞரு மதிக்கொணா காட்டி கண்டனன்
செவிபொர வரியளி செறிந்தெழுந் தழுந்திய
கவுளிழி கலுழி வெங்கடாக் களிற்றினான்.

70 ஆடி யருளும் பஞ்சநதி யத்தர்க் காடுமைஞ் சினுக்குங்
கோடிப் பசுவி னீரைநல்கி குறையா நைவேத்தியம் புரிந்து
தேடி யளவி னிதிவீசித் திருப்பங் குனியத்திற் றிருநாள்
நாடி யெவருந் தொழப்புரிந்து நற்றீர்த் தமுங்கண்
டாடினான்.

---

67. வைகல் - நாட்பொழுது. மொய்கொள்தேன் ஊறல் நீர். மூசி-மூடிக் கொண்டு. காலைப்பொழுதில் ஆம்பல் இதழ்குவிந்திருக்கும் இயல்பு, மூடி மறைத்து கள்ளை உண்ணுவது போன்றிருந்ததென்று நயம் தோன்றிற்று.

69 நாற்கவி - ஆசு, மதுரம், வித்தாரம், சித்திரம். வரியளி - வரிபொருந்திய வண்டு, கவுள் - கபோலம், கலுழி - மதவெள்ளம்.

70 ஆடும் ஐந்து - பஞ்ச கௌவயம், நிதி - செல்வம், பங்குனித் திருநாள்

71 நித்த நைமித்திகப் பூசை நிமலர்க்
கத்தினப் படிபுரியச் சுத்தபர மார்ச்சனை
சைவச் சுருதிபீடந் தாபித்துதான முறைவகுத்து
நத்தறாத வயற்கழனி நாடுவூர்ப் பல நல்கினான்.

72 நோக்கவரியத் திருமேனி வருளகன் றழைத்து நுவன்றபடி
ஆக்கவரிய திருக்கோயி லனைத்துமாக்கி யமைத்த தற்பின்
வீக்கவரியும் வார்க்கழற்கால் வேந்தர் வேந்தன் கரணங்க
டாக்கவரிய தனிமுதலைத் தன்பா லன்பினிவை துதிப்பான்.

73 ஒன்றாய் கண்ட வடிவா யானந்த முயர்வா யெழுந்த
வொளியாய்
மன்றாய் தண்கணி றையாய் நிலங்கள் மரமாய் வளங்கள்
பதியாய்
குன்றாய் விலங்கு முதலா விருந்து குணிகள் வரவீரர்
குறியாய்
நின்றா யுன்மேன்மை நினைவிக் கிலன்றி நினையா
வருகின்று நினைவார்

---

71 நித்த நைமித்திகம் - சைவாக விதிப்படி நாளும் செய்யும் வழி பாட்டு முறை, சைவ சுருதி பீடம் - சைவ ஆசார்யர் வழி வரும் சந்தான பீடம், நந்து அறாத - நத்தைகள் நீங்காத, நாடு ஊர்-அர்ச்சனா போகமாக நாடும் ஊரும் இறையிலி செய்தல்.

73 ஒன்றாய் கண்ட வடிவு - ஒரே தீப்பிழம்பாகவும், மூவராகிய ஒருவனாகவும் கண்ட வடிவு, நிறைவு - முழுமை, முழுமுதல், மரமாய்-எல்லா உயிரகளுமாய், குணி - குணமுடைய.

74 ஆறாடு சென்னியணி காளகண்ட யரியாதி தேவரறியார்
பேறாடி நின்றுதொழுவார்க் களித்த பெருமான் குழைத்த களபச்
சேறாடு கொங்கை யுமைபாகப் பஞ்ச நதிசெப்பி யேசமுழுது
நீராடி யென்று நினைவிக்கி லன்றி நினையாவர் நின்று நினைவார்.

75 கனிகின்ற வன்புகண்டு கருணையங் கடலாய் நின்றோன்
றனிநின்று நம்பாற் கேட்டவர் நன்றுதந் தோமென
வினிதங்கு நல்கிச் செம்பொற் சோதியா யிருப்பானிப்பான்
மனுமைந்தன் றானு மாங்கு வாழ்ந்தனன் நெடுநாள்மன்னோ!

76 மன்ன னன்புடன் வரவர வறமென்மேல் நன்மை
பன்னருஞ் சிறப்பிற் பெற்றுப் பஞ்ச நதேச வாசந்
துன்னலா லழிவிலாத துறக்கமுங் கடந்த தொல்சீர்
முன்னவ நிறையோ டொன்றாம் முத்தியின் பத்துப்புக்கான்.

77 என்றுமா முனிவன்கூற ஏந்திழை யிலிங்க மேன்மை
நன்றென மகிழ்ச்சி பொங்க நவின்ற மூன்றிரேகை யாங்கே
தொன்றுபன் றுளைகள் யாதுள் ளூறிய வமுத மேது
நின்றவர் விடாம லாங்கு நிகழ்வதென் கூறுகென்றான்.

---

74 ஆறாடு சென்னி - கங்கை விளையாடும் முடி, காளகண்ட - விடத்தில் கொண்டவனே.

75 கனிகின்ற அன்பு - ஆருயிர் கட்கு இரங்கும் பேரன்பு, தனி நின்று - ஒரே சிந்தனையுடன் இருந்து, நன்று - கேட்ட நல்லவரங்கள்.

76 வாசம் துன்னலார் - வாச நீராடி வாசமலர் சூடி மகிழ்பவர், துறக்கம் - வீடுபேறு, முத்தி - பிறவாப் பெறும் பேறு.

77 பன்துளை - பலதுளைகள், ஆங்கு - அத்துளையின் உள்ளே.

78 அதிசயத் திறைவன் பஞ்சநதியி லிங்கத்தை யன்பாற்
குதிகொளா னந்தவெள்ளக் குமிழிபோற் புளகங்கொள்ள
மதிநுதற் குமுதச்செவ்வாய் வாணுதல் வல்லிநின்போற்
புதியது வினவிக் கேட்ப தரிதெனப் புகழ்ந்துசொன்னான்.

79 முக்குணச் செயல்செய் மூன்று தொழிலுடை வடிவ மூன்றுந்
தொக்கவவ் விடத்து முன்னாட் டோன்றிய வவற்றி னின்றும்
புக்கிடத் தக்க தாதல் போக்கிய யதிரேகை யாகப்
பக்கது குறியாற் கண்டாய் பசுந்தமி ழனையச் சொல்லாய்.

80 அகிலமும் பிரளயத்தி லமிழ்ந்த நாள் முனிவ ரெல்லாம்
மகிதலத் தில்வரப் பஞ்ச நதியி லிங்கத்து வாழ்வர்
சகலமு மூழித் தீயிற் றவிக்கு நாளமுத முண்டு
புகலென விருக்குஞ சார்ப்ப புழைகளின் புதுமை கண்டாய்.

81 அப்புழை யளாயத் தூயதி னாட்டிய வபிடே கத்தின்
மெய்ப்புல னருசி லெல்லாப் பிணிகளு நீங்கு மெய்யே
யெப்பெரு சுகமு முண்டாம் யாவர்க்கு மறிவிக்கு மேலைக்
கைப்புனல் பருகில் மேலாங் கதிபெற லெளிது வாய்மை.

---

78 குதிகொள் - பெருகிச் செழித்த, மதிநுதல் - பிறைமதி போன்ற நெற்றி, குமுதச் செவ்வாய் - செவ்வல்லி பூவிதழ் போன்ற சிவந்தவாய்.

79 மூன்று குணம் - மென்மை தன்மை வன்மை, மூன்று தொழில் - ஆக்கல் காத்தல் அழித்தல், பக்கு - பக்குவமாகப் பகிர்ந்துள்ளது.

80 அகிலம் - உலகம், பிரளயம் - ஊழிக்காலத்து வெள்ளம், சர்ப்பம் - பாம்பு, புழை - புற்றிலுள்ள துளை.

81 புழை - துளை, பருகில் - உண்டால், மேலாங்கதி - உயர்ந்த நல்வாழ்வு.

82 வேதக விரதம் போல மலவுடல் விமல மாக்கும்
பேதக மிடிகள் போக்கும் பெருகுமா கல்வி வாக்குஞ்
சேதக நாக சேடந் தீவினைச் சேடத் துள்ள
சூதக நீக்கு மென்று தொல்கதை யொன்று சொல்வான்.

பிரிய வரதன் காதை முற்றும்.

## நால் விலங்கு கதிபெற்ற சருக்கம்

### தசீசி யத்தியாயம்

1 அருந்ததியைப் புறக் கிறுத்து மணங்குறு கற்புடையாய் கேள்
பெருந்ததிப் பெற்றவ னென பெயரோனால் தலத்தில்
வருந்திவரு நால் விலங்கும் மஞ்சனத்தாற் பரலோகம்
பொருந்தியது நினைத்தாலும் புதுமையே போலுமால்

2 ஏறுடை சிவ பெருமா னெய்தவருள் மெய்ஞ் ஞானம்
பேருடைய விருப் பல்லாற் பெருஞ்செல்வ மெனவுலகில்
வேறுடைய கடவுளர் சீர் வெண்வாத் துடைத் துடையான்
நீறுடை கவசத் தானின் நீடு தலங்கள் சேவித்தான்.

---

1 அணங்குறு - தெய்வத்தன்மை பொருந்திய, ததி - அமையம், மஞ்சனம் - மந்திர நீர்.

2 ஏறுடை - இடப வாகனமுடைய.

3 திருவிரா மீச்சரத்துத் தீர்த்தங்கள் மகிழ்ந் தாடி
கருவுறா வகை யருளென் றிறை யடிகள் கண்டகன்று
வருவிரா கத்தவத்தோன் வன்கான வழிவருங்கால்
வெருவிரா வொரு நான்கு விலங் கிரங்கி யழுதனவே.

4 பொல்லாத கொடு நாகம் புகுந்த நெடு நாட்பொசித்தே
மெல்லாரு மிகழ் செந்நாயே பன்றிக்கா மானென்
றொல்லாத பிறப்புற்றே மொழிந்திட லென்றோ வென்று
சொல்லா நன் மாந்தரெனச் சோர்ந்தழுது சொல் வேளை.

5 இந்நாலு விலங்கிரங்க யாதோவென் றணுகு தலு
முன்னாக வந்திறைஞ்சி முனிவனை வந்தனை செய்ய
வன்னாலு மென்னுற்றீர் குலமென்னோ நீவிர்
மன்னானும் பிறப்பரிய வருமாறென சொல்கென்றான்

6 புண்ணிய மாதவ கேட்டி புனித மறையவர் குலத்து
கண்ணிய கவுசிகன் வழியிற் கனல்வேள்வி வேதியன் யான்
பண்ணிய பாதக மிகலாற் பதிதார மவர் கையி
லெண்ணிய தானப் பொருள் கொண் டிருணிரையந் தனில்
வீழ்ந்தேன்.

7 வன்னரகந் தொலைந் தேறி மானி லத்திற் பிறப்புற்றே
னின்னிதனா லீதொழிவ தென்றோ வென்றயர் வுற்றேன்
முன்னறிய வருமாறு முனிவரொரு பதின்மற் கியான்
அன்னமிகு பயனாலென் றறைந்தது வெங்காம மன்றோ!

8 காசிபர் கோத்திரத் துதித்தே நான்மறையுங் கரைகண்டேன்
பேசுவரென் பேர்விசுவப் பிரியனெனப் பேதையென்
றேசிக நன்மனையா ளைச் சென்று வலுதிற் றழுவி
மாசனையக் கனலெரிவாய் வன்னரகந் தனில் வீழ்ந்தேன்.

9 மானிரை நீங்கிய பின் மாலாமிப் பிறப்புற்றே
னீனமிது தணப்பதினி யென்றோ வென்றயர் கின்றேன்
மேனியிலுத் தூளன்மா வெண்ணீறு முன்புனைந்தேன்
ஞானமுத லறிந்தேனென் றறைந்தது செந்நாய் மாதோ.

10 தக்ககவுண் டிண்யகுலச் சார்பினென் புண்டோனென்
றொக்க லுரைத் திடுபெயரே னொருசுருதி மந்திரத்தை
புக்கருக நல்லார்க்குப் போதித்தே னப்பாவந்
துக்கமுற விருள்சூழ் நரகத்துத் துஞ்சினேன்.

19 நரகணைத்து நீங்கியெழுந் திப்பிறப்பி னண்ணினேன்
உரகமென கண்டெடன்னோ வொழிவதென அயர்கின்றேன்
விரகமுற முன்செய்த மெய்ப்புகழா லென்னறிவு
கரகனிய கண்டேனென் றுரைத்த மான்கலை மாதோ!

12 வேத பராகர் குலத்தென் மெய்யொழுக்க நெறிநின்றேன்
தாதைதாய் தமையனோடு தாழாது வைதுறுக்கிப்
பேதையே னடிதொறுத்த பெரும்பாவங் காலன்விடு
தூதரால் வென்னரகந் துய்த்தனென் பலகாலம்.

13 ஆங்குநர கங்களொழித் திப்பிறப்பே னாயினேன்
ஈங்குவருவ துயரகல்வ தென்றோ வென்றயர் கின்றேன்
பாங்குறுநின் போல்வோர்தம் பதங்பணிந்தேன்
கொல்லோமுன்
ஓங்குமறி வுணர்ந்தேனென் றதுமுளவு மாமாதோ.

14 தீராத வினையெவையுந் தீர்ப்பர் பெரியோ ரென்றும்
வாராத பேரின்பம் வரக்காணின் வருமென்றும்
ஆராரு முரைப்பருனை யடைந்தே முக்கவை தீர்த்துச்
சீரார்நற் கதியருளத் திருவுளஞ் செய்சென்றனவே.

15 ததீசி யடியினைச் சூழ்ந்து தாழ்குதலுமே யவ்விலங்கு
கதிபெறுமா றொன்றுமயல் காணாது நினைத் தெண்ணிப்
பதிகளது திலதமென்னும் பஞ்சநதி யேயலது
விதியலவென் றகந்துணிந்து விலங்குகளுக் கருள்செய்தான்.

16 அஞ்சலிர் அஞ்சலிர் நீரென் றபயமளித் தையாறு
தஞ்சமல திலைவருக வென்றழைத்துத் தக்கோனும்
விஞ்சைகொல் லென்றதிசயிப்ப விலங்குகள்பின் வரவந்து
பஞ்சநதித் துறைபொன்னி படிந்தனன் மற்றவற்றோடும்.

17 முனிமூழ்கி யெழ வெழுந்து முன்போதப் பின்போந்துந்
துனிமூழ்கு விலங்குகளுந் தூயோனுங் கோயில் வரப்
பனிமூழ்கு முகிலுறங்கும் பைம்பொற் கோபுரவாயிற்
தனிமூழ்கு துயரகலும் நிற்கென நின்றேன் சார்ந்தே.

18 முக்காலும் வலம்வந்து பன்னிருகால் முன்பணிந்து
தக்கானுஞ் சன்னிதியிற் றான்றெரியத் தெரிசிப்பான்
புக்கான் காலத்துச் சைவமறைப் பூசுரர்கள்
தொக்கார் நித்தியபூசை தொடங்கி நடத்தினர் மாதோ.

19 புனிதமுடன் சிவபருதி பூசைகளைச் செய்துட் கோயிற்
கினியது வாரம் பேணி யிருந்து விகுதிப் பொருளும்
நனிவிகுதிப் பகுதி யொடு நற்பகுதி முதலொடுக்கிக்
கனிவுதரு சித்தத்தை சிவமதனிற் கலப்பித்து

20 தத்துவங்க ளொடுங்கியபின் றான் மீதாய்த்தூலத்தைச்
சுத்தியுறச் செய்தவழி தோற்று வித்துச் சித்திபெறும்
சித்தமுறப் பூசித்துச் சிவசக்தி நிறைவாக்கிப்
புத்தியின்மந் திரமடைவே பூதமுறச் செய்தமைத்து

21 சிவஞான விலிங்கத்தைச் சித்தத்தி லருச்சித்துத்
தவநாவி மகமோம்பிப் புரம்புவரத் தான்வேண்டி
நவனாதி முதற்புரிந்து நம்பனிரு மாலியத்தைப்
பவனாத மெனத்தீண்டிப் பணிமாறி நறும்புனலால்,

22 சந்தனாதி நெய்சாற்றி முற்காதி யாற்றணத்து
நந்தையாதி யிற்கவர்ந்திடுங் கவ்விய கயப்பிற்
றைந்தகையுந் தனித்தனியா னைம்பல வமுதுஞ்
சுந்தரக் கடுகறுகொடு பன்னலர் சூழ்ந்து.

23 அரைத்த சந்தனக் குழம்புட னாயிரத் தாரை
உரைத்த மந்திரஞ்சோதக மாட்டி யோங்கொளியை
விரைத்துகிற் கொடுபுலத்தி யோர்புது மலர்வேய்ந்து
திரைத்த வங்கியின் தீபன நிவேதனஞ் செய்து,

24 சத்தியாதி மேற்சத்தியி னளவு தாமரையாய்
வைத்த கன்னிகை யாசனஞ் சிவாதன மருவித்தா
தொத்த முத்தியினியாகு முண்டாதியிற் செறிந்து
சுத்தவித்தை மேனியுஞ் சேர்வித்தெழு சோதியாய்.

25 திறையும் பேரொளிப் பிரிவிலோர் மின்னென னின்று
குறைவில் தூணெனவொரு முகக்குறி யெனநான்கா
யறையுமா முகமைந்துடைக் கருமமா மவனைப்
பொறையினால் வருவழியினாற் புகுந்திடப் புரிந்து,

26 இருவகை விந்துநாத மிகவகை பீடத்தோகி
பொருசிவ லிங்கமான வுருவரு வுடையான் தன்னை
மருவுதல் முதலோரைந்தின் மலரடி வதனஞ் சென்னி
திருவுரு புன்றெளித்து திருவுளம் மகிழ்ச்சி பேணி.

27 ஆயிரங் கழஞ்சு நாவி கற்பூரம் அணிந்து சந்தம்
வேயுறு தோளி பங்கன் மேனியி னிறையச் சாத்தித்
தூயநல் லாடை பட்டுத் தோய் துயிலுத் தரீயஞ்
சேயமார் பணியு முந்நூல் சேர்த்திமுன் மணிப்பூண் வேய்ந்து

28 பொன்மணி மகுட மாதி புனைந்துசெங் கழுநீர் நெய்தல்
பன்மலர்க் கமலம் புன்னை பாடல மலரி மாறு
நன்மதுப் பிலிற்றுங் கண்ணி படலிகை நானற் றாரம்
மன்மகிழ் விதத்தி லேற்றி யிலையமும் வணங்கினாரே.

29 போகமும் பூசை செய்து நறும்புகை புனைந்து தீப
மாகம விதியி னாக்கி யமுதமாம் புனித வண்ணம்
பாகமா முழுது முற்கம் பாளிதங் கன்னல் பொங்கல்
வாகுறு கருணை மற்றும் வர்க்கமு மேற்றி னாரே.

30 பல்வித வபூர்வ மொவ்வொன் றாயிரப் பந்த தாக
நல்விதக் கனியு மவ்வா றாகவே விளநீர்க் கன்னல்
மெல்லிலை பழுக்காய் கற்பூ ரத்தொடு விரும்ப வேற்றிச்
சொல்விரி தீபம் தட்டம் பற்பல சுற்றினாரே.

31 அருகொடு வேம்பு சுற்றி காய்ப்புநீ றணிந்து பத்தோ
டறுவகை யுபகரித்து நிருத்த கீதாதி யோங்க
மறைபல துதிக்கு மட்டும் வந்த மாதவனு நின்று
குறையிலா வுருத்தி ரச்சீர் மந்திரம் வழங்கினானே.

32 அடியவர் விரும்பிற் றெவ்வா றரியது மெளிய தாக்கி
மடிவுறத் திருவுள் ளத்தின் முகிழ்த்திடுங் கருணை நோக்கி
படிவுறப் பலகால் வீழ்ந்து பரமனே போற்றி போற்றி
துடியமர் கரத்தாய் போற்றி யென்றிது துதிக்க லுற்றான்

33 வணங்கிலேன் வணங்கு வோர்தம் வயப்படேன் உய்யப்
பெற்றார்
இணங்கிலேன் இணங்கி நீயே யானென வெண்ணு கில்லேன்
கணங்கிலேன் சத்தம் நீங்கேன் கறங்கியப் பிறவி னோக்கி
அணங்கிலேன் புறத்தி கண்டா யணியையா றுடைய கோவே

34 ஓதிலேன் ஓதலில்லேன் உணர்கிலே னுணர்வொ ழுங்கிற்
போதிலேன் போது தூவிப் போற்றிலேன் போற்றுகில்லே
னீதிலே னெனக்கு நீயே யானென என்னச் செய்யும்
தீதிலே னல்லே னாளாய் திருவையா றுடைய கோவே.

35 கொடுத்திலேன் கொள்ளு கில்லேன் கொடைப்பொரு
ளல்லெனக் கொள்கென்
றடுக்கிலே னீயே யானென் றகிலமும் சத்திற் காணேன்
விடுத்திலே னனைத்து நீங்கா மெய்யுணர் வருளி வீழா
தெடுத்திநீ புரத்தி கண்டா யெழிலையா றுடைய கோவே.

36 ததீசிமா முனிவ னன்பிற் றழல்மெழு காகி நம்பன்
துதியினால் மகிழ்ந்தேம் யாது வேண்டினை சொல்லு
கென்னக்
கதியினால் விலங்கின் வந்த காமுத நான்கிற் கிந்த
பதியினாற் றருதும் முத்தி யென்னவே பணிந்தே னப்பால்.

37 வனத்துள் நான்கு மென்பின் வந்தன புறத்து நின்ற
வினத்துள தொண்டற் குற்ற புகழ்பழி யாவும் நின்பாற்
கனத்துள வாகி நிற்றல் காசினி யறிந்த திந்த
தினத்து ளவ்வுயிர்க்கு நல்லத் திருவுளஞ் செய்கென் றானே.

38 கேட்டிசின் மறையோய் நம்மைக் கேழ்கிளர்க் கந்த நீரால்
ஆட்டிய புனற்றெளித் தாங்கு அளித்தலு மடையு மென்று
காட்டிய முதல்வன் கூற நற்றவன் கையிற் கொண்ட
மீட்டியல் கமண்ட லிப்பாற் பெய்தனன் புனித னன்னீர்.

39 வாயிலி னின்ற னான்கு மாக்கள்மே லிரைத்த லோடும்
போயின பாப ரூபம் புனிதரா யொரோ வொருத்தர்க்
காயிர ரம்பை மாத ரணிமணி விமான மேற்குங்
காய்கதிர் நான்கு நின்றார் காயமே காயம் பெற்றார்.

40 தந்திர விஞ்ஞைக் கூத்தி னியல்பெனத் தாமே னின்றும்
வெந்திறல் முனியைப் போற்றி விளங்கொளி யுருவி னோரா
யிந்திர னுலகம் புக்கா ரிருந்தனர் கற்ப மாண்டும்
மந்திர முனிவர் போற்ற மாயவ னுலகம் பெற்றார்.

41 ஆண்டொரு கற்பம் செல்ல வரிதிரு வைகுந் தத்துக்
காண்டகுஞ் செல்வத் தோடு முறைந்தனர் கற்பம் பின்னர்,
தீண்டருஞ் செய்ய மேனி சிவனுறை யுலகம் புக்கார்,
ஆண்டனர் கற்ப காலம் வானவர் பெற்ற மாதோ!

---

41. கற்பம் - 432 கோடி ஆண்டு பிரமன் ஆயுட்காலம். வைகுந்தம் - திருமால் உறையும் உலகம். சிவனுறைவுலகம் - கைலாயம்.

42 சிவனருள் குருவுந் தானுஞ் சித்திக ளோவ்வார் கற்ப
மவனுறு மடைவின் வைகி யாதியாம் பரமன் றானே
புவனமில் ஞாலம் நல்க ஒன்றுபட் டெங்கு மாகிக்
கவனமும் வரவு மில்லாக் காட்சியின் பேறு பெற்றார்.

43 ததீசியு மத்தலத் திற் றங்கினா னெடுநா ளன்றி
விதிதரு வசிட்ட னாதி மெய்த்தவ ரென்று நீங்கார்
பதியதன் வரத்தி னாலே பாரிடைப் பூசு ராதி
யதிகய நீச ரீறா யடைந்தனர் பல்லோ ரென்றான்.

44 பன்றி நாய் கரபங்க ளாதி பாரிடைப் பிறந்து மாயு
நன்றிலா வுயிர்கட் கெல்லாம் நானமு திரங்கு கில்லேன்
சென்றுநா டறியச் செம்பொற் சோதிவாழ் திருவை யாற்றி
லொன்றிடா மாக்கட் கென்றே உயிர்த்து நானிரங்கு மாறே.

45 பஞ்சந தேசஞ் சென்று பணிகிலா மாக்கட் டாமே,
துஞ்சிய பிணமும் பேயுஞ் சூகர மாடு மற்றுந்
தஞ்சமென் றடைந்தோ ரெந்த சாதியோ ரேனுந் தேவர்
கஞ்சன் மாலயனாற் போற்றுங் கடவுளர் முதலோ ரெனறான்

---

42. புவனம் - மண்ணுலகம். ஞாலம் - உலகம். கவனம் - கலக்கம்.
வரவு - தீமைகள் வருதல். பேறு - நல்வாழ்வு.

43. விதிதரு - முக்கால நிகழ்ச்சிகளையும் சொல்லுகின்ற. பார் - பூமி,
பூசுரர் - வேதபிராமணர்.

44. கரபம் - யானை, செம்பொற்சோதி - ஐயாறுடைய ஈசன், ஒன்றிடா -
சென்று சேராத, மாக்கள் - மக்கள், விலங்கினங்கள்.

45. சூகரம் - பன்றி, கஞ்சன் - பிரமன், மால் - திருமால்.

46 இந்திரன் செல்வ மெண்ணே னயனுல கிச்சை யில்லேன்
செந்திருக் கிழவன் வீடுஞ் சிந்தியேன் சிவனு லோக
முந்துற நினைக்க வேண்டில் முதல்வன் வாழ் திருவையாற்றி
னிந்தனைக் காவா யேனும் பிறக்கவே நினைக்கின் றேனே.

47 தாரகைப் பிரமங் கங்கைத் தடங்கரைக் காசி யென்னு
மூரகத் துபதே சிக்கு மொருவனே யஞ்செ முத்துஞ்
சேரவத் துறைநீர் பொன்னித் திருவையாற்றி லிறந்தோர்க் கெல்லாம்
பாரகத் துபதேசிப்பன் பவப்பிணி தீரு மாறே.

48 அத்தலத் தரசனுக்கு ஆலயத் திரண்டு பாலு
முத்தமக் கயிலா யங்க ளுலகெலாம் கண்டு போற்ற
வைத்தன னிறைவன் மற்றோர் மன்னனுக் காக வென்று
சத்தியக் காதை யீது சாற்றுவான் தவத்தின் மேலோன்.

நால் விலங்கு கதிபெற்ற காதை முற்றும்.

---

46. அயன் - பிரமன், இச்சை - ஆசை, செந்திருக்கிழவன் - குபேரன்.

47. தாரகை - விண்மீன், பிரமம் - முதன்மை. பாரகத்து - உலகத்தில்.

48. அரசன் - இராசராசன், கயிலாயம் - தென் வட கயிலாயங்களாக விளங்கும் ஆலயங்கள். சத்தியக் காதை-உண்மை நெறிகளார்ந்த சரித்திரம்.

# சுரதனத்தியாயம்

1 சுரும்பி யீர்ந்தலர்ந்த மாலை துளிக்கின்ற பசுந்தேன் மாரி
பெரும்பெயல் போலுங் கூந்தற் பெய்வளைத் தோழி கேளாய்!
அரும்பெறல் அவனி காக்கும் அடையலாஞ் சிங்க வேற்றை
விரும்பினற் கமுத மன்னான் வெண்மதி வழியின் தோன்றல்.

2 தலைப்படு மமைதி ஞான்று தளர்விலா வாய்மை வல்லான்
கலைப்பொருள் நுழைந்து முழங்குங் கதம்புல னுடைமை தக்கான்
சிலைப்பெயர் பகழி மாரி செங்களங் கடந்த வோரி
மலைப்பட வேலிற் றீட்டித் தன்பெயர் வைக்கும் நீரான்.

3 நற்குணக் கடலி னெல்லை நானெறிப் பயிர்க்கு மேகம்
பொற்குவை வீசும் வண்கைப் பொதுவறு தருமச் சிந்தை
கற்புடை வேள்வி முற்றும் கண்டவன் காமக் காட்சி
சொற்புனை முரச மொப்பான் சுரதனென் றொருவ னுண்டால்.

---

1. சுரும்பி - கருவண்டு, மாரி - மழை, பெயல் - பெய்கின்ற கருமேகம். அரும் பெறல் - பெறுதற்கரிய. வெண்மதி வழியின் தோன்றல் - சந்திர குலத்தில் தோன்றியவன்.

2. தலைப்படும் - தொடக்கமுறும், கதம் - வலிமை.

3. நானெறி-கல்வி கேள்வி ஆண்மை ஒழுக்கம், பொற்குவை-பொற்குவியல் வேள்வி-யாகம்.

4 உலகெலாம் கழனி வாழும் உயிரெல்லாம் பைங்கூழ் தீங்கில்
நிலமெலாம் களையின் குப்பை யரணையே யென்றா ழாகப்
புலமெலாம் வளர்த்த தேக்கம் புரிந்தனன் கருணை தானே
நலமுளத் தெண்ணி ரென்ன நரந்தக வுழவன் காக்கும்.

5 எத்திறத் திருவும் பெற்றான் இனிப்பெறத் தகுவ தொன்றே
புத்திரச் செல்வ மென்று புரிந்தனன் தருமந் தானும்
அத்தகப் பேறுறாமை அருந்துயர்க் கடலி னாழ்ந்து
முத்திறப் பொழுதுங் கண்ட முனிவரை தேடிச் சென்றான்.

6 கங்கையின் கரையை நீங்கா கடுஞ்சினம் கடிந்த காட்சி
புங்கவர் நார தாதிப் புனிதரை யாங்குக் கண்டான்
பங்கய மலர்த் தவத்த பருதியின் முனிவர் தாளின்
கொங்கலர் மகுடம் தீண்டக் குழைந்தனன் தொழுது சொல்வான்.

7 ஊழ்வினை ஞானக் கண்ணின் உணர்வுடை பெரியோர்க் கேண்மின்!
வாழ்வினைப் பெற்ற மக்கள் மக்களைப் பெற்றார்க ளாயின்
தாழ்வினை வைக்கும் வையந் தாழ்வில வாழ்வில ரேனும்
வீழ்வினை மக்கட் பேற்றின் மேம்படல் கூறும் போலும்!

---

4. பைங் - நெற்பயிர், புலம் - வயல், தேக்கம் - பயிர்ச் செறிவு,

5. திரு - செல்வம், புத்திரச் செல்வம் - மகப்பேறாம் செல்வம், முத்திறப் பொழுது - முக்காலத்தமைந்த பொழுது.

6. சினம் - கோபம், புங்கவர் - பிராமணோத்தமர், தேவர், குழைந்தனன்- பணிந்தனன்.

7. ஊழ்வினை - முற்பிறப்பான் தொடரும் வினை, வீழ்வினை-தாழ்மையான செயல்.

8 ஆதலின் மதலை காணும் ஆசைமாக் கடலின் வீழ்ந்தேன்
பூதலத்து அசுவ மேதம் புத்திரர்க் காமி யங்கள்
காதலிற் செய்தேன் வந்து கைதரும் புனை மாறாகச்
சாதலி னமிழ்ந்து கின்றேன் தடங்கரை யின்னுங் காணேன்,

9 யாது காரணமோ தெய்வத் தியற்கையோ தேறேன் பாவம்
ஈது காரண மீதிப்பாற் செய்யுஞ் செயலீது பாராய்!
ஓது காதலனுக் கென்றிங் குரைத்துய்யக் கேண்மி னென்ற
மாதுலந் தோளி னார்க்கும் மாதவ ருணர்ந்து கண்டார்.

10 சழக்கன்று மனத்திற் கோடி தரணிபா லரனந்த கோடி
தொழக்கன்றும் கழற்கால் வேந்தே! தொல்லையோர் பிறப்பு நீயே
குழக்கன்று பலவும் மாளக் கோக்களிற் பிரித்த பாவம்
பழக்கன்று பிரிந்த தொன்றால் பாலனின் றின்மை யென்றார்.

11. காமரு மகப் பெறாத காரணந் தெரிந்தீ ரைய்ய
கோமுதப் புரிந்து பாவக் கொடுமை தீர்ந் துய்யுமாறு
மாமக் கடன்கன் செய்ய வருவது முணர்த்தீ ரென்ரே
தாமரைக் கடவு ளன்னீர் சாற்றுதி ரென்று தாழ்ந்தான்.

---

8. மதலை - பிள்ளை, மாக்கடல் - மிகப் பெரிய கடல், அசுவமேதம் - அசுவ மேத யாகம், காமியங்கள் - கிரியாதிதான தருமங்கள், புனை மாறு - ஈடான மாற்றமாக.

9. தேறேன் - தெளிவு பெறேன், மாதவன் - தவமுனிவன்.

10. சழக்கன்று - வழக்கன்று, தரணிபாலர் - அரசர், குழக்கன்று - இளமை யான பசுக்கன்று. கோக்களில்-பசுக்களினின்றும், பழக்கன்று-துன்பமடைந்த கன்றுக்குட்டி.

11. காமரு - விருப்பம் பொருந்திய, மாமகம் - சிறந்தயாகங்கள், தாமரைக் கடவுள் - பிரமன்.

12 பிள்ளைமால் வெள்ள வாரிப் பெருக்கிடை சுழியிற் பட்ட
புள்ளிமான் கன்றையொத்தாய் புனிற்றிளங் கன்றின் தீங்கால்
தள்ளுமா றொன்று கூறிர்ச் சங்கரன் கயிலை யாகும்
வெள்ளிமா மலையைக் காண்ட லன்றிவே றின்று கண்டாய்

13 கயிலையின் சிகர மொன்று காண்டலுங் கடவாப் பாவம்,
வெயிலைமுற் கண்ட கங்குல் விடிந்தென விடியு மன்னா!
பயிரவம் பின்னை செய்யும் பான்மையை யல்லைக் கண்ட
சயிலமே புதல்வர் பேறுந் தருமென வருளி னாரே.

14 தீதறு தத்துவ ஞானந் தெளிந்தவர் பாபம் நீக்கக்
கூறு மற்றிவைக் கொண்டு டுடன்பட் டெழா..................
மாறின் மந்திரி காக்கென மண்ணெலாம் அளித் தாணையிட்டு
மாற்றமில் மனத்தின் நோக்கொடு மற்றவர்க் கொன்று விளம்புவான்.

15 கயிலைக் கண்டுமைக் காண்பளவுந் தனிப்பெரும் தகவினானே
பியலின் வைத்த பெரும் பொறை முற்று மோர்
செயலினுங் களிற்றின் பிடர் சேர்தரு காவல் தன்னை
மயலறு ஆணையானே வழங்குதி ராட்சி யென்றான்.

---

12. மால் - மயக்கம், வாரி - நீர் பெருக்கு. புனிற்றிளங்கன்று - அப்பொழுது பிறந்த இளங்கன்று.

13. சிகரம் - மலையுச்சிமுடி, கடவா - நீங்காத, கங்குல் - இரவுப் பொழுது, பயிரவம் - இத்தகைய தீங்கு, சயிலம் - மலை.

15. பியல் - யானையின் பிடர், பொறை - அரச பாரம், மயல் - மயக்கம்.

## வேறு

16 சரதம் பூண்டவர் தம்மொழி தெப்பமாகப்
பரதம் பூண்டமா மலைக்கரை யேறுவான்
விரதம் பூண்டிட மென்கைத் தலத்தினால்
சுரத நீதவம் தொடங்கென் றேகினான்.

17 கொடிய சல்லியம் கோட்சுறவம் பனமா
விடமெனத் திகழ் வெண்கவரிக் குழா
முடன் பசுத்தன வொண்டழைக் கானகம்
கடலின் நீந்தினன் காவல னென்பவே.

18 முழைக் கொடு வரிக்குல முழைக்கழு வுகைத்திட
முழக்குவ புழைக்கை மதமா மழைப்பிளி றுடைத்திட
மடக்குழை முடக்குள மலிகழை வெடித்தழல் விதிர்ப்பன
கணக்கவரி துடித்திட கடுவரிக்கண் முயிர்க்கு நெறியே.

19 எண்ணவும் நடுக்கமுள விப்படி. யிவற்றிலென்ன
நண்ணவு நடுங்கு மிரவி வடவைக் கடவுளு
முண்ணவு நடுங்கிடு முருத்திரன் நடுங்கிடும்
வெண்ணையி னடுக்கி லொக்கும் பனியடுக்கம் விரிப்ப
தென்னோ!

---

16. சரதம் - சாதனை, யோக சாதனை, மாமலை-பெரியமலையாகிய கரை.

18. முழை - மலைக்குகை, அரிக்குலம் - சிங்கக் கூட்டம், மதமா - யானை, கடுவரி - புலி.

19 அடுக்கில் - ஒன்றன் மேலொன்றாக உயர்ந்து வளர்ந்த மலை.

20 இப்படிப் பனிப்படலை பொழவரும்போ தவனிறுத்திய கருத்தறிவான்
மெய்ப்படி யளிக்குமோ ரமைச்சனொடு பற்பலர் வியந்துற விரைந்து
வரலு மெய்ப்பொரு ணிணைந்ததனிற் வருமெது வடுவினைவைகள்
வரத்தினி யுரைத்தியென வச்சமோ டமைச்சன் மொழிவான்.

21 கரகப் படலம் படர் வாளுறை கழித்தவா கண்ட கலியினா
லரகநின்றன் புவியை யாணையினளித்தனமதற் கொரு
பகைபுதுமை கேள்நீ கன்னந்தலை செயித்த பொழுதுந்
தகை நெடுங்கிரி யொடுங்கிட மறுப்படு குறுப்பர் செயலாம்.

22 மன்னனிலை யின்னகரி மந்திரியா தந்திரமதித்திடு நிதிக்குவை யெல்லாம்
பொன்னியல் மதிற்குள் ளதெனக்கிவன் முதற்பகை போர்த்தகு தூறொத்தனவோ
முன்ன முலகெங்கனு முழுப்படை பரப்பியபின் மூண்டபடை போது நினைவா
னுன்ன நினைவொன்றுரையு மொன்றெனவிணங்குமுற வோதவொரு தூதுவிடவே.

---

20. படலை - படலம், தொகுதி, மெய்ப்பொருள் - இறைவன்.

23 யாமலது மெய்த்துணை யிறைக்கொருவ ரெத்துணையு
மில்லையது சொல்லிலெமையே
கோமகன் மிக்கக்கறுவுமென்பது கோடென்றளவு கூசியது
பேச நினையேந் தாமறிவா நிற்கவிது காவலன்
மகப்பெறு தவங்கருதியங் கயிலை போமா மவன்
காசியுமோராளிலறிவித்தி விரதற்குரிமை சற்று நினையீர்!

24 போனது கிடைக்க வினியாமொருமை பற்றியிறைபோய்
வருக மற்றவருஞ்,
சேனையொடு கைப்பொருளினாலே களித்தரசு செல்லுமள
வெல்லையகல் வோமெனத்
தேனில் மற்றீதொரு குற்றமெனவுங் கடியுமொன்றுசிலர்
நின்றுபுகல்வா
ரூனமுறும் பொழுதிடற்பழியகற் றரிதுபாயமிலிது
பாயமிதுவே

25 நால்வகை திரட்படை பெரும்பொரு ளிருக்கும் மதிநன்
குடைய மந்திரியரென,
மேலுணர்வதிப் படையுடைத்திடுவர் போதியென் வேலை
யுடையாய்
சாலவுமற் சிறியரேனுமவர் பற்பல தாங்கநிறையங்க
மணையார்
பீலிசீரிதப் பொருளடுக்கினு மொடிக்குமது பெய்யுமொரு
வையமலவோ?

26 அங்கு சிறிதென்று விடி லெங்கும் அழல்கொண்டு
சுடுமப்பொழுத விக்கவசமோ
திங்கள் மறுவன்று வானின்றளவு நின்றதுசிறைப்பட
மறைப்பரெவரோ?
மங்கையரு மம்புவியு மன்றியுலகம் புகழுமைந்தர் தவமுந்து
தவமோ?
வெங்களையு நின்ற கருமங்களை யன்றியிறையின்ப
முறுமைந்தர் பிறரோ!

---

23. கோமகன் - அரச குமாரன், கறுவுதல் - பொறாமைபடல்.

25. நால்வகை - நான்கு வகைப்படை,

27 என்று பலவேதுவின் மறுத்தவ னிறுத்தலு மிசைந்தவனி
சைந்துக்கவையா

நன்றென மனத்தோடவரேகு பரியூடுவரு நற்பரிசிறக்க
வனமேற்

சென்றனன் விரைந்து நகரொன்ற வவரொற்றர் பலர்
செப்பலு மாப்பகை சேயா

மின்றியிகல் கோரமெனும் வெம்படை விடுத்தவரை வென்றன
னோரைந்து பகலின்.

28 அன்னர் பகை மன்னர் செல்வ ரணைகுடை சேனைகள
னைத்து முறவாரி

யுன்னுமவ ராசைக்களவாக புக்குழியுடனறு பகைவென்றுல
கெலா

மன்னு முயிர்க் களித்திட வளித்தும் தலைக்குளம் வருந்துதல்
பொருந்தி யெழலு

முன்னுதிசை யெட்டின்விசையப் பெயரை யிட்டுலகிலுத்தம
தல்த்திருத்தினான்.

29 துங்கனதி சிந்துவர கண்டதின் குடக்குள் தொலைக்கடன்
தப்புனவல்லாற்

கங்கையொடு கவுதமி கருங்குழலி செஞ்சரசு கம்பையொடு
கம்பை படியா

வெங்குமகிழ் காவிரி நதிக்கிரு கரைக்கு ளிருந்துறையனேக
முழுகா

பங்கயவயற் பனிலம் மங்கலமுலக்கமிடு பஞ்சநதிப் புக்கன
னரோ.

---

27. ஏது - காரணம், பரி - குதிரை, இகல் - பகைத்தல், ஐந்து பகல்-ஐந்து நாளின் பகற்காலத்தில்.

28. அன்னர் - அவ்வாறமைந்தவர், அணை - சேர்த்துள்ள.

29. துங்கம் - தூய்மை, சிந்து - சிந்து நதி, தொலைக்கடன்-பாபம் நீக்கும் செயல், சரசு - சரசுவதி நதி, பனிலம் - வெண்சங்கு.

30 அங்கத்தின் படையொடு பொன்னித் துறையங் கெய்தி
சச்கற்பஞ் செய்து மூழ்கி யெழுந்து தருந் தானம்
துங்கத்தந்தணருக் கருளித் தொல்குலமா மூன்றும்
பொங்கச் செய்த தக்கடன்கள் புரிந்தா னால் குலத்தவர்க்கும்.

31 செம்பொற் சோதியை முன்பு வணங்கித் தெரிசித்து
பைம் பொற்கோயில் வலம்பெற வுளப்படா வேளைத்
தம்பிக்குந் தருவானிலை போனிலை தருவானை
நம்பிக் கண்டு எழுந்தவர் சூழலை நன்னுங்கால்.

32 தொண்டு தரும் புண்டரீக நீறுங் கற்றோ தாசுங்
குண்டிகையுங் கண்டிகையுந் தண்டுங் கொண்டீர
மண்டிதமுங் கண்டும்பர் தொழுந்துரு வரசன்றான்
புண்டரிகந் தெண்டன்புரி தொண்டின் புறமாக,

33 நின் பதியும் பண்டாரமும் நீயு நீர்நாடு மன்பதையும்
குன்றா நன்றாகி வாழ்வோ வென்றின்பு தருஞ்சொற்கூறி
இறையோ னிறையோனினன்பு தயங்கற் பாலர்க்கு
நிறைவன்றி யோர்குறையுண்டோ வலை வென்றான்.

---

30. அங்கம் - அரச அங்கம், சங்கற்பம் - மனவுறுதி, உறுதிப்பாடு, துங்கம்-தூய்மை.

31. செம்பொற் சோதி - ஐயாறுடையப்பன், ஈசன். நன்னுதல் - நெருங்கியடைதல்.

32. புண்டரீகம் - புலித்தோல், நீறு - திருநீறு, குண்டிகை - கரகம், கண்டிகை - உருத்திராக்கமாலை, தண்டு - யோக தண்டம்.

33. பண்டாரம் - பொருள் சேமிப்பறை, நீர்நாடு - சோழநாடு,

34 அத்திரி பாலகரைத் திரிசூல னருட் கோலத்
தத்துவ ரூப வுருத்திரசாபத் தவத்தோய்கேள் கத்திரியாதிப
ரெத்திரு வோரிலர்க் கடனேந்து மெய்த்திருவா மொரு
புத்திரனாலுள மிடியானேன் போனதொரு கருமம்தீர,

35 தருமந் தானம் மகங்கள் புரிந்தெனத் தக்கோரும்
கருமங்கோவின் கன்றுக்குத் தீமைபுரிந்தாய் கயிலாய
மருமருந்தா கண்டாலுளதென்றா ரடியேனுாழ்
வருமம் போலு மதற்கிடையீடும் வந்ததன்றால்.

36 மரகத்தாவே யுன்முன் விண்டேன் மகவாசைத்
தரகத்தாலே வேட்கை மிகுத்தேன் சந்தாபச்
சோகத்தாலே வந்தோருக் கருளித் துயர்தீர்க்கும்
யோகத்தாயுன் கருணைத் தெண்ணீ ரூடுற்றேன்.

37 நீயே யல்லாற் கற்பங்கோடி நெடுங்கால
நாயேனுள்ளஞ் சிந்தித் தென்னா நவையில்லா
சேயுஞ் சீரெந்தவு பாயஞ் சிந்தித்துந்
தாயே தந்தா ளுன்னிரு சரணன்றான்.

---

34. அந்திரி - அத்திரி முனிவர், மிடி - மனத்துன்பம்.

35. மகம் - யாகம், தக்கோர் - முனிவர், அருமருந்து - குறை நீர்க்கும் சிறந்த மருந்து.

36. மரகத்தாவே - சோலைக்கதிபதியே, விண்டேன் - மனத்திலுள்ளதைச் சொன்னேன். தரகம் - தளர்ச்சி.

37. கற்பங்கோடி - அளவிட முடியாத காலம், நவை - குற்றம், தாயே - தாய்போன்ற பெரியீர்.

38 சுரதன் கேண்மோ வென்றரனுருவத் துருவாசன்
விரதந்தூயோய் விதிப்பு நம் வீடாக
வரதங் கூறும் பெரும் பெருநூல் மரபுண்டு
சரதஞ் செப்பேச்சுரன் அருளுண்டு தயங்காதே.

39 அஞ்சேலித் தலமேல் கயிலை யழைப் பிப்போம்
நஞ்சேர் கண்டனருட் கொண்டே யென நாடோறுந்
தஞ்சலெஞ் சக்கர மூவையுந் தப்பாமற்
செஞ்சலின் கண் சூடியை யுள்ளஞ் சிந்தித்தேன்.

40 இப்படி நாற்பது நாட்செப்பேச ரிருப்பாக
மெய்ப்படி பஞ்சநதே சனையுள்ளம் விழைந்தெண்ணிப்
பொய்ப்படி இப்படி யென்றறி ஞானப்புனிதன்றான்
தெய்ப்படி யொக்கும் படிவந்தவனைத் துதிசெய்வான்.

41 சோமச் சூரியனரி பிரமா தொழுதவற்குங்கரியோய் சூலத்தோய்
காமற் காயுந் தோயாதவற்குங் கரியோ யிருடிகள்செய்
சேக்கரர் வோமத் தோவாதித் தேவர் வொப்பார் தம்மின்
மிக்காரவர் நாமம் பிரணதார்த்திகர் நம்பர் பஞ்ச நதியானே.

---

38. சுரதன் - சுரத மன்னன், வரதம் - காத்தருளல், சரதம் - மெய்ப்பொருள்.

39. அஞ்சேல் - கூஞ்சேல், செஞ்சல் - நெற்றி.

40. இருப்பு - தங்குதல், மெய்ப்படி - உண்மையான நெறியில், பொய்ப்படி- பொய்யான ஒழுக்கம். தெய்படி - தெய்வத்தையொத்த.

41. சோமன் - சந்திரன், அரி - திருமால், தோயாதவர் - சரணடையாதவர், சேக்கரர் - வேத வித்தகர், தோவாதி - ஆகுதியேற்பவராதிய.

42 மாதர்பதருக் காதார மாயாதீதர் சங்கரர்
பூதாதியை யெலாம் படைத்தளித்து போக்கு முதல்வர் பெருமைக்கு
மீதாயனுவுக் கணுவாகும் விபுதர் தக்கன் வேள்விக்கு
நாதர் நாத வேதாந்தர் நம்பர் பஞ்ச நதியானே.

43 பாவாகித் தந்தகரமெனப் பரவீட்டின் மாயக்காயநடு
மேவமலர் வெண்டாமரைக்குள் வெளியாந்தகாரமாய்
மோகமோவ நிறைந்த பொருளினு முறைந்து நுண்ணிதாஞ்
சோபனாவிடையங் காச்சுகானந்தர் நம்பர் பஞ்சநதியானே.

44 மேலாமண்ட வடிவானோய் விரும்பியறி வோர்க்கறிகுறியாய்
பாலா மூலப் பகுதிக்குள் பொருட்குப் பரமாம் பசு
காலா தீதா முப்புரங்கள் கடந்தோ ருமையாள் காதலர்
நாலாரணத்தி னிச்சியமே நம்பர பஞ்ச நதியானே.

45 என்றிப் பாலன் தனிமொழி முனிவர்க்கு யானைப் பாலன் சூர
வென்றிப் பாலக னிருபாலுறவொரு மெய்ப்பால் முடிவேயுங்
கொன்றைப்பாலன் பின் பாலவர் முன்பால் கோயிற்பால்
முன்றிற் பாலன்வரவுமை யறிய பாலனு முன்னின்றான்.

---

42. தர்பதர் - தருபதர், கர்வமுடையவர், மாயாதீதர் - மாய்கைத் தெளிவுடையவர், விபுதர் - ஞானவொளியானவர்,

43. பாவாகி - இரக்கமுடையதாகி, கரம் - அபயகரம், பரவீடு - மோட்சம், மோகம் - பற்று, சோபனம், அருள்வடிவு,

44. மேலாமண்டபம் - மேலுலகங்கள், பாலா - பகுதிப்பாடுடைய, காவலன் நாலாரணம் - நான்கு வேதம்.

45. பாலன் - பாதுகாப்பவன், கொன்றைப்பாலன் - சிவபெருமான்.

46 வெள்ளிமலைச் செங்கதிர் கொடியென விளங்கும் விடையோனைத்
தெள்ளிய மெய்ப்பொடி வெண்முகில் கதிர்செறிவன் போல்வானைத்
துள்ளு மறிப்பிணை பரசு பினாகஞ் சூல மெடுத்தானை,
வள்ளலை யத்திரி குமரன் றொழுது மகிழ்ந்து பணிந்தானால்

47 பத்தர்க் கபய மளிக்கும் பெருமாள் பஞ்சநதிப் பெருமான்
முத்தர்க் கினிமை கொடுக்கும் பெருமான் முனிவர்க் கருள் பெருமான்
இத்துருவாசப் பெயரோய், தவநெறி யானின்றுதியாற்
சித்தக் களி மிக்கோமினி வேண்டிய செப்புக வினியென்ன,

48 கண்ட களிப்பிற் குழறிய மொழியிற் காணப் பெற்றேனா
னண்ட ருளத்துங் கிட்டாப் பொருள்வரமாயினு மொன்றுண்டு
தொண்ட ரெவர்க்குங் கருணைக் கடலே சுரதன் மகப்பேறுமால்
கொண்டு சரண்புக்கான் கயிலாயங்கும்பிடிலஃ துண்டாம்

---

46. வெள்ளிமலை - கைலைமலை, மறிப்பிணை - பெண்மான், பினாகம் - சிவனது வில்.

47. முத்தர் - பரிபக்குவமடைந்த முனிவர், சித்தம் - மனம், செப்புக - சொல்லுக.

48. அண்டர் - தேவர், மகப்பேறுமால் - மகப்பேறு கிட்டாத மயக்கம்.

49 கயிலைக் கிரியிற் போகவும் வல்லான் காவல் குணர் வுடையான்

பயிலப் பஞ்ச நதிக்கே யென்றொடு படிதம் பேசி நடப்பான்

சயிலத்தனையிப்படி நின்னருவிற் சங்கர விங்காகச்

செயிலச் சுரதன் பேறுந்தமியேன் வாக்குமமை வுண்டாம்.

50 சங்கர கிங்கரருக்குத் தக்கன் தரவென்றே யன்றோர்

கங்கண முன்கை கட்டினை யன்றிக் கடவுளர்க் கிரண்டோ

வெங்கருமங்கட் கிட்டருனிட்டாத மிசைய னின்னிசையன்றோ

துங்கவரந்தரு கென்று புகழ்ந்துதுரு வாசன்கூற,

51 நன்றப்படி யென வப்பொழுதக்கணந் நந்திக் கங்கைகயிலைக்

குன்றிற் கொணரென்றருளி, கொணருங் குவடுகள் தன் கோயில்

முன்றிற் கிடனும் வலனுமிருத்தி முதற்குறியுருவாயங்

கொன்றிப் பஞ்ச நதேசனன்றவனுக் கொன்றங்குரை செய்வான்.

52 அத்திரிகாண முளையக்கயிலாய மழைப்பித் தன் கோயில்

உத்தர தக்கண கயிலையெனப் பெயரோதச் செய்தோமேற்

புத்திரசோகச் சுரதற்கருளுக, புவியோரில் யாரேனும்

பத்தியிலித்திருமலையைக் கண்டோர் பாவங் காணாரால்.

---

49. பயில - இருந்து நிகழ்த்த, படிதம் - துதித்தல், கீழ்ப்படிதல்.

50. துங்க வரந்தருகென்று புகழ்ந்து துருவாசன் கூற,

51. அக்கணம் - அந்த நொடியில், குவடுகள் - சிகரங்கள்.

52. அத்திரி - அத்திரி முனிவர், உத்தரம் - வடக்கு, புவி - உலகம், திருமலை - உத்தர தக்கண கயிலாயக் கோயில்கள்.

53 தெரிசித் தவருக்குண்டா மகவுந் திருவுங்கயிலாயம்
வரிசைக் கயிலைக் கிணையாமித்தலவாசமு மவ்வாசம்
பரிசிப்படி யென்றருளி மறைந்தான் பாவாய் முனிவோனுங்
குருசிற்கருளித் தெரிசிப்பித்தான் கருத்தாற்கூறும் கயிலாயிம்.

54 சிவனித்திறத்தால் வரங்கொடுப்பச் செப்பேச்சுரமும் விடைகொண்டு,
தவநித்தியனை யடிவணங்கித் தக்காய் நினது பொருளா
னவனிக்கரசு வழிபெற்றதாலே வழியாப் பதம் பெற்றேன்
இவனித்தகை யென்ன புகழ் வெண்ண முடித்தே னெனத்தொழுது.

55 நின்பா லேவ லெஞ்ஞான்று நீங்காப் பணியே பணியெனக்கென்
றன்பாற் புகழுமன்ன னுளமறிந்து தவத்தோ னாசியா
னன்பால் காமப்பேற் றுலகளித்து நம்பால் வருதியெனக்கொடுத்
தன்பால் விடைகொண்டத்தினத்திற் சார்ந்தானரிய தவத்திறைவன்

56 தேவர்க்களிக்கத் தென்புலந்தார் களிக்கத் தன்னூர் செல்லுநாட்
பூவர் களிக்கக் கருங்குழலார் நட்டோரமைச் சோர்புவியுள்ளார்
யாவர்க் களிக்கச் செய்யாதாரிவ்வாரெய்திப் புரந்தானால்
மூவர் களிக்கச் செயுஞ்செயல்களெல்லாமொருவன் மூதுலகம்

---

53. மகவு - பிள்ளை, பரிசு - நன்மை, குருசில் - சிறந்தவன்.

55 எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், காமப்பேறு - பிள்ளைப்பேறு.

56. தென்புலத்தார் - பிதுர்க்கள், பூவர் - பிராமணர், கருங்குழலார் - பெண்கள், நட்டோர் - நட்பினர், புவி - நாடு, உலகம். புரத்தல் - பாது காத்தல், மூவர் - பிரமன் திருமால் சிவன்.

57 அந்நாள் மன்னன் குலமனைவி யருங்கற்புடையாடிரு
வயிற்றில்,
செந்நாண் மலரிற் கருப்பமுதற் செவ்வாய் திரிந்து
விழிகுழிந்து
கன்னாண் கமனற் முலையிடைபோய் கனத்ததெழுந்த
தெனக் கறுப்ப,
மெய்ந்நாணிறைந்து பொறையுயிர்த்தான் மேலாமோரை
நன்னாளில்.

58 தாமமுற்று மங்கலங்க சாதரூப முடனாம் காணஞ்
சிவதத்த னென்று நாட்டி நான்மறையோர்க் கைநிறைப்ப
தேவர்க்கும் அளித்திறைவன் காமர் கலமை மலரிறைத்துக்
களிப்பமை
பாவலஞ்சேர் நளினமிகு பாவையர்தம் பற்பலவாட்டமு
மமைப்பித்தான்

59 அன்னம் சவுளம்புரி முன்னு பருவந்தோறுமடை வியற்றிப்
பன்னுக் கருதிக்கிடை கலையின் கழகம் பகடுபரி படையின்
மன்னும் பிறவின் கல்லூரி மற்றும் விடாது கற்றேறிப்
பொன்னங் கழலாலூர்க் கடலைக் கடந்தான் குரவன்
புணையாக,

---

57. குலமனைவி - பட்டத்தரசி, கன்னாண் - கல்நாணுமாறு, மெய்ந்நாள் நிறைந்து - கருப்பவளர்ச்சிக்கமைந்த மாதங்கள் நிறைவுபெற்று. பொறை யியுர்த்தாள் - பிள்ளையைப் பெற்றெடுத்தாள். ஓரை - நற்பொழுது.

58, தாமம் - யரனை, மலை, கலங்க - நேர்ஒப்பிடலாகாமல் வருந்த, காணம் - பொற்காசுகள், சிவதத்தன் - சிவன் பெயரால் தானம் செய்பவன் பாவலஞ்சேர் - பாட்டு இணையாகச் சேர்ந்த, பாவையர் - ஆடல் மகளிர்.

59. அன்னம் - உணவு, சவுளம்-தேவைப்பொருள், கிடைகலை-வேதாகம விருத்திக்கழகம், குரவன் - அரசடிரு மன்னன் மகன், சகலகலைகளையும் கற்றனன்.

60 சொல்லுங் கிழத்தி வீரமகன் தொடர்ந்து மணப்பத்
தொல்குலத்தி
இல்லின் கிழத்தி மலர்க்கோதை யுடனே யிணக்கி
நன்னாளிற்
செல்லின் முழங்க முரசெருக்கி திரைநீராடை மண்மடந்தை
புல்லின் மணக்க வென்மகற்குப் புனைந்தானிளமைப்
பொன் மடங்கும்.

61 மைந்த சிவதத்தன் புவி காக்க வென வைத்துத்
துந்தி பரியொட்டக முதற் பொதி சமைத்து
முந்து மணிபொற்குவை முதற்பொரு ளனைத்தால்
வந்தனன் விரும்பும் வரமெல்லாம் வாழுபெருமைத்
திருவையாறு.

62 ஈசரடியாரும் மறையோரு முதல் யாரும்
மாசுரதனே வருக மால்வருக வென்றங்
ஆசியெதிர் பேசவடி தோரடி வணங்கி
ஏசிலுரு வாசனையு மன்போடு மிறைஞ்சி,

63 அப்பிரண தார்த்தி கரனை தொழுத மாந்தர்
ஒப்பிலவை காசிமதி யோங்குபிறை யோங்க
வைப்புவிதை யிட்டமுளை யோங்க மகமோங்க
மெய்ப்பெரு விழாத்துவக்க மோங்க விழைந்தானால்

---

60. சொல்லுங்கிழத்தி - புகழ்ந்து சொல்லுங் அரசி, செல் - மேகம் முரசு செருக்கி - முரசு ஒலி மிகுந்து நிற்க, நீராடைமண்-கடலால் சூழப்பட்ட உலகம்.

61. புவி - உலகம், நாடு. பரி - குதிரை, பொதி - மூடைப்பொதி, சமைத்து - அமைத்து.

62. மா - சிறந்த, ஏசில் - குறையில்லாத.

63. மகமோங்க - யாகாதிகள் சிறக்க, வைப்பு - சேமிப்பு.

64 வீதி மணி மாளிகை விளங்கி மனைதோறுஞ்
சோதிமகாச் சுருள் தோரணம் நிறைத்துப்
போதுவிரி தூயினிய பொற்றிகற் றெளித்து
தீதில்திரு வாழ் நகர் செம்மை திகழ்வித்தான்.

65 சாமரை பதாகைகுடை சல்லிகை கணாடி
மாமணிபொன் மாலைபுது வாகன மனேகங்
காமர்பணி பூண்மணி கருப்பூர விளக்கந்
தேமரு நறும்புகை செழுந்துகிலின் வண்ணம்

66 ஆடலாட மங்கையரை அன்ன நடமின்னார்
பாடல் மடவார் பரிகலம் பரிசனங்கள்
கோடுதுடி பேரிவளை கொக்கரை முழங்கந்
தேடரு நெடும்பொருள்கள் செய்தன ரனேகம்.

67 தேசனபிஷேக வகை யாவுஞ் சிறந் தோங்க
யோசனை மணங்கமழும் மொண் கருவின் வண்ணம்
வாசனைநெய் நறுங்கருணை யாறுசுவை மற்றும்
பூசனை மிகும்படிப் புதுக்கினன் விளங்க.

---

64. மணி மாளிகை - ஆராய்ச்சி மணியோடு கூடிய மாளிகை. திரு-இலக்குமி செம்மை - சிறந்த அமைப்பு.

65. பதாகை-விருதுக்கொடிகள், சல்லிகை சிறுபறை, கணாடி-கண்ணாடி காமர் - அழகு, தே - தெய்வம்.

66. பரிகலம் - உண்ணும் கலம், பரிசனம் - ஏவலாளர் பரிவாரம், கோடு - சங்கு, துடி - உடுக்கை. பேரி - பேரிகை, வளை - மூத்திரைச்சங்கு.

67. தேசன் - எங்கும் நிலவியுள்ள ஈசன், கரு - புனுகு சவ்வாது பூசனை-காள் வழிபாட்டு முறைமை.

68 அத்தனடி யார்க்குழு வனைத்து மகிழ்வெய்த
நித்தனை யனிமித்தியம் நடக்க நிறை நெல்லின்
வித்திடின் மணிக்குவை விளைக்கும் பழனத்தோடு
அத்தனன் புனற்பெருகு மூர்களொரு நூறே.

69 தொடுத்த திருநாள் முடியுமெல்லை தினந்தோறும்
மடுத்த சிவனன்ப ரகிலத் துள்ளோர்க்
கெடுத்த சுவையாரமுத மேற்ப மகிழின்பங்
கொடுத்தநெடுந் தேர்விழவு கூட்டி முடிவித்தான்.

70 முடிவினில் பிரத மூழ்கியெழு வித்துப்
படிதனிலிவ்வாறு திருநாள் விளங்கப் பண்ணி
யடிதொழுது சொல்லரு மகிழ்ச்சி யோடடைந்தான்
கொடிமதி னெடும்பதி குலக்குரவர் கோமான்.

71 ஆண்டுதோறு மிப்படி யருந்திரு விழாக்கண்
டெண்டரு வினைப்பயனொழித் திறைவன் வாழ்
மாண்டரு சிவலோக முறமற்றவ னிருத்தும்
பூண்டகைய காளை சிவகர்த்தன் பிறந்தானே.

---

68. அத்தன்-ஐயாறுடையார், நித்தனைய-நாளும் நிகழும், நிமித்தியம்-நிவந்தங்கள், பழனம் - நெல்விளை நிலங்கள், நன்புனற்கு - அபிஷேக திருமஞ்சனத்திற்கு.

69. தொடுத்த - தொடர்ந்தமைத்த, விழவு - தேரோடும் விழா. முடிவித்தான் - விழாவினை நிறைவித்தான்.

70. பிரதம்-பார்ப்பனர்க்கு இறையிலியாகக் கொடுக்கும் நிலம். நெடும்பதி-தலைநகர். குலக்குரவர் - பிராமண ஆசாரியர்.

71. எண்தரு - பல பிறவிகளைத்தரும், வினைப்பயன் - தீவினைப்பயன், சிவகர்த்தன் - சுரத மன்னனின் மகன்.

72 தற்பர னெடுங்கயிலைக் கேகியதுந் தாதை
சிற்பரன் செப்பேச்சுர னருளாற் பெறுஞ்சிறப்பு
முற்பவ முற்றமய னெனுங்குரு வுரைப்ப
வற்புதனை ஐயாரணுகிச் செய்தன னவ்வாறே

73 பங்குனி முதற் பிறையிற் பஞ்சநதி வாணர்க்கு
இங்கித விழாநடத்தி யெய்தினனல் வீட்டிற்
பொங்கு சிவதத்தன்றனை பொற்பெறு தவத்தோன்
சங்கரனுஞ் சித்திரையிற் றந்தனன் விழாவே.

74 இத்திறமிம் மன்னர்வழி தோன்று மேனையோருஞ்
சித்திரை வைகாசி பங்குனித் திருவிழாவும்
பத்தியில் வெவ்வேறாந் திருநாட்படி புதுக்கி
முத்திவழி பஞ்சநதி யென்றுமுயன் றுற்றார்.

75 தோகையன வத்தி சுரதன்றுதி களைந்து
மோகை யெழு காலையிலுரைக்கில் மகவுண்டாம்
மாகையி லிக்காதை புகன்றோரருள் கேட்டோர்
ஈகையோ டைய்யாற்றி லொரு மாதமிருந்தோரே.

---

72. தற்பரன் - ஆன்மாக்களோடு ஒன்றிய சிவன், சிற்பரன் - அறிவுக்கு அப்பாற்பட்ட சிவன்.

73. இங்கிதம் - முறைமையானமைந்த சிறப்பு. பொங்கு - புகழ்மிகுந்து.

74. ஏனையோர் - அரசமரபினர். திருநாள்படி - திருநாட்களுக்குரிய நிவந்த இறையிலிகள்.

75. மோகை - இருள் மயங்கும் விடியல், மாகை-சிறந்த பகுதி. சுரதன்துதி சுரதனைப்பற்றிய வரலாறு.

76 அத்திரு விழாத் தரிசித்தோர் பிறப்பறுப்பர்
சத்திய மோரய்யமிலைச் சாற்றிய தெனப்பின்
மெய்த்தகு புரந்தரனு மேவுபணி மேற்கொண்
டுத்தமனருட் கருணை பொற்காதை யுரைப்பாம்.

## இந்திராத்தியாயம்

1 குதலையின் மொழிகற்குங் கோமள மயிலேகேள்!
முதலையி னமரர்க்கு முத்தரு மவுணர்க்கும்
விதலையின் மாமுனிவர் விண்ணவர் படர் தீர
சிதலையின் ஒருகாலைத் தீயவரொடு தோற்றார்.

2 கானுடை மதுவாசக் கற்பகனிழ னீங்கி
மானுட வடிவாகி மகபதி திரியுங்காற்
றானுடை மதிவல்லான் சற்குரு வந்தெய்தித்
தேனுடை நறுமாலைச் செம்மலோடிது சொன்னான்.

---

76. பிறப்பறுப்பர் - முத்தி பெறுவர், உத்தமன் - ஐயாறப்பன். பொற்காதை - பொன்போன்ற காதை.

1. குதலை - மழலைப் பிள்ளை, கோமளமயிலே - அழகு நிறைந்த மயிலை ஒத்த பெண்ணே! முத்தர் - முத்திக்கு இலக்கானவர், விதலை - பூமி, சிதலை - சுதல்.

2. கான் - வனம், மகபதி இந்திரன்.

3 இந்திர னியலென்னே யேதிலுறு பகைவெல்லுந்
தந்திர நினைகில்லாய் தவமில்லை மடிக்கற்றாய்
நிந்தையின் வடிவுற்றாய் நீயினி விரைசெறிப்
பைந்தமிழ் முனிபொன்னி பஞ்ச நதிக்கென்றான்.

4 ஈசனைமுன் கும்பிட் டிறைவனி லிங்கத்துக்
காசறு வடபாலேய் மாதிரு மகடன்னைப்
பூசனை புரிகென்னப் புங்கவர் பெருமானுந்
தேசனை வரமெய்தச் சென்றன னினியிப்பால்.

5 திருப்பொன்னியடுத்த செழுங்கரை போய்த்
தருப்பஞ்ச நதீசனைத் தாடொழுதான்
விருப்பஞ்செய் பார்த்தனை மேற் றெழுமாக
கருப்பந் தரு தோத்திரங் கட்டுரைக்கும்

6 நீரொன் றடியார்கள் நினைத்த தெலாம்
வேறொன் றொழியாமல் விழைந்த ருளை
யாறஞ்சுடை நாயக வரசுர வாகனநந்தி
மேலேறுஞ் சுடர் வெற்றியெனக் கருளே.

---

3. ஏதிலுறு - பகைவரால் உற்ற, மடி - தகுதி பெறாமை, விரை-விரைந்து செல்வாயாக, பைந்தமிழ்முனி - அகத்தியன்.

4. காசறு - குற்றமற்ற, வடபாலேய் - வடக்குப்புறம் சென்று, பூசனை - வழிபாடு, புங்கவர் - தேவர்.

5. பொன்னி - காவிரி நதி, செழுங்கரை - வளம் நிறைந்த தரு-கற்பகத்தரு, பார்த்தன் - தேவர்க்கரசன்.

6. நீரொன்றடியார் - வேதியர், ஐயாறஞ்சுடை நாயகன் - திருவையாற்றி லமர்ந்தருள் பஞ்சகவியம் விரும்பும் தலைவன்.

7 கதிரொன்றிய சக்கரங் கைத்தலத் தீந்தத்
திரும்பகை மாலுக்ககற்றிய வமுதிருந் தருள்வாக்குப்
பொருந்திய தெனக்கென வலியமை பகையை
முறித்ததன் மேலாமருஞ்சமர் வெற்றியெனக் கருளே

8 அகிலத்தேவை யெண்ணினும் படியச்
சகலர்க்கு முடித்த தயாநிதியே
விகலத்தி லிளைத்தனன் மேல்வுணர்க்
கிகலச் சமர்வெற்றி யெனக்கருளே.

9 என்றிந்திரன் ஏத்தி யிறைஞ்சுதலும்
நன்றெண நிறை பஞ்சநதேசனவர்க்
குன்றஞ் சிறைகொள் குலிச்சத்தவனுக்
கொன்றின்புற வென்றி யுரைத்தனனால்.

10 மறுவலர்உண்டி யில்லார்க்கில்லை வீரியத்தின் வாழ்க்கை
அறிவிலார்க் கில்லை மேலையுல கமராழ்வி லார்க்கும்
பிறைகுலவு நுதலாரில்லை பிணியின்மை யில்லோர்க்கில்லை
செறிவிலாத்தவம் போர்வென்றிச் செல்வ மில்லோருக்கில்லை.

---

7. சக்கரம் - விட்டுணுவின் சக்கரம், அருஞ்சமர் - மேலான போரினை,

8. அகிலம் - அனைத்துலகம், எண்ணினும் படிய - எண்ணிக் கைக்குளடங்காமல், சகலர் - யாவருக்கும், விகலம் - மனத்தாழ்வு.

9. இறைஞ்சுதல் - பலவாறு போற்றி வணங்குதல், குலிச்சத்தவன் குலிசமென்னும் படையை உடைய இந்திரன்.

10. மறுவலர் - வறுமையடைந்தவர், வீரியம் - திடத்தன்மை, அமராழ்வு பண்பமையுணர்வு, இல்லோர் - நல்லொழுக்கம் இல்லாதவர்.

11 மானவீரியத்தை வேண்டில் வேண்டுமால் யாமேவேண்டும்
ஞானமேவேண்டிற் காமன் வேண்டுநல் லழகுவேண்டிற்
பானுவேவேண்டு மாரோக்கியந் தனைப் பரந்துவேண்டி
லானபாக் கியத்தைவேண்டி லருந்திருப் பூசைவேண்டும்.

12 ஆகையா லுனக்குவாகை வேண்டிடி லரியச்செல்வம்
மோகையால் வேண்டும் வேண்டிலொரு திருப்பூசை வேண்டும்
பாகையாமொழியுங் கோயிலெம் மிடப்பாலில் வாழ
வாகையாற் கோதமர்க்காயிரத்து னாம் யாமேயென்றான்.

13 ஆயிரச் செங்கணானும் அம்மொழி யமுதுட்கொண்டு
சேயிதழ் பதுமபீடச் செல்விதங் கோயிலாங்கண்
மாயிருந் தச்சன்றன்னை வருகென வந்த போழ்தே
கோயிலின் முன்னரன்னோன் கூபமொன்றிழைத்தான் மன்னோ,

14 ஆமதிற் கடவுளும்ப ரமுதமே நிறைந்தநீராற்
கோமள வல்லிதன்னைக் குழைந்தனன் குளிரவாட்டி
தேமலர் மாலைச்சாந்தஞ் செழுமதிக்கலன்க ளேந்தி
வாமநற் கலாபம்வீக்கி வனைந்தனன் பிறவுமாதோ.

---

11. மான - மிகுதியான, வீரியம் - வீரம், பானு - சூரியன், பாக்கியம் - நற்செல்வம்.

12. வாகை - வாகை மலர் சூடும் வெற்றி, திருப்பூசை - மேலான பூசை, மோகை - விருப்பம், பாகையா மொழி - இனிமையான மொழி, மொழியும் - மொழியை உடைய உமாதேவி.

13. ஆயிரச் செங்கணான் - இந்திரன், செல்வி - இலக்குமி, மாயிருந்தச்சன் - தேவதச்சன், மயன். கூபம் - கிணறு.

14. உம்பரமுதம் - தேவரமுதம், குழைந்தனன் - மனம் உருகினன், தேமலர் -தேன் பொருந்திய மலர், வாமம் - அழகு.

15 நெய்ம்மண மமுதமேற்றி நிறைமுகப் பஞ்சவாசம்
வெம்மடி பழுக்காய்த்தட்டம் வெள்ளிலைக் களாசிதாங்கி
செம்மணப் பத்திமுன்னாத் திருவடித் தொழுதெழுந்தாங்
கம்மணத் திருவின்முன்னின் றருந்துதி புகலலுற்றாம்.

16 முரியுந்திரை வெண்கடற்பிறந்து முட்டாச்செந்தாமரை நாப் பணரியன்
மருமத்தலம் பிரியாவன்னா யுன்னைத் தொழுகின்றேன்
பரியுமசுரப் படையைவெல்லும் படையும்படைத்த சாக்கரையும்
விரியுமெண்பது பெரும்பரியும் பிரியாதிருத்தி நீயெனவே.

17 துங்கப்பிருகு மகளாகிச் சுவாகர்சுதாவின் வடிவாகு
மங்கைக்கமல மலர்தாங்கும் அன்னாய்உன்னைத் தொழு-கின்றேன்
வெங்கட் பகுவாய்ப் படைவெல்லும் வேழவரசும் வெம்பரியும்
தங்கக்குவையு மெப்பொருளுந் தணவாதிருத்தி நீயெனவே.

---

15. நெய்மணவமுதம் - நெய்மணக்கும் நிவேதன அன்னம், பஞ்சவாசம் - ஐந்து வகையான மணம், அவை - இலவங்கம், ஏலம், கற்பூரம் விலாமிச்சம் தக்கோலம், திரு - இலக்குமி.

16. முரியும் - வளையும், திரை - அலை, வெண்கடல் - பாற்கடல், முட்டாள் - முள்ளோடு கூடிய தாளினை உடைய, மருமத்தலம் - மார்பு. சாக்கரையர் - படைத்தலைவன்.

17. துங்கம் - அழகு, சுதா - மகன், வெங்கண்பகுவாய்ப்படை - அசுரர் படை, வேழவரசு - அரசயானை, வெம்பரி - கொடிய வேகமுள்ள குதிரை தணவா - நீங்காமல்.

18 உலகமெவைக்குந் தாயாகி யுமைபராதியுந் திரையுருவா
யலகில் விளையாட் டுடைமதனன்னா யுன்னைத் தொழுகின்றேன்
புலவர் முகத்து மாசிலிருக்கைப் புலமையிடத்து மனையகத்து
நிலவியெனையு மெப்பொழுதும் நீங்காதிருத்தி நீயெனவே.

19 பூசையாற் றுதியானெஞ்சம் பொலிந்து பூமகளுந்தோன்றி
யோசையார் செல்வமெல்லா முதவினளொன்று சொல்வா
ளாசையாலன்னை மார்களெழுவரிங் கரிசித் தெய்தின்
மாசயம் உறப்போர்செய்வாய் மகபதி விரைகவென்றாள்.

20 விச்சுவக் கருமனுக்கு விளம்பினானவணிறைஞ்சி
நிச்சய வடிவமெல்லாம் நிருமிப்ப நிருதிப் பாங்கர்
இச்சையுடனிருந்தாங் கணிந்திர னியைந்து போற்றி
நச்சுவரர்க்கினியார் பூசை நடத்தினா னயந்துமாதோ.

21. நான்முகப் பேதையைந்து முகமுளப் பெதும்பை நான்கைந்
தான்முக மாறுபெற்ற மங்கைதா ரணியளிக்கு
மெண்முக மடந்தைமிக்க வெண்மருப் பிடைமண்டாங்கு
மான்முக வரிவைநூறாம் மகமுகத் தெரிவையோடும்.

---

18. அலகில் - அளவில்லாத, மதனன் - காமன், மாசில் - குற்றமற்ற, நிலவி - கலந்து.

19. ஓசையர் - ஒலி பொருந்திய, அன்னைமார் - சப்தமாதர், மாசயம் - மிகுந்த வெற்றி, மகபதி - இந்திரன்.

20. விச்சுவக்கருமன் - விசுவகர்மா, தேவதச்சன். நிச்சய - திட்டமான, நிருமிப்ப - செய்தமைக்க, நச்சுவரர் - பாம்பணிபவர்.

21. நான்முகப்பேதை - பிராமி, ஐந்து முகமுளப் பெதும்பை - மகேசுவரி, முகமாறுபெற்ற மங்கை - கௌமாரி, எண்முகமடந்தை - நாராயணி, மான்முகவரிவை - வராகி, மகமுகத் தெரிவை - இந்திராணி,

22 பிறங்கிய பிறையெயிற்றுப் பெருமுகப் பேரிளம்பெண்
றங்கிள ரெழுவராகு மன்னையரிவர்க் கென்ஞான்று
மறங்கிளர் வெற்றிவேண்டி வானவன் புரிந்தபூசை
திறங்கிளந் துரைக்கில் வாக்கில் சிந்தையி லெட்டாதம்மா!

23 அன்னையர் மகிழ்ந்து முன்னின்ற மாச்சயமுனக்குண்டாக
நின்னது பதியினேகி நினக்குறு பகைஞர்பேரில்
முன்ன நீயமரிழைத்தி முனிந்தவர் மேலாம்போதிற்
பின்னவர் படையினொன்று பெரிதுநா முடித்துமென்றார்.

24 மாதரை விடைகொண்டெய்தி மகபதி பதியிலவ்வா
றோதரு பகைமேற் போர்மூண்டிழைத் தன்னைமாரும்
மோதின ரசுரர்சேனை முடிந்திட விடிந்ததம்மா
வேதமிலிரவி முன்போ மிருளிமை யோர்க்கெல்லாம்.

---

22. பிறங்கிய - விளங்கிய. பிறை எயிறு - பிறை போன்ற பற்கள். பெருமுகப்பேரிளம் பெண் - சாமுண்டி. வானவன் - இந்திரன். திறங்கிளந்து - திறத்தினை விளக்கமாக.

23. அன்னையர் - சப்தமாதர். மாசயம் - மிகப்பெரிய வெற்றி, மேலாம் போதில் . பகைவர் தாக்குதல் மேலாகும் போது, முடித்தி - அழிப்போம்

24. மாதர் - சப்த மாதர், மகபதி - இந்திரன். பதி - இந்திரவுலகம்,
மோதினர் - தாக்கினர், ஏதமில் - குறையில்லாத,
இமையோர் - தேவர்கள்.

25 இந்திர னிருமித்தேத்து மெழுவரைத் தொழுவோருக்கும்
வெந்திறற் பகையால் தீயால் வேந்தர் கள்வராலும்
வந்திடாதுன்பங் கூபத் தமுதினால் மடந்தையோரும்
மைந்தனைப் பெறுவள் தீராவன்பிணி தீருமென்றான்

இந்திராத்தியாயம் முற்றும்

26 இன்னன கோயிலுண்மை யினிச்சிவ சருமன்காதை
தொன்னலச் சிவதாசன்சீர் சுகரிதன் ததீசிமீது
பன்னருஞ் சுகரிதன்றன் பான்மைக ளாய்வகுத்த
முன்னரும் பிரணதார்த்தி கரன்திறம் மொழியலுற்றாம்.

ஆலயச் சருக்கம் முற்றும்.

## திருமகளத்தியாயம்

1 மாதவன் வடிவெல்லாம் வந்துதிரண் டின்தேன்
காதல னெனவந்தாய் கமலத்தமு தொப்பாய்
கோதமன் தரிசிக்கக் கோமள வடிவோடும்
பூதலத்தே யுதித்தாய் புக்கனன் புகலென்ன.

---

25, எழுவர் - ஏழு தெய்வ அன்னையர், கூபத்தமுது - கிணற்றுத் தெய்வ நீர்,

1. மாதவன் - திருமால், இன்தேன் - இனியதேன், கமலம் - தாமரை கோமளம் - மிக்க அழகு. புதலம் - மண்ணுலகம், புகல் - அடைக்கலம்.

2 நன்னினைவிது மாதே! நாரணன் மனையாளைப்
பன்னிய கதையீது, படித்தவர் செளியூறத்
துன்னினர் மிடிபோகுந் துரிசுறு மடையாரு
மென்னிட வருமென்று விழுந்தவன் மொழிகின்றான்.

3 பண்டொரு காலத்துப் பாரிடையு வரெல்லா
மண்டரு முகலத்துப் பிறவியை யஞ்சினராய்
விண்டனர் பாசத்தின் முத்தி விருப்போடு
மண்டின ரையாற்றின் வந்தனர் நிறையுங்கால்.

4 அத்திரி வைசம்பாயின னங்கினர் விசுவா
மித்திரன் மார்க்கண்டன் சயிமினி மிருகண்டு
மெய்த்துரு வாசன் வான்மீகி வசிட்டன்
பாரத்துவன் ததீசீ யகத்திய னானந்தன்.

5 அனக சுமந்திரி பிருகு சதாளந்தன்
கனதவங் கௌத்தமனா ரதனொடு காசிபனுஞ்
சனக சனந்த சனற்குமர சனாதர் முதற்
சினமிலருந் தவரும் செப்பேசம் பயில்வார்.

---

2. நாரணன் - திருமால், பன்னிய - பற்றிச்செய்த. துன்னினர் கேட்டவர், மிடி - துன்பம், துரிசுறு - குற்றமுடைய

3. பண்டொரு - முன்பொரு, மண்தரு - மண்ணமைந்த, பாசம் - பற்றுள்ளம், மண்டினர் - சேர்ந்து கூடினர்.

4. பாடலில் - பிராமண சிரேஷ்ட கோத்ர முதல்வராகிய ரிஷபுங்கவர்கள் கூறப் பெற்றுள்ளனர்.

5. கனதவம் - மிகுந்த தவம், சினமில் - கோபத்தை வென்ற, அருந்தவர் - கடிய தவத்தையுடையவர்கள்.

6 முதனிலை யோரில்லின் முயலுந் தருமரோவற்
புதன்மறை வானத்தோர் போற்றிய புலனைந்தும்
மதநிலை யோராயாரும் மறைமுடி பெனவோதும்
பதனிலை யிதுவென்றிப் பஞ்சநதம் புக்கார்.

7 ஒருதலமுடையான் பேரி ருவகையோடு முன்னீர்
வருதரை யுளவானால் வருணமு மலிந்தீண்டி
வருட மெணில வெண்ணி மதிக்கினு முடிவொண்ணாப்
பரிசனங் கடலெல்லாம் பதவுண வரிதாமால்.

8 இன்னற் பசியென்றே தமையிமே லேறியநஞ்
சுண்ணத் தனிமீளா தொருமந்திர மில்லை
பன்னற் கருணையினோர் பண்டிதர் பிறரில்லை
அன்னத் திரளையதற் கவுடமா யுண்டயதே.

---

6. முதனிலையோர் - வருணத்துள் முதன்மையுடையவர், தருமர் - இல்லறம் சேய்வோர், அற்புதன் - பிரமன், மறை - வேதம், மறைமுடிபு - வேதங்கள் கூறும் முடிவு, பதனிலை - நிறைபக்குவ நிலை. பஞ்ச நதம் - திருவையாறு.

7. ஒருதலம் - ஒப்பற்ற சிவத்தலம், பேரிருவகை - ஐயாரப்பன், பிரணதார்த்தீகரர், முன்னீர் - வானம். பூமி பாதாளம், ஆகியவற்றிலமைந்த நீர்,

8. இன்னல் - தீமை. மீளா - பிழைக்க, பன்னல் - பரிகாரம் செய்தற்கு, பண்டிதர் - மருத்துவர், அன்னத்திரள்-அன்ன உருண்டை (சோற்றுருண்டை) அவுடதமா - மருந்தாக,

9 என்னுந் தாபதரிற் கவுதம முனியென்பான்
தன்னன் புளனாகித் தலவாசஞ் செய்வோர்க்
கன்னந் தருகிற்பா னமலனை யையாற்றிற்
றுன்னும் பொற்கோயிற் றொழுது துதிசெய்வான்.

10 பூரண ஞான மிரண்டற்ற புராதனனே
காரண னெழுதலாங் கதிரொளியே சரணம்
தாரண வெம்பசியித் தலவாசஞ் செய்வோர்க்
காரணனே தொலையா வன்னம் தரவேணும்.

11 வேதமுதற் பொருளி னிலக்கே மெய்யாவிக்
கோதனமா யூட்டா வுண்பவனே சரணஞ்
சாதுயர் வெம்பசியித் தலவாசஞ் செய்வார்
காதலுறத் தொலையா வன்னம் தரல்வேண்டும்.

12 ஓங்காரங் காயத்திரி யுண்மைப் பொருளே
தேங்கானந்தர பொய்ச்செறி வில்லாய் சரணம்
தாங்கா வெம்பசி யித்தல வாசஞ்செய்வோர்க்
காங்காலந் தொலையா வன்னம் தரவேண்டும்.

---

9. தாபதர் - தபோதனர், தலம் - சிவத்தலம், அன்னம் - உணவு, துன்னும்- பொருந்திய.

10. பூரணன் - நிறைவரனவன், காரணன் - யாவற்றிற்கும் முதற் காரண மாயுள்ளவன், ஆரணன் - வேத முதல்வன், தொலையா - குறையாத, அன்னம் - சோற்றுணவு.

11. மெய்யாவிக்கு - மெய்மையான உயிர்க்கு, ஓதனம் - உணவு, சாதுயர்- சாவளவாகுந்துன்பம், தொலையா - குறையாத.

12. தேங்கு - நிலைத்த, ஆனந்தர - ஆனந்தமயமானவனே, பொய்ச்செறி வில்லாய் - உண்மைப் பொருளானவனே, ஆங்காலம் - இறுதிக் காலம் வரையில்.

13 இன்னன புகல்வோனுக் கிறைவனு மெதிர் தோன்றிப்
பொன்னலர் மறைவாசப் பூமகணீ வாவிங்
கன்னமும் நிதியுந் தானியமு மளிக்கென்ன
தன்னமா வடபாலி லிருக்கத் தாபித்தான்.

14 மாலொடு துயிலினீங்கா மனையென் றெண்ணா
பாலக னிடர்தீரப் பாற்கட லணைந்தான்
மேலவன் மனை யென்னான் வெம்பசி தணியென்ன
ஞாலத்துயர் பஞ்சநதிநற் பதியோர்க் கீய்ந்தான்.

15 மாதவர் பலரோடு மங்கல மகடன்னை
கோதகம் பூசித்துக் கொடியுன் வரமென்ன
போதலும் முனிவோனும் பூசனை புரிகிற்பால்
நாதனை முதலர்ச்சித் திடனிடை நண்ணுதலும்,

16 திருப்பாற் கடற்றாமரை செம்மலர்மேல்
விருப்பாற் கடலேந்திய வேழமிரண்
டுருப்பாற் கவிழ் தெள்ளமுது உள்ளொளிர்
விருப்பாடனைக் கண்டணன் யாவரோடும்.

---

13. இன்னன - இவ்வாறாக, புகல்வோன் - விண்ணப்பம் செய்வோனாகிய முனிவன், பூமகள் - இலக்குமி.

14. மாலொடு - திருமாலோடு, மனை - மனைவியாகிய திருமகள்.

15. மாதவர் - முனிவர், கோதகம் - உள்ளக்களிப்புடன்.

16. வேழம் - யானை, உருப்பால் - உருவான கலசங்களால், விருப்பாள் தனை, விருப்புனிருப்பவளாகிய இலக்குமியை.

17 அணிபூந்துகில் சந்தகி லாவிநறை
மணிபூத்த விளக்கு வழங்கியபின்
பணிபூப்ப வணிந்து பலபலவாய்க்
கணிபூத்தன வூண்கருணைத் தோகையும்.

18 அவிப்பாய்ந்த மணம் மகக்காரடலை
குவிப்பாய் வீழ்ந்து நெய்க்குயங்கமழச்
சவிப்பாவை மகிழ்ச்சிதரும் படியாற்
புவிப்பாற் பலவகைசெய்தனன் பூசனையே.

19 அஞ்ஞான்று தொட்ட தலத்திற்திருவு
மெஞ்ஞான்று மிருந்தன னீகையினால்,
வைஞ்ஞான்ற கருங்குழல் மற்றதனால்
எஞ்ஞான்று மிரும்பசி யில்லையதில்.

20 தனம் தானியம் யாதெல்லாதா மெனினும்
மனந் தாழ்ந்து விரும்பில் வரந்தருவாள்
இனத்தாமரை மேலிரு தாமரை கொண்
டனந்தா னிருத்தாலென வாங்கிருந்தாள்,

திருமகளத்தியாயம் முற்றும்

---

17. பூந்துகில் - மென்மையான பட்டாடை, சந்தம் - சந்தனம், அகில் - அகிற்புகை.

18. அவிப்பாய்ந்த மணம் - வேள்வியில் அவிப்பாகமாகப் பெய்த பொருள்களால் உண்டாகும் மணம், சவிப்பாவை - வல்லமை பொருந்திய திருமகள்.

19. அஞ்ஞான்று - அப்பொழுது, திருவும் - இலக்குமியும்.

20. மேலிரு தாமரை - மேல் வீற்றிருப்பாளாகிய இலக்குமியின் இரு தாமரை போன்ற கண்கள். அனந்தான் - அன்னநந்தான்.

# கவுதமனத்தியாயம்

1 பூமகள் வரம்பெறு தவப்புனித னங்ஙண்
காமக் கன்னதிரு வருட்கடல் கிடைப்பான்
கோதமன் முயன்று வரமுற்றசெயல் சொல்லின்
மாமகிழவுங் கூறுமிது கேளென வகுப்பான்.

2 ஐம்புலனடக்கி புனல் முப்பொழுது மாடி
பம்பு மெழுத்தஞ்சு யுதமாக வுருப்பண்ணி
வம்பரு முறுத்திரும் வலத்தொடு முரைத்தே
உம்பர் பெருமானை யருங்சித்தின னோராண்டு.

3 ஈர்த்த மதிவார மிரவணன் முணலுற்றுங்
கார்த்திகை யிலாட்டு மபிடேகமொடு கஞ்சம்
பூத்தனைய தீபமொரு கோடிபுரிவித்துந்
தீர்த்தனரு ளெய்தும்வகை செய்தன னோராண்டு.

4 வாயு வுணவாலு மொருவற் சாமுயன்றா
னேயுமுண வேதுமில னோர்வருட மெய்திக்
காய்கதிரி டத்திலிரு கண்களை நிறுத்தி
ஆயமுறு மூச்சற வியற்றின னோராண்டு.

---

1. பூமகள் - திருமகள், காமதக்கன்ன - விரும்பதக்க தன்ன.
2. புனல் - தூய நீர், பம்பு - ஒலிக்கின்ற.
3. மதிவாரம் - திங்கள்கிழமை, கஞ்சம் - தாமரை.
4. காய்கதிர் - வெய்யல் காய்கின்ற சூரியன்.

5 ஊனமறு காவிரி வடாதுகரை யோர்பால்
வான்முகி லேறுமுயர் கோபுர மருங்காய்த்
தானமிசை யண்ணலெழுந் தஞ்சுமதி தன்னிற்
பானவமு தென்னவவ னுண்டு பயிலெல்லை.

6 பூதப்படை சூழக்கண நாதர்புடை மொய்ப்ப
நாதக் கடலேத்த நந்தி விருந்தோத
மேதக்கும ரர்க்குகன் வேழமுகன் மேவப்
பாதப்பத சாலத்தொலிப் பாதமோ டிலங்க.

7 துண்டமதி கண்டரவு சுற்றச் சடைமுற்றும்
விண்டலர்க் கடுக்கையின் விழுந்து மீதுற்று
குண்டல மிருந்திசை குழைத்த செவிமேலா
யொண்டருகு கண்டொரு கையுற்றமறி கற்ற.

8 வாமவிழி நாணலுறப் பார்வைநகை கூறக்
காமனை யெரித்தவிழி கண்டதி சயிப்ப
நாமமுரு மிரப்பை வாதக் கானலிக்க
வாமையுட னென்னநெடு மால்மிகை யடக்க.

---

5. முகில் - மழைமேகம், மருங்கு - பக்கம், தானமிசை, - ஆசனம் மீது, பானவமுது - நீர் பருகுதல் போன்று.

6. நாதம் - இசை நாதம், வேழமுகன் - விநாயகன்.

7. துண்டமதி - பிறைச்சந்திரன், அரவு - பாம்பு, கடுக்கை- கொன்றை மாலை, மறி - மான்.

8. வாமவிழி - அழகியவிழி, நாமமுறு - அச்சமுள்ள, மிகை - கர்வம்.

9 கொக்கிற் கண்டு மதியிற் கயல்குதிப்ப
நக்கதலை யோடுமுடி கண்டன் நகைக்கத்
தொக்கத்திரு நீறுமிட றாடிருடோ டுடுக்கை
கைக்கண்டு மழுவச்ச மபயக்கர நிறுத்த.

10 பொன்னின்மலை வெள்ளிமலை மீது வரல்போல
மின்னொளி மேனியன் வேள்விடை யினேறி
முன்னர்வர லோடுமுனி வன்றவ மொழிந்தான்
சன்னதியில் வீழ்ந்தறி வயர்ந்து துதிசாற்றும்.

11 நின்னியலின் மெய்யினொளி நிகழ்ந்து நிறைகின்றாய்
அன்னியமன்னிய மிலாமலுல காணாய்
மின்னுமதி யங்குயிர்ப்புக் கொளியினை விளைத்தாய்
பொன்னின்மய மேனியன் பொன்னடி பணிந்தேன்.

12 சித்துருவுள் சித்துருவென செகம் விரித்தாய்ச்
சத்துடனாம் சத்தென வியன்றனைச் சமைத்தாய்
மெத்து புவியிற் புறமுள்ளும் விரிக்கின்றாய்
புத்தமுத மொத்தவனே பொன்னடி பணிந்தேன்.

---

9. கயல் - மீன், மழு - மழுவாயுதம்.

10. மின்னொளி மேனியன் - சிவபெருமான், வேள் - மன்மதன், அறிவயர்ந்து - அறிவுமயங்கி.

11. நின்னியலின் - நினது இயல்பான தன்மையினால், அன்னியம் - வேறுபடா நிலை.

12. சித்துரு - அற்புதவல்லாமை, சகம் - உலகம், சத்து - சீவசத்து, வியன் - அகன்ற உலகம், புத்தமுதம் - புதிய அமுதம்.

13 காரண முதற்றுணைகள் கற்பனைக் கடந்தா
யேரணவு மாறுசுவை யின்ப நிகழ்வித்தாய்
ஆரண முரைக்கவரு சுகத்துருவ மானாய்
பூரண வரத்தநின் பொன்னடி பணிந்தேன்.

14 பஞ்சநதி நாதனின் பொன்னடி பலகாலு
மஞ்ச லெனுமாறு பணித்தேனெனும் வாக்குத்
தஞ்சமனை யான்தவதி னாற்றுதி யயனாதியர்
நெஞ்சமகிழ்ந்தோம் வரநினைத்த துரையென்றான்.

15 உன்னைக் கண்டிலார் கண்டிலாருலகொடு தமையு
முன்னைக் கண்டுளார் கண்டுளாருலகொடு தமையு
முன்னைக் கண்டிலேன் கண்டிலேனுலகுட னெனையீன்
றுன்னைக் கண்டிட்டுள்ளேன் உலகுட னெனையே.

16 உன்னைக் காண்பதே பொருளாலுன்னை முன்னிகழ்ந்து
பின்னைக் காண்பதே துரைப்பதே துரைத்திடாய் பெரியோய்!
பொன்னைக் கொண்டொரு நினைப்புறு மேனியாய்புனிதா
வென்னப் போற்றிய கவுதமன்றனக்கு வேறிசைப்பான்.

---

13. காரண - எல்லாவற்றிற்கும் முதற்காரணமானவனே, ஏர் அணவு - அழகு தழுவுகின்ற, மாறு சுவை - வாழ்வின் வேறுபட்ட அனுபவங்கள், ஆரணம் - வேதம். பூரண - நிறைவானவனே.

14. அஞ்சலெனுமாறு - அஞ்சாதே என்று ஆதரவு செய்யுமாறு, வர நினைத்தது - தோன்றிவர நாங்கள் நினைத்தது. உரை - பணிந்தவுரை.

15. முன்னை - முன்னரே, இட்டுள்ளேன் - மனத்தில் இறுத்தியுள்ளேன்.

16. புனிதா - தூய்மையானவனே! கவுதமன் - கவுதம முனிவன்.

17 மாதவாதப நன்றுநின் வாய்மொழி வாய்மை
சீதமாதப நாளினீர் தீயிடைச் சஞ்சரித்தும்
வாதமுண்டு கானமருவியுங் காண்கிலார் மகத்தின்
பேதநூறு களியற்றியும் பெற்றிலா ரின்னும்.

18 நம்மைக் கிட்டுவதெமது புண்ணியத்தின் ஞானத்தாற்
செம்மைப் பட்டிடுமாதலா லெமைத்தெரிசித்தாய்
மும்மைக்கும் பயனெய்தினை மூதுலகத்தோர்
கிம்மைக்குப்பயன் போலவன் கேண்மியா வென்றான்.

19 ஓசை சுவைகந்தம் வடியுறு களியென்று
மாசையற வேண்டு நின்னடிக் கடியரோடும்
பாசமிக வேண்டுமுயர் பஞ்சநதிச் சார்வாம்
வாசமுற வேண்டும் இஃதால் வரமெனக்கே.

20 முத்தி தருநின் திருவையாற்றுத் துறைமூழ்கிச்
சித்திதரு செம்பொற் குறிபோற்றித் தினமும்
பத்தியோடு மப்புல புரிக்குட பதியாயப்போ
யெத்திறனா னெவர்க்கு மழுதீந்திடவும் வேண்டும்.

---

17. மாதவ ஆதப - சிறந்த தவத்தில் சூரியனைப் போன்றவனே, வாய்மை- தூய விருப்பம், வாத முண்டு - குளிகையை உண்டதால், மகத்தின் - யாகாதிகளின்.

18. செம்மைப்பட்டிடும் - பரிபக்குவமமையும், இம்மை - இப்பிறவி, கேண்மியா - கேட்பீர்கள்!

19. ஓசை - ஒலி, கந்தம் - மணம், களி - மகிழ்ச்சி, மாசை - மயக்கம், பாசம் - பற்றாசை, வாசம் - புகழ்.

20. முத்தி - மோட்சம், சித்தி - தவத்திறன், குறி - தத்துவக்குறி.

21 இப்பதியி லப்படி யளித்திடுக வென்னிற்
செப்பிய புரிக்குள் மணலுள்ள சிவலிங்கந்
தப்பில வெனக்கது தெரிந்துப சரித்தற்குமே
யப்பயன் மிகுந்தது மலர்ந்திட லெண்ணி,

22 பாலமுதம் நின்னது பதிக்குட் பகிர்கென்னச்
சாலமலர் மங்கையை யிருத்தினை தயாவாற்
காலமழை யின்றி விளைவஃகிக் கடல்சூழு
ஞால மறையோர்க ளொழியாம லணுகுற்றார்:

23 ஆனமரு மத்தல துகுந்த தரிகட்கு
பானவமு தம்பகிர் நல்லப் பயிர் வித்தில்
வூன்றலரிக் கதிர் விளைந்து தொகுமாறோர்
தானவயல் வேண்டுமிது தக்கவர மென்றான்.

24 அவ்வியலளித் தருளி யண்ணலு மறைந்தான்
செவ்வியெனு மவ்வகை திருத்த மொடுசெய்
யவ்வலன் வாலரிசியாய் வயல் விளைக்கவ
தெவ்வியலி னோருமவ ணெய்தி யுணவேற்றார்.

---

21. இப்பதி - பஞ்ச நதீசுவரம், தப்பில - தப்பவில்லை, மேயப்பயன் - பொருந்திய பயன், மலர்த்திடல் - தோற்றுவித்தல்.

22. காலமழை - பருவமழை, விளைவஃகி - விளைவு குறைந்து, மறையோர்- வேதியர்.

23. மருமத்தலம் - தத்துவத்தலம், அதிதி - விருந்தினர், பானம் - இனிப் பான நீர், பகிர்-பகிர்ந்தளிக்கும், தானவயல்-தான தருமத்திற்கமைந்த நிலம்.

24. அவ்வியல் - அவ்வாறமைந்த நிகழ்ச்சி, செவ்வி - காலத்தருமை, அவ் வலன் - அவ்வாறமைந்த சிறப்பால், அவணெய்தி - அங்கே சென்று.

25 பாற்றிரண்ட வன்னமுண்டை யாரடுத்த பண்பினார்
பேரிரண்டு முண்டெனப் பிரானையன்பு பேசியே
நூறிரண்ட மார்பினார் திரண்டு நோயதி னெய்துநா
ளாறிரண்டு காலமாரி யன்மையால் வறந்ததால்

26 ஆயவங்கி நின்றகுண்டம் ஆம்பிதங்கி நின்றிட
தீயெழுந் தெரித்த சுலவி செல்லெழுந் திருத்தலால்
ஓய்விலாத பானலோடை கானலோடை யாயுறத்
தோயும் வண்டொலித்த சோலைச் சூரையே யொலித்ததால்.

27 கொத்துமுத்து மாலைபச்சை மரகதங் கொழித்தல்போல்
செய்த்தலைப் பயிர்த்துணர்ச் செறிந்தமூரல் வல்சியா
லெத்திறத்த வர்க்குமின்ப வமுதமீத லாலவண்
மொய்த்தருத்தி யாயருத்தி னார்முதற் குலத்தினார்.

28 கோடையிற் குளிர்ந்தனீழ றேடிவந்த கொள்கைபோ
னாடுகாடு வாழுமக்கள் நல்விலங்கு புள்ளெலாம்
வேடையால் மெலிந்துவந்து முனிமே விருக்கைசூழ்
நீடுசோலைக் காவிலாவி நின்றுகண்டு தயங்கினார்.

---

25. பால்திரண்டவன்னம் - பால் திரண்டதைப் போன்ற அன்னம், ஆறிரண்டு - பன்னிரண்டு, காலம் - வருடம்,

26. ஆய அங்கி - வேள்வித்தீ, குண்டம் - வேள்விக்குண்டம், ஆம்பி - அடர் பூண்டு, சுலவிட - சுற்றிலும், செல் - கரையான் புற்று, பானல் ஓலை - நீலோற்பலம் மலர்ந்த நீரோடை, கானல் - வெப்பம் நிறைந்த பாலை நிலம் சூரை - சூரைக்காற்று.

27. கொத்து - கொத்தான, செய்த்தலை - வயலின் உயர்வான, துணர் - கதிர்க்கொத்து, மூரல் - வெண்பற்கள், வல்சி - சிறந்த உணவு, அவண் - அவ்விடத்தில்.

28. வேடையால் - வேட்கையால், மேவிருக்கை - தங்கியுள்ள இடம். கா - சோலை, ஆவி - நீர்நிலை.

29 தெருளு மேன்மை யோரியற்கைச் செப்புமாறென வெம்புலிக்
குருளையுண்ண முலைசுரந்து கோகுலங்கள் நின்றவா
லருளில்வெம் புலிப்பிணாவு நாவினா விளங்குழா
முருவமுற்று நக்கிநின் றொருங்குபால் சுரப்பவே.

30 ஆடுதோகை பாம்பினண்ட மடைகிடப்ப வமுத
மோடுசீ றெலிக்குணா வுகப்பமற்று மித்திறங்
கோடுகோத மின்றியொன்று போல்வகோத மத்தவன்
பீடுசே றிருக்கைசூழ பிறங்குகின்ற யாவுமே.

31 பனையளவு தினையளவி என்றுரைக்கும் பாரில்
பல்லுயிர்க ளனைத்து மிடர்பசி தீர்ந்துய்ப்ப
வினையளவில் வரும்வளம்போல் வேலை மேய்ந்து
சினையளவி யுறையாலி செவ்விபெறப் பெய்ததேயமெலாம்.

32 தாயருத்த முலைசுரந்து மகவுண்டாங்குத் தரணிதன்னில்
போயருந்த முனியிருக்கையாவும் புடைபிரியா வந்தணரும்
தேயமுறப்போதுமெனச் செப்பும்போதிற் சேர்ந்தவர் நட்பு
நீயிரெமைப் பிரியாதிங் கிருத்திரென்று
நிறுத்திக்கொண்டான்.

---

29. குருளை - புலிக்குட்டி, கோகுலம் - பசுக்கூட்டம், பிணா - பெண்புலி (பிணவு)

30. ஆடுதோகை - ஆடுகின்ற மயில், பிறங்குகின்ற - விளங்குகின்றன.

31. பல்லுயிர்கள் - அனைத்துயிர்களும். மிடர் - துன்பம், வேலை - கடல், சினையளவி - மேகம் கருக்கொண்டு, ஆலி - மழைத்துளி, செவ்வி - பருவகாலம்.

32. மகவு - குழந்தை, தரணி - உலகம், தேயமுற - தங்கள் தங்கள் நாட்டிற்குச் செல்ல, இருத்திர் - இருப்பீர்களாக.

33 நல்லோரைச் சார்தலினால் முன்புநல்லோர் நன்மையகத்
தெய்துதலா லின்றுநல்லோம்

வல்லோர் சொல்லிய முத்திப்பண்பு வரப்பெறுகமென
வுடனே மகிழ்ந்திடாது,

எல்லோரும் அறிவிழந்து வருடமீரா றிருந்தும் பயனென்னா
தேகல்மாற்றிப்

பல்லோரும் பழிசமைக்கிற் றகையாமென்று பசுவொன்று
பொய்யுருவிற் படைத்துவிட்டார்.

34 அரிசிவிளை கழனியிற் புக்கருந்திலன்னம் அந்தணருக்கிட
லொழியுமப்பாற் போதென்

றொருதிருக்கைத் தண்டங் கொண்டோங்குமுன் வீழ்ந்
துயிரிழந் திறப்பக்கண்

டுரவோயந்தோ சுரபிபுரி குலைப்பாவஞ் சூழ்ந்ததுன்பாற்

றுருசருந்திலெனப் பெயர்ந்தார் தூயோன் தங்கு விரைவிலா
சிவசிவ சங்கரவென்றான்.

35 புன்றொழிற் புலையரிட்ட பொய்ப்பழி கண்டுங்கேட்டு

நன்றென நகைதுத் தீம்பானச்சா வருந்தவர்க்குக்

கொன்றிடும் அன்றிப்புல்லாக் கூட்டிய பாவம்போல

வென்று மாதுன்பஞ் செய்யாதென முனிசாபமிட்டான்.

---

33 நன்மையகம் - நலம்பொலியும்இல்லம், வல்லோர் - சான்றோர்.

34 அரிசிவிளைகழனி - நெல்விளையும் வயல், உரவோர் - முனிவர்
குலைப்பாமம் - கொலைபாவம், துருசு - குற்றம்.

35 புன்தொழில் - கீழானதொழில், தீம்பால் - இனியபசுப்பால்,
நச்சா - விடமாகுமா.

36 சுருதியின் மிருதிநூலிற் சொல்லிய வெல்லைநீங்கிச்
சிரவுத மாத்தந்தன்னிற் சிந்தனை யவ்வாறு
புரியவா தனையிகழ்ந்து வைதிகப் புறம்பாயமெலா
பரசிவன் பூசையின்றி நரகுறு பதிதராக.

37 அரனறி யயனுக்கேற்கும் பத்தர்போலத் தமராகி
யொருவரை நிந்தையோதி யொருவரைப் பிரித்துவேறாய்
திருநிதல் நீறுமக்க மணியுமே தேவர்க்கெல்லாம்
புரிதரு போதுவென்னாது புண்டராந் தாராயப்போதவர்.

38 விறலரிக் கடிமையென்று வெள்ளை மண் ணெடுத்துக்கீறி
செறிதழல் காய்ந்தசங்கு சங்குசக்கரந் திண்டோட்சுட்டு
முறுகுவன் பராய்முருட்டு மூடராய் நும்போல்வாரை
நெறிவசிற் சதுத்தாள் தூளி நேர்பணிந் திடுவீரென்றான்.

39 அரிசன மண்ணால்மின்னார்க் காடவர் கரசூசத்தை
தரைசெறி வெள்ளைமண்ணாற் போக்குதற்கு மாலின்றோர்
நிரையமே சாந்தியாக நினைத்தவர் நெற்றிமீது,
புரைசெயு டண்ணையிட்டுப் போயினர் புலையராகி.

---

36 சுருதி - சாமவேதம், மிருதி - ஸ்மிருதி.

37 அரனறி - அரனால் அறியப்பட்ட, நிந்தை - பழிச்சொல், அக்கமணி - உருத்திராக்கம்.

38 விறல் - வெற்றி, வீரம். வெள்ளைமண் - திருமண், முருட்டு - பிடிவாதச்சொல்.

39. அரிசனம் - மஞ்சள் நிறம், கரம் - கை, சூசம் - அறிகுறி, நிரையம் - (நிரயம்) நரகம்.

40 கௌதமன் சாபத்தாலே குரவரைப் பழித்தோரெல்லாம்
பாதகராகி மண்ணிற் பரந்தபா சண்டரானார்
வேதபூ நெறியுநீத்து வேறுநூல் கற்பித்தோதி
சாதகராகிச் சில்லோர் சைவருள் மாறினார்.

41 சாபமிவ்வாறு கூறித் தாபதன் திருவையாற்றுத்
தேவனைச் சிவனைச்செம்பொற் சோதியைச் சேர்ந்து
தாவர வாழ்நாள்பெற்றான் சதானந்த னென்னுஞ்சேவை
யாவரும் மகிழப்பெற்றான் சிவனருளிவனு மென்னான்.

கவுதமனத்தியாயம் முற்றும்.

## சதானந்தனத்தியாயம்

1 பிதாநந்தன் தனக்கும்நல்கும் கல்வியே பெரியோர் சொல்லும்
நிதானந்தன் தந்தைக்கீயு நிதிமகன் குணமேயன்றோ
சதானந்தன் தனக்கு மீந்தான் ஓதுநற்கல்வி
யதானந்த நன்மையின்பம் ஈந்தன னவனுக்கன்னோன்.

---

40. பாசண்டர் - புறசமயத்தவர், குரவர் - குரு.

1. நல்கும் - அளிக்கும், நிதிமகன் - குபேரன்.

2 கருமத்தி னியமம்பூண்ட கவுதமி கல்விசெல்வந்
தருமத்தின் முதல்வனான சதானந்தன் தாதைதாளில்
பொருமத் தியன்பிற்பல்காற் றாழ்ந்துபொற் றடக்கைக் கூப்பி
மருமத்தில் வைத்துநின்று மனவினா வொன்றுசொல்வான்

3 பலமலி யுயிர்கட்கெல்லாம் பற்றுக்கோ டாகிநிற்ற
லவமல தில்லைமற்றைத் தவங்களும் தக்கதீர்த்தஞ்
சிவமலிதலத்தி லாற்றில் சிறந்திடு மாதலாலன்
னவமலி நினைவினின்ற யானொன்று நவிலக் கேண்மோ.

4 பூதலத் தெத்தலத்துப் புண்ணியம் வளருமெந்த
மாதலத் தஞ்செழுத்தின் சித்திகள் வாய்க்கு நித்தம்
ஓதலுற் றெத்தலத்தி லுயர்ந்திடு முனக்கேயல்லால்
காதலுற் றெவர்க்குந்தோன்றா தெனக்கது கழறுகென்றான்.

5 அரும்பெறற் பொற்புதல்வன் கூற்றுக்கக மகிழ்ந்தன்பி னெண்ணி,
வரும்புது நினைவிற் கேற்ற மாதலம் பொன்னிசார்ந்த,
பெரும்பதி திருவையாறு பேசரும் பெருமைத்தென்ன
விரும்பினு மெளிதிற்சித்தி விளைக்குமென் றினைய கூறும்.

---

2. நியமம் - செய்கடன் முறைமை, தாதை - தந்தை, மருமம் - நெஞ்சு.
3. பலமலி - பல்வேறுபட்ட நிலைகளில் பெருகிய, அவமல - குற்றமல்ல, சிவமலி - சிவனருள் பெருகும்.

4. பூதலம் - உலகம், ஐந்தெழுத்து - பஞ்சாட்சரம், கழறு - சொல்வாயாக

5. அரும்பெறல் - அருமையாகப்பெற்ற, மாதலம் - சிறந்ததலம், பொன்னி-காவிரியாறு, பேசரும் - பேசுதற்கரிய,

6 ஒருகாதல் கேடிருப்பஞ்சநதத் தலத்துத்த மஞ்சீரருகா
வருகாவிரி தீர்த்தத்தி லதிக மாங்கு
வருகாதலர் வந்தவ ராடினார் வாசமுற்றோர்
பெருகாசை யறுத்தருட் பேருடன் பெற்றுவாழ்வார்

7 வாசஞ்செயில் முத்தி யளித்திடு மாதவத்தி
லீசன் பரமந்திர மெண்ணி லிருந்திறக்கிற்
பாசந்தவிர் ஞான மளித்தான் பாக்கியஞ்சேர்
தேசந்தரு மின்ப மருந்துதல் திண்ணமன்றோ.

8 முழுத்தச் சிவலிங்கம் வணங்கினும் முத்திவாய்க்கும்
வழுத்தும் புனல்மூழ்கினு மின்ப வளங்களீயும்
மழுத்தும் பொழுது உண்ணினைவோர்க் கண்மத்தலத்தி
லெழுத்தஞ்சுரு வொன்றொரு கோடியெனச் சிறக்கும்.

9 நற்கால மறிந்துபுகுந்து நதிக்குள் மூழ்கி
யற்கால மணிகண் டனையன்போடு கண்டவர்க்கு
முற்காலனடுங்குவ அந்தணர் முன்பு தாழ்ந்து
நெற்காசு நிலம்போல்வ நல்கிநினைத்த துண்டாம்.

---

6. காதல் - விருப்பம், பெருகாசை - மிகுந்திடும் பற்றாசை, அறுத்தல் - விட்டுவிடல், பேரு - புகழ்ப்பேறு,

7. வாசம் - விரும்பிவாழ்தல், தேசம் - சிவலோகம், அருந்துதல் - அனுபவித்தல்.

8. முழுத்தம் - மங்கலம், வழுத்தும் - போற்றுதல் செய்யும், புனல் - காவிரி நீர், மழுத்தும் - தாழ்ச்சி. உண்ணினைவோர் - உள்நினைவோர், உள் - உள்ளம், மனம்.

9. நற்காலம் - நல்லன நிகழும் காலம், முற்காலன் நடுங்குவ - முற்பட்டதாகவரும் காலன் நடுங்கும்படியான, நல்கி - தானமாகக் கொடுத்து.

10. சேர்வை - வழிபாடு, அஞ்சாகிய பாதகம் - பஞ்சமாபாதகங்கள்,

10 பஞ்சாவக னாயகா சேர்வை பலிக்கில்யார்க்கு
மஞ்சாகிய பாதகனா சனமாகும் நாளிற்
தஞ்சா யுமையோ டான்வந்து தடஞ்சேவிக்க
யெஞ்சாவுபதேச மிகுத்தியருத்தும் இன்பம்.

11 ஒரு தாபதனுண்ண வருத்திடுமோர் விழுக்குக்
கருதாத சிவன்பதி யெய்தியக்கால் மட்டும்
பெரிதாநல முண்பரெனிற் பிறபேசி லென்னாம்
அரிதா மிருவற்கிடி லன்னவனாய துண்மை.

12 எப்பாதக ராயினு மப்பதி மீதிறந்தார்
செப்பாதவன் மண்டலமூடு திறப்ப வேகி
யொப்பாகு மிராசிய மண்டலத்தூடு புக்கு
வைப்பாகுவர் தலமேன்மை மதிக்க வற்றோ!

13 எல்லாக் கருமத்தோடு சித்திக ளீவதென்றார்
கல்லாப் பரஞான மளித்துயிர் காப்பதென்றா
நல்லார்க் கதுபோ லுளதோ பிறந்தனீயுஞ்
செல்லாச் சுகமுண்டிட நற்றவஞ் செய்யென்றான்.

---

10. சேர்வை - வழிபாடு, அஞ்சாகிய பாதகம் - பஞ்சமா பாதகங்கள், நாசனம் - அழிதல் தன்மை, ஆன்வந்து - இடபத்தின்மீது தோன்றி.

11. தாபதன் - தபோதன பிராமணன், நலமுண்பர் - நலத்தினை அனுபவிப்பர். அன்னவனாயது - அத்தபோதனனாவது.

12. அப்பதி - திருவையாறு, ஊடு திறப்ப - நடுவே திறக்கவும், வைப்பாகுவர் - நல்லுகத்தில் நிலைத்திருப்பர், தலமேன்மை - திருவையாற்றுத் தலத்தின் உயர்வு.

13. கருமம் - நற்செயல்கள், கல்லா - பயிறசி பெறாத, செல்லாச்சுக - அழியாத சுகம்.

14 ஆனந்த முனித்தவ னித்திற னத்தனேவ
ஞானந்தரு பஞ்சநதிப்பதி நண்ணி நன்னீர்
பானந்தரினும் பரிசிக்கினும் பார்க்கி னுஞ்சீர்
வானந்தரு காவிரியாடி மகிழ்ந்து புக்கான்.

15 முக்கால் வலம் வந்து பணிந்து முன்னான்கு காலம்
எக்காத லரும்புவி தீர்ப்பொடு விம்மிமுன்போய்த்
தக்காய் சரண்சரணென்று தடங்கை கொட்டி
நெக்காடி நின்றாடு கணீர்வழி மார்பினின்றான்.

16 கறவைப் பயிரிகின்ற புனிற்றிளங் கன்றுநீங்கி
பறவைக் குழுவானதி யாடிய பண்புபோலுஞ்
செறிவிற் கொடியாடிய கோபுரத் தெற்குவாயி
லறவைப்பெனு மன்னதி யுத்தரமாக வெய்தி

17 வலத்தா ளுளமடக்கி யரைக்குறவா வைத்திடத்
தலத்ததாக நிறுத்தி னிமிர்ந்து இருகைகணீட்டி
யலர்தாமரை கூப்பிய போல்மிசை யஞ்சலித்து
நலத்தா மொழியக் கரமஞ்சும் நவின்றுநின்றான்.

---

14. காவிரியாடி - காவிரி நதியில் நீராடி, புக்கான்-கோயிலினுள் சென்றான்.

15. முக்கால்- முக்காலமும், கணீர் - கண்நீர், வழி - வழியும்,

16. கறவை - பால்பசு, அறவைப்பு - அறநிதி, உத்தரம் - வடக்கு.

17. மிசை - தலைக்குமேலாக, அஞ்சலீத்தல் - இருகை கூப்புதல், அக்கர மஞ்சும் - பஞ்சாக்கர மந்திரமாகிய ஐந்தெழுத்தினையும், நவின்று - சொல்லிக் கொண்டே. நலத்தாமொழி - நலம் தரும் சொல்.

18 நிற்றற்றொழில் பூசனை நேசுறு நேரமல்லால்
மற்றப்பொழுதித் தவமோர் வருடம் புரிந்தான்
அற்றதி னளிக்கும் அருட்கட லாதலாலே
நற்றத்து வனத்தவனுக் கெதிர்நுண்ண லுற்றான்.

19 சித்தியோகச் சதானந்தன் சிந்தையிற்
பத்திசோதித்தருள் பான்மையால் முதற்
றத்துவம்யாவுமாய்த் தோன்றும் தன்மையோ
னுத்தமனிந்திர வுருவிற் றோன்றினான்.

20 உழைமழு டறைத்துவஞ்ச சிரமமும் பலவன்
கழைபொரு முகம்பொரு படையுங் கைக்கொள்ளாத்
தழைசெவி மழை மத்தகருட் செம்புக்காப்
புழைமலி தடக்கைவெண் பொருப்பி லேறினான்.

21 பொன்மலி மவுலியும் புனைந்த பட்டமும்
பண்மணிக் கடகமும் பசும்பொன் மாலையும்
மன்மணிக் குழைகளும் வயங்கத் தோன்றினான்
மின்மினிக் கொடிகள்சூழ் மேகம் போலவே.

---

18. நேசுறு - அன்பு பொருந்திய, அற்றதினளிக்கும் - பற்றற்ற நிலையில் அருள் பாலிக்கும், நற்றம் - நற்குணம்.

19. சித்தியோகம் - குறிக்கோளுடன் புரியும் யோகம், பான்மை - முறைமை. உத்தமன் - சிவபெருமான்.

20. உழை - மான், மழு - மழுவாயுதம், வஞ்சசிரமம் - வச்சிராயுதம், வெண் பொருப்பு - ஐராவதம் என்னும் யானை.

21. மவுலி - சடைமுடி, பட்டம் - நெற்றிப்பட்டம், மன்மணி - இரத்தினம்,

22 பாங்கமர் மரகத வண்ணம் பையவந்
தாங்குடல் முழுவதும் மளவிற் றாலென
ஓங்கொளி யொளித்தலி னுருவு பச்செனத்
தாங்கினன் வண்ண மவ்வாறே தாங்கினான்.

23 ஊழிதோ றூழிதோ றுதித்த நாளெலாம்
ஆழியா னாழிகேட் டருச்சித் திட்டகண்
வாழியாய் மெய்யெல்லாம் வயங்கிற் றென்னவெண்
பூழியா னாயிரங் கண்ணும் போற்றினான்.

24 பூமரு தாரினான் அயிர் பூட்கைமேற்
சாமரைத் திரளிடைத் தோற்றுந் தன்மைதான்
தேமரு கடற்கண் செவ்வித் தெண்டிரை
காமரு கற்பகங் கண்டால் போலுமே.

25 குரிசி லூரயிர வெங்குஞ் சரத்தினுக்
கிருமருங் கரம்பைய ரிரட்டு சாய்மரை
சொரிமத விருந்துணப் புவிச் சுரும்புகள்
மருவலி னவைபுகா வகைதடுத்த தே.

---

22. பாங்கு - பக்கம், வண்ணம் - நிறம்.

23. ஊழி - படைத்தவுலகம் அழியும் காலம், ஆழியான் - பாற் கடலில் பள்ளி கொண்ட திருமால், ஆழி கேட்டு - சக்கரப் படையைப் பெற வேண்டி, வயங்கிற்று - விளங்கியது. பூழியான் - திரு நீறுடையானான சிவபெருமான்.

24. பூமரு - மணப்பூக்கள் பொருந்திய, தார் - மாலை, அயிர்-அயிராவதம், பூட்கை - முகபடாமணியும் யானை, காமரு - விரும்பத்தக்க.

25. குரிசில் - ஆசாரிய முனிவர், கரம்பையர் - தேவநாட்டிய மங்கையர், சுரும்புகள் - கருவண்டுகள்.

26 செங்க ணாயிரவன் வந்தெய்தச் சிந்தையைத்
தங்கணாய கரடிக் கமைந்த தன்மைபோல்
அங்க ணாதரவுடனே திறந் தரிச்சனை
புங்கவ ரதிபனடி புரிந்து போற்றினான்.

27 மூவரினால் வராய் மொழிய நின்றநீ
மேவாக் கருமமென விளம்பிக் காண்கெனத்
தேவருக் கரசனீ செய்யு மாதவ
மோவாப் புகுந்தன முறையென் றோதினான்.

28 நன்று நின்வரத்தருள் நயந்த தாயினு
மின்று நானினைத்த தெம்பிரானை யென்றன்
நின்ற னிசையப்பொருள் யாது நேர்பட
வென்றேவா துறினு மென்னியம் பென்றானரோ.

29 சிவனிடத் தன்புவைக்குஞ் சிந்தையான் விரும்பிநின்றே
னவனிடத்ததது ஃகுதுங்கேட்பேனல் துணைக் கேள்நீயே
நவனினைத்தொன்று தந்தாயாயினு நயந்து கொள்ளேன்
புவனிற் பிறர்க்குவேண்டும் பொருள் கொடுத்
தகல்கவென்றான்.

---

26. செங்கணாயிரவன் - இந்திரன், அங்கண் - அழகியகண்கள், புங்கவர் - தேவர்கள், அதிபன் - இந்திரன்.

27. மூவர் - சிவன் பிரமன் திருமால், நால்வர் - சிவபெருமான் இந்திரவடிவ மாகிய வடிவொடு நால்வர், ஓவா - நீங்காமல்.

28. நயந்தது - அன்புசெய்தது, ஏதுறினும் - எச்செயலாயினும், இயம்பு - சொல்லுக.

29. உஃகுதும் - மனம் மங்குகின்றேன், நவனினைத்தது - நவநிதியினை ஒத்ததொரு செல்வம், நயந்து - விரும்பி, அகல்க் - நீங்குக.

30 உனக்குநல் வரங்கள்நல்க வந்தயா னுலகில்வேறு
மனக்குறை தீர்ப்பதுண்டோ வல்லையாம் போகுமுன்னம்
நினைத்திருக்கு நீங்கிக் கேளேன், நிற்றலோடுங்
கனத்திட னுடையபத்திக் கவுதமியொன்று கூறும்.

31 திருவையா றுடையான்றானே திருவுளமகிழ்ந்து தந்தார்
தருமிதான் பசுத்தான் புள்ளின் கிளைகடா மேனுமாவே
னொருவனீ வலிதினல்கி னுலகமூன் றளவுமின்பந்
தருபத மேனும்வேண்டே னென்றனன் தவத்தின்மிக்கோன்.

32 மாதுமைப் பாகனான வள்ளலை வேண்டிலன்றிச்
சீதனயனோ டுன்னைத் திருவள முத்திவேண்டேன்
நாதனதாணைத் தாங்கி நரகினுளேனும் வாழ்வே
ஓதுவ தொழிகபோக வும்பர்க் கரசனென்றான்.

33 அகத்தமா மகிழ்ச்சிபொங்க வாயிரங் கண்ணுஞ்செப்ப
முகத்தொரு மூன்றினுக்குந் தேவர்க்குந் தலைவனாமென்
சகத்தொரு மூன்றினுக்குந் தேவர்க்குந் தலைவனாமென்
மகத்துவ மறியாய்க்கண்டு மதிக்கிலாய் மோகம்போலும்

---

30. நல்க - தருதற்கு, நினைத்திருக்கு நீங்கிக்கேளேன் - நினைத்திருக்கும் எண்ணத்திலிருந்து நீங்கி மற்றொரு வரம் கேட்பாயாக.

31. கிளைகள் தாமேனும் - சுற்றமாவதாயினும்.

32. மாதுமைப் பாகன் - சிவபெருமான், சீதன் - திருமால், அயன் - நான்முகன்.

33. அகத்த - மனத்திடத்தில், சகம் - உலகம், மகத்துவம் - தெய்வாற்புதம்

34 சுடலையே வீடாய்ப்பிச்சைச் சொன்றியுண்டு மைத்தம்பு
நடலையெனப் பணிந்துமாலை நகுதலை யேந்திப்பித்தா
யுடனிரு வாணியாகும் ஒருவன் மோகத்தினாலே
கடவுளர் துறக்கத்தின்பங் கவுதமி யிழந்தாயந்தோ

35 மோகத்துத் தவறுவேண்டி முயன்றனை யந்தோவந்தோ
ஆகத்துக் குணமொன்றில்லா னவனிடத் தன்மைவிட்டுப்
போகத்துச் சித்தம்வைத்தெம் புறந்தனி லளவிலின்ப
போகத்துக் குணமுளெம்பா லன்புவைத் துறுதியென்றான்.

36 சார்வினர் சார்ந்தவாக்குத் தருவது தத்தஞ்செல்வச்
சீரலத்திக மில்லை யாதலாற் சிவனைவேண்டி
போவருமிடியே யல்லார் பிறவிலை யெம்மைவேண்டி
லூர்திரு வளருஞ்செல்வ முண்மையே யுணர்த்தியென்றான்.

37 பிணஞ்சுடு புகைமலிந்த சுடலையிற் பேயும்பூதக்
கணங்களு மிணங்கமாண்ட நீறுட லஞ்சல்பூசி
உணங்கழி தலையுமென்பு மாலையாய் நிமிரவேந்தி
துணங்கையங் காளிமாதர் தோகத் தாடுவாரே.

---

34. சொன்றி - சோறு, மோகம் - பற்று, துறக்கம் - மோட்சம்.

35. மோகத்துத்தவறு - ஆசையால் வருகின்ற குற்றம், ஆகம் - உள்மனம், போகம் - சுகபோகம்.

36. சார்வினர் - தன்னைச் சார்ந்தவர், தத்தம் - தங்கள் தங்களது.

37. மாண்ட - மாட்சிமையுடைய, உணங்கழி - தசை கழிந்த, நிமிர - நிறைவாக, துணங்கை - துணங்கைக் கூத்து, தோகம் - ஒப்பானதால்.

38 உடைகரித் தோலாபித்தருள் மத்தமறு கெருக்கந்
தொடையலங்கார தீண்டிற் சுட்டிடு நெருப்புமெய்யா
கடைதோறு மிரக்கமுணர்க வாலியா நிருவாணத்
தாடிருள் மருவாகங்கைவெள்ளமே சுமக்குநீரார்.

39 முருக்கிய சினத்தீக்கையர் முரணுடை மூன்றுகண்ணா
ரருத்தினு லேறிப்பாந்த ளேந்துவ ரின்னவாற்றா
லுருத்திர யெனுலகமுற்றார்க் குலப்பிலா மிடியேமற்றித்
திருத்தகு செல்வமில்லை செல்வ நீ, தெரியாய்போலும்!

40 என்னிடத் தன்புவைக்கு மியல்பின ரின்பங்கூறிற்
பொன்னுல கத்துத்தேவர் விஞ்சையர் புடைசூழ்ந்தேத்த
முன்னிநிற் பளவிற்சிந்தா மணிநிதி முழுதுநல்கப்
பன்னரு மகிழ்ச்கிபொங்கப் பருகுவ ரமுதவெள்ளம்.

---

38. உடை - அரையாடை, கரித்தோலாம் - யானையின் தோலம், மத்தம் - ஊமத்தைப்பூ, அறுகு - அறுகம் புல், எருக்கந்தொடை - எருக்கம்பூ மாலை, கடை - வாயில், வாலியா - இளமையோடு.

39. முரணுடை - மாறுபாடுடை, அருத்தினில் - கழுத்தில், இன்னவாற்றல்- இவ்வாறான ஆற்றலுடைமையான், உலப்பிலா - என்றுங்குறைவுபடாத.

40. பொன்னுலகம் - தேவருலகம், விஞ்சையர் - வித்யாதரர், சிந்தாமணி நிதி - வேண்டியவெல்லாம் அளிக்கும் தெய்வமணி.

41 தேமரு நறியதண்பூங் கற்பக நீழல்சேர்ந்து
கோமளக் குமுதச்செவ்வாய் கொடியிடை யரம்பைமாதர்
மாமது வள்ளத்தேந்த வாயமுத முடனேமாந்திப்
பூமலர்ச் சேக்கைவைகு புலவியின் புணர்ச்சியுண்பார்.

42 அரம்பை மென்கைத் திலோத்தமை யுருப்பசியாதிக்
கரும்பனார் முலை தோள் போர்க் காம வாரிதியில்
வரம்பிலின்பம் நெஞ்சுருகி யொன்றாகுவர் மதித்து
விரும்புகின்றதாம் செல்வமேல் வேண்டுதியென்றான்.

43 மகவா னுரைக் கேள்வியின் வந்து மனம்
புகுவா ரழல் வேல் புகல் போல் விதிர்த்து நெஞ்சில்
தகவாவிஃதென்னதென்று தடங்கை இரண்டானும்
மிகவார் செவிமூடி முன்னாய் விளம்புகின்றான்.

---

41. தேமரு நறிய தண்பூ - தேன் பொருந்திய மணமுள்ள குளிர்ச்சியான பூக்கள், கோமளம் - ஒப்பற்ற அழகு, குமுதச் செவ்வாய் - அல்லி மலரிதழை ஒத்தச் சிவந்த இதழ்களோடு கூடிய அழகியவாய், மாமது - சிறந்த மது, வள்ளம் - பொற்கிண்ணம், வாயமுது - மங்கையர் முத்தம், சேக்கை - மென்மையான படுக்கை, புலவி - காமக் கலவி.

42. உருப்பசி - ஊர்வசி, தேவலோகத்து ஆடல்மகள், கரும்பனார் - காமவின்பச்சுவைக்குக் கரும்பையொத்த இனிய மகளிர், வாருதி - பெருங் கடலில், விரும்புகின்றதாம் - நீவிரும்புகின்றதாகிய.

43. மகவான் - நூறுயாகங்கள் செய்தவனான இந்திரன், அழல் புகுவார் வேல் புகல் போல் -தீயில் புகுந்தாரின்மேல் கூரிய வேல் புகுந்ததைப் போன்று விதிர்த்து - நடுநடுங்கி, தகவா தகுதியில்லாத. மிகவார் - மிகவும் நீண்ட.,

44 நன்றிந்திர நன்று நவின்றது நீ
யெனனிந்திர வெண்ணிணை யெம்பெருமா
னொன்றின் திருவிள்ளனுமக்குள தென்
றன்றுஞ் சொனினைக்கு மாசியாமால்.

45 நிந்தித்தனை பற்பல தீயதனுட்
சிந்தித்தல வோர்மொழி செப்பினையா
லெந்தக்குணமு மிலனென் றனை யொன்
றந்தப் புகழ் மெய்மை யறைந்தனையால்.

46 வளமைத் திருவிலழகேச னென்னுங்
கிளவிக் கெதிரேது கிளத்திடுவோ
முளநட் பன்னான் பினுத்திரதக்
களகைக் கிறை செல்வ மறிந்திலையே.

47 திருமாலையி னீதிசைப் பாலரெலாந்
தருமார்வனல்கிய தன்மையினார்
பெருவாழ்வுறு வீரது பேதையுனக்
கொரு மால்கொள மறந்திவணோதினையே.

---

44. நவின்றது - கூறியது. எம்பெருமான் - சிவபெருமான், திருவிள்ளல் - மேன்மையைப் பேசுதல், உமக்கு உளதென்று அன்று - உமக்கு உளதா மென்பது இல்லை, உம்சொல் - உமது சொற்கள், மாசியாமால் - குற்ற முடையதாகும்

45. நிந்தித்தனை - இகந்து பேசினை, எந்தக் குணமிலனென்றனை - சிவ பெருமானுக்கு எந்தக் குணமும் இல்லை என்று கூறினை, மெய்மை - இது உண்மையாகும்.

46. அழகேசன் - குபேரன், அளகை - அளகாபுரி இறை - இந்திரன்.

47. தரும் ஆர்வம் நல்கிய - தருகின்ற ஊக்கம் தந்தருளிய ஒருமால்-ஒப்பற்ற மயக்கம், இவண் - இவ்விடத்தில் ஓதினை - கூறினை.

48 சூரந்தக னாதியர் தொல் சமரால்

நிரந்தர மெய்த்திரு நீங்கிய நாள்

தரந்தக வாங்கி யவர்க் களித்தவனோ

வரந்தரு திருவற்றவன், உண்மை கொலோ!

49 தானே யொளியா யுலகந் தருவா

நூனேய் குணத்தி னொருத்தனுமாய்

வானேய் பராபரன் வாய்மை யினாற்

கோனே குணமின்மைக் குறித்தனையே?

50 மாலாதிபர் தக்கன் மகத்துணலான்

மேலாலட வீரனை விட்டுமதாம்

பாலார் புகழ் வன்மை பரித்தவனைப்

போலா மிடியென்று புகன்றதுவே

---

48. சூரன் - பத்மாசூரன், அந்தகன் - இயமன், மெய்த்திரு - தங்கட்ரியகு உரிமைச் செல்வம், தரத்தக - உள்ளவாறே, உண்மை கொல் - இது உண்மையாகுமா? ஓ - அசைச் சொல்.

49. தானே யொளியா யுலகந் தருவான் - தானே ஒளி உருவாய் நின்று உலகங்களை இயங்கச் செய்பவனாகிய ஈசன், ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி'' என்னும் திருவாசகவுரை இவ்வடிக்குப் பொருந்தியதாம். கோனே - தேவர்கட்கரசே.

50. மால் ஆதிபர் - திருமால் முதலாயினோர், மகத்துணலால் - தக்கன் செய்யாகத்தில் அவிப்பாகம் உண்டாதனால், அடல் வீரனை - வெற்றித்திறன் படைத்த வீரனாகிய வீரவாகு தேவரை, மிடியென்று - வறுமைத்துன்பம் படைத்தவனென்று, புகன்றது - கூறியது?

51 சிவசங்கர சம்புவெனுஞ் செயலால்
வசங்கெழு புன்மை யறுத் தழியாக்
கவசம் பெறுசீர்தரு காட்சியளித்து
வசந்தரு மாட்சி நீ துணிகில்லையரோ !

52 கையெழ கடல்வாரி யகற்றவனைப்
பொய்யேதுமிலாப் பத்தர் புறத்துடையா
னெய்யேது மறிவற்றிறையோ யவனீ
மெய்யே திருவின்மை விளம்பியதே !

53 கரி தேர்பரி பொன்றெதிர் கண்டவரைப்
புரி பூசனையிற் பெறு புண்ணியரென்
றரியோர் புகல் வாய்மை யறிந்திலையோ
பெரியோயறிவிற் சிறுபிள்ளை கொணீ.

54 ஈசன் திருவெண்ணி யிகழ்ந்தனையங்
காசன்றியவன் பருமத் திறமே
தேசொன்றுவ ரென்று சிரித்தனை நன்
றேசன்றி யிருந்தமை யெண்ணிலை யால்,

---

51. சிவன் - எல்லாமாகியுள்ளவன், சங்கரன் - நலமெலாமளிப்பவன், சம்பு- அரிய காலத்தில் வந்து அருள் பாலிப்பவன், புன்மை - அற்பமான சிந்தனை மாட்சி - மேலான அருள்.

52. கையெழ - அங்கையில் அடங்க, பத்தர் - சிவனுக்கன்பு செய்த பக்தர். (அடியார்கள்) எய்யேது - அடையும் உபாயம், ஏதும் அறிவற்று இறையோய்- எத்தகைய அறிவுமில்லாமல் இந்திரனே.

53. கரி - யானை, பரி - குதிரை, அரியோர் - திருமால் முதலாயினோர், புகல் - புகழ்ந்து சொல்லுகின்ற வாய்மை - இறையுண்மை, கொள் நீ - கொண்டுள்ளாய் நீ சிறு பிள்ளை - சிறி பிள்ளைக்குரிய அறியாமையினை.

54. திரு - திருவருளை, ஆசன்றி - குற்றமில்லாத, பருமம் - ஆற்றல் மிகு வலிமை, தேசு - கவர்ச்சித்தன்மை,

55 பேய் நட்பினனென்று பிதற்றினை நீ
தீய நுட்பினர் வெந்தடி சேர்ந்திடினுந்
தாயொப்பனெனுந் தகை சற்றறியாய்
நீயற்ப விணக்கம் நினைத்தனையே.

56 அண்டங்கள் காத்து அவையாக்கியெடுத்
துண்டங்கு உமிழ் வெற்றியுணர்ந்திலை ஓர்
முண்டந்தரு பூதமுயக்கறியா தன்மையது
விண்டிங் குரைசெய்தனை விண்ணுடையாய்.

57 சுடலைச் சுரமாவது சூதகமா
கடவுட் குழு வெந்தழி கானகமாம்
விடலைச் சுடர்விட்ட விளக்கொளியா
லடலைப் பொடி பூசியதா மறிகிலையே.

58 நின்போலிய மாலயன் நிந்தனையா
லென்போடு முடித்தலை யீர்ந்தணிவோன்
பின் போத மறந்து பிழைக்குவரென்
றன்போடவனுண்மை யறிந்திலையோ?

---

55 பேய் - சுடலையில் ஆடும் பேய்கள், நுட்பினர் - வஞ்சகர்கள், தகைமை- மேலான நன்மை, அற்பம் - எளிதான இணக்கம் - செயற்பாட்டினை.

56. அண்டங்கள் - உலகங்கள் யாவையும், பூதமுயக்கு - பூதங்களின் இணக்கம், விண்டிங்கு உரை செய்தனை - பலவாறு பேசி இங்கு வார்த்தை யாடினை.

57. சுரம் - வெஞ்சுரம், சூதகமா - சூதகமாகிய மாமரம், கடவுள் குழு - செத்துப் பிறக்கின்ற தெய்வக் கூட்டம், அடலை - சாம்பல்.

58. நின்போலிய - உன்னைப் போன்று அறியாமை மேவிய, மாலயன்- திருமாலும் பிரமனும், பின்போத - பின்னாகத் தொடர்ந்து இரந்து செல்ல-

59 பெண்ணாடலை வென்றிடு பெற்றியெலா
முண்டான வருவித்தென வோர்ந்திலையோ
வெண்ணானொரு காளி யெதிர்ந்திடவாது
தன்னா லரி காணவவனாடியதே.

60 அருவெங்களி றஞ்சலை யஞ்சலையென்
றொரு மங்கையுமஞ்ச வுரித்திடுநாள்
சருமம் புனைகென்றிசை யாற்றிய நீ
கருமம் கொல் மறந்தனை காவலனே.

61 மெச்சிக் கமலத்தன் விதந்திட வந்து
உச்சித்தலை கொண்டரி யொண்ணுதல் நீ
ரச்சத்துடனேற்றவ னாடின்னாற்
பிச்சைத் தழல் பிச்சரெனப் பெரியோய்!

62 கந்தக் களிமால் மலர் கட்டி நறைச்
சந்தத்துட னேத்தினுந் தாழ் சடைமே
லெந்தத் துணர் சாத்தினு மின்புறுமா
லந்தப்புனை தரலறு காதியினா லாகும்.

---

59. பெண்ணாடலை - பெண்களால் ஆடப்பெறும் நடனத்தை அருளித்து - அருமையான இயல்பாகும், வாது - போட்டி, அரி - திருமால்.

60. அருவெங்கரி-அரிய கொடிய யானையசுரன், ஒரு மங்கை - உமாதேவி, சருமம் புனை - உடலின் மேலாடையாக அணிந்து கொள்வீர், இசை - சொல்லிய, கருமம் கொல் - உனது தீவினையோ! காவலனே - தேவலோகக் காவலனாகிய இந்திரனே.

61. கமலத்தன் - பிரமன், தழல் - நெருப்புச் சுடர், பிச்சர் - பிச்சிப் பூமாலை உகந்தவர்.

62. கந்தக்களி - மணத்தை விரும்பி மகிழ்கின்ற, மால் - திருமால், நறை - தேன், சந்தம் - சந்தன மலர், ஏத்தினும் - துதித்துப் போற்றினும், புனை - கட்டப்பட்டமாலை, துணர் - மணமுள்ள மலர்க் கொத்து, அறுகு - அருகம்புல்

63 நெருப்பாமுரு வென்றனை நிந்நயைால்
விருப்பாரன்னாரன்ன மேலொரு நா
ளுருப் பாரகமோத வுயர்ந் தகன்ற
பொருப்பான துணர்ந்திலை பொய்த்திடுவோய்!

64 நீராண்மையின் மேன்மை நினைத்திடலாற்
பேராண் வருமென்றொரு பிச்சைக்கவர்ந்தாரா
வுண்வோனை அகங்கள் தோறும். ஓராய் பலி
யுண்பவ னென்றனையே உண்மை காணாய்!

65 வன்மாதவர் மாதவர் சோதனையாற்
றன் தாரழற் கால் வருதன்மையெனாய்
கன்மாமலரான் கவாலியெனா
முன் மானிருவாணம் மொழிந்தனையே.

66 ஆலந்தனையுண் டமுதுண்ணவுமக்
கோலந் தவிர் வித்துந் தொள்ளிழையார்
கோலங் குறையாது கொடுத்நவனுக்
கேலுங் கரைப்புனமறுகு வென்றதுவே.

---

63. நிந்தனை பழிச்சொல், உருப்பார் அகம் ஓத - அங்கங்கள் பொருந்திய வேதமந்திரத்தைச் சொல்ல, பொருப்பு - மலை.

64. ஆண்மையின் மேன்மை - ஆண்தன்மையின் உயர்வு, பேராண்-பெருமை தரு ஆண் தன்மையோடு பிச்சைக் கவர்ந்தாரா - தாருகாவனத்து இருடிகள் மனைவியர்களிடும் பிச்சையினை ஏற்றாராக, உண்வோனை - அவர்கள் உள்ளத்தினை கவர்ந்துண்டவனை, ஓராய் - உண்மைத் தன்மையினை அறியாதவனானாய்.

65. வன்மாதவர் - வலிமை மிக்க சிறந்த தவத்தைச் செய்தவர், தன்தார் - தனது கொன்றை மாலையின், அழற்கால் - தீக் கொழுந்து, கன்மா மலரான்-பிரமன், கவாலி - (கபாலி) கபாலமாக மண்டையோட்டை ஏந்தியவன்,

66 ஆலம் - விடம், ஒள்ளிழையார்-மகளிர், கோலம் - இளவயதழகு, ஏலும் ஏற்புடையது, அறுகு - அறுகம்புல். என்றதுவே - என்று இகழ்ந்து கூறியது

67 மங்கைக் கரசம்பிகை வாழுகின்றவாய்ச்
செங்கைப் பெறுவோனைத் திரண்டுலகம்
பொங்கப் படும் நீர் புனையா விடும்போது நீ
ரெங்குற்றினீர் கங்கையு மெண்ணிலோரால்.

68 ஏந்துங்கனல் விட்டிடி லெவ்வுலகுங்
காந்துங் கடனீர் கவறுங் கடைநா
ளாத்துங்க மடக்கிய வாற்றியாய்ச்
சீந்துங் கனலாற் குறை செப்பினையே.

69 எங்குந் திருமேனி யெனச் சுடர் மூன்
றங்குங் கறிவிப்ப கணத்திறனோர்
பங்கம் பிகை கண் புதை பக்குவமாம்
வெங்கங்குல் விடிந்த வியப்பறிவாய்

70 அடையார் புர மட்டிட வம்புவியா
நடையாரிரதத்தடி நாடியனா
ளுடையா வுடையானை யுடன்றிருமால்
விடையாய் வெரினேந்திய வீறுணராய்

---

67. அம்பிகை - மங்கையர்க்கரசியென்னும் அம்பிகை, வாய் - ஆலவாய், (மதுரை) செங்கைப் பெறுவோனை - சிவந்தகைளில் பொற்றாளம் பெற்றோனாகிய ஞானசம் பந்தப் பெருமானை, பொங்கப்படும் நீர் - பெருகி வரும் வையையாற்று நீரில், புனையா - எதிரேலும் தெப்பமாகத் திருமந்திரப் பதிகமார்ந்த ஓலையை, எங்குற்றிணீர் நீர் - எங்கே இருந்தீர்,

68. ஏந்துங்கனல் - ஒருகையிலேந்திய தீச்சுடர் காந்தும் - சுட்டெரிக்கும், கவறும் - வற்றிப் போகும் கடை நாளாம் - ஊழிக்காலமாகும், துங்கம்-அழகு வாற்றியாய் - ஆற்றலுடைய இந்திரனே, சீந்துங்கனலால் - பற்றாக்கும் பொறாமைக்கனலால்.

69. சுடர்மூன்று - சூரியன், சந்திரன், அங்கி; கணம் - இமைப் பொழுது.

70. அடையார் - தன்னையடையாத முப்புரத்தார். அட்டிட - அழிக்க, விடையாய் - எற்றுவாகனமாய், வெரிந் - முதுகு.

71 தேம்பாட்டிய னனைத்துயிர் செற்றிடுவான்
மேம்பாட்டினர் விட்ட விடப்பகுவாய்
தாம்பாட்டறி கென்று தரித்தவனைப்
பாம்பாட்டி னனென்று பழித்தனையே

72 நீயென் செய்வை பாவனினக் கெதிர்
நின்றேயுஞ் சிதனிந்தை யெனச் செவி
வைத்தாயுந் திறனாயின்னா தலினா
னேயங்கெடு பாதக நிச்சயமே.

73 முன்னம் புரிபாதக நான்முனியாது
இன்னம் பயில்கின்றன இன்னதனாற்
பின்னும் புரிவேனொரு பேதமையா
னுன்னன்பு பெறத் தவமோதியதே.

74 சிவனை நிந்தனை செப்பினோன் தன்னினுஞ்
செவி வைத்தவ னுடன்பிறி துரைப்பவன்
பாதக னவனைக் கவனமொடு நாக்கறுத்தவன்
கயிலையிற் சேர்ந்து தவனிகழ்ந்த திருபத்தொரு தலை
முறை தழைக்கும்.

---

71. தேம்பாட்டியன் - தேனினும் இனிய பாடலேற்றவன். செற்றிடுவான் - அழிக்கும் பொருட்டு, பகுவாய் - நாகம், தரித்தவனை - அணிந்தவனை.

72. நின்றேயும் - நின்று பொருந்தும், சிவனிந்தை - சிவனைப் பற்றிப் பேசிய பழிப்புச் சொல், இன்னாதலின் - பொருந்தாதது ஆதலினாலே, நேயம் கெடும் - நட்பு கெடும், பாதகம் - பெரும்பாவம்.

73. முன்னம் - முன்னதாக, பாதகம் - பெரும்பாவம்.

74. செவி வைத்தவன் - கேட்டவன், பிறிதுரைப்பவன் - பிறி தொன்றுரைப்பவன், தலை முறை - மரபு வழித்தலை முறை.

75 அல்ல தக்கணஞ் செவிபுதைத் தாகாவென்று
சொல்லப்புறம் போதலே தூயவாய்க் கியல்பாம்
மெல்லனாமு மப்புறத் தினிமேவு தலியல்பென்
றொல்லெனப் பெயர்ந்தொரு மொழிமகபதிக் குரைப்பான்.

76 முனிவரச ரவ்வாய நெருப்பினாற் கடலிடை மூழ்கி
தனிதராதரச் சுழல்வினானலங் கிளர்ந் தெழுந்த
வினிய வாரமுதாதி யாயஞ்செல்வ மெய்யென்று
தனிதருந் துணிவெவன் கொனின்வயங் கொலாதக்கோய்.

77 மூன்று நாளையி லழவதுன்பத மதில்முன்னா
றென்ற விந்திரா வருவரேதெனக்கு நீயளிப்பாய்
தான்றுளங்கு வான்றளத்திடை தளர்ந்திடும் பிறகு
ஊன்று கோலென மதித்தவானோர்க்கு நின்றுரையே.

78 இளமை வெய்யின முன்மஞ்சலாம் யாக்கைநீர்க்குமிழி
வளமை, மின்னென மாய்வது வானரமகளிர்க்
குளமகிழ்ந்தனை மாதரார் கல்வியால் வருவ
தளமரும் பிறப்பிறப்பென வறிகிலா யந்தோ.

---

75. அக்கணம் - அப்பொழுது, ஒல்லென - விரைவாக மகபதிக்கு - இந்திரனுக்கு.

76. அவ்வாய - அத்தகையதாக, அமுதாதியாயம் - அமுதம் முதலாகிய

77. முன்னூறு - முன்னதாக உண்டான துன்பம், தான் துளங்கு - தானாக விளங்குகின்ற, வான்தளம் - வானத்திடத்தில்.

78. இளமை - இளமைப்பருவம் வெய்யின-காலை வெய்யலென முன்னராகப் பின், மஞ்சலாம் - மங்கிய முதுமையுடையதாகும், யாக்கை - உடல், நீர்க் குமிழி - நீரில் தோன்றும் குமிழ் போன்றது. வளமை - செல்வம்.

79 நீவரந்தர வந்தனை நன்றுநின் மனையை
யாவர் காப்பரோ விங்குளா யங்குளவுரிமைத்
தேவர் மாதரை யசுரர்கொண் டேகவுஞ்செய்வர்
போவதேகடன் போகேன் நோக்கினன் புலந்தான்.

80 புண்ணிய முனிவனோக்கப் புறத்தான வடிவுநீங்கிக்
கண்ணுளர் படங்களைந்து கதுமெனத் தோற்றியாங்கு
வண்ணமும் பிறவும் வேறாய் வெளிப்பட மனந்துணிக்கென்
றண்ணல்மால் விடைமேனின்ற வருட்கட
லுருவங்கண்டான்.

81 அரவுமங்கமுங் கங்கையிற்றோய்தலிற் புனிதமா யழகார்ச்
சிரகரோடிகை திங்களாரமுதுடன் தெறித்தலு முயிர்சேரக்
குரவுகொன்றைபச் சறுகு செஞ்சடை யொளிகுலவி வான
வில்வீசப்
பிரமநெஞ்சினும் பிறங்கிடாநிறங்கிளர் பிஞ்ஞகன்
முடிப்பார்த்தான்.

---

79. நின்மனை - நினது மனைவி இந்திராணி, தேவமாதர் - தேவர்களின் மனைவியர்.

80. புறத்தான - மேலொப்பனையான, களைந்து - நீக்கி, கதுமென - உடனாக, துணிக்கு - தைரியம்.

81. அரவு - பாம்பு, குரவு - குராமலர், அறுகு - அறுகம்புல், பிறங்கிடா - விளங்காத, பிஞ்ஞகன் - சிவபெருமான்,

82 அன்றலர்ந்த செந்தாமரை யனையதோர்கண்ணு மதன் பின்னா

னின்றலர்ந்ததாமரை நிகரொருகணு நின்றுபின்னனலார் மேலொன்

றரும்பியதாமரை போன்றதோர் கண்ணு மெண்ணுதல்நீறும்

துன்றுபாம்பணிக் குழைகளுஞ் சங்கவெண்டோட்டோடு தெரிசித்தான்.

83 நீல கண்டமு மக்க மாலிகைகைகளும் நீண்டுயர்ந்தொழுந் தோளின்

கோலமும்புனைமணி பணிவளையுங் குஞ்சிரத் தடக்கைபோல்

நாலுநாற்கரத்தபையமும் வரதமும் நவ்வியு மழுவும் பாற்

சூலமாதிபடைகளுந் தோற்றலுந் துணைவிழிப் பயன்பெற்றான்.

84 ஆடரவணி யுதரபந்தனமும் மத்தமரையுமார் தட்டுங்

கோடராவி மற்றாழினர்க் கண்மணிக் கொட்டெருத்தி

சேடுயர்ந்தெழிற் பருத்த வெள்ளேற்றினைச் செலுத்தி மாலறியா

தேடருந் திருச்சிலம் பொலிகழற் கெதிர்நின்று கண்களி கொண்டான்.

---

82. அன்றலர்ந்த - அப்பொழுது மலர்ந்த, நிகர் - ஒப்பதான, அரும்பிய தாமரை - மொக்கு, (நெற்றிக்கண்) நுதல் - நெற்றி, குழை - சிவபாகத்துச் செவிக்கணி குழை, தோடு - உமை பாகத்துச் செவிக்கணி குழை,

83. நீல கண்டம் - விடம் பொருந்தியதால் நீலநிறம் பொருந்திய கழுத்து. அக்கமாலிகை - உருத்திராக்கமணி மாலை, குஞ்சிரத்தடக்கை - யானையின் துதிக்கையைப் போன்ற வலியகை, நவ்வி - மான்.

84. ஆடு அரவு - படமெடுத்து ஆடும் பாம்பு, மத்தம்மரை - ஊமத்தையுடன் தாமரையும், வெள்ளேறு - இடபம்.

(வேறு)

85 ஞானவானந்த நிலையமாய்க் கருணையாய் ஞாயிறாயிரங் கோடி
யானபேரொளிய மயமாய் அடியவர்க்கன்பினா லுருக்கொண்ட
வானனாயகன் அகிலமெலாந்திரண்டதோர் வடிவமருமை யாளுந்
தானு மங்ஙனம் புலப்படவேஆக்கினன் சதானந்தமுனி யம்மா!

86 அமரரறிந்தார் முனிவரரி அயன்அனந்தன் கந்தற்பர
சமர்வீரனேயாதியான தலைவர்பூதேச ருந்தனைச்சூழக்
குமரர்நந்தி சண்டேசன் மற்றன்பினோர் குருக நற்குலவேதத்
தமரர்வேலையிற் றழங்கவந் தருளியச் சங்கரன்தனைக் கண்டான்.

87 கண்டுதாள்களில் வீழ்ந்தனன்எழுந்தனன் கனிந்து கண்ணீர்வார
விண்டவேரியி னானந்தவெள்ளத்தின் மிதந்தன்ன கூத்தாடித்
தொண்டனேன் மொழிதுரிசெலாம் பொறுத்தனை தூயனேயென விம்மி
அண்டர்நாயக னகமகிழ்ந்துஅருள நல்லருந்துதி துதிக்கின்றான்.

---

85. ஞாயிறு - சூரியன், வான நாயகன் - வானுலகங்கட்கெல்லாம் தலைவ னாகிய ஈசன், வடிவமர் உமை - உலகமெலாம் திரண்ட வடிவம் பொருந்திய உமாதேவி.

86. அமரர் - தேவர், அயன் - பிரமன், அனந்தன் - ஆதிசேடன், கந்தன் முருகன், சமர் வீரன் - வீரவாகுதேவர், பூதேசர் - உலக மக்கள், வேலை யிற்றழங்க - கடலொலி போல் சங்கர வொலியெழுப்ப.

87. விண்டவேரி - புகழ்ந்து கூறும் தேன், துரிசு - குற்றம்.

88 காரண மாயை வஞ்சக் காரியங் கலந்து நிற்றல்
ஆரண ஞானம் நின்னாற் பெறப்படு மளவு மாகு
ஆரண மடையா வாறு ஆக்கிய ஞானத்தால் நின்
பூரண மறியு மட்டும் ஆதலிற் புகல் வேறுண்டோ?

89 மாயை காயாதி யாதல் மாய்தலு மற்று நீநின்
ஞேய ஞானாதிச் சத்தி நிகழ்த்திடு மளவு மென்றால்
பாயமால் வினையிற்றுன்பம் பயத்தலும் பரமானந்த
தூய நிற் காணுமட்டும் துதித்தலிற் றுணை வேறுண்டோ?

90 வஞ்சநீ யென்னிற் றுஞ்சா வஞ்சநீ வஞ்ச மென்னிற்
றுஞ்சு மாயஞ்சுஞ் சுத்தி வெள்ளியிற் றுஞ்சுந் துஞ்சா
நெஞ்சுமால் நீங்க நீயே யானெனி னின்னை நோக்கிய
பஞ்ச நதேசம் போற்றும் பணியலாற் பணிவே றுண்டோ?

91 மூலமாய் நடுவா யீறாய் முழுதுமாய் முழுதுங் காணுங்
காலமாய்த் திசையாயெட்டுக் கடவுளாய்க் கமலமே பொன்
கோலமாய் மாலாய் இன்பக் குணமுமாய்க் கணத்தின் மேலாஞ்
சீல மாதவர் சூழ பொன்னித் திருவையா றுடையாய் போற்றி.

---

88. காரணமாயை - காரணத்தன்மையானாய மாயை, ஆரணம் - வேதம், பூரணம் - நிறைவு, புகல் - சொல்லுதல்.

89. மாயை - பொய்த்தோற்றம், காயாதி - காயம் ஆதி, உடலாதியாகும், பாயமால் - பொருந்திய ஆசையால் வரும் மயக்கம்.

90. அஞ்சும் - ஐந்தும், ஐம்புலன்களும், சுத்தி - தூயனவாகும், நெஞ்சு மால் - மனமயக்கம்.

91. மூலமாய் - ஆதியாய் - காலமாய் - முக்காலமுமானவனாய், கடவுளாய் - பிறகடவுளர்களாய், மாலாய் - காத்தற் கடவுளாய், சீல மாதவர் - தவவொழுக்கமுடைய சிறந்த தவத்தோராகவும்.

92 சுருதியால் மனத்தால் வாக்கால் சோதியா லளவை யாலும்
பருதியார் காத்தோனாதி பண்ணவ ராலுந் தோற்றா
யொருதியா னத்த யுன்னை யுணருமா றுரைக்கு மாறெனக்
கருதியா னென்று போற்றுங் கவுதமிக் கிறைவன்
சொல்வான்.

93 முந்தியான் மகிழ்ந்துவந்தெந் தவத்தினான் முனியைக்காண
நிந்தையா முரைக்க நேர்ந்து நிறுத்தலா லுண்மலர்ந்தேம்
அந்தவா றன்றிப் போற்றுந் துதியினா லன்புவைத்தோம்
சிந்தையார் வரமே தென்று செப்பினான் திருவையாறன்.

94 வைதீக சைவ நீதி வழாதவர் மாதவத்தின்
செய்தியா லழுக்காறில்லாச் சிந்தைய ரைந்தவித்தோர்
மெய்திகழ் நீற்றர ஞான விழியினர் வழி சேரன்பாய்
பொய்தவி ரொழுக்கம் பூண்டோர்க் கடிமையான்
புரியவேண்டும்.

95 நின்திரு வேந்தரங்கில் நின்னை நிந்தனை
சொல்லுகின்றோர்
அன்றியும் நிந்தை கேட்பேர் அவருட னிணங்கி னோர்கள்
வென்றஐம் புலத்தாம் பன்னூல் விஞ்சையின் மேலோ
ரேனும்
கொன்றுழல் புலைய ரேனும் குறிகொளு மறிவு வேண்டும்.

---

92. சுருதி - வேதம், பருதியார் - சூரியன், பண்ணவர் - ஆசாரியபிரமணர்

03. சிந்தையர் - மனத்தில் பொருந்திய, செப்பினான் - கூறினான்.

94. வைதிக சைவ நீதி - வைதிக சைவ சமய நெறிகள், வழாதவர் - பின் பற்றாதவர், அழுக்காறு - பொறாமை, ஐந்தவித்தோர் - ஐம்புலன்களையும் அடக்கிய சான்றோர்.

95. அரங்கில் - அரங்கமாகிய உலகில். நிந்தனை - பழிச்சொல், விஞ்சை வித்தைகள், குறி கொளும் அறிவு - நற்குறிப்புடன் செயற்படும் அறிவு,

96 கண்கள் நின்னுருவங் காணக் காதுநின் காதை கேட்கப்
பண்களி நாவு நின்சீர் பாடவென் கால்நின் கோயில்
எண்கொடு சூழச்சென்னி யிறைஞ்சநீ யானேயாகத்
திண்கரை யில்லாவின்ப வெள்ளத்துள் திளைக்க வேண்டும்.

97 வேண்டு மவ்வரங்கள் கேட்டு விமலனும் மகிழ்ந்து நீயே
பூண்டுலாய் பத்தி யன்பு புனிதனன் றுதவி யெல்லா
மீண்டுமத் தலத்தின் மேன்மை விளம்பி யிப்பதி நீங்காமே
காண்தக விரித்தி யென்று கரந்தனன் கரவிலாதான்.

98 மாதவர் குழாத்தி னோடு வாசமத் தலத்தின் தாய்ப்பக்
காதலைம் புலங்கடந்து சகமெல்லாம் கருத்திற் கொண்டு
சாதலும் பிறப்பு நீங்கி சதானந்தன் பிரம ஞான
போகசீவ முக்தி பெற்றான் புனித னானான்.

99 மூவர் வாழ் பதங்க ளேறு முனிவர்தம் மிருக்கை நண்ணுந்
தேவர்சூழ வையின் வைகு நசையெலா நிற்குந் தன்னை
யாவரெண்ணின ரங்கெய்து மெண்ணிய தேவர்க்கு மீய்குங்
காவலற் காசிநாசிக் கற்றவர்க் குருவா மன்னோன்.

---

96. காதை - திருவிளையாடற்கதை, எண் கொடு - எண்ணிக்கைக் கொள்ளும் வலம், திண்கரை - வலிய கரை.

97. விமலன் - ஈசன், இப்பதி - திருவையாறு, காண்தக விரித்தி - விரிவாகச் சொல்வாயாக, கரந்தனன் - மறைந்தனன்.

98. குழாம் - கூட்டம், வாசம் - நிலைத்திருத்தல், சகம் - உலக நிகழ்ச்சிகள் சீவ முத்தி - எடுத்த பிறவியோடு இரண்டறக் கலந்த மேல் நிலை.

99. மூவர் வாழ்பதம் - மூன்று முதற்தெய்வங்களாகிய, சிவன், பிரமன், திருமால் ஆகிய கடவுளர் உறையும், கைலை, சத்தியலோகம், வைகுந்தம் ஆகிய பதங்கள், பதங்கள் - வாழுமிடங்கள், நசை - விருப்பம், காசி நாசி- காசியெனும் வாரணாசி.

100 உலகமெலாங் கடந்து நித்தனாயினோ னுண்மையீது
தகவுகூறிய வினுக்காதை சாற்றினோர் கேட்கப்பெற்றோர்
மகவுவாழ் வின்பஞானம் வளாவாழ்ந் திருந்துதக்கோன்
சகமேல் மதிக்கப்பெற்ற தவப்பயன் பெறுவரென்றான்.

101 இன்ன கோயிலுண்மை யினிச் சிவசருமன்காதை
சொன்ன வச்சிவதாசன்சீர் சுசீகர நீதிமீது
பன்னருஞ் சுசரிதன்றன் பான்மைகளாய் வகுத்தே
மன்னரும் பிரணதார்த்தி கரத்தில் மொழியலுற்றாம்.

102 வாரணங் குறுமென்கொங்கை மங்கைகேழ் திருவை
பூரணன் பணிந்துதன்னைப் போற்றுநர் துன்பந்தீர்க்குங்
காரணம் பிரணதாத்தி கரனெப் பேர்பெற்றானென்
றாரணந் தெரிந்ததூயோ னனவத்திக் குரைக்கலுற்றான்.

## சிவதருமனத்தியாயம்

1 காரண பிரணதார்த்திக் கரனெனப் பேர்பெற்றானென்
றுரணந் தெரிந்தோன் கூறியனல்வரத்தின் மகிழக்கண்டு
வாரணங் குறுமென்கொங்கை மங்கைபங் குடையசெல்வப்
பூரணன் பின்னுமாங்குப் புரிந்ததோர் புதுமைகூறும்.

---

100. தகவு - பொருந்திய, சாற்றினோர் - சொல்லியவர்.

101. சுசீகரநிதி - தூய்மையான நீதி, பான்மைகள் - அருஞ்செயல்கள்.

102. பூரணன் - நிறைந்த தவமுடையவன், ஆரணம் - வேதம்.

1. ஆரணந்தெரிந்தோன் - வேதங்களை உணர்ந்தோன், புதுமை-அற்புதம்.

2 நவசருவ னலோர்க்கீய்ந்து நான்மறைப்
பொருள்களாய்ந்துங்
கவுசருத்திரன் கண்வேய்ந்துங் காலைநன்னீரிற் றோய்ந்துந்
தவசருநெறியில் வாய்ந்துந் தகுபுனல் கரணங்காய்ந்துஞ்
சிவசருமப் பேர்பெற்றான் திருமறைக் குலத்தோர்செல்வன்.

3 ஆதியா முகத்திரேதத் தருந்தவந் துடங்கினார்க்கு
காதியா வகுத்தும்பொல்லா கபப்பிணி யடுத்ததாக
வேதியர் கபமேலுந்கி மெய்வறந் தேன்பொருத்து.
கோதியா லெழக்குரைத்து கோழைநூ லொழுக்கின்று
கான்று.

4 ஈருணெய்ப்பறப் புலர்த்தி யிரைப்பெழ
நுரைத்துரைத் துரைப்பி
னீருதெய் தோறுஞ்சிந்தி நிமிருடல் வளைந்துளைப்ப
பாருளா மாயுள்வல்லோர் பண்ணிய மருந்திற்றீரா
தோருமந் திரத்திலோவா தூக்கிமே லெழுந்ததந் நோய்.

5 மண்டித லெரியுந்தீயின் மரந்தடித் திட்டதென்ன
பண்டிதர் புரிந்ததெல்லாம் பாவமே யாகிப்பெற்ற
தெண்டிரை யுலகிற்றீர்த்தந் திருந்தியாவு மூழ்கிக்
கண்டிருந் தலங்கள்போற்றிக் காலங்கள் கழிக்குநாளில்.

---

2. அலோர் - பொருளற்றோர், தோய்ந்தும் - நீராடியும். தகுபுனல் - புண்ணிய தீர்த்தம், திருமறைக் குலத்தோர் செல்வன் - வேதியர் குலத்திலுதித்த செல்வன்.

3. அருந்தவம் தொடங்கினார்க்கு-அரிய தவத்தினை நியதியோடு தொடங்கியவர்கட்கு. கபப்பிணி - கபரோகமெனும் நோய், கோதியா - துன்பந்தரத் தக்கதாக.

4. நெய்ப்பற - பசையற்றுப்போக, ஆயுள் வல்லோர் - ஆயுள்வேதமெனும் முறையிற்பிணி தீர்க்கும் மருத்துவர், ஓவா - நீங்காமல்.

5. மண்டி - மேன்மேலும் பெருகி, பண்டிதர் - மருத்துவர், தெண்டிரை - கடலால் சூழப்பட்ட,

6 பரசம யங்களென்னும் பாயிரு ளுலகநீற்றின்
கிரணவெண் ணிலவுவீசுங் கேழ்கிளர் பருதியார்க்குங்
குரவனாஞ் சிறப்பினெந்தை கோதமன் சிறுவனான
சேயுர தவப் பொன்னான் சதானந்த முனிவர் கண்டான்.

7 கண்டிருமி யேங்கியுடல் கால்வளைத் தவிர்ப்பொற்
றண்டொடு குழைந்துயிர் தளர்ந்தடியில் வீழக்
கொண்டமறை யேறுகொளு கொம்பனைய கோமா
னெண்டனு நுடங்கின்னை யாரெழுக வென்றான்.

8 எங்குல மிருஞ்சுருதி யோரதினி யெனப்போ
துங்கசிவ சனன்மனது தொல்லைவினைக் கொல்லோ
வெங்கய வரும்பிணி விளைந்திட மெலிந்தேன்
சங்கையி லிருந்த தருமதான நனிசெய்தோன்.

9 மந்திர மருந்தின் மதிகண்ட கடல்மானுந்
தந்திரத் தவத்தின முனிபுற வகன்றகுஞ்சி
ரித்திற திருக்கயவ ரெய்திலிடை நீங்காப்
புந்தியினு லோபமது பொன்றொழிவ தின்றால்.

---

6. பரசமயங்கள் - சிவசமயமல்லாத பிறசமயங்கள்.

7. கால் - தனது இருகால்களும், குழைந்து - நிலைதளர்ந்து

8 துங்க - மேலான, வெங்கயவரும் - கொடிய தீமையாக வரும், சங்கை - சந்தேகம்.

9 மதிகண்டகடல் - சந்திரனைக் கண்ட கடல் பெருகுவதைப் போல, இத்திறம் - இத்தகைய உறுதிப்பாடு, புந்தி - அறிவு.

10 உட்பகை படைத்தமன ரொத்தன்னுயிர் பால்
மட்பகை ஞாகைதிரிகை யொத்தனன் மனத்தாற்
றுட்கென விரைத்திறுகு துக்க வுலகத்தால்
வடகமி லொதுக்கிட மனைக்குடியை யொத்தேன்.

11 முடையுடல் விடுக்கில் முறையன்றேன் முயன்றே
னுடலுயிர் விடுத்தொழிவ துண்மையென நின்றே
னிடைமக னெறிந்தமர் வென்ன மெலிகின்றே
னடையுறு பிறப்புள பயன்களணை கில்லோன்.

12 கயப்பிணி யெனுங்கடல் கடக்குநெறி காணே
னுயப்பெற வெதிராதபுனை யுன்னையல தில்லேன்.
செயப்படுவ தின்னதிது தீயதுயர் தீரும்
பயத்தகரை யென்றுரை பணித்தருள்க வென்றான்.

13 எக்குறை யுள்ளோரு மறிவுள்ள வரையெய்தி
லக்குறை தவிர்ந்து யாவராலவரை யேய்ந்துந்
துக்கமுறு வோர்க்குறை துடைத்திடுவ துண்டோ
மிக்கனதி கற்பதரு வெண்மதியி னாலும்.

---

10. உட்பகை - மனப்பகை, திரிகை - திரிபதகை, கங்கை.

11. முடையுடல்-முடை நாற்றமுள்ள உடல், அடையுறு பிறப்புள - தொடர்ந்து வரும் பிறப்புண்டாக.

12. கயப்பிணி - தீமையான நோய், புனை - மிதவை, பயத்தகரை - பயனுடைய கரையைப் போன்று.

13. துடைத்திடுவர் - நீக்கிவிடுவர், மிக்க - மிகுதியான.

14 ஆதலி நல்லோர் திலதமான முனிவநின்
பாதமலர் கண்டுப் பிறவிப் பய னடைந்தேன்
நோதகவு தீரநுவ லென்றிலு நோன்மைக்
கோதமறு கோதம குமாரனிது கூறும்.

15 வன்புறு வியாதியின் வருந்து மறையோயித்
துன்பமுற லந்தணன் கொலைத்தொடர்பினூழா
லென்பர்பெரி யோர்களுன தின்னலிநு பன்னிற்
புன்பிரம கத்தியது பொலிவிதி போலும்.

16 அன்னதுமோ ரந்தணனுக் காடாவு வானந்
துன்னுசுடர் தீண்டவரு தொல்லையிலோ ரெல்லைச்
சென்னல்கல மெனவுரை செய்து தவலின்றா
யின்னதுய ரெய்தினை யெனத்தனி வினாவும்.

17 அந்தணர் கொலைப்பயனு மன்ன சிலப்பொலி
தந்தொழில் வினைப்பயனு மொன்றுற்றதாகா
திந்தவித முந்தவிர் விரென்னுபரிகாரத் துய்ந்திடுவதுத்த
மிந்தவகை யாணணுகி வுய்ந்திட வுரைப்பாய்.

---

14. திலதம் - நெற்றியிலிடும் பொட்டு, நோதகவு - நோவுதரும் நிலைமை, கோத - சினம்.

15. வன்புறு - கொடுமையுற்ற, ஊழால் - முன்செய்த வினைப்பயனால்.

16. அன்னது - அவ்வாறானது, துன்னு - நெருங்கிய, இன்ன-இவ்வாறான.

17. சிலப்பொலி - சிலம் பொலி, தவிர்விர் - நீங்குவீர், பரிகாரம் - நீக்கும் உபாயம், உத்தம் - உத்தமம்.

18 இறைவனூற்குப் பொருள்பிரிதா
யெண்ணங்குரவ னில்லாமை
மறையந்தணரை மூழ்காமல் மறிந்தலன்ன முண்பதன்மு
னிறையுங்கணிநூல் வழியன்றி நிருழித்தோரை நாளுரைத்த
லறையுங் குற்றப்பரிகார மறியாதொன்றைச் செய்வித்தல்.

19 பொய்வேடத்தால் வணங்குவித்தல் பிறர்கைக் குடன்படலுந்
செய்வேடத்தாற் கல்வியாற் செல்வமிகவா லகந்தையுறல்
எவ்வேடத்துந் தன்னைத்தான் புகழ்தலிவையே முதலாக

..........................................................................................

20 தனந்தானியங்க ளெவையெனுந் தானஞ்செல்லின்
மறையோர்க்கு
மனந்தானுவப்ப நல்காமை மற்றும்பலவுண் டதன்போலி
கனந்தாழ் மறையோர் வெங்கொலைக்கு
கயனோய்எப்பிறவி யொருநூறு
முனந்தாமுடைய போலிக்கு மூன்றுபிறப்புத் தருமாமால்.

21 தன்னாலிறந்தோன் தலையோட்டிற் தானேற்றுண்டான்
முதலாக
அன்னால்வாக்குப் பரிகார மளவின்றென்ற லருநாக
மின்னாப்பிறவி யித்துன்ப மென்பரெளிதி லின்னுமொரு
பொன்னாலையஞ் சேறையாற்றிற் புகுந்துபுரியுந்
திறங்கேண்மே.

---

18. பிரிதா - வேறொன்றாக, குரவன் - ஆசாரியன், குரு, அறையும் - சொல்லும்.

19. வணங்குவித்தல் - பிறரை வணங்கும்படிச் செய்தல், அகந்தை - அகங்காரம்.

20. தானம் செல்லின் - தானமாகச் செல்லுமானால், மனந்தானுவப்ப நல்காமை - மறையோர் மனம் மகிழ்வடையும் அளவிற்குக கொடுக்காத செயல்.

21. இன்னாப்பிறவி - தாழ்ந்த பிறவி, புரியும் - செயலாற்றும், ஐயாறு - திருவையாறு, சேறை - திருச்சேறை எனலாம்.

22 பொன்னிதாழ்ந்து முப்பொழுதும் பூதிபூசி யாயிரங்காற்
சென்னிதாழ்ந்து பஞ்சநத செப்பேச்சுரத்தி லாயிரப்பத்
துன்னித்தாழ்ந்தஞ் செழுத்தோதி வலம்நூறியற்றி
யுடையான்முன்
பன்னிப்பண்டு செய்தநவைப் பலருங்கேட்கச் சொல்வாரால்.

23 புரிந்தபிறப்பில் பரிகாரம் புகன்றேனினது பொலிக்குந்
தெரிந்தபிறவி வேறதனாற் றிருவையாற்றி லொருமாதம்
அருந்தியொருபோ துற்றதிறமே யாக்கில்மலன்
தீர்க்குமினி
விரைந்துபுரிக வெனவிடுத்தான் மேவித்தொடுத்தான்
விரதமே.

24 வழுவாநியமத் தொடும்புரிந்த மாதமுடிவில் ஒருநாளிற்
செழுவானசெக்கர் திருமேனி சிவனைநினைத்த
நினைவோடு
மழுவானபிணி நோயென்றால் வந்தகற்றுமென
நேர்ந்துயிர்த் தயர்ந்து
விழுவானுறங்கும் போழ்தத்தின் வினைதீர்ப்பவனு
மேவினான்.

---

22. பொன்னி - காவிரியாறு, தாழ்ந்து - மூழ்கி, பூதி - திருநீறு, துன்னி- முன்னடைந்து, பண்டு - முன்பு, நவை - குற்றம், சொல்வர் - இறைவன் முன்னர் கூறுவார்கள்.

23. புரிந்த - உண்டான, பரிகாரம் - தீர்க்கும் உபாயம், மலன் - பாபப்பிணி புரிக - செய்வாயாக.

24. வழுவா - குற்றப்படாத, நியமம் - விரத உறுதிப்பாடு, மழுவான பிணி - மழுவாயுதத்தின் கொடுமைச் செயல் போன்ற பிணி, வந்தகற்றும் - சிவன் தோன்றி நீக்குவான்.

25 வெண்ணீறுங் கையுமாய் வேதியனுக் கருகிருந்து
தண்ணீரிற் றாமரைப்பூந் தாதுகவிழ்ந் துகுப்பதெனப்
புண்ணீர் வெம்பிணி யுடலைப்புல்லி யெடுத்தகலமடிமே
லண்ணீறிட்ட வன்தலை தொட்டடியளவுந் திமிர்ந்திட்டான்.

26 எம்பிரான் திருநீறே எழுபிறவிப் பிணிதீர்க்கும்
தம்பிரான் திருக்கரத்துச் சாத்திய துதைவத்தால்
வம்புலாங் கயநோயின் வல்வினை தீர்த்திடலரிதோ
செம்புலாங் களிம்பனைய மலப்பிணியுந் தீர்ந்ததால்.

27 இரும்பு பரிசனவேதிக் கெரிபசும் பொன்னானதுபோல்
அரும்பெறல் செம்பொற்சோதி யங்கையாற் றீண்டுதலுங்
கரும்புற மெய்முழுதோடக் காய்ந்தெளிர் காஞ்சனம்போல்
பொரும்பிணியுந் தீர்ந்துயர்ந்து புனிதவுரு வானதால்.

28 நீற்றினாற்றலால் வரவுநிமிர்ந்து துளங்கு மறையோனை
போற்றினான் கருணையினா லெழுப்புதற்குச் செழுஞ்சுருதி
யாற்றினா லரியனாதல் அளவையாற் காண்பரிய
போற்றினாதண் மலரடியாற் றுகைத்தருகு பெயர்ந்னனால்.

---

25. வேதியன் - கவுதமன், பூந்தாது - மகரந்தப் பொடி. புல்லி - பற்றிக் கொண்டு. மடிமேல் - மடியினிடத்தே, நீறு - திருநீறு, நிமிர்ந்திட்டான் - நிறைவாகப் பூசிக்கொண்டான்.

26. துதைவத்தால் - சாத்திய திரு நீற்றால், வம்புலாம் - தொல்லையாம், செம்புலாம் - செம்பு உலோகத்தில் பொருந்திய, மலப்பிணி - பிறவியைப் பற்றித் தொடர்ந்த மும்மலப்பிணி, தீர்ந்தால் - அகன்றது. ஆல் - அசை

27. பரிசனவேதி - பொன் செய்யும் மூலிகை, எரி - ஒளிவிடும், காஞ்சனம்-பொன். புனிதவுரு - தூய உருவம். நீற்றினாற்றலால் வரவு.

28. ஆற்றல் - தெய்வீக வலிமை, துகைத்து - படியநடையிட்டு, அருகு - அருகில்.

29 தன்னையடைந்தவ ரிடும்பைத் தடுப்பா னன்கன்றிடிலு
முன்னையவன் பிணிகாணான் பிரானையுமுன் காண்கிலனா
லென்னை யருளிருந் தவற்றெனமேலென் றருமறையோன்
முன்னைய வன்போடு தெழியாமொழிதளர் வெழுந்தனனால்.

30 கம்பலையுங் கண்ணீருங் காயமுறத் தூயோனும்
கொம்பலையு மலர்த்தாது கொழிக்குமண லுடன்குலிக்கும்
பைம்பொனுரை திரைப்பொன்னி படிந்து சிவாலயத்தெய்தி
சம்புவைமுன் தொழுதிறைஞ்சித் தானறிந்த படித்துதிப்பான்.

31 பிறவியின் வருதுன்பம் பெறினுறு வயர்வெல்லாஞ்
செறிவதுன்னரு ளெய்துஞ் செவ்வியி னளவன்றோ
லறுகுறுசடையோய் நின்னங் கையென் முடிமேல்வைத்து
குறைதவிர் வித்தாய் உனதரு ளெளிதேகொல்.

32 சுருதியின் முடிவொன்றுங் துனிகிலவெனு மாறுன்
திருவடிமுடி வைக்குஞ் செவ்வியி னளவென்றாற்
பெருவடி நிழலோயென் பிணிகெட மணிமன்றா
டொருவடி யுடல்வைத்தா யுனதருளொளிதோ கொல்.

---

29. இடும்பை - கொடிய துன்பம், முன்னை - முன்பிருந்த, அன்போடு - நிறையன்போடு, தெழியா - ஆர்வம் எழுச்சி பெற, மொழிதளர் - என்ன சொல்லுவதென்று தடுமாற்ற நிலையால் தளர்ந்து.

30. கம்பலை - பக்தியினாலான மெய் நடுக்கம், காயமுற - உடலில் பொருந்த, குலிக்கும் - கொழித்து ஒலிக்கும், பொன்னி - காவிரியாறு, சம்பு- சுகமளிக்கும் ஈசன்.

31. அயர்வு - தளர்ச்சி, செவ்வி - ஏற்றசமயம் (காலம்), அறுகுறு - அறுகம் புல் பொருந்திய.

32. சுருதி - வேதங்கள், பெருவடி - பெருமை பொருந்திய திருவடி, மணி மன்றாடு - இரத்தினங்கள் வைத்திழைக்கப்பட்ட அம்பலத்தினிடத்தே,

33 சீரொளி யன்றிங்கண் செங்கதி ரொளியெனலுன்
பேரொளி தனையுள்ளம் பெருவதன் முன்னென்றாற்
காரொளி மிடரோயென் தயவுடனவை தீர்வித்
தோரொளி திகழ்வித்தா யுனதரு ளெளிதோகொல்.

34 பவபவ காநாதர் பதமுதல் யோகத்
தவத்தவ் வினைதீர்க்குஞ் சங்கர வென்னாளு
நவநவ வுருவாவோய் நலமிகு பகவானே
சிவசிவ தமியேனுன் திருவடி தொழுகின்றேன்.

35 புரகா வுமை பாகர் புங்கவ மலர் வேதன்
சிரகா விடை யேறுஞ் சேவடி திருமார்பி
னுரகா சதவெற்பூ டுறைபவ் விறையோனே
அரகர தமியேனின் னடியிணைத் தொழுகின்றேன்.

36 கசிதா மறிசூலத் தருமகம் பூ நாகஞ்
சுசிந்தி கழியங்கஞ் சூரக வேயி னொடுங்
கசவுரி யுடனே நதிக் கானக நடமாடும்
பசுபதி தமியேனின் பதமலர் தொழு கின்றேன்.

---

33. [இப்பாடல் : 33, Mss - 290 சுவடியில் இல்லை].
சீரொளி - சிறந்த ஒளி, காரொளி - கருமையொளிர்கின்ற, மிடரோய் கழுத்தினை உடையவனே.

34. கா - காப்பாற்றுவாயாக. நவநவவுருவாவோய் - புதுமைக்கும் புதுமையான திருமேனியின் பெறுகின்றவனே.

35. புரகா - பாதுகாப்பவனே, புங்கவ - மேலானவனே, மலர் வேதன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், சிரகா - சிரத்தைக் கையிலுடையவனே, உரகா - பாம்பாபரண மணிந்தவனே, சதவெற்பு-கயிலை மலை, பவ்விறை - ப்வ்வியமான கடவுள்.

36. மறி - மான், சுசிந்தி - தூய செந்நிறம், சூகரவேய் - பன்றியுருவான திருமாலான மூங்கில், கசவுரி - யானைத்தோல் போர்வை.

37 பலகாலும் இப்படியே பரவசனாய்த் துதிப்பவளவிற்
பிலகார்வ மனங்கண்டு பிரணதார்த் திகர்பேர்
சிலகால முதல்படைத்த திருவையா றுடையானும்
அலகானன் கருணையினால் வந்தவர்க்கு வெளிநின்றான்.

38 வருதிசிவ சருமாநின் மறைத்துதியின் மிகமகிழ்ந்தே
தருதிவர மெனக்கேட்டித் தக்கதுதந் தளித்துமெனச்
சுருதிகமழ் செம்பவளத் தூராகிய வாய்மலர்ந்தருளி
யொருதிருவை யாறுடையா ருரைத்தலுமற் றவ
னுரைப்பான்.

39 செய்தவத்தி னுயர்ந்தோர் செய்கின்ற தவத்தோர்க்கு
மெய்தவினிச் செய்யவரு தவத்தோர்க்கு மனத்தெண்ணங்
கைதவமி லுனைக்காணுங் காட்சியே யெனிலெனக்கு
மெய்திகழ் வெளிப்பட்டாய் வேண்டுவரம் பிறிதுண்டோ.

40 இலம்பாட்டி னர்க்கின்றோ ரெரியிரத வாதத்தா
னலம்பாட்டின் மருந்தொன்று நாடியகழ்ந் திடுகுழியி
னிலம்பாட்டி னேர்பட்ட நிதிவிட்டுப் பெறுமாறென்
புலம்பாட்டில் நினையன்றிப் புதியவர மினியாதோ

---

37. பரவசம் - பூரண மகிழ்ச்சி, அலகானன் - பேய்களின் தலைவன், எளி நின்றான் - எளிமையாகக் காட்சியளித்தான்.

38. சுருதி - சாமவேதம், செம்பவளத்தூர் - சிவந்த பவளக் கொடியின்வேர்.

39. கைதவம் - கைமேலானதெனும் தவம், வேண்டுவரம் - நான் வேண்டுகின்ற வரம்.

40. இலம்பாடு - வறுமை, இரதவாதம் - இரசவாதம், செம்பைப் பொன்னாக்கும் சித்து, புலம்பாட்டில் - அறிவால் அறியும் செயலால்.

41 கஞ்சன்மிகு பதுமமலர் கடவுள்ர்தஞ் செல்வமெலாந்
துஞ்சிவிழி த்திடுவதன்முன் துகலறக் கெடுமதனாற்
றுஞ்சாநின் றஞ்சலுறு பெருஞ்செல்வந் தருகுதியேல்
பஞ்சநதி பிரியாமை பரிந்தருள்க வரம்என்றான்.

42 நித்தியெனுங் கேட்டருளி நீநினைத்த பொருணன்றால்
முத்திமுதற் காரணமென் றகமலர் முகமலர்ந்து
சித்திதரு தலவாச வரங்கொடுத்து தியானத்தா
லத்திருவை யாறமர்ந்தான் அந்தணனு மங்கிருந்தான்.

43 தலவாசம் பெறுமதனாற் சிவசருமன் சங்கரன்பால்
உலவாத பேரின்ப முத்தியுல குற்றான்மேற்
பலவாகுந் தனையடைந்தோ ரிடும்பைபரித் தளித்தகதை
சிலவாகமிங் குரைத்ததுனக் கெனமுனிவன் செப்பினான்.

---

41. கஞ்சன் - திருமால், பதுமமலர்கடவுள் - பிரமன், துகலற - சிறிதுமில்லாமல், அஞ்சலுறு - அஞ்சத்தக்க, பஞ்சநதி - திருவையாறு.

42. நித்தி - நிலைத்தவை, சித்தி - விரும்பியதைப் பெறும் ஆக்கம், தியானம் - மனத்தால் நினைத்திருக்கும் செயல்.

43. தலவாசம் - திருவையாற்றுத்தலத்தில் வாழ்தல், உலவாத - அழியாத, இடும்பை - துன்பம்.

# சிவதாசன் அத்தியாயம்

1 பூதிசாதன மேனியின் திகழும்
சாதியா லவன்பேர் சிவதாசனா
மாதினாயக னம்பிகை பங்கனை
ஆதியான மனத்துள் யோகியே.

2 நேமி சூழ்ந்து நெடும்புனல் முற்றிய
பூமி சூழ்ந்து வணங்கிய புக்கனன்
காமி யங்கள் கருத்திலன் மற்றவன்
தோமில் பஞ்ச நதம்தொழ வேகினான்.

3 பொன்னியாடிப் பவுத்திரம் பூண்டு மேற்
றன்னியாய் முடித்த கேள்விப் போதனன்
கன்னி பாகர்க்குக் காஞ்சன சோதிக்குச்
சென்னி யாற்றகு சென்னி வணங்கினான்.

4 முன்னை யாசைத் தொடக்கமுற முன்பணிந்து
என்னை யாள்கெனு மின்பமோ டன்பினே
ரன்னை மாருட னமராதி விநாயகன்
தன்னை யாதரித் தாயிடைத் தாழ்ந்தனன்.

---

1. பூதி - திருநீறு, சாதியால் - தவறாமல் செய்து வரும் நியமத்தினால், ஆதி நாயகன் - முழுமுதற் கடவுளாகிய சிவன், அம்பிகை - உமாதேவி ஆதியான-முதலாவதான, மனத்துள் யோகியே-மனத்துள் வைத்து வணங்கும் யோகியாவான்.

2. நேமி சூழ்ந்து - சக்கரவாளகிரியால் சூழப்பட்ட, நெடும்புனல் - அளப்பரிய கடல், புக்கனன் - புகலிடமாகக் கொண்டவன். காமியங்கள் - பயன்கருதிச் செய்யும் செயல்கள் தோமில் - குற்றமற்ற.

3. பொன்னியாடி - காவிரி நதியில் நீராடி, பவுத்திரம் - நியதிப்பூண், தன்னியாய் - தன்னியல்பாக, கேள்வி - மந்திரங்கள் காஞ்சனசோதி - பொற் சோதி, சென்னியால் - தலைமையானதால்.

4. முன்னை - முற்படத்தோன்றிய, அன்னைமார்-உமாதேவி, கொற்றவை ஆகியோர், ஆதிவிநாயகன் - முதற்கடவுளாகும் விநாயகன், ஆதரித்து - அன்புசெய்து.

5 ஈசனஞ் செழுத்தெண்ணி யெழுந்து போய்த்
தேசமுண் டகமங்கை தனைத் தெண்டனிட்
டாசின மாதவர் சூழிலி லங்ஙனம்
வாச மெய்தி மகிழ்ந்தன னன்றரோ!

6 வரைகடைந் தறியா மதி தோன்றலும்
உரை கடந்த வுவப்புடைப் பேரானந்த
திரை கடந்த திருகடல் பொங்கிமேல்
கரை கடந்த தெனப்பொழி கண்ணினார்.

7 அன்று கண்டவர்க் கன்பினா னொத்தவ
ரென்று நின்ற புலன்கட் கிடங்கொடா
ரொன்ற னாருயிர்க் குள்ளங் குழைந்துளார்
குன்றின் வன்றிரள் கொண்ட குணத்தினார்.

8 விண் விளக்கும் பருதிமுன் மீனினங்
கண் விளக்கினிற் கண்டிதி லாரமெனத்
திண் விளக்கெனுஞ் செம்பொனின் சோதியா
லெண் விளக்குற யாவையுங் காண்கிலார்.

---

5. ஐஞ்செழுத்து - பஞ்சாட்சரம், தேச - அழகான, முண்டகமங்கை - செந்தாமரை மலரில் வீற்றிக்கும் திருமகளை, ஆசின-வாழ்த்துகின்ற, இலங்கணம் உபவாச மிருத்தல் அரோ - வியப்பிடை.

6. வரைகடைந்து - தேவா சூரர்கள் மந்தரமலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது, மதி - சந்திரன், திரு - இலக்குமி.

7. வன்திரள் - வலிய சேர்க்கை, குழைந்துளார் - இளகியமன முடையார்.

8. விண் விளக்கும்-வானவெளியை ஒளிமயமாகச் செய்யும், பருதி - சூரியன், மீனினம் - நட்சத்திரங்கள், திண் விளக்கெனும்-திண்மையான விளக்கெனும், எண்விளக்குற - எண்ணத் தகுமளவிலுள்ள சிறுவிளக்குகளாம் தெய்வங்கள் இருக்க.

9 சுழிபெரும் புனலாற் சுடு தீயினா
லுழிதரும் பல்லுயிர் கட் கிறங்குவா
ரழிதரும் பொழுதாங் கெழு போழ்துமோர்
கழிதருங் கணமாகக் கண்ட காட்சியார்.

10 சிவத்தில் நினைவா சிந்தையிற் கண்டவர்
தவத்தி னிச்சை தருபவ ராதலால்
அவற் கிழங்கு மடிமையி னத்தலத்
திவற் கிருக்க வியந்தது நெஞ்சமே.

(வேறு)

11 மொழியா திருவாசன முதற் பெரியோர் முன்னின்று வழுத்திய முன்னவனைத்
தழியன்புள நெஞ்சொடு சந்ததமும் தவிர்கின்ற தவிர்ந்து தவம் புரிவா
னழிவின்றிய வெம்பவ மற்க வெழுத்தஞ்சும் பதியி னாயிரமாக வலஞ்
சுழிகின்றது நூறுடனெட் டெனவே சுற்றாலய முற்றின்ன மாறொரு நாள்.

---

9. சுழிபெரும்-சுழித்தலோடு கூடிய பெரிய, புனலால் - நீரினால், உழிதரும்-அலைவுதரும் - கழிதரும் - பற்றுக்கோல் தரும்.

10. சிந்தை - மனம், இச்சை - ஆசை, வியந்தது - வியப்படைந்தது.

11. திருவாசனம் - மேலான இருக்கை, சந்ததமும் - எக்காலத்தும், அற்க-நீங்க.

12 வருடங்கள் ஓரைந்து மடங்கியபின் வாரண சிகரசிக
மளித்தவருக்
கருள்தங்கிய முத்தி யளிக்கு வதென் றுறைகின்ற
கருத்துடை யாசையினால்
இருள்தங்கிய நெஞ்சின னத்திறமே இதிலுண்டென
வெண்ணில னெண்ணியதாம்
பொருள்தங்கிய பஞ்சநதம் புரியாப் புறனே பலநாடு
புகுந்தனனால்.

13 முறுகுங்கதிர் நின்று தெறும் பலர்போய் முகிலின்
புனலுண்ண வறத்திடலா
லூறுதண் பெயலின்றி யழன்று புரண்டு ரகங்களின் வாயுமிழ்
நெஞ்சினைநீ
நிறுகுந் துளியென் றெலியாதி சேநாயெதிர் நக்குவகைக்
குவ்விக் குலவாய்
மறுகும்படி வெந்து புகைந் தெரியாய் மரமுங் கரிகின்றது
மரல்வழியே.

14 முரிபட்டனவோமை முளிந்தகுரா முளிபட்டலங் கனலி
வுழிஞ்சில் முடிந்த மாமரம்
பொரிபட்டன பாலை பொடிந் தனவாய் பொறிபட்ட
விருப்பைப் புகைந்தனவே
கரிபட்டசுரங் கமர்பட்ட நிலங்கனல் பட்டனகால்
சுழல் பட்டன கண்
டிருபட் டனவோ நிழல்பட்ட பருந்தெரி பட்டன யாவையுமே.

---

12. மடங்கிய - கழிந்து சென்ற, இருள் தங்கிய - மாயை பொருந்திய, பொருள் தங்கிய - மெய்ப் பொருள் இருக்கின்ற, புறனே - வெளியிலான.

13. முறுகுங்கதிர் - வெப்பம் மிகுந்த கதிர்கள், தெறும் - அழிவு செய்யும், வறத்திடல் - வற்றிப் போதல், பெயல் - பெய்யும் மேகம், நீரிறுகும் - நீர் வற்றிப்போகும், சேநாய் - செந்நாய், மரல் - மருள்பூண்டு.

14. முரிபட்டன - சிதைந்துபோயின, ஓமை - ஓமை மரங்கள், குரா - குரா மரங்கள், உழிஞ்சில் - உழிஞ்சில் மரம், இருப்பை - இருப்பை மரம், கமர் - நிலப்பிளவு.

16 வரங்குவாலுளைய வாளரி செலும் வழியெலாம்
துரங்கலமா மத்தகச் சொரியுந் தரளமும்
தரங்குமால் வண்டுடன்றுரு செல் சாரெலா
மோங்குசார்ந் துடனராவு மூழ்பணா மணிகளே.

17 பொறிப்புறச் செங்கண் வெம்புலிச் செலும் புடையெலா
மறிப்புறக்காரி மாமயிற் றொகுங் கற்றையே
தெரிப்பு முறப்பாய் கலைத்திரிதகவட் டிரலையுங்
குறப்புறத் தகுவதக் குன்றகச் சாரலே.

18 அளறு பட்டிறுகு செம்பொனி லத்தகழ் வாய்க்
கிளறி யன்னிற முறுங் கேழலின் கோடெலா
மொளிறு பொன் முழை விழைந்துடல் குடாவடியின் மேல்
வெளிறுடைப் புறமெலா மிளிர்வ மின்னெனவே.

19 துண்டம் விட்டாயிரங் களிறும் வீண்சூழ் சிறைச்
சண்ட மிட்டாயிரங் களிறு வன்றா ளுகிர்க்
கண்ட மிட்டாயிரங் களிறு மோர்காலை வரயுண்டிடக்
கொண்டிடுங் கரவாற்றலால் கண்ட பேரண்டமே.

---

16. வரங்கு - இளைத்து, வாலுளைய வால் நலிவடைய. மா - யானை. அரா - அரவம் (நாகம்) பணா - படம், மணி - நாகரெத்தினம்.

17. காரி - கருங்குருவி, குறப்புற-குரலை வெளிப்படுத்த, கற்றை-தொகுப்பு, சாரல் - மலைச்சாரல்.

18. அளறுபட்டிகு - அளறாகிய சேற்றில் இணக்கமுற்று கரைந்து நிற்கும், கேழல் - காட்டுப்பன்றி, குடாவடி - கரடி.

19. துண்டம் - மரங்களைத் துண்டாக்கும், களிறு - யானைகள், உகிர்-நகம், பேரண்டம் - பேரண்டமாகிய வலிய பறவை.

20 சூருமஞ்சு வருமித் தகையவச் சூழல்வாய்ச்
சேரு மந்தணனும் வந்தணுகுதலுஞ் சேர்ந்ததால் விண்
காரு மஞ்சுவர் மைக் கடலுமஞ்சுவர் மேல்
யாரு மஞ்சுவரோ ரிரு தலைப் புள்ளால்.

21 கண்டவர் கண்டபே ரண்டமுன் கண்டவன்
கொண்டனன் பண்டைநீர் மண்டலங் கொண்டதென்
றுண்டிடுங் சண்டனென் றெண்டகுந் தஞ்சடுமின்
றுண்டிரத் தன்றிதென் றென்றுவே றெண்ணினான்.

22 ஒருதலைச் சந்தையோ டொருநொடிப் போதுற
பொருதலைத் தடுகளிற் றுயிர்ப்புலப் பகைமையா
மிருதலைப் புள்ளெடுத் திடுதலுஞ் சடுதியால்
வெருதலைப் படுமவன் விமலனைப் பரவுவான்.

23 சம்பு சங்கர பராபர தயாபர வார்
நம்ப வம்பிகை பெறும் பங்க நம்புவது நின்பைம்பொ
னம்புய பதம் பற்றுவேறில்லை யெனக்
கிம்பர்வந் தெய்தி யென்னிடர் கெடுத்தருள் செய்யாய்.

---

20. சூர் - கொடிய தெய்வம், கார் - மேகம், இருதலைப்புள் - அண்டபேரண்டமெனும் பெரும் பறறை.

21. ஊன் - ஊன் உணவு, சண்டன் - இயமன், எண்தகும்-எண்ணத்தகும்.

22. ஒருதலை - ஒருநோக்கம் உறுதி, பொருது - போரிட்டு, அலைத்து - அலைக்கழித்து, அடு - கொல்லப்படும், இருதலைப்புள் - பேரண்டப் பறவை.

23. அம்புயபதம் - தாமரை போன்ற பாதங்கள், பற்று - எனக்குப் பற்றுக் கோடாவது, இம்பர் - இவ்வுலகத்தே.

24 படையெடுத் திடுமுனே பாலனைக் காலனார்
விடையடுத் தடுமென விரைவு நாடினால்
நடையெடுத் தருள்செய்வாய் நள்ளுறப் புள்ளினவர்
இடையடுத் திடுமெனக் கினியடுத்தருள் செய்யாய்.

25 வில்லில் யெய்யுமுன் விபுதருக் கவுணராற்
செல்ல லுற்றிடுமெனச் செய்யவாய் முறுவலாற்
புல்லா முப்புரமெரித் தடல்செய்வாய் புள்ளின்வா
யல்லலுற் றிடுமெனக் கினியெடுத் தருள்செய்யாய்.

26 மந்திரத் தடுமுனம்மால் முதற் றேவர்மெய்
வெந்திடத் தகுமே னரவிடமெடுத் தங்கையாற்
கந்தரத்திருள் செய்வாய் கானிடைப் புள்ளினவா
யந்தரப் படுமெனக் கினியடுத் தருள்செய்யாய்.

27 அடியவற் கின்னவா றின்னல் வந்தடரிளி
கடியமற் றவருழை கடுமையிற் சொற்போல்
படியிடத் திருதலைப் புள்ளினாற் பரவியென்
முடிவுறப் படுமுன் முன்னர்வந் தருள்செய்வாய்.

---

24. பாலன் - மார்க்கண்டேயன், காலன் - இயமன், விடை - இடபம். நடை - காலால் நடந்து.

25. விபுதர் - தேவர், அவுணர் - அசுரர். புல்லா - பணியாத, முப்புரம், மூன்று அசுரர்களால் இயக்கப்பட்ட மூன்று பறக்கும் கோட்டைகள். புள்ளின் வாய் - பேரண்டப் பறவையினிடத்து.

26. மந்திரத்து அடு முனம்-மந்திரமலையால் அமுதத்தினை கடைந்தெடுக்கு முன்னம், அரவுவிடம் - வாசுகி என்னும் வடக்கயிறாகிய பாம்பு வெளியிட்ட விடம்.

27. இன்னல் - மிகுதுன்பம், அடர்இளி - தாக்கும் தாழ்வு, படியிடத்து - உலகத்தினிடத்து.

28 உன்னை யல்லாது வேறொருவரைத் தெய்வமென்
றென்னுளத் துன்னலே னென்பதே யுண்மையோ
னின்னதா னற்பகற் போதுதூய் நினைவினாற்
சொன்னவா றுண்மையே துண்ணெனத் தோற்றுவாய்.

29 அண்டர் வேதங்கள் நின்றறைகிலுந் தொடர்கிலான்
தொண்டர் வாயொரு மொழித்துதியினுக் குறுமெனப்
பண்டைநல் லோர்கதை பகர்தலே மென்மையேற்
கண்டு பொருந்துழி குணமதுங் காத்திடாய்.

30 சிவனுயிர்க் குயிரெனுந் தெய்வமே திண்ணமேற்
சிவனெனக் கிறையெனும் சித்தமே யுண்மையேற்
சிவனெனக் கென்றும் வந்தருள் செய்தகுவனேற்
சிவனினிக் கவன்முற் றருள்கெனத் தேம்பினான்.

31 பாம்பின்வாய்த் தேரைபோற் பறவைவாய்ப் பட்டவன் பரிவுகூறத்
தேம்பும்வாய் மொழியுடன் சித்தமுஞ் சோர்வுறச் சிறிதுபோழ்திற்
காம்பினீள் குந்தமுங் கையுமா யங்ஙனங் கவனமா
லோம்புவான் வந்தனன். மன்னர்போ லுரிவினா னொருவன் மன்னோ.

---

28. உன்னலேன் - நினைக்கவில்லை, துண்ணென - உடனாக, தோற்று வாய் - தோன்றுவாய்.

29. அண்டர் - தேவர், பகர்தலேம் - சொன்னோமில்லை. பொருந்துழி - சரணடைந்த போது.

30. இறை - முழுமுதற்கடவுள், தேம்பினான் - வருந்தியழுதான்.

31. தேம்பும் - அழுகையோடு தடுமாறும், காம்பிர்னீள் - கைப்பிடிக்காம்பு நீண்ட, குந்தம் - குந்தப்படை.

32 அஞ்சல் நீயந்தணனா வஞ்சல் நீயென்று
கையொன்றழைத்தான்

அஞ்சும் போகின்றதே கண்ட பேரண்டமே யென்றூற்றாச்

செஞ்சரோசக் கரக்குந்தவேல் விட்டனன் தீய வேலும்

நெஞ்சுபொளப் பட்டிறுகப் பட்டதால் விட்டதால் நீடுபுள்ளும்.

33 மாவின் மேலரசு போந்ததால் வேலத்திக்காய் வாகையம்புட்

கோவின்மேல் விட்டவர் கூறுறா வதைக் கூறுசெய்தான்

நாவின்வேல் கடுகிப்போய் வீழ்த்தப் புள்ளுமப்பூசல்றானு
மங்கண்

பூவின்மேல் வீழ்ந்தனன் பொன்றினா ரென்றுயிர்
பொறிகலங்கி.

34 வீழ்ந்தவன் தன்னையக் காவலன் கையினால் மெய்குளிப்பத்

தாழ்த்தனன் சென்னிதொட் டடியொடுந் தடவினான்
றடவலோடும்

சூழ்ந்த துத்திப் பொறிப்பைத்தலைப் பரப்புடைச்சோக வேகம்

போழ்ந்தகற்ற வத்தோடப் போனவாறானவர் புன்மையாவும்.

---

32. செஞ்சரோசம் - செம்மையாகக்குறிதவறாது செல்லும் ஆயுதம். பொள-இருபிளப்பாக, விட்டதால் - உயிர்விட்டது. நீடுபுள் - மிகப் பெரிய அண்ட பேரண்டப் பறவை.

33. மாவின் மேல் - யானையின் மீது, பூவின் மேல் - பூமியின் மீது, பொன்றினார் - போரிட்டார்.

34. மெய்குளிப்பு - உடல் முழுவதுமாக, சோகவேகம் - பயத்தின்கடுமை, புன்மை - பாபங்கள்.

35 புன்மை தீர்ப்புலன் காண்ப வந்தெய்தலும் புந்தியாலித்
தன்பையால் வந்தவன் யார்கொல் லன்றைய்யூறாத்
தரணி காக்கும்
நன்மையா மன்னனா லென்றுணர்ந் தாசியால் நானிந்தத்
திண்மையா காதலா லிங்குவந் துதவி னாயிறைவ கேளாய்.

36 நீயுமுன் சுற்றமுங் கோடிநாள் வாழ்க
நியதிகள் சேரநற் செயமுண்டாக மேன்மேலு நின்பேரூர்
செப்புகென்றா
னாயு மன்னன் கொலோ வென்றிந்த துதியினாலரசனே
போற்
பாயுமாவேறி நம்மீசனோ வருமெனப் பார்த்து நின்றான்.

37 கூர்த்தவன் பார்த்தலோடுங் குந்தமு விலைவேலாகத்
தார்த்துகைச் சிகழிகங்கை சடைமுடி யோகநெற்றி
சேர்த்ததோர் திலகந் தானே தீவிழி யாகக்காதில்
ஏர்த்தபொற் குழைகள்சங்கத் திடுமணி குழைகளாக

38 குங்கும மார்பிற் பூண்ட குளிர்கதிர் ஆரமெல்லாம்
பொங்குவெண் ணீற்றினால்மைப் புறனுடையெனக்
கொம்மைச்
செங்கையோ ரிரண்டு நான்காத் திருவுருச் செக்கராக
வங்கதங் கடகமாதி பணிகள் பூணரவமாக

---

35. புன்மை - துன்பம், புந்தியால் - அறிவு நுட்பத்தால், ஆசியால் - விருப்பத்தால், திண்மை - உளத்திட்பம்.

36. நியதிகள் - இயல்பான செயல்கள், பாயுமா-பாய்ந்து செல்லும் குதிரை.

37. கூர்த்தவன் - அறிவு நுட்பத்தோடு கூடிய அவன், குந்தம் - குந்த ஆயுதம், வேல் ஆகத்து ஆர்த்து - வேலாயுதம் மார்போடு பொருந்த.

38. குங்கும மார்பு - சிவந்த மார்பு, கொம்மை - அழகு நிரம்பிய, மிகுந்து நிற்க, வங்கதம் தோளணி, பூண் - அணிகள், அரவமாக - பாம்புகளாக.

39 பூங்கச்சுச் சிங்கத்தோலாய் புறவுடை நறியப்பட்டு
வேங்கைத்தோ லாகப்போர்த்து விசித்தவுத் தரீயத்தூடே
தூங்கற்றோ லாகப்பாங்கற் சூழரை வடங்களொல்லா
மாங்கக்கு வடமேயாக வவன்சிவ னாகத்தோன்ற.

40 வாம்பரி விடையாய்நிற்ப மறையவன் மகிழ்ந்துநோக்கி
காம்புமென் றோளிபாகர் காவல்வேந்தாகி நின்றாய்
ஓம்படைக் கிளவிக்கிவ்வாற்று வைகொல் உண்மையா னுணரேனென்னத்
தேம்புநற் கருணைநோக்கிச் சிவன்றனைத் துதி செய்கின்றான்.

41 கங்கையா போற்றிநீல கண்டனே யாருங்காணாச்
சங்கையாய்ப் போற்றிகாம தகனமுக் கண்ணாபாக
மங்கையாய்ப் போற்றிசூல மான் மழுப் பினாகமேந்து
செங்கையாய்ப் போற்றியாண்ட ஐயனே போற்றி, போற்றி.

42 பிறையவா போற்றிபஞ்சப் பிரமமாம் பெயரோய்போற்றி
மறையவா போற்றிதக்கன் மகவினா சனனேபோற்றி
பொறையவா போற்றியாக்கி புரந்தழித் துலகங்காக்கு
மிறையவா போற்றிஎல்லாம் ஆண்டவா அரசேபோற்றி!

---

39. பூங்கச்சு - மென்மையான இடைக்கச்சு, வேங்கை - புலி, உத்தரீயம்- மேலாடை, ஆங்கு அக்கு வடமேயாக - அவ்விடத்து பவழ மணி மாலைகளாக.

40. வாம்பரி - தாவிச் செல்லும் குதிரை, விடையாய் - இளபவாகனமாய், தேம்பு நற்கருணை - வருந்துாவர்கட்குக் கருணைகாட்டி.

41 கங்கையா - கங்கையைச் சடையிலுடையவனே சங்கையாய் - உண்மை யுமாய் இன்மையுமாய் இருப்பவனே, பாகமங்கை - உமாதேவி.

42. பிறையவா-சடா மகுடத்தில் பிறையை அணிந்தவனே, மகாவினாசனன்- யாகத்தை அழித்தவன், பொறையவா-அடியார்களைப் பாதுகாக்கும் பொறுப் புள்ளவனே.

43 யாவர்க்கும் மூத்தோய்போற்றி யாவுமாய் நின்றாய்போற்றி
தேவர்க்கு முதல்வாபோற்றி திக்கெலாந் துகிலாய் போற்றி
மூவர்க்கு ளொருவாபோற்றி முன்னிய முடிப்பாய் போற்றி
காவற்கு ளென்னையாண்ட கருணையாய் போற்றி போற்றி.

44 இன்னணஞ் சிவதாசப்பேர் மறையவனேத்தா நிற்பக்
கொன்ன வணங்குறு வேற்கோவிற் குறியகோவும் புள்ளால்
மன்னணங் குறுவோர் யெம்மை மதித்தலால் வயமானேறி
யுன்னணங் குறையாந் தீர்ப்பா றுகைந்தனன் கடிதி
னென்றான்.

45 அடைபவ ரின்னலாவ தறுப்பவ னென்னுநாம
முடையவ னென்பர்நம்மை யாதலால் உறவோய்நீயும்
இடையுமோ ரிருதலைப்புள் விழுங்கு மரவத்திற்கூவத்
தடையினான் விரைந்து வந்தேன் தணிகநின் பிணி
யென்றான்.

46 எங்கிருந் தெங்ஙண்யாதா லேத்தியென்றுஞ் சொற்றா
னிங்கிருந் திங்ஙணதா லேகுதன் றெண்ணஞ் சொன்னான்
சிங்கமுங் கண்டபேருண் டாதியுஞ் சேரச்சேர
அங்ஙனுண் டனேகஞ்சேறற் கரியதென் றைய லுற்றான்.

---

43. யாவர்க்கும் மூத்தோய்-எல்லா தெய்வங்கட்கும் பழமையானவன், துகிலாய்- ஆடையாகக் கொண்டவனே, முன்னிய - நினைத்த.

44. இன்னணம் - இவ்வாறாக, ஏத்தா நிற்ப - போற்றி செய்து நிற்க, கொன்ன - பெருமையாக, வயமான் - வலிமையுடைய குதிரை, உன் அணங்கு குறையாம் தீர்ப்பான் - உன்னுடைய துன்பத்தினாலாகிய குறையினை நாம் தீர்ப்பதற்காக.

45. அடைபவர் - என்னை அடைபவர், இன்னல் - துன்பம், அறுப்பவன்- நீக்குபவன், அரவத்திறகூவ - ஆரவார ஒலியைக் கேட்டுக் கூவுதல் செய்ய, தணிக - நீங்குக.

46. எங்ஙண் - எவ்வாறாயினும், இங்ஙணதா - இவ்விடத்ததாக, எண்ணம்- கருத்து, அரியது - இன்றியமையாதது.

47 அதிசயமன்னோ வன்னோ வதிகமாந் திருவையாறு
கதிதருந் தலங்கட்கெல்லாம் காவிரிவடாது கண்டாற்
துதிசெய்தால் நினைத்தால்வாழ்ந்தால் நோற்றினால் இறந்தால்முத்தி
விதிமுறை பெறலாமென்றால் வேதிய னினைந்தவாறே.

48 திருப்பஞ்ச நதியில்மாளுஞ் செவ்வியிற் செவிவலப்பா
லுருப்பஞ் செய்ப் பிறவிவேடைக் கூட்டுமா ரமுதமென்ன
விருப்பஞ்சே யெழுத்தோரஞ்சும் விளம்புதும் யாமே யென்றாற்
கருப்பஞ் செய்துயர் நீப்பாய் காசியாற் பயன் வேறியாதோ.

49 வெள்ளங்கை பரக்கும்பொன்னி வியன்கரைத் திருவையாற்றை
யெள்ளஞ்செய் நினைவிற்காசி யெய்துதற் கெண்ணு மெண்ண
முள்ளங்கைத் திரளைப் பாற்சோறோச்சியே புறங்கைநக்குங்
கள்ளங்கை வந்தோரொக்குங் கருத்தினி யொழிகவென்றான்.

---

47. வடாது - வடக்குக் கரையில், நோற்றினால் - வாழ்ந்தகாலத்தில் துதித்தால், விதிமுறை - பலாபலன்.

48. பஞ்சநதி - திருவையாற்றில் செல்லும் காவிரியில், மாளும் - இறக்கும் செவ்வி - நேர்ந்த காலத்தில், உருப்பஞ்செய்ப் பிறவி வேடை - தீமை செய்கின்ற பிறபியாகிய தொடர்ச்சி, கருப்பஞ்செய்துயர் - பிறவியைத் தருகின்ற துயர்.

49. வெள்ளங்கைப் பரக்கும் பொன்னி - வெள்ளமாகிய நீர் பரந்து செல்லும் காவிரி, ஓச்சி - வீசியெறிந்து, 47, 49 பாடல்கள் திருவையாற்றுத்தலமகிமை கூறியதாம்.

50 மீண்டுபோய்த் திருவையாற்றில் விரைந்துநீ வாணாள்வாழி
யாண்டும் நின்றனக்கு மவ்வாறளித்து மேலுலகமென்றான்
மாண்டனன் பறவையாலென் றெவ்வாறடைவே னென்றான்
நீண்ட செஞ்சடையா னங்கை நீட்டினான் எழுந்தான்
தூயோன்.

51 அருட்கடலணையான் கைதொட் டெடுத்தலு மந்தணாளன்
இருட்கடல் ரேறினான் கோவிறைவனா லியக்கப்பட்டான்
மருட்கடல் தறியு நாதன் மனத்தெழு கருணையாகு
தெருட்கடல் இரியுமாயை செயல்கொலோர் வாவிசெய்தான்.

52 வள்ளலு மறையோயிந்த மடிப்படிந்தெழுக வென்றான்
முள்ளறை முளரிவாவி மூழ்கினா னெழும்போது
கள்ளலர் போதும் வரையாறடுத்தவர் விரித்தரங்கத்
தெள்ளற லெழுந்தா னண்ணல் செய்கையார்
தெரித்தற்பாலார்.

---

50. வாணாள் - வாழும் நாள் முழுவதும், யாண்டும் - எக்காலத்தும், அங்கை - அகங்கை.

51. அருட்கடலணையான் - சிவபெருமான், அந்தணாளன் - வேதியன், மருட்கடல் - மயக்கமைந்த பிறவிக்கடல் தரியும் - நீக்கும், தெருட்கடல் - ஞானக்கடல் இரியும் - நீங்கும், மாயை - பிறவி மயக்கம், வாவி-திருக்குளம்.

52. மடிப்படிந்து - ஆசார சீலமுடன் நீரில் மூழ்கி, முளரி - தாமரை வாவி - பொய்கை, குளம், கள்ளலர் - தேன் பொருந்தியதாக அலர்ந்த, போது - மலர், வரையாறு - கங்கை, தெரித்தல் - திட்டமுறச் சொல்லுதல்.

53 முழுகிய வாவிப்பாங்கர் மூரிவெள் ளேற்றிநின்றான்
செழுந்தி யெழுந்த பாங்காச் சினகரத் தென்பானின்றான்
கழுமுள் மூவிளை வேலோடுங் கண்டுள மகிழ்ந்து போற்றித்
தழுதழுத் துரைக்குஞ் சொல்லா னின்றனன் தவத்தின்
மேலோன்.

54 மாசிலா மறையோய் கேட்டிமரண முத்தியினை நல்குந்
தேசினா னீங்கா வாழ்விற் சிறந்ததித் திருவையாறு
காசியாங் கங்கையா மிக்காவிரி யென்று நின்று
பேசினான் மறைந்து நின்றான் பின்னலார் முன்னலர்தான்.

55 ஒருசிவதாசன் தானுமுண்மையித் தலத்தை நீங்கின்
வருமிடையீ டிவ்வாறென் றெண்ணிய மனத்தனாகி
பொருமிடர் கடியநாதன் புரவலன் வடிவாயாண்ட
கருணையே நினைந்து வாழ்ந்து காலத்தை கழித்தான்
மன்னோ.

56 மரண மால்தீர்த்தீசன் வைத்தனன் அளியினாலே
சரணநீங்காத முத்தித்தன்மையை மறையோன் பெற்றான்
பிரணதா ளடைந்தோரார்த்தி பெருந்துயரான வறுப்பான்
கரணமா மிவற்றாறேவுங் காரணப்பேரும் பெற்றான்.

சிவதாசனத்தியாயம் முற்றும்

---

53. மூரிவெள்ளேறு - வலிமை மிகுந்த வெண்மைநிற ஏற்றின்மீது, சினகரம்- சிறிய கோயில், கழு முள் - கூர்மையானமுள் போன்ற, தவத்தின் மேலோன்- சிவதாச வேதியன்.

54. மாசிலா - குற்றமில்லாத, மறையோய் - வேதியனே, தேசு - ஒளி.

55. பொருமிடர் - வந்து துன்பந்தரும் இடர்ப்பாடுகள். கடிய - நீக்க, புரவலன் - மன்னன்.

56. மரணமால் - மரண அச்சம், அளி - கருணை, அறுப்பான் - அறவே நீக்குவான். காரணப்பேர் - பிரண தார்த்தீகரர்.

# சூசிகரணனத்தியாயம்.

1 வலியவாம் பகையால் நோயால் மாற்றினாற் பயந்தடைந்தோர்
மெலிவுதீர்ந்து யர்ந்தவாறு விளம்பினாய் மேலோய் கீழ்மை
கலியினாற் பயந்தோருயர்ந்த கதையுண்டே லுரைத்தி யென்றா
யொலிமலர்ப்பசுங் கொம்பொப்பாய் கேளென வுரைக்க லுற்றான்.

2 துவாபர முடிவுபரவுந் துற்றிய கலியின் பண்பா
லுவர்மதி யரவுண்டாங்கு மாசுற வண்ணக் கண்ணன்
துவரை வண்தருமர் தோற்றித் தரைபாரந் தீர்த்து வாழ்நாள்
வரவுயர் யதுகுலத்தி லளவிலார்ப் பெற்றுகந்தார்.

3 யாதவர் குலத்துப் பெற்ற மகாரெலாம் ஈனமான
பாதக யுகத்தின் சேர்வாற்பாங்கலர் வினைமேற் கொண்டு
மாதவர் மேன்மை யெண்ணார் மறையவன் உருவாதற்கு
போதமில்லவர்க்குக் காட்டும் புதுமைபோற் பொய்மை செய்தார்.

---

1. வலியவாம் - வலிமையுடையதாகிய, மற்றினால்-மன்றைய தீமைகளால், கலியினால் - நிலை மாறியதினால், ஒலி - வளமை, பசுங்கொம்பொப்பாய்-பசிய பூங்கொம்பைப் போன்றுள்ளாய்.

2. துவாபரம் - துவாபரயுகம், துற்றிய - பற்றித் தொடர்ந்த கலி - பஞ்ச காலம், வண்ணக் கண்ணன் - காயாம்பு நிற மேனியனாகிய கண்ணன் துவரை-துவாரகை. யதுகுலம்-யாதவர்குலம்.

3. மகார் - மக்கள், ஈனமான - இழிவுச்செயலால் தாழ்ந்த, போதமில்லவர்-அறிவில்லாதவர்

4 தங்களி லொருவ னுக்குத் தையலின் உருவ னல்கித்
திங்களின் முகம் விளக்குஞ் சிறந்த சூலுருவிற் காட்டி
வெங்களி மதர்கட் பூவை மென்மொழி மயிலின் சாயல்
எங்களின் அமுத மொப்பா ளென்மகப் பெறுவா ளென்றார்.

5 சாபுவாய் முனிவன் கேட்டு சாதனும் குலத்தை மாய்க்கும்
கோவமா முசல மொன்று பெறுமெனக் கூறி விஞ்டா
னாவதே பிறந்த தாக வறிந்தழிந் தறியாத தால்
தாவர நுனிக்கி முன்னீர் இட்டனனவண் சார்ந் தன்றே.

6 கோரையாய்க் குழி முளைக்க குமரரும் விளையாட்டேற்றி
நீரைவாய் வாளிற் பட்டாங் கியாவரு மாய்ந்தார்விஞ்சி,
வீரைவாய் மீனமுண்டே யெஃகொரு விடலை யம்பிற்
போரைவாய் வில்லிற் பூட்டி புலம்புமா வாலிலெய்தான்.

7 சிறாரிறந் துயிர்த் துறங்குஞ் சீதரன் திருத்தாட் செம்மை
புறாவடி சிவப்பி ணெண்ணிப் போக்கினேன் கொல்லோ புங்க
முறுவரை வைகுந்தஞ் சேர்ந்துற்றனன் என்ன வற்றுக்
கறாவொருத் துயிர் வருத்துங் கலியுகம் பிறந்த தன்றே.

---

4. தையல் - பெண், நல்கி - கொடுத்து, என்மகப் பெறுவாள் - எனது மகளைப் பெற்றெடுப்பாள்.

5. சாபவாய் - தீயோரை ஒறுத்தற்குச் சாபமிடும் வாயுரை. கோவமா - கொடுமை மிகுந்த விலங்கு, முசலம் - கருங்குரங்கு. முன்னீர் - கடல் நீர் (உப்பு நீர்) இட்டனன் அவண் - அங்கு இட்டனன்.

6. குமரர் - இளைஞர், நீரைவாய - நீர்மையில்லாத் தன்மையினால்,

7. சிரார் - சிறுவர், சீதரன் - திருமால், புறாவடி - புறாவின் கால்கள், புங்கம் - உயர்வு, கறா - பாற்பசு, கலியுகம் - மாயை நிறைந்த பெருங்காலம்,

8 இருங்கலி யரச னாளு மெல்லை வந்திருக்கு முன்ன
மொருங்கய லுகத்து மாயன் மக்களுக் குயக்கச் செய்தார்
செருங்களி றன்ன தானை செலுத்து நாட்டுரியன செய்யான்
கருங்கலி நிறத்தோன் செய்யுங் காரியஞ் சிறிது கேண்மோ.

9 நல்லறத் தொழில் வேர்கீழு நரந்தக மேந்தலாலே
இல்லறந் துறவத்தின் இயல்பின ருலகம் இன்றிச்
சில்லறஞ் செய்தாரேனுஞ் சிந்தையோ டியற்று வாரி
லொல்லறத் தவருமோரா யிரத்துளு மொருவ ருண்டால்.

10 துய்ப்படித் தருமஞ்செய்வார்க் கழுக்கறு தொழிலார் செய்யின்
மெய்ப்படி புரிந்தி டாமல் விலக்கு வாரவரும்
செய்ப்படி செலுத்துஞ் செங்கோற் கலியொரு தருமமல்லால்
பொய்ப்படி புரியிலாக்கம் போலவே புதுக்கு மன்னோ.

11 அந்தணர் வேதங் கல்லார்கல்வி யிறைக்கதை சொல்லார்
தந்தை தாய் தவஞ்செய்யார் தாதைதாய் குரவனில்லாள்
மைந்தர் தாம்பூசல்நீங்கா ரொருவருக் கொருவர் வாய்மை
நிந்தனை புரிவர்வேதத் தெய்வமு நினைக்க கில்லார்.

---

8. இருங்கலி - கொடிய கலியுகம், மாயன் - திருமால் உயக்கம் - மயக்கமாம் வருத்தம். கருங்கலி - கொடுமை நிறைந்த கலிகாலத்தின்.

9. நரந்தகம் - புல்லுருவி, உலகமின்றி - வாழுமிடமின்றி ஒல்லறத்தவரும் - இயன்ற அறத்தினைச் செய்தவரும்.

10. துய்ப்படி - தாமனுபவித்தபடி, அழுக்கறு - குற்றம் நீங்கிய, மெய்ப்படி உள்ளவாறு, செய்ப்படி - செய்யும் முறைமைபடியே.

11, இறைக்கதை - கடவுளைப்பற்றிய கதை, பூசல் - சண்டை, வாய்மை- வாயால் பேசுகின்ற குற்றம் (வாய்+மை)

12 சூதகர் நீச ராதி சூத்திரர் யுத மாதர்
பாதகர் தீண்டின் மூழ்கார் பழமறை வழியை விட்டு
சாதகர் சங்குச் சக்க ராதியாற் றபிக்கப் பட்டு
பேதக ரவர் பேதப் பிறருட னுறவு மாவர்.

13 வைதிக சைவ மார்க்க மறையவர் தம்மைத் தள்ளி
பொய் திகழொழுக்கம் பூண்ட பூசுரப் பதத் தோரை
மெய்திகழ் சிரார்த்தந் துய்க்க வரிப்பா நல்விரதம் பேணார்
கைதவ வொழுக்கஞ் செய்வார் நீசர்கைப் பொருளும் ஏற்பார்.

14 பரசிவ லிங்க பூசை பண்ணலார் பண்ணுவாரைப்
புரையென நகைப்பர் மேலாம்பூசுரர் இழிந்து நிற்பார்.
சருக்கர் சரதர் முகரும் பொருணிலங் கண்கொள்பவர்
பரசுமந்தணருக் கின்னல் பயிற்றுவர் பழிமேற் கொள்வர்.

---

2. சூதகர் - பாணர், நீசர் - தாழ்ந்தோர், சூத்திரர் - ஆண்மையாளர், சாதகர் - யோகசாதகர், சங்கு - சக்கரர் - வைணவர், பேதகர் - நிலையில் மாறியவர்.

13. வைதிகம் - வேதாகம நெறி, சைவமார்க்கம் - சிவ நெறியிலார்ந்தவற நெறி, மறையவர் - வேதியர், பூசுரப் பதத்தோரை - வேதாகம நெறியில் வழுவாத தகுதியுடைய அந்தணரை, வரிப்பா - முறைமைப்பாடுடையதாக பேணார் - விரும்பார், கைதவவொழுக்கம் - நெறிதவறிய முறைமை.

14. கிழிந்து - நிலையில் தாழ்ந்து, சருக்கர் - நிலையில் வழுவினவர், சரதர்- நேர்மையான வாழ்வியலுடையவர், பரசும் - போற்றி வணங்கும்.

15 குடிப்பிறந் தொழுக்கம் பூண்ட கோமுடி பொறுப்பதன்றி
வடுப்படுங் குலத்தோரேனும் வலியினால் படையால் மற்றார்
படிப்புற மன்னராகப் பற்றுவர், வணிகர் தாமும்
கொடுப்பது கொள்வதெல்லாங் கோடுவர் நெறியில் நில்லார்.

16 சுருதிசேர் மிருதியாதி சூத்திர ரெல்லை நீங்கி
சாதியோர் நான்கும் வேறா சாத்திர மறையோர்க்கீவர்
வாத்திரத்து அபேதமாகு தயா மாயாலர்
சேத்திடுபொருளை வாங்கச் சிந்தனைச் செவ்வா மன்னோ.

17 மாணிழை மகளிலெல்லாம் மனையறக் கற்பு தீர்ந்து
பூணியே நடையொழுக்கம் பொன்விலை மகளிர் போலக்
காணிய புனைவர் ராக்கள் கற்குமவ்வளவும் போற்றி
பேணுவர் பயன்மறுப்பிற் பிணிக்கு நல்மருந்தும் பெய்யார்.

18 காமமோர் காதி யாறார் கற்பனைக் கடந் தழிந்து
தூமமா ரழலிற் சீறி யிறந்து சோகாப்பர்க் கொரு
நாமிகப் பொய்யே கொள்வர் நண்பராய்க் கருமங் கொண்டு
தாமுறு பகையின் நீங்கார் பிறர்மனைச் சார்ந்து நிற்பர்.

---

15. வடுப்படும் - குறையுடையதாகும், படிப்புற - கீழ்ப்படிதலுற, கோடுவர்- சூது செய்வர், நெறியில் - அறநெறியில்.

16. சுருதிசேர்-வேதத்தினைச் சார்ந்த, மிருதி-ஸ்மிருதி, ஈவா-கொடுப்பர், அபேதம் - வேறுபடாமல்.

17. மாணிழை - விலை மதிப்புடைய ஆபரணங்கள், மனையறம் - இல்லறம், பொன்விலை மகளிர் - பரத்தையர், ராக்கள் - இரவு காலங்கள்.

18. காமம் ஒர்காகு - கரமத்தின் எல்லையை அறியாமல், தூமம் ஆர் அழல்- புகையோடு கூடிய நெருப்பு. கருமம் - தேவையான செயல், பிறர்மனை - பிறருடைய மனைவி.

19 மாரிய முகிலும் பொய்க்கும் வயல்விளைவஃகும் வாணாட்
பாரிய வுயிருங் குன்றும் பசிமிகும்தெய்வ மெண்ணார்
சேரிய கவியினந்தஞ் சிவனெனும் பேருஞ் சொல்லார்
பூரியரன்ன வானார், பூசுரர் தானும் அந்தோ.

20 நினைவினும் செயலினுஞ் சொல்லு நீரினும் நவினுங்
கனவினுங் தீமைசேர் கருத்தினை யெண்ணலால்
இணையவெங் காலம்வந்த இயைபினால் இருந்தோ
ரன்னர்
மனைவினை யாதியெல்லாம் மயங்கிய உரைய வென்ப.

21 பசிகர வழுக்கறை யாகவே பார்த்து மண்ணெலாம்
வசிகர மானது வயங்கிட வலியவெங்கலி யார்ந்து
நிசிகர னாணையின் நெறியே நின்றிடா னொருவேத
சுசிகர னென்பவனைச் சுருதி நெறியாற்றினான்.

22 ஓரிடத் தொருபக லிருக்கி லோயெனச் சார்த்திச்
சேரிட மதற்கெனத் திகழு தீர்த்த யாத்திரையும்
பேரொடு பெயர்ந்தனன் பெரும் பயன் பெறுவான்
நீரிடை மூழ்கினான் ஒதத்துவறித் துறையொடு நீர்மையான்.

---

19. மாரிய முகிலும் - மழையைத்தரும் மேகமும், அஃகும் - குறைந்து போகும், வாழ்நாள் - உயிர்கள் வாழும் நாள், கவியினம் - கவிபாடும் புலவரினம், பூரியர் - அற்பர், பூசுரர் - பிராமணர்.

20. சொல்லு நீரினும் - சொல்லுகின்ற முறையினும், நவினும் - நினைவு கொள்ளுகின்ற, வெங்காலம் - கொடிமகாலம், இயைபினால் - பொருத்தத் தினால், மனைவினை - குடும்பச் செயல்கள்.

21. பசிகரம் - பசியால் வருகின்ற நிலைமை, வசிகரம் - கவர்ச்சி, வெங்கலி - கொடிய கலிகாலம், நிசிகரன் - ஈசன்,

22. தீர்த்தம் - புண்ணிய தீர்த்தங்கள், பேரொடு - தீர்த்தங்களின் தெய்வப்பெயர் பயனறிந்து, பெயர்ந்தனன் - நீங்கிச் சென்றனன், உவரித்துறை - கடலிலமைந்த திருமுழுக்குத் துறை.

23 தவசநீறு கண்டிகை யாணஞ் சாலிகை
கவச முத்தூளன நிறுக் காப்பென
வவச வுட்பதைந் தெழுத்தஞ் செனப்புறஞ்
சிவவெனு மந்திரம் செபித்தகை யுள்ளான்.

24 மங்கலமுந் தெளிந்த வேதியன் மயக்குறு செயலெலாம் மல்கிய
வெங்கலி செயுந் தொடர் வெருண்டு அதனை நீக்கிடற்
கஞ்சியே பூதலந் தன்னிற் றனித்துத் திரிகின்ற போதொரு
வெங்கொடு வரக்கனும் விரைந்து தோன்றினான் கருப்பு நெஞ்சினான்.

25 காழகக் கசரினன் கரிய மேனியன் கடுஞ்சினத்
தாழகத் தீயொடு அழலென சுழனற கண்ணினன்கீழ்
வீழ்தடக் கையினன் வில்லொடு கிளந்தகூர் அம்பினன்
மாயிருள் பருகியே மின்னுறு நீள்பெரு கொடிய வாளினான்.

---

23. தவசநீறு - மந்திரமான திருநீறு, கண்டிகை - உருத்திராக்கமாலை, ஆணஞ்சாலிகை - கலத்தில் விளைந்த சாலிகை, அவசவுட்பதை - பரவச மூட்டும் மனத்தில் பதிந்திருந்த.

24. மங்கலமும் - நலந்தரும் செயல்களும், மயக்குறு - தீமையை நன்மை போல் ஆக்கும், பூதலம் - உலகம்.

25. காழ் அகம் - வலிய மனம், ஆழ் அகத் தீ - படிந்த மனத்தீயாம் கொடுமை, கிளந்த - பொருந்திய, மாயிருள் - கடிய இருள், நீள்பெரு - நீண்ட பெரிய.

26. உறுக்கிய சினத்தி னுரற்றுஞ்சொல் உவப்பறு கடுநகைமேல்
முறுக்கொடு நெடிதாக்கி முயக்கொடு முனிவுகொள் கடுவன்போன்று
நறுக்கிய மயிர்முகத்தி னிறுக்கிய பல்லி னிதழதுக்கினான்
குறுக்கிய செலவொடு குறிப்புடன் குவிந்துக்குறுகும் எல்லையின்.

27. அஞ்சினன் கண்டவன் அஞ்சு எழுத்தையு
நெஞ்சினிற் பயின்முறை நினைத்து நோக்கினான்
மஞ்செனக் கிட்டினோன் வாயி னாதிய
பஞ்செனப் பின்னுறப் பைய நீங்கினான்.

28 பின்னுமக் களிமகன் பிறழ்ந்து வேதியன்
முன்னர் வந்தெய்தினான் முன்னஞ் சொன்னதே
பன்னவ னுரைத்தனன் அவனு நீங்கினான்
இன்னவ னடிக்கடி யியக்க வேகினான்.

29 கலியுக வேதனைப் பயந்து காசினி
மலிபுனல் யாத்திரை வருகின் றேமுடன்
நலிவொடு களிமகன் நடுக்கஞ் செய்யுமென்
றொலி தழை மானினழலுயிர்த் தொதுங்கினரோ.

---

26. உறுக்கிய - வலிந்து அதட்டிய, உரற்றும் - ஆரவாரம் செய்யும், உவப்பறு - விரும்பத்தகாத, கடுவன் ஆண் காட்டுப்பூனை,

27. மஞ்சென - கருமேகம் போன்று, பஞ்சென - மென்மையாக.

28. களிமகன் - மதுமயக்கத்தோடு வந்த கொடிய மகன், முன்னம் சொன்னதே - முன்பு சொன்ன ஐந்தெழுததினையே, பைய - மெதுவாக.

29. மலிபுனல் - பெருகிய நீர், களிமகன் - கள்ளுடை கொடியன்.

30 கேண்மதி சுசிகர் கோடுங் கொடுங்கலி
யாண்மையை யிற்றை நாளடர்ந்து வென்றனை
வாண்மலி கையெனா வந்த மீளியும்
பூண்மலி கலியுகப் புருடனாகு மால்.

31 நின்னை நோக்கி நடந்தவ நின்னையற்
றன்னை நோக்கிச் சரித்தபின் னல்லது
பின்னை நோக்கின் வேறுபெயர்ந்து நீ
யென்னை நீக்கினு மெய்தி வளைக்கு மால்.

32 இடைவிடா தெழுத்தஞ்சையு மெண்ணலாற்
றடைவிடாவிடப் பாந்தளிற் றங்கினா
னடைவிட மடைந்த வசத்தினின்
புடைவிடாமல் வருத்துவன் போலுமே

33 அன்றியும் கலிக்கஞ்சின ரல்லது
வென்றிருந்தவர் மேதினிக் கில்லையா
லென்றும் வேற்றகுவு பாயமில்லைவே
றொன்றிருந் துனக்கஃ தோதலாம்.

---

30. சுசிகர் - சந்திரன், வாண்மலிகை - வாளைப்பிடித்தகை, பூண்மலி கருங்காலம் பூண்டுச் சிறந்த.

31. நின்னை - நின்னைய, எய்தி - நெருங்கிவந்து, வளைக்கும் - சூழ்ந்து கொள்ளும்.

32. எண்ணலால் - செபித்தலால், பாந்தள் - மலைப் பாம்பு, வருத்துவன் - வருத்தமடைகுவன்.

33. மேதினி - உலகம், ஏற்றகு - ஏற்பதற்குத் தகுதியான, உபாயம்-பிழைக்கும் வழி, அஃது - அதனை.

34 காலமாங் கலிகால வெந்தீயினாற்
சீலம் வெவ்விடாயொடு சேர்ந்தவர்க்
கோல மோதியதெள்ளமு தோடையால்
ஞால மேலொரு பஞ்சநதித் தலமாம்.

35 எனை மூன்றுகத்தோ ரெந்த வாற்றினும்
ஞான மேவிய நல்வழி நிற்பார்
ஈன பாவ வுகத்தினுக் கித்தலத்து
ஆன திலை யிங்கிது சத்தியம்.

36 ஒழுக்கஞ் சாயினுமோதுத லாதியா
திழுக்கினா லுஞ்செயாத் தியற்றினும்
பழுக்கு மாதவபஞ்ச நதித்துறை
முழுக்கினா லவைமுற்றி முயன்றதாம்.

37 மாடு மாதர் மணவாழ் மனைத் தேடினார்
கூடு மாறெளிதா மினிக் கூடரி
நாடுமாறு வல்லானையை யாற்றிற் போய்
பாடி யாடிப் பணித்திடும் பத்தியே.

---

34. சீலம் - ஒழுக்கம், ஓலம் - அடைக்கலம், ஞாலம் - உலகம், பஞ்ச நதித்தலம் - திருவையாறு.

35. மூன்றுகத்தோர் - சென்ற மூன்றுயுகத்து மக்கள், ஆனது இல்லை ஆகக்கூடியது இல்லை, சத்தியம் - உறுதியாகும்,

36, ஒழுக்கம் சாயினும் - மக்களின் நன்னடத்தைகள் தாழ்ச்சிபெறினும், பழுக்கு மாதவ - அனுபவத்தால் முதிர்ந்த மிக்கதவமுடையாய், பஞ்சநதித் துறை - திருவையாற்றுக் காவிரித்துறை, முற்றி - பயன் நிறைந்தது.

37. மாடு - செல்வம், மாதர் - பெண்கள், மனை - மனைவாழ்க்கை, அரி நாடு மாறு - திருமால் நாடிச்செல்லுமாறு.

38 அஞ்செழுத் தொரு பஞ்சரமாக நீ
நெஞ்சழுத்தி நிகழ்ந் தவணெய்தினால்
வஞ்சமைக் கலியாமாறு மன்னனுக்
கிஞ்சி மொய்த்த முளவாடி யிருந்தலம்.

39 புண்ணியம் புரிந்தொய்திற் புக்கபின்
கண்கொள் வாவியுளத் தமுங்குதி
கொண்டிட வாதாவால் மாகம்பெறு
வாணிமகிழ்ந் துரவோன் மிதிக்குதலம்.

40 எல்லை மிதித்தலுமே சோகம் பரிந்து
ஒல்லையில் நீங்கக் கலிப்போயகல துணிந்தங்கு
வெல்லையில் விழுந்து எழுவான் பூகங்கமழ்பாளை
எல்லையில் மணங்கமழும் பஞ்சநதித்துறை யடைந்தான்.

(வேறு)

---

38. பஞ்சரமாக - பாதுகாப்பான கூடாக அமைய. நெஞ்சழுத்தி - மனத்தில் இருத்தி, அவண் - அவ்விடத்து- இஞ்சி - வளைத்தமதிள்,

39. புண்ணியம் புரிந்து - தான தருமம் செய்து. ஒய்தில் - விரைவாக, அமுங்குதி - தீர்த்தமாடுவாய், மாகம் - தூய வடிவு, வாணி - கலைமகள், உரவோன் - பிரமன்.

40. எல்லை - தலத்தினெல்லை, ஒல்லை - விரைவாக, பூகம் - பாக்குமரம்.

41 கண்டான் சிவனாயலங் கண்ணிணையிற் காநாள்கலி
காலனைக் காக்குமெனக்

கொண்டான் நமக்கித் தலமல்லதிலைக் குறையோ
வொழுக்கப் பயிர்வேலியெனத்

தண்டாமரைப் பூந்தடங் காவிரிநீர்த் தாழ்ந்தானுமை
பாகனைச் சன்னிதியிற்

பண்டாழ் மறைபாடினனாடி பின்னாற் பலகாற்
றொழுதாடிய பாவகனே.

42 சாவித்திரி மந்திர மாயிரமுஞ் சத்தருத்திரமும் மந்திரமுஞ்
சேவியாச்

சேவித்திரவும் பகலும் சிவனைச் சீராம அயிடேகமுறும்
பொழுதிற்

பாவித்துரை செய்தருள் பஞ்சநதிப் பதியைப் பலகால்
வலம்வந்

தாவித்துத் துணையே யமுதின்சுவையே யணியே மணியே
யெனவே.

43 அன்புக்கு உருகும் பெருமாளொரு நாளவனுக்
கெதிராகத்தோன்றி நிந்தியகே

ணின்பக்குவ நல்விணை யாலிவணே நீவந்தனை
யுன்மாதவந் தனையால்

இன்பச்செயல் பெற்றனமுற்ற மேலென வேண்டினை
நம்முன் வேண்டுகெனப்

பின்பச்சுகியோன் கலியின் துயரம் பெயர்வித் தருள்வாய்
பெரியோயெனவே.

---

41. காநாள் - காக்கும் நாளில், பண்டாழ்மறை - பழமையில் மிகுந்த வேதம் (சாமவேதம) பின்னால் - தொடர்ந்து மேலும், பாவகன் - தியானத்தில் சிறந்தவன்.

42. சாவித்றிரி மந்திரம் - சத்திமத்திரம், ருத்திர மந்திரம் - சாதனை நல்கும் மந்திரம்.

43. பெருமாள் - திருமால், பக்குவ நல்வினை - தகுதி வாய்ந்த நற்செயல், உற்ற - நேர்ந்த, பெயர்வித்து - நீக்குவித்து.

44 கருங்கைக் கயவன் கவிநிற் கலியைக் கண்டாயபய
நெஞ்சுண்டா யெமதாய்

பெருங் கற்புடை யஞ்செழுத்தும் வருத்தப் பெயர்ந்தாய்
மறையோய் பெயர்பேசுனருக்

கருங் காரினற் பசுவே யனையே மதனா னிழல்வா
யருவாயவணே

தருங் கற்பகம் இத்தலம் நீநினைக்கத் தந்தேமிகவுந்
தலஞ் சார்ந்தனையால்.

45 மலை மேலிருந்தார்கள் மறப் புலியால் மருள்வோ

ரிலை யித்தலம் வந்த வுனக்கிலை மேல்வருவன்

அலை வேதனையா லெவரேனு நினைந்திப்
பஞ்சநதிப்பதிசெப்புவரே

லுலைவெது மறுத்தவர் முத்திக் குறுசெய லுண்மையதால்.

46 எப்பேரினுமித்தல மேன்மையினா லெய்தும்பெயர்
மூன்றுள் மற்றவைதாஞ்

செப்பேசுர நாயக னென்றொருபேர் திருப்பஞ்சந
தேசுவரனாம்

மற்றொரு பேரெப்போதுமிலாப் பிரணதார்த்திக ரப்பேரிவை
மந்திரவுண்மை

முப்போதுமெண்ணி மொழிந்திடுவோர் முடியாமுதல்
முத்தியின் முன்னுவரால்.

---

44. கருங்கைக் கயவன் - கலிகாலன், கவிநில் - கவிழ்ந்து நிற்கும், பெருங்கற்பு - பெரிய திண்மை.

45. மறப்புலி - வலிமை மிகுந்த புலி, அலை வேதனை - அலைக்கும் வேதனை, செப்புவரேல் - சொல்வார்களாயின்.

46. பெயர் மூன்றுள் - செப்பேசுவரன், பஞ்சநதேசுவரன், பிரணதார்த்திகரன் ஆகிய பெயர் மூன்றுள், முன்னுவர் - அடையப் பெறுவர்.

47 வஞ்சக்கலி வெந்தொழிலாற்றுவன் மாபாதகமாதி யறுப்பன் கண்
டஞ்சப்படு பூதபகாச்சுரர்க் காகிடு மஞ்சன மாவன் மா
நெஞ்சிற்பயம் நீப்பன் கம்பிமுத்திரையங் களினின்று மொடுப்பவை
னஞ்சுக்கொரு காருடனீர்மையென் நாமமின்புறு மூவகை நாமமுமே.

48 காலற்கனு காணுவரமாகுவன் கல்விக் கடலெல்லைக் கடத்துவன்
ஞாலப்பதிநற் சிவ தீர்த்தமெலாம் நன்றாடிய புண்ணியம் நல்குவன்
சாலப்பரிமேத முதற்பெரிதாஞ் சதுர்வேள்வி முடித்தன தன்மையென
மூலச்சது ரவேதமெலா நெடுநாள்மொழியும் பயனவன் பெயர்மூன்றினுமே.

49 மூன்றான நாமம் மொழிந்தவாறா முடியாதனவில்லை முதற்கருமந்
தோன்றாமல் மாயை துடைத்துலவாச் சுகவாருதியிற் புகவுய்ப்பவன்வே
றொன்றாய பலசொல்லிய நாவோடறைவோர் படர்திக்கினும் வந்தடார
தென்னார் கலியுன்னை யடுத்திடுமோ வினியின்னமும் வேண்டியகேளெனவே.

---

47. மாபாதகம் - மிகப்பெரிய பாபச்செயல், காருடன் - கருடன், நீர்மை - நற்செயல், நாமம் - திருப்பெயர்.

48. காலற்கனு காவரமாகுவன் - இயமனுக்கு உயிர்களை அனுகவியலாத அளவில் அன்பருக்கு வரமருளுவன், சால - மிகவும், பரிமேதம் - அசுவமேதயாகம்.

49. மூன்றான நாமம் - 46 ஆம் பாடலில் காண்க, மயை துடைத்து - மாயையை நீக்கி, உலவா - அழியாத, என்னார் - என்று கூறார்.

50 சேர்ந்தாரிடர் தீர்ப்பவன் சிவனே செப்பேசுர நாயகனே
யுமையாள்பாகா
இமையோர் கண்டஞ்சு கறைசேர்கண்டா மதிசேர்முடியா
முனிவர் வேந்தர்
பரமாவிமலா விரகாவினை தீர்ப்பவனே வேதா ஆனந்தா
அன்பருள்ளத்
தறிவுக்கறிவே பிறியா தைய்யா றுடையா யடிகேள் சரணம்.

51 கலிக்குப் பயந்தே னல்லேன் காலத்தியல்பிற் பாவத்
தொழிலாம்.
புலிக்குப் பயந்தோன் முதலாபுகுமிடமிப் புவியிற்புரியித்தல
மல்லதில்லை,
சொலிக்கப் படுநின் செம்பொற்சுடராங் குறியைச்
சுற்றித் திரியும்
பலிக்கத் தருநலவா நல்கெனப் பணிந்தானது
பணிந்தா னவனும்.

52 காலக்கலி நானாளாதிப் பொழுதாய் கருமந் தருமந்தரவே
கருதிச்
சீலத்தவனுக் கருளிச் சிவனும் செம்பொற் குறியாயுறையச்
சுசியோன்
மேலற்புத முற்றுன மெய்ப்பினுடன் விரும்பிப் பிரியாதரும்
பொற்பதிவால்
கோலத்துடனற் பொழுதுங் கழியக் குலவுஞ் சிவன்வாழுல
கெய்தினனே.

---

50. இடர் மிகு துன்பம், விரகா - தேவர்களின் துன்பந்தீர்க்கும் உபாய முடையவனே, அறிவுக்கு அறிவு - ஞானம்.

51. பயந்தேனல்லேன் - பயப்படவில்லை, புகுமிடம் - அடைக்கலமாகப் புகுமிடம், குறியை - இலிங்கத்திருமேனியை, பலிக்கத்தரு - வேண்டியது பலிதமாக வரம் தருவாய்.

52. சீலத்தவன் - வைதிக ஆசாரமுடைய சுசிகரணன், மெய்ப்பு - அனுபவவுண்மை.

(சுசிகரணனத்தியாயம் முற்றும்)

# சுசரித னத்தியாயம்.

(பிரணதார்த்திகர் சருக்கம்)

1 கனைமிகு கவுத மிக்கரை நன்னாட்டிடை
வினையறு சுகபனென் றொருவன் வேதியன்
மனைவியுஞ் சுதிவல வென்றுரைப்பர் மற்றவன்
தனையனுஞ் சுசரித னென்னுந் தன்மையான்.

2 அன்புடை யில்லறம் பலித்த தாதலின்
முன்புள சுதவன சுதபன் மற்றவன்
தன்பதி விரதமேற் கொண்ட தன்மையாற்
றுன்பறு சுசிலையே சுசிலை யென்பவே.

3 மொழியினு மெண்ணினு மியாக்கை முற்றிய
தொழிலினுஞ் சுசரிதன் சுயரிதன் மினார்
பிழிமது நவமலப் பெய்த கூந்தலி
னெழிலுறு போதும்பர் நாட்டிருக்கு நாளரோ,

4 ஆண்டு பன்னிரண்டு கார்ப் பருவ
மாண்டறக் கொண்டர் கோளிரு கடவுட் கூற்ற
வேண்டரு மறுதொழில் விடுத்த வைதிகம்
பூண்டது பெருங்கலிப் பொய்மை மிக்கவே,

---

1. கனை - ஒலி, வினையறு - வினையினின்று நீங்கிய, வேதியன் - வேதாகமம் வல்ல பிராமணன், தனையன் - மகன்.

2. சுதபன் - எல்லா நலமும் வாய்க்கப் பெற்றவன், சுசிலை - அன்பு நிறைந்தவள்,

3. யாக்கை - உடல், சரீரம், மினார் - மின்போன்ற அழகுடைய மனைவி, எழிலுறு - அழகு பொருந்திய.

4. ஆண்டு - வருடம், கார்ப்பருவம் - மழைகாலப்பருவம், மாண்டு - முற்றிலும் மாற்றமடைந்து, கொண்டர் கோள் இரு கடவுள் - மழைக்குரிய இரு கடவுளராகிய இந்திரன், வருணன், பெருங்கலி மிகப் பெரிய கலிகாலம்.

5 ஒருதவத்தவர் நினைந் தொன்றி நின்றனர்
பொருதனர் தந்தைதாய் புதல்வ ரில்லொடுங்
கருதினர் பிறநறலங் கற்பில் மங்கையர்
மருதமும் பாலையாய் வறந்த தென்னவே,

6 சசியுறா வயின் குழிதூற் சிலாமையாற்
பிசித முண்டென்பினும் பிறந்து முளைதீர
பொசிவற வுயிருணப் புகைந்து மேலெழும்
பசியெனுந் தீக்கறம் பருசு பட்டதே.

7 மை புறைக் கறுந்தலை மையிட வூர்தியின்
கையிடைக் கடலிடைக் கனவினா விடைப்
பையுடைப் பகிறலைப் பாம்பின் பல்லிடை
யுய்யிடைப் பசியின் வாயுபப் பாய்ந்ததே.

8 வாகடந் திறந்தவ ரன்றிவர் வாழுநற்
சோகடந் தருள்கில் தீங்கு மிகன்
நற்கடங் கூடில் என்று நாடு போய்க்
கற்கடங் கடந்தனர் கடலெண் டிக்கினும்.

---

5. ஒருதவம் - ஒப்பற்ற தவம், பொருதனர் - வீண்வழக்கிட்டனர், மருதம் - மருதநிலமாகிய வயலும் வயல் சார்ந்த வளமமன நிலம், பாலையாய - மழையில்லாது வறண்ட பயிர்பச்சை இல்லாத பாலை நிலமாக, வறந்தது - வற்றிப் போற்று.

6. சுசி - முதுவேனிலாகிய வெய்யல் கொடுமைக்காலம், பிசிதம் - பற்று, ஈரப்பற்று, பொசிவற - சிறிதளவும் இல்லாமல், பருசு - குற்றப்படல், சசி - மழை.

7. மையுறை - கருமை பொருந்திய, பையுடை - விடப்பையையுடைய, பகிறலை, - பிளந்தவாயையுடைய தலை.

8. வாகடம் - மருத்துவம், சோகடம் - வருத்தமான நிலைமை, நற்கடம் கூடில் - நல்லகாலம் அமையின், கற்கடம் - கற்கள் பரவிய பாலை நிலம்.

9 வித விரதத்தினா லிவணத்த மெய்யுடைச்
சுதபனுந் துணைவியும் சுதனும் பின்வரப்
பதவுண வஃகிய பசியின் வாடுநாள்
உதவுன ரின்மையி னொருவ னான ரோ.

10 தேயமேற் றறிந்த நாள்வரிற் செய்யவன்
போயரும் பஞ்சந தேசம் புக்குமேற்
காயும் வெங்காலனைக் கடந்துற் றானத்
தூயவர் தொழுதன பற்றிச் சொல்லுவான்

11 யாண்டு செலப்பிரிந்தனன் புகுந்த தெப்படி
சேண்டரும் போதும்பர்சூழ் திருவை யாற்றிடைக்
காண்டருமம் காலனைக் கடந்த தேயத்தவர்
மாண்தவம் விரித்தெனக் கருள் என்றனன்,

12 கற்பும் ஞானமும் சுரந்த கற்பெப்
பொற் பசு கடியெனும் பூரணம் கேண்மதி
உற்பதங் காதையீது நன்காதை தாய்ச்
சொற்பணி சுசரிதன் செய்து சூழுநாள்.

---

9. விதவிரதத்தினால் - பலவகையான விரதங்களினாலும், இவணத்தம் - பாலை நில வழியிடையே பதவுணவு அஃகிய - பக்குவம் செய்யப்பட்ட உணவு குறைந்து போக, ஒருவனானரோ - தனித்தவனாயினன்.

10. நேயம் ஏற்று - பிறநாடு செல்லுதலை சுதபன் ஏற்று, பஞ்சநதேசம் - திருவையாறு, புக்கு - புகுந்து, சென்று, காயும் வெங்காலனை - துன்பந்தரும் கொடிய கால மாகிய எமனை, தூயவர் - மனத்தூய்மையுடையவர்.

11. செல - செல்ல, சேண்தரும்போது - தொலை தூரத்திருக்கும் போது காண்தருமம் - காணத்தகும் தருமம், மாண்தவம் - மாண்புள்ளதவவொழுக்கம் விரித்தென - விரிவாகச் சொல்லுவாயாக என்று,

12. கேண்மதி - கேட்பாயாக, உற்பதம் - தோன்றும் நற்செயல்.

13 மாண்டனன் வினைப்பயன் மறப்பத் தந்தைதாய்
யாண்டுடனிறந்த நாளாங்கு நீங்கினான்
வேண்டிய நிலம்புல மறிந்து மெச்சியோர்
காண்ச் செய்கடனாற்றினன் மைந்தனே.

14 வளங்கெழு பெருமதி மற்றுந் தண்ணடைக்
களங்கெழி யுழலுமக் காவிரிக் கரைத்
தலங்கெழு சங்கரானலயங் கண்டாழ்ந்தெழுந்
துன்பங்கெழ திருப்பழனத்தை யுற்றனன்.

15 சுழிதரு பிறவிதன் னோய் மாந்தரிற்
கழிவாதல் பிறவி தன்னோய் மாந்தரிற்
பழிவினை வருத்தமோர் பசியின் வெவ்வேளையில்,
வழிவரு வருத்தமே மறப்ப மூழ்கினன்,

16 நித்திய நியம முடித்தந்தணன் மனையத்
திருநக ருளாற் கடிசில காலமா
யொத்தத னிலைக் குறியவிடம் புக்க
வுண்டுத் தன்னொரு நிழற் றுஞ்சினானரோ.

---

13. வேண்டிய நிலம் - தான் விரும்பிய இடம், புலம் - நிலத்தகவான தலம், காண்தக - காணத்தகுந்த,

14. வளம்கெழு - வளமை பொருந்திய, நண்ணடை - குளிர்ந்த செலவுடைய, துன்பங்கெழ - துன்பம் பொருந்திய நிலையில்,

15. பழிவினை - பழி தரும் செயல், வெவ்வேளையில் - கொடிய நேரத்தில், மூழ்கினன் - காவிரியில் மூழ்கி எழுந்தனன்.

16. நித்திய நியமம் - நாளும் காலத்தொடு செய்யும் நியதிகள், கடிசில் - உணவு,

17 ஊழிதருமயர் வுயிர்த் தொடங்கி னான்றனக்
கழிவாலொரு கனா வச்சஞ் செய்தலால்
மொழிகுளறிட வெழுந்துடல் முக்கித்திட
விழிவழி புனலெழ விம்மி யேங்கினான்,

18 கலங்கி யுண்டுக் கொடுகாவிரித் துறைப்
பொலங்கரை நடந்தனன் பொதும்பார் நீழல்போய்
நலங்கிளர் பஞ்சநதேசம் நண்ணி யாங்கு
இலங்கு தென்வாய்தனிற் செல்லு மெல்லையின்.

19 பொன்னி தோய்தலிற் தோய்ந்தன
வென்னமின்னி வார்சடையானை யெவ்வுலகமும் விளங்குந்
தன்னி னோங்கிய புகழொளி தன்னைமொய்ப்பதென
மன்னியோங்கு வெண்ணீற்றால் வயங்கொளியானை.

20 அறிவு காண்டலும் புகைமேலரும்பிய போலுளச்
செறிவுதாங்கு தண்டிகைத் தொடையானை வெஞ்சினத்தைப்
பொறிகளோடு கீழ்ப்படுத்திய போற்பொறி வீரராய்
பிறிவிரைப் புவியதனின் மேலிடைப்புளக மேலரும்பியபோல்,

---

17. ஊழிதருமயர்வு - என்றும் இல்லாத மிகுந்த களைப்பு, கழிவால் - சிந்தனை எச்சத்தால், முக்கி - திணறல்.

18. கலங்கி - உள்ளம் கலக்க மடைந்து, பஞ்ச நதேசம் - ஐயாறு, நண்ணி - அடைந்து, இலங்கு - விளங்குகின்ற, எல்லையில் - அச்சமயத்தில்.

19. பொன்னி - காவிரியாறு, தோய்தலின் - நீராடியதின், மன்னி - நிலை பெற்றதாக, வெண்ணிறு - திருநீறு, வயங்கு - விளங்குகின்ற:

20. காண்டலும் - காணும் போது, பொறி - ஐம்பொறி, பிரிவுவிரை - பிரிவு என்னும் மாற்றம் விரைந்து நடக்கின்ற.

21 பற்பலவேதநூல் மார்வின மேற்படிவித்த தென்னப்
பொற்பில் முப்புரி நாலுடையான்தனைப் புவனஞ்
சிற்பரன்றளைப் போலுளந் திகழ்தலிற் செயலு
மற்பின முற்றையு மெடுத்தழித்தாக்க வல்லவன்,

22 உடனிமிர்ந்து கண்முதன் மூக்கிடை நுனியுறவுச்சி
மிடறு மேலெழத் தொள்கரி கரிந்துகை
விடாமாற் றிடமுறும் பதுமத்தின் மேற்சிந்தையின்
முக்கட் கடவுளைத் தியானம் பெறுமளவில்.

23 கண்டு தாள்களில் வீழ்ந்து தனக்கவ்வுவகை விடாது
மண்டு கண்டுழி மானில நனைப்பவாய் வொருவி
விண்டு விம்மி விம்மிப் பயந்தழுதலு மாதென
கொண்ட தச்சமே யென்றுதன் கொடுங்கையி லெடுத்தான்.

24 அஞ்சலஞ்ச னினச்சமே னெங்ஙன மடுத்தாய்
மஞ்ச வெத்திசை நாட்டுளா யுன்மனப் பயந்தீரத்
துஞ்சு போம்வகை காத்து மற்றெனக்கருளுண்டாம்
பஞ்ச மாநதிக் கருணையாங் கடலெனப் பணித்தான்.

---

21. அற்பின - அற்பமானதாகக் கொண்ட, முற்றையுப் - எல்லாவுலகங்களைவும், எடுத்து - உண்டாக்கி, ஆக்க - மீண்டும் தோற்றுவிக்க.

22. உடல் நிமிர்ந்து - உடலை பத்மாசனத்திருத்தி நிமிர்ந்து, தொள்கரி - மும்மலச்சேறு ஆகிய அழுக்கு, பதுமம் - உள்ளத்தாமரை, முக்கண் கடவுள் - சிவபெருமான்.

23. கண்டு - சிவனைக் கண்டு, அவ்வுவகை சிவபெருமானைக் கண்ட மகிழ்ச்சி, மண்டு - செறிந்து நிறைந்து, மாலென கொண்டது - மயக்கமான தொன்று என்று மனத்தில் கொண்டது.

24. அஞ்சல் - அஞ்சாதே, அடுத்தாய் - நம்பிப்பின்பற்றினாய், மஞ்ச - உயர்வான, துஞ்சுபோம் வகை - அறவே நீங்கிப் போகும் வகையில்.

25 அருந்ததிக் கிறையாற்றலும் அவற்றின் கேளாய்
திருந்துமைந்தனு மொருபடி தெளிந்து மாதவனைப்
பொருந்து கவுதமிக்கரையுளேன் போய்க் கலிமிகலால்
வருந்துதாதை தாயுடன் புறநாட்டிடை வந்தேன்

26 தந்தை தன்பெயர் சுதபனே தாய்பெயர் சுசீலை
யெந்தை யோடவன் முடிதலஞ் சுசரித னெனப்போ
யிந்த நாடெலாந் திரிந்து வந்திந்த கீழ்பால்
வந்தனே னொரு மானிழற் றுஞ்சலு மன்னோ.

27 முரணிவோர் மகனகினா விடையடைந்த தளறுமுதலா
யரணி லரவஞ்சு நாட்டுளே நமனுனை யழைக்கு
மரணமாதி யென்றுரைத்திடக் கண்டு மாழாந்தெனச்
சரண மென்றுனைக் கண்டின்றறிந்தேன் தக்கோய்.

28 செய்தவக்குறை யென்கொலோ தீவியுளதோ
எய்து மெய்ப்பவன் பேற்றிலே னிடையுயராண்டு
கைதவக் கொடுங் கூற்றுவன் கைபடக் கடவென
வைதிகச் சிகரமணியினக் காகென வசிட்டன்.

---

25. ஒருபடி தெளிந்து - ஓரளவு தெளிந்து, மாதவனை - திரு மாலை, கவுதமி - கவுதமிநதி, தாதை - தந்தை.

26. எந்தை - எனது தந்தை, கீழ்பால் - கிழக்கு திசையில், மா நிழல் - மாமரத்தின் நிழலில், துஞ்சலும் - அயர்ந்து தூங்கிடவும்.

27. முரணி - மாறு பட்ட வடிவில், அகினா - பிளந்த நாக்கையுடைய பாம்பு, அளறு - சேற்றைப்பூசிக் கொண்டு, மாழாந்து - மயக்க மடைந்து-

28 தீவி - தீவியமாகிய நன்மை, கைதவம் - இழிவான செயல், வைதிகம்- வேதாகமநெறிமுறை.

29 பொருமிக் கண்சிவந்தழலெனப் புதல்வனை நோக்கித்
தருமத்தின் பரிபாகத்தை யோகத்திற் கண்டு
நிருமித்தங்ஙன் சுசரித ளினது முற்பிறப்பில்
வருமத்தன்மை யிச்சேட மென்றவர்க்கது வகுப்பான்.

30 பலயிறப்பி லோர்பிறப்ப நீபற்பல தொந்தங்
கிலகவ்வியா லகந்தை யினாலரிய நூலை
உலகமெண்ணு மாசான் முகத்துணர்கி லுணர்ந்தாய்
குலவி வுரங்கும்பி பாகங்களிற் குளித்தாய்.

31 ஆங்கு மானுடமோர் நூறு நூறாக
வெங்கு துக்கமாதி புடத்தினமிழ்ந்தினை யெழுந்தாய்
பாங்கு துய்த்தவர்க ளேடத்தினாற் பார்மேற்
றீங்குசேர் கழுதை பிறப்பொருபது செறிந்தாய்.

32 கள்ளமார் நரியோரிக ளொருபது கண்டாய்
எள்ள நாய்க்கருப்பங்கள் பஃதுற்றனை பின்
பிள்ளையாய் பிணப்பெருங்கழுகாகியப் பெற்றித்
தள்ளாப் பிறப்புற்றனை யிற்றெலாம் தவிர்.

---

29 பொருமி - விம்முதல் செய்து, பரிபாகம் - செயல் முறை, சேடம் - முற்பிறப்பின் தொடர்ச்சியாக வரும் வினை விளைவு.

30. அகந்தை - தானென்ற ஆணவம், கும்பிபாகம் - கருவினாலாய பிறப்பி, குளித்தாய் - அனுபவித்தாய்.

31. வெங்கு - செயலால் வரும் நலிவு, ஏடம் - காமவிருப்பம், ஒருபது-பத்து.

32. கள்ளமார் - வஞ்சனை பொருந்திய, நரி - குறுநரி, ஓரி - பெருநரி, எள்ள - யாவரும் இகழ, நாய்க்கருப்பங்கள் - நாய்ப்பிறப்பு, இற்றெலாம் - இவையெலாம்.

33 தரையினின் சண்டாள னாயச் சங்கரசாதிப்
புரையில் சூத்திரன் வாணிகன் புரல்லனடைாவே
வரையி லொவ்வொரு பவங்கடந்தந்தண வருணக்
கரையிலேறினை நல்வினை முகிழ்த்தலாற் பெற்றனை.

34 வாழுநாட் குறையானது மற்ற வெவ்வினையே
யூழிலின்னமும் பூசுரப் பிறப்புரை யொருபாண்
றாழில் பிறப்புத்தெனுந் தந்தைதாயிழந்து காழில்
வாழு நாளிடை முறிந்தெய்துவை கண்டாய்.

( வேறு )

35 முருகு வாய்விரி தாமரைப் பொகுட்டினான் முகத்தோன்
தருகுமாரனீ துரைத்தலுஞ் சுசரிதன் நற்கோவே
திருகு தீவினைப் பாக்கியம் எப்படித்தீரும்
அருகுபாயம் தற்தருளென வருமுனி யறைவான்.

36 பெரிய காலனை வெல்வது கேளினிப் பின்னரைதல்
அரிய காவிரி முப்பொழுதும் படிந்தாடிக் காணற்
கரிய மாலயன் சூழ்திருக் கோயிலிற் காதல்
புரிதி நாதனைப் பாங்கமைப் பஞ்சநதேசனைப் போற்றி.

( வேறு )

---

33. சண்டாளன் - கொடும்பாதகன், சங்கரசாதி - கலப்பு சாதி, யுரையில் சூத்திரன் - குற்றமற்ற வேளாளன், வருணக்கரை - சாதியாகியகரை, முகிழ்த்தலால் - தோன்றியதால்.

34. வெவ்வினை - கொடிய வினை, ஊழில் - முடிவில், பூசுரப்பிறப்பு - அந்தணப்பிறப்பு, காழில் - வலிந்தவாழ் வில்,

35. முருகு - அழகு, பொகுட்டு - மொக்கு, நான் முகத்தோன் தரு குமாரன் பிரமபுத்திரன் வசிட்டன் அருகும் உபயம் - குறைந்தழிதற்குரிய நல்வழி.

36. பெரிய காலன் - பெரியதாகிய எமன், அரிய காவிரி - சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய காவிரியாறு, படிந்து - நீராடி, மால் அயன் - திருமாலும் பிரமனும், காதல் - நிலையான பற்றுதல், புரிதி - செய்வாயாக.

37 சூழ்வலஞ்செய்து குத்திர மந்திரஞ் சொல்லித்
தாழ்விலஞ் செழுத் தோதி யிராப்பகற் றப்பாது
ஆழ்விலாம் மோனமோடிப்படி நாள்களோர் நாள்
வாழியின்று முதற்செயல் வெல்வது வாய்மை.

38 அய்யமில்லை யமன்வர வஞ்சுவ ஞைசான்
மைய்யடர்ந்த வெம்மேதி லெங்ஙனம் வந்தால்
மெய்யடர்ந் தடும் பஞ்சனதேசன் விடுக்குமங்
கையடங்கும் கழுக்கடை வெம்பகை கண்டாங்

39 என்னைக் காத்தற் கிருந்தனன் பஞ்சனதீசன்
உன்னைக் காத்தற் கிருந்தனன் யானெனவோதி
அன்றே சாலைய வாச்சிரமத்திற் படர்ந்தான்
முன்னற் காற்றிய நீதியிற் செயல்முயன்றான்.

40 ஏத்தியானன் மஞ்சுடை யான்றனை யெண்ணு
நாத்தியான் நெஞ்சோடஞ்சு நாட்செலு நாளால்
ஆத்தியான் தண்காவிரி மூழ்கினா னாங்கு
மாத்தியான் முடிந்து திரும்பி வருங்கால்.

---

37. குத்திர மந்திரம் - குறிக்கோள் நிறைவேறுதற்குரிய மந்திரம், மோடிப் படி - பயன்வரும் செயற்படியே, ஆழ்வில் ஆம் - உறுதிப்பாட்டில் உண்டாகும்.

38. ஐய்யமில்லை - சந்தேகமில்லை, மெய்யடர்ந்து அடும் உடலைச்சார்ந்து அழிக்கும்.

39. சாலைய - வேதாகமசாலையாகிய, படர்ந்தான் - சென்றடைந்தான் வசிட்டன்.

40. ஆனன் - இடபவாகனமுடையான், மஞ்சுடையான் - சடையில் நால்வகை மேகங்களை அணிந்தவன் (சிவன்) ஆத்தியான் - ஆத்திமாலையை யுடைய சோழனது, மாத்தியான் - தன்னை தூய்மையாக மாற்றிக் கொண்டவனாகாமல்,

41 பாலனாய் இவை நொந்தனன் மாதவன் பார்த்து
காலத்தூதுவர் தீண்டுதற் கஞ்சுவ கண்டு
நீலமேரு விலோர்கரி ஞாயிறு நேர்ந்தாற்
போல மேதியிலந்தக னேறினன் போந்தான்.

42 சுரங்காதி வியாதிநெடும்படை சூழ்ந்தாங்கு காலன்
மிருத்து முதற்றலை யோர்க்குட் கரங்கொள்
பரசமுத் தண்டமுங் கொண்டெதிர் கண்டொ
ருரங்கள் மாயவருமாய ரூப மாடுற்றான்.

43 பிடித்து வெட்டடி குத்தடிகண்டு மளந்து
குடித்திரத்த மிறைச்சிகொள் கொப்பிளி கொல்லு
துடித்திடக் கடியென்று பயப்படச் சொல்வாய்
மடித்துரப்பி வரும்படை சூழ்தர வந்தான்.

44 இந்த காலனுங் காவிரித் தென்கரை யெய்த
முந்தை பாலனு நின்றன னந்தர முற்றி
அந்தா நளனும் கண்டன னேங்கின னாங்கு
வந்ததால் வருகென் றவன் பக்கல் மிதித்தான்.

---

41. மாதவன் - வசிட்டன், காலத்தூதுவர் - எமதூதர்கள், மேதி - எமனுடைய எருமை வாகனம்.

42. சுரம் ஆதி - சுரம்முதலான, மிருத்து - இறுதிநிலை, பரசம் - மழுவாயுதம், தண்டம் - தண்டாயுதம், உரங்கள் - பாம்புகள்.

43. பிடித்து - சுசரிதனைப் பிடித்து, சொல்வாய் - சொல்லுகின்றவாய், உரப்பி - உருமுதல் செய்து.

44. எய்த - அடைய, முந்தை - முற்பட்ட, அந்தணாளன் - சுரதனாகிய பிராமணன்,

45 ஒவ்வோல வசிட்டதபோதன வோலம் காலன்
மேயினன் காவிரித் தென்கரைக் கண்டேனல்
வெவ்வெனம் புரப்பாயெனை வோடக் கொல்
காலமென் விலகுமென்று விரைந்து குதித்தான்.

46 அந்த வந்தகன் வந்தனன் வந்தன னந்தோ
யெந்தாய் மைந்தன் பயந்தனன் வந்தன னென்று
பந்த சிந்தனை சங்கை தெளிந்த வசிட்டன்.
புந்தி முந்தி விரைந்தெதிர் வந்து புகுந்தான்.

47 மற்றை யாச்சிரமத்தினுள் சென்ற வன்மங்கா
யிற்றை யாச்சுத்துச்சு மென்னோடினை யென்றான்
கற்ற மாதவப் பொன்னியதன் தென்கரைக் கண்டான்
சொற்ற கூற்றுவன் வந்தனனென்று துளங்க.

48 கையினா லனைத் தஞ்சலைக் காப்போம்
வைய்யமாளி வரங் காலனுக்கென்ற வணின்
நய்ய வாவெனக் கோயிற்றென் வாயிலெடுத்த
செய்யகாவிரி யுத்தர தீரத்திற் சென்றான்.

---

45. ஒலம் - அடைக்கலம், வெவ்வென - எனக்குப்பற்றுக்கோடாக விரைந்து, புரப்பாய் - பாதுகாப்பாய்.

46. அந்தகன் - எமன், பந்த சிந்தனை - பற்றோடமைந்த நினைவு, புந்தி மூந்தி - எண்ணுவதற்கு முன்னதாக, சங்கை - சந்தேகம்.

47. ஆச்சிரமத்தினுள் - வசிட்டனுடைய ஆசிரமத்தினுள், துச்சும் - வருத்தும், துளங்கவந்தனன் - யாவரும் காணுமாறு வந்தனன்.

48. அஞ்சலை - அஞ்சாதே, வைய்யமாளி - உலகங்களை ஆளுகின்ற சிவன், செய்யகாவிரி - தூய்மையான காவிரியாறு. உத்தரதீரம் - வடக்குக் கரையிலமைந்த தலம்.

49 வாயினஞ் செழுத்துச்சரித்தி நின்ற வன்மையும்
நீயுமஞ்செழுத் துச்சரிக் கென்ற வணின்றான்
காயு வெஞ்சமன் சேனையுந் தானுங்கடந்
தாங்கேயு மெல்லையிற் கண்டனன் முண்டகனென்பான்.

50 தவமதிப்பி லஞ்செழுத் துளஞ்செனத்தாழா
னவமதித்தன னிச்சுதன் றனையடர்ப்பானவ
மதித்தனன் போன்மெனப் பஞ்சநதீசன்
சிவன்மதிக்கமுறுந் துதியே துதிசெய்தான்.

51 காமன் மாய்ந்திட நால்வரைக் காத்தனை கடியுமுப்புரமான
வேமவெஞ்சிலையான கையா லெரித்திமையவர் தமைக் காத்தாய்
நாம பஞ்சனயஞ்சன தேசுர ஞான சுத்தானந்த
சோமகாரண காலனாற் பயந்தவிச் சுசரிதன்றனைக் காப்பாய்

( வேறு )

52 ஆலமுண்டு மூவுலகெலாங் காத்தனை மந்தகாசுரன் செற்ற
சூலபாணியாயினை பிறையணிந் துயிர்தொலை பணிதனைக் காத்தாா
பால லோசன பிரணதார்த்திகா மெய்பரம பிரமச்சோதி காலகால
காலனாற் பயந்தவிச் சுசரிதன் றனைக்.காப்பாய்,

---

49. ஐந்தெழுத்து - சிவனுடைய மூலமந்திரமாகிய பஞ்சாச்சரம், காயுவெஞ்சமன் - துன்பந்தரும்கொடிய எமன், முண்டகன் - எம தூதருள் ஒருவன்.

50. தாழா - பணியாமல், சிவன் மதிக்கமுறும் - சிவபெருமான் மதிக்கத் தக்கதாக.

51. நால்வர் - சனகாதி முனிவர், இமையவர் - தேவர்கள், சோமகாரண - சோமயாகாதிகளின் காரணமானவனே.

52. ஆலம் - விடம், செற்ற - அழித்த, பாலலோசன - காத்தலே கடமையாகக் கொண்டவா.

53 பெரும் பிறப் பிறப்பெனும் பிணிதவிர்த்தி வானவ
ரோங்ககதித்

தரும் பத்துணை மருந்துளா யுலகெலாமளித் தவையவை
காத்தாய்

விரும்பு ருத்திர முடிமறை மெய்ப்பொருட் கிலக்கேவெங்

கருப்புறப் பகடூர்தியாவற் பயந்த விச்சரிதன்றனைக்
காப்பாய்.

54 போற்றி போற்றி நின்னடிக் கடைக்கலம் புகுந்தனனிவன்

போற்றி போற்றி போற்றிநற் பிரணதார்த்திகனே
யடைக்கலமிவன்

போற்றி போற்றி முக்காலு மிக்காலனும் புகுந்தனன்

போற்றிபோற்றி போற்றியென் றுரைத்த வசிட்டனும்
பூரணனது கேட்டான்.

55 அரியாதி தேவர் மறைகூவினாலு மனுகாம லேழையடியார்

மரியாதி கூறிலெளி தோடியோடி வருவனேணாமை யுளனோ

பரிவார் வீரகணநாத நந்திபடா தென்றுரைத் தவனுந்

தரியான் விரைந்து மரியா னுகைந்த சரணாரவிந்தமருவி

---

53. பத்துணை - பற்றாக வரும் துணை, மெய்ப்பொருட்கிலக்கே - உலகில், உண்மைப்பொருள் நீயென்பதற்கு இலக்கானவனே.

54. அடைக்கலம் - உன்னை அடைக்கலமாக அடைந்தான், பூரணன் - நிறைவானவன்.

55. அரியாதி - திருமால் முதலான தேவர்கள், அணுகாமல் - செல்லாமல், மரியாதி - பணிவான அன்பு, பரிவான அன்பு, பரிவார் - அன்பு நிறைந்த அடியார், தரியான் - தங்கிவிடமாட்டான்.

56 இருந்தாள் பணிந்து துகிலோடொதுங்கி யெழில்வாய்
புதைத்தேனிறைவா

திருவாய் மலர்ந்த செயலேதேனுஞ் சேர்வ தெளியாமுன்
பன்மொழிவா

மருகாது நெச மொஞ்யார் வசிட்டனுயிரான
சிட்டனவன்மேல்

வருவான் மனங்கோலவலனாவி கொன்றவழகனைப்
புரித்தியெனலும்.

57 அடி தொட்டு வைத்த முனி நந்தி ................

.......................................

நொடியிற் கிடைத்து முனிவர்க் கெதிர்க்க நுனி
முத்தலைக்குள்

படையைப் படிநட்டுவைத்து நடுவிட்ட செங்கை பரமிட்டு
நிற்க யமனுங்

கடிதெட்டி யெட்டி யருகொட்டி நிற்றல் சலியாது கிட்டி
முயல்வான்.

58 திரு நந்தி தன்னை முனியோடெணாது திரணத்தி
னெண்ணிமகிழ

வெரி நின்றிறங்க லிலனாய் விசைந்து மிகுசேனைசூழ்விரவி

யிருனெஞ்சினன் சுசரிதன் கழுத்தி லிறுகப் பிணித்த கயிறோ

டொரு திண்கைக் கொண்ட தண்டாயுதத்தி னொருகா
லடித்து விசையால்.

---

56. இருந்தாழ் - தீவினைகளை வலிந்து நீக்கும் திருப்பாதங்கள்,' சிட்டன் - மாணவன், மனங்கோலவலன் - மனத்தால் மாறுபட்டவன், புரித்தி - புரிந்து கொள்

57. முத்தலைப்படை - திரிசூலமாகிய சிவனுடைய ஆயுதம், கடிது - விரைந்து, சலியாது - தளர்ச்சியடையாமல்.

58. எணாது - எண்ணாது, மதிக்காமல், திரணத்தில் - ஒரு கணப்பொழுதில்.

59 அய்வா யடங்கி தவசிங்கமொன்று மருகுறை சிங்க மதுவுங்
கைவாய் கடங்கொல் படைகொண்ட தென்று கருதாமல் நின்ற நடுவே
மெய்வாய் நடுங்கு பசுவின் புனிற்று மென்கன்றை மென்றுநுகர்வான்
பொய்வாய் பிளந்து பின்போய் விழுந்து புலிபாய்வ தென்ன நலிய.

60 ஆகாது கால பஞ்சாபகேச னருளாணை மைந்த னிவனென்
மாகாவனென்று தடைகூறியிங்கு விடுகென்றுரைப்ப மதியான்
சேகாய மிகுந்து வலிகொண்டுவாங்கு செயல் கொண்டுநந்து
நகையாவோ காலவங்கியிவனென்ன வெம்பியுங் கார்நெஞ்சோ டொளியா.

61 சூலாயுதத்தை நமன் மார் வினாவி சுழலத் திரித்து விடலும்
மாலால மென்ன அழலோவிதென்ன வவன்வஞ்ச முண்ட துடலு
மாலாய மேகம் நிலமோதி வீழும்வகைபோல் விழுந்தல்லோ
மேலான பேரை மதியாத பாவி விழுகின்ற வண்ணமிதுவே.

---

59. தவசிங்கம் - வசிட்டன், அருகு உறை சிங்கம் - வசிட்டனுக்கு அருகே இருந்த சிங்கம் போன்ற சுசரிதன்.

60. மாகாவன் - மிக்க காவலுக்குட்பட்டவன், நந்து - பொருந்திய, ஓ கால - ஓகாலனே!, கார் நெஞ்சோடு - கருத்துக்கொடுமை நிறைந்த மனத்தோடு.

61. வினாவி - குறித்துப்பேசி, மாலாலம் - மயக்கம் தருவிடம், மாலாய மேகம் - மயங்கித்திரிந்த கருமேகம்.

62 மேலவன் சொல் வெகுண்டதுஞ்
சூலமெய்துஞ் சோலை போல்
காலன் வீழ்ந்தது கண்டபின்
பாலன் நின்று பகர்ந் திடும்.

63 அரனென்று அயன் மால் தொழும்
பிரணதார்த்திகன் தனைச்
சரண மென்றடைந் தார் சமன்
திரண மென்பது திண்ணமே.

64 பாட வல்லவை பாணியோ
டாட வல்ல பிரான்தனை
கோட வல்ல வரசுற்ற னின்
வீட வல்லவா மெய்மையே.

65 பாச பஞ்சகர் காணொனா
தேச பஞ்ச நதேசனே
வாசயஞ்சகா நீண்மனப்
பாசப் பஞ்சன்றப் பான்மேயே.

---

62 மேலவன் சொல் - வசிட்டனது சொல், பாலன் - சுசரிதன், காலன் - எமன், பகர்ந்திடும் - விளக்கிக்கூறும்.

63 அரன் - சிவன், அயன் - நான்முகன், மால் - திருமால், பிரணதார்த்திகன் - அடியார்களின் உயிரினைப் பாதுகாக்கும் தலைவன், சமன் - சிவத்தன்மையினை ஒப்பப்பெற்றவர். திரணம் - உறுதி.

64 பாணி - தாளத்தோடு கூடிய பாட்டு. ஆடவல்லபிரான் - அம்பலத்தில் ஆனந்தத்தாண்டவம் புரியும் சிவபெருமான்.

65. பாச பஞ்சகர் - ஆசைக்கு இலக்காகும் ஐம்புலன்கள், வாசயஞ்சகா - பூவில் கலந்த மணம் போன்றவா.

66 செப்பியத் திருமாலவர்க்
கொப்பிலாப் பெருமான் தனைக்
கைப்படுத்தவர் காலனைத்
தப்பி நிற்பது உண்மையே.

67 உம்பர்க் காதிப னோ தருஞ்
சொம்பொற்சோதி செப்பேசனை
நம்பிச் சேர்ந்தவர் தம்மைக்காலன்
வெம்பிச் சீறுதல் இல்லையே.

68 தஞ்ச மென்றிமை யோர்தமை
அஞ்ச லென்ற பிரான்தமை
தஞ்ச மென வந்தார் அஞ்சிடும்
வெஞ்சு நமன் கையில் மீள்வரே.

69 புறம் வளர்த்த குழற் பொறை
அறம் வளர்த்த மேலன்பினைத்
திறம் வளர்த்தவர் தீரும் மன
மறம் வளர்த்தலும் மறப்பரே.

---

66. செப்பிய - கூறிய, ஒப்பிலா - வைத்து ஒப்பு சொல்லப் பெறாத அளவில் உயர்ந்த. கைப்படுத்தவர் - உள்ளத்தில் நிறைவாகக் கொண்டவர்.

67. உம்பர்க்காதிபன் - தேவர்கட்கெல்லாம் தலைவன், செப்பேசன் - ஐயாறுடைய நாதன், வெம்பி - கொடுமை கொண்டு.

68. அஞ்சிடும் - அடியார்களும் அஞ்சும் படியான, வெஞ்சு நமன் - மிகக் கொடுமையுடைய எமன்.

69. புறம் வளர்ந்த குழல் - மங்கையர், பொறை - பொறுமை, மறம் - தீமைகள், தீரும் - போக்கும்.

70 ஆல கண்டனை யாறனை
மேல கண்டனை மேயினார்
நீல கண்டனால் நிட்டூரக்
கால கண்டங் கடப்பரே.

71 எட்டுத் தோத்திரப் படி
மட்டுக் கூறி வழுத்தலுஞ்
சிட்டறக் காய்த் திருவாய்தலின்
வட்டக் கோயிலுள்ள னவர்.

72 பாலன் வீழ்ந்து பணிந்தனன்
ஆலங் காலமியற் றயனுஞ்
சூலங் காத்த சுதன் றனைக்
சீலங் கேளெனச் செப்புவான்.

73 நீ விடாக் குருவாய் நினை
மா வியாத் தவ சிட்டனை
ஆவி காத்தன னாதலால்
தாவி லாசுதத் தாதையே.

---

70. ஆல கண்டன் - விடத்தை கழுத்தில் நிறுத்திய சிவன், மேல் அகண்டன்- எல்லாத்தெய்வங்கட்கும் மேலாக உலகெலாம் பரவி நிற்பவனை.

71. மட்டுக்கூறி - தோத்திரங்கூறி, வழுத்தல் - வணங்குதல்: வட்டக் கோயில் - திருச்சுற்றோடு பொருந்திய கோயில்.

72 சுதன் - மகன், சீலம் - மேன்மை.

73. தவசிட்டன் - தவமுனிவன், ஆவி - உயிர், தாவிலா - குறைவில்லாத.

74 களங் கறுத்தவர் நண்ணினாற்
தீங் கறுப்பவர் தேசிகர்த்
தாங் கறுந்தவர் தங்களின்
தீங் கறுப்பர் எமக் கில்லையே.

75 எண்ணு மவ்வினை யோனுக்கு
பின்னு நின்றுயிரான மொழி மன்னன்
முன்னும் வசிட்ட னாயிரத்
துன்னி யொன்றை யுரைத்தனன்.

76 சுத்த நற்குலச் சுத்தமோ
டொத்த பக்குவத் துத்தமத்
துத்தமக் குணத்தோர் திருச்
சித்த மொக்க மணஞ் செய்க,

77 முன் புலக்கு முனிக் கணந்
தென் புலத்தவர் தேவர்தாம்
மன் புலப்பில தாயிரீஇ
யின் புலப்பில் பெற்றியால்.

---

74. தேசிகர் - ஆசார்யனாகிய முதல்வன், தீங்கறுப்ப - தீங்கினைநீக்குவர்.

75. உயிரான மொழி - உயிர் காப்பான சொல், உன்னி - தீரஆலோசித்து.

76. குல்ச்சுத்தம் - கோத்திர சூத்திரத் தூய்மை, சித்தம் ஒக்க - மனம் பொருந்த.

77. புலக்கும் - வருந்தும், தென்புலத்தவர் - பிதுர்க்கள், பெற்றி - மேன்மை, பெருமை.

78 ஊழ னைத்தினு மும்பராய்
வாழு முத்தியில் வைத்துமென்
றாழ் கடைக் கருணைக் கணால்
வீழ் சமர்க்கு விழித் தனன்.

79 பார்த்த பார்வை யமன்
மூர்த்த மாங்கு முளைத்தெழு
மார்த்தி தீர்த்துட னாண்டவற்
றோந்திரங் கடு தீக்குமே.

80 அனித்திய விசித்திரம் சூசிவிதந் துயரி னாகர மாகு முலகஞ்
சனித்திடு முபாதான பூதமாதியின் வாழ்வு
தருமனவசனியமதாய்
குனிக்கு மொரு மாயையைப் பூரணவரங்கிடைக்
கூத்தாட்டுவிக்குந்
தனியுனைத் தெளியவல்லார் சிலரல்லர் மாயவ
நின்னாணைக் கடவாய்.

81 அரிமுதற் றேவர்க் கடங்காத மலயன் வரத்தாங்காது
மிக்குமிசை போய்த்
திரியுமுப்பிரி யொடுங் கொடிய கோடா கோடி
தீயவசுரேசரையெலாம்
கரியுறப் புன்முறுவல் கொண்டு மூவரையதிர் காத்த
வெற்றிப் புகழுளாய்
எரிசினத் தொழில் விடும்பெரியார் சிலரல்லாமல்யாவர்
நின்னாணைக் கடவார்.

---

78. ஊழ் - விதி, உம்பராய் - தேவராய், கணால் - கண்ணினால், சமர்க்கு - பகையான போருக்கு.

79. பார்வை - நோக்கு. ஆர்த்தி - ஆருதலுடன் செயலாற்றி, கடு - கடுமையான தீமைகள் மூர்த்தம் - வடிவுடைய பெருமான், முளைத்தெழு - தோன்றி எழும்.

80. சூசிவிதம் - குறிப்பான வகை, ஆகரம் - இருப்பிடம்.

81 மலயன் - இமயமலையை உடையவன், கரியுற - அழிந்து போக, புன்முறுவல் - புன் சிரிப்பு.

82 சுரர்குழு வெடுத்திடு மத்துமந்தா ரச்சுழவிற் கரங்கு
கடல் வாய்ப்பிரளயத்

தெரியிற் பிறந்தொழுங்கெழுகடுப் பிறவிப் பறந்துட லெலா

மரிமுதற் சூடுண்டவற் கஞ்ச லென்றங்கை
நெல்லியளவாக்கியுண்டாண்

டிருள்படுமிடற் றொளியை மறவாத சிலரன்றியாவர்
நின்னாணைக்கடவார்.

83 கருகுண்டு புல்லுண்டு கனலுண்டு காலுண்டு சருகுண்ட
நீராசி

யுருகுண்ட நெஞ்சொடுந் திரிகின்ற காதியுள் வெளிய
முனிவோரையுந்

துருகுண்டு துயர்செய்யுஞ்சிந்தசன் கோமளச் செவ்வியழகேறி

நீறுபட்டிருக் கின்ற வகை கண்ட கண்கண்ட பேரின்றி
யாவர் நின்னாணைக்கடவார்.

84 அதி கண்டகப் பன்னிரண்டு கண்டா மணியலங்கார
வெங்குகடல் போல்

விதிர்கண்டக கண்டம் இடக்கான மிருத்து துதியோடு சேர்

கதி கண்டரும் பயங்கொண்ட மார்க்கண்டன் கலங்கந்
தவிர்தாளோ

யிது கண்டு தெண்டனிட் டோர்கள் சிலரல்லாமலியாவர்
நின்னாணைக்கடவார்.

---

82. சுரர்குரு - தேவகுரு பிரகஸ்பதி, மந்தா - மந்திரகிரி, கெழுகடு - மிக்க கொடியவிடம், அரிமுதல் - திருமால் முதலான, அங்கை - உள்ளங்கை,

83. கருகுண்டு - கரிந்துபோய், துருகுண்டு - குற்றங்கொண்டு, கோமளச் செவ்வி - அழகு நிறைந்த தோற்றம்.

84. அதிகண்டகம் - மிகுந்த மணிக்குள் கழுத்தில், கானமிருந்து - இசை நிகழ்த்தி.

85 மகமுதற் சிரவு தந்தோன் புலத்தொழில் முதற்கதிபதியை
மதியாமையாற் றகாமதத்தக்கன் சிரங்கேட் பிருகுவின்றாடிப்
புதியச் செகுக்கும் பகலவான்பற் கேட்பார் திருகங்
கெடப்பண்ணியிப்
பெற்றி பலரோடிகலு மிச்சையரனை மறவாத சிலரன்றி
யாவர் நின்னாணைக்கடவார்.

86 செய செய வயன்றலை யறிந்தவர் அரிவிழித்திருமல
ரணிந்த தாளர்
செய செய பகன் கண்டகத்தவர் அந்தகன்ஆக
மத்தோள் பாதனே
செய செய உமாதேவி திருமுலைக்குங்குமச் சிறுகுறி
யிட்ட மார்ப
செய செய பினாகி நாகாபரண செப்பேச செய
பஞ்சநதிவாணனே.

87 சூலத்த செய செய புலித்தோ லுடுத்தவர் சிலரன்றி யாவர்
செய செய கரித்தோலினால் மேலுத்தரிய செய செய பிரமர்
தலைமாலை விசைய கோடாகோடி யாலாலுற்ற சீரலங்கார
செய விசய பூதிசந்த செய செய வறிவருஞ் சிலத்த
செய செயப் பிரணதார்த்திகா செய செய பஞ்சநதிவாணனே.

---

85. மகம் - யாகம், புலத்தொழில் - நாடாட்சித்தொழில், தகா மதத் தக்கன் - தகுதியல்லாத அகங்காரம் படைத்த தக்கன், சிரம் - தலை, திருகம் - மாறுபாடு.

86. அயன்தலை - பிரமன்தலை, அரிவிழி - திருமாலின்கண், பினாகி - பினாகம் என்னும் வில்.

87. சூலத்த - திரிசூலத்தை உடையவனே, கரித்தோல் - கசமுகா சூரனை உரித்த தோல், உத்தரியம் - மேலாடை.

88 அறியாம லடியேன் பிழைத்த குற்றம் பொறுத்தருளி
யெனையருள்க வஞ்சங்

குறியாத கருணையங் கடலல்லையோ தந்தை தாய்
பின்னைக் குறைகொள்வாரோ

தெரியாத வுலகுக்கு நீ தந்தை யுமையன்னை
நின்றயான் மகனல்லனோ

சிறியார்க ளறிவரோ பெருமையென் குறை தணிக
செய செயவெனப் பரவினான்.

89 அருளெனுங் கடலாய் திண்மை யென்றவைய்யாறன் காலன்
வெருளெனுங் கடலி னாழ்ந்து விளம்பியதுதிமீதி லன்பாய்
மருளிய மனத் தெம்மானை மறுத்தவரி யாவரேனு
மிருளிய துன்பத் தாழ்வ ருண்மை யென்றின்னன கூறும்.

90 பூமியிற் சிவத்தலங்கள் பொருந்தினா ரென்ன வாறு
தோமிகப் புரிந்தாரேனுந் துடைப்பதுன் வயத்திலாகா
நாமிவன் மகிழும் பஞ்சநதிப் பதியடைந் தோரென்றால்
நீமிக வலிமை செய்த நீதிபோமுபாதி யில்லாய்.

91 நின்குறை பொறுத்தே மிப்பால் முமலமாந் திருவையாற்றி
லென்குறை யுடைய ரேனு மியமனினுலக மெய்தார்
நன்குறை சிவலோகத்தே நாம்மகிழ் தக்கோர், தம்பால்
உன்குறை சொல்வ தல்லா லாணையா லொறுப்பா யல்லை.

---

88. சிறியார்கள் - அறிவிற்சிறியோர்கள், பரவினான் - வேண்டினான்.
89 திண்மை - நிலையானது, வெருளெனும் கடல் - அஞ்சத்தக்க பிறவிக் கடல், விளம்பிய - எடுத்துக்கூறிய, துதி - போற்றுதல், இருளிய - நிலை கேடுற்ற.
90. தோம் - குற்றங்கள், நீதிபோமுபாதி - நேர்மையற்ற பிழைகளால் வரும் இடையூறுகள்.
91. நிமலமாம் - தூயதாம், இயமனின் உலகம் - எமலோகம், என் குறை - எத்தகைய குற்றம்.

92 எண்ணினா னின்னாளை செய்தவேதன் சிவன்
மறைந்தா னிப்பால்
நண்ணிய விடையில் தோன்றி நமன்றன் கொடிய தூரில்
மண்ணிய சிறுவ நீயுமிங்கே வருந்ததி வாழ்கொள் என்றான்
மண்ணியல் மணஞ் செய்திம்மை வாழ்க்கையின்
வாழ்ந்தான் மன்னோ!

93 வாழுநாள் வசிட்டனே பின் வளத்தொடு தன்னூர் போகி
வேள்விகள் முயற்றி நல்ல மதலையை விழையாள் பெற்றாள்
ஊழிபல் லறங்கள் போற்ற வொருவனை யிருத்தி முன்ன
மாழ்வினைத் தொடர்ச்சி நீக்கு மண்ணை லையாறு சார்ந்தான்.

94 தேசிக னருளால் வைகிச் சிவனருள் பெற்று முற்றும்
பேசிய மெய்யின் பத்தில் பிறர்க்கரு பேறு பெற்றான்
ஆசறு இன்பும் வேண்டும் ஆசையோ ராதலாலே
ஈசன்தன் திருவை யாற்றி லெய்துக துணிவி னென்றான்.

---

92. இந்நாள் - சிவனருளால் பிழைத்த நாள், தூரில் - பாசத்தில் மண்ணிய - சிக்கிய, வாழ்கொள் - மணவாழ்க்கை ஏற்று வாழ்க்கை நிகழ்த்தும், மண்ணியல் - உலகியல், இம்மை - இப்பிறப்பில்.

93. முயற்றி - முறையாகச் செய்து, மதலை - பிள்ளைகள், விழையாள் - வசிட்டன் விழைந்த மனையாள். ஆழ்வினை - ஆழ்ந்து தொடர்ந்த பழவினை

94. தேசிகன் - வசிட்டனாகிய ஆசாரியன், பிறர்க்கரு - மற்றவர்க்கு அருமையான, பேறு - நற்பதி, ஆசறு - குற்றமற்ற, எய்துக - அடைவீராக.

95 திருமுனி துதித்த வாய்மை துதித்தெலாம் மதித்த வேந்தர்
பொருள்களும் எளிதி லுண்டாம் புதல்வன் வாய்மொழிக
ளேந்தில்
வெருவரு பயங்கள் நீங்கும் விளக்குங்கால், விளம்பின்
வரும்பிழை பொறுக்கும் நாதன் கதையினால் முத்தி
வாய்க்கும்.

96 இவையிவை பிரணதார்த்தி கரத்திற மென்றா னிப்பாற்
றவமுறு விசையன் மேவு சமரசுரர் முறையா லீசர்
அவயமென் றளித்தல் காரிய சுரர் கோன்றனை யழித்தல்
நவமிகு மிவ்வா றஞ்ச லென்றது நவில லுற்றாம்.

97 சிற்றிடைப் பெருமுலைச் செஞ்சொல் வெண்ணகைப்
பொற்றொடித் தெரிவைக்கேள் புனித னஞ்சலே துணை
யற்றவர்க் கருளிய பாங்க தளவின் நன்மை கேட்டு
உற்றவர்க் குதவுவ தென்ப, துகளற உரைக்குமால்.

---

95. வாய்மை - மெய்மையான நெறி, வெருவரு - அஞ்சும்படியாக வரும், விளங்குங்கால் - வாழ்கின்ற காலத்தில், முத்தி மோட்சம்.

96 தவமுறு விசையன் - தவத்திற்கு பொருந்திய மன்னன், சமர் அசுரர் - போரிடும் அசுரர். முறையாடு - அவர்களோடு முறையாகத் தண்டனை முறையினைச் செய்யும், அவயம் - காத்தல் தன்மை.

97. பொற்றொடி - அன்மொழித்தொகை, பெண், துகளற - குற்றமில்லாமல்.

[ பிரணதார்த்திகர் சருக்கம் முற்றும் ]

## சருவ விசையன் தவப்பேறு.

### (முறைப் பாடு)

1 முரணியல் வருண முதன்மை யேறனான்
இரணிய கயவனென் றியம்பும் பேரினான்
தரணியி லவன்பெறு சங்கிலா தானுக்
கரணிய மதலையோர் கல மோம்பினான்.

2 அன்னவன் பிறந்த ஞான்றசுரர் கூடியே
இன்னவன் சருவ மா விசையனே யெனப்
பின்னவன் புரிதொழிற் கேற்ப பேரிட
மன்னவன் நீரணியப் புரத்து வைகினான்.

3 கொலைகட் கெனுந் தொழிற் குலத்து விஞ்சையுங்
கலைமுத லரும்படைக் கலத்தின் கல்வியுஞ்
சிலைநுதன் மதிமுகச் செறிகுழற் புணர்
முலை யவர் விழியெனக் கற்று முற்றினான்.

4 இமையவர் தங்குடிப் பகைமை யென்பது
மமைவரத் தெளிந்தவ னருந்தவத்தாலா
னமை விறலுறா வென வெண்ணினா மினிக்
கவையுறு பெருந்தவந் துடங்கல் கற்பேன்.

---

1. முரணியல் - மாறுபாடில்லாத, வருணமுதன்மை - சாதியின் முதன்மை, அரணிய மதலை - சூரியனின் மைந்தன்.

2 ஞான்று - அந்நாளில், இன்னவன் - இப்புதல்வன், பின் அவன் - அரசனுக்குப் பின்னர் அரசு பெறுமவன்.

3. படைக் கலத்தின் கல்வி - போர்ப் பயிற்சிக் கல்வி, காமக்கலையினையும் கற்றுத் தேர்ந்தனன்.

4 இமையவர் - தேவர்கள், அமைவர - குறையில்லாமல், துடங்கல் - தொடங்கல்.

5 மால் வரை மதியோர்வமுத மவ்வழிக் கால்
வாலி போல் நேரமுதங் கக்கிய..............
பால் வரை யிமையமேற் பைம்பொற்றாமரை
மேல் வரு கடவுளை விரும்பி நோற்றனன்.

6 பேருண வன்றியும் பிறவங்கா வீவ
நீருணவன லுணவ னீவனீ ணிலா
வாருணவா தபமுண்டு மாதவ
மோருண வின்றியு முஞற்றினானரோ.

7 இன்னவாறு மாதவங்க ளெண்ணில்கோடி நாளெலாஞ்
சொன்ன தானவர்க்கு ளேறு சூதினோடு செய்தலால்
அன்னரான சிங்க மேலடைக்கு ஞாயிரொன்று போல்
அன்னவர்க் கணத்தினாதி யண்ணல் வந்து தோன்றினான்.

8 பூத நாத வேத கீத புண்டரீக வந்தணா
வாதி கேச வேசனாபி யாசை மைந்த யாவையுந்
தாதையான வாறு தந்தானு வாணிகேள்வனின்
சீத பாத பங்கயங்கள் சென்னி கொண்டு பன்னுகேன்.

---

5. பால்வரை - பால்போன்ற வெண்மையான மலை, தாமரை மேல்வரு கடவுள் - பிரமன், நோற்றனன் - தவமிருந்தனன்.

6. பேருணவு-சிறப்பான உணவு, முஞற்றினான்-செய்யத் தொடக்கினான்.

7. மாதவங்கள் - மிகப்பெரிய தவங்கள், தானவர் - அசுரர்.

8. பிண்டரீகம் - தாமரை, நாபி - உந்திக்குமிழ், வாணி - கலைமகள், சீதபாத - அருள் நிறைந்து குளிர்ந்த பாதங்களை உடையவனே, சென்னி - தலை.

9 எண்ணிலாத தோத்திரங்க ளிந்தவாறு கூற
வெண் கண்ணினா னுகர்ந்து நீ கருத்தில் வைத்த
எண்ணேன் என்ன, நீயெனது எண்ணமே யளித்தலா
லுண்மை யெண்ணி யானுண்ணிலாவு வேட்கை
(கூறலென்று பின்னு மோதினான்)

(வேறு)

10 சித்தன் நெஞ்சுருக்கு மாறு செஞ்சொல் வல்லா
ரொத்து நின்றிசைக்கவா சுரேச னுக்குவப்பினால்
இத்திறத்தினோர் நீள்வதேது யீது முண்மையே
சத்தியத்தி னாணையென்று தன் வலக்கை நீட்டினான்.

11 இத்திராதி தேவரா லியக்கரா லரக்கரால்
கந்திரேசற் நாகலோகரால் காருடேசர் பூதரால்
அத்திரப் பிரயோகத்தால் மண்ணிலானை யாளியால்
மைந்தராலும் வெல்லொணா வரந்தந்தருள வேண்டுமால்.

12 வென்ற காரணத்த தால் விருப்பின் இட்ட பேரெனக்
கின்று நீ புதுக்க வேண்டு மென்று நின்று வேண்டினான்
நின்ற தேவ னன்றிதென்று வாழி நீடி யெங்கும் விசையனா
கென்று நல்வரங்கள் அன்றே கொடுத்து வானி னேகினான்.

---

9. எண்ணிலாத - அளவிடவியலாத, உண்ணிலாவு உள்ளத்தில் பொருந்திய, வேட்கை - விருப்பம்.

10. வாசுரேசன் - பிரமன், உவப்பு - மகிழ்ச்சி.

11. கந்திரேசர் - கந்தன் முதலாயின தேவர், அத்திரம் - ஏவும் ஆயுதங்கள். ஆனை - யானை, ஆளி - சிங்கம்.

12. விருப்பின் - விரும்பினவாறு, புதுக்க - புதிதாகத் தருதல், வாழி நீடி - நீண்ட நாள் வாழ்வாயாக, விசையனாகென்று - வெற்றி கொள்பவனாக ஆவாயென்று.

13 வரந்தருந் தருக்கி னோடு மரபுவாழு மிரணியந்
தனிற் புகுந்த நாட்

புரந்தராதிபற் கெலாங் கரந்தனிற் படைக்கலங்
கவிழுந்த மாதரா வலந்

துரந்தாங் கடங்கடந்தகன்று இடித்தலங் கண்ட
சோர்வு போல்

இருந்தவன் மனவிளைவினால் இசைந்தனன்
மிகுசெயலெலாம்.

14 தானவாதிய ரறியக் காத்தவே சாதனை வந்து தழுவிடக்

கானவாரண முருக்குடன் சினவாளரிகொள் தவிசின் மேல்

பானிலாவிரி கதிர் கவரி பக்க மோடிரட்ட விருகைச்

சோனை மாரியி னிருந்தனன் மகிழ்ந்தரசு துட்டவாசுரன்.

15 மந்திரக் கிழவனுக் கய னழித்தவர் மற்று மொழிசெய்

திந்திரக் கண் களைந் தலது செய்வதிலை யாது மினியந்த

தந்திரத்தை வருவிக்க வென நின்ற தகுவார்க்கு மொழியச்

சிந்தை வைத்தவர்க் குணர்த்தினர் கணால் வகை
சேனை முழுவதும்.

---

13. வரந்தரும் - வரம்தரும் பயன்களால், தருக்கி - கர்வமடைந்து, இடித்தலம் - இடிவிழுந்த நிலம் சிதறியது போன்று. மனவிளைவினால் - மனத்தில் தோன்றிய எண்ணங்களால்.

14. தானவாதியார் - தேவர்கள் முதலாயினோர், கானவாரணம் - காட்டு யானை, சினவாளரிகொள் தவிசு - சிங்கம் சுமந்த சிம்மாசனம், இரட்ட - இருபுறமும் மகளிர் வீச, சோனைமாரி - விடாது பெய்யும் குளிர்மழை, துட்ட - துஷ்டனாகிய,

15. மந்திரக்கிழவன் - முதல் மந்திரி, உணர்த்தினர்கண் - கண்ணால் சைகை செய்து உணர்த்தினர்.

16 கோடி கொண்ட பதினாயிர விலக்கமுள் கும்ப
மதமா மிகுசேனையாய்

கோடி கொண்ட பதினாயிர விலக்கமுள்ள நடை கோடகம்

கோடி கொண்ட பதினாயிர விலக்கமுள் கொய்யுளையதோ

கோடி கொண்ட படைஞரி னிலக்கமது கூற வெளியதோ?

17 ஒருபரிக்குள் பதாதிக ளைஞ்ஞூறு பரியரியோ டிரதமும்

பெருகு தற்குள் விலக்கமிது போலவை
பெருக்கிலுளவாம் பொருபடைப்

பெருமிதம் புடையடுத்தன வுடல் புளகியா புயம்
புடைத்தெழா

முருக்குடன் தொடை முடித்தலை துலக்கினான்
முயங்கு மகிழ்வினால்.

18 முந்தியோடி யமரர் பதியிலெய்தி முழுவதுங் கவர்ந்து
கொள்ளினுந்

தந்தி தாரு மணி தேனு வரமாதர் தனியேக வரனும்

எந்த நாளுமெமக் குறும்படி பெருக வென்றெழு கனச்

சிந்தை யாதவ னுரைத்தன்றோ விதத்து செருக்கடை
படையதே.

---

16. கும்பமதமா - போர் யானைகள், கோடகம் - குதிரை, படைஞர் - வீரர் படை.

17. ஒருகரிக்குள் - ஒரு போர் யானையின் தலைமையில், பதாதிகள் - காலாட் படைவீரர்கள், புளகியா-மெய்த்திளைப்பு துலக்கினன்-அசைத்தான்.

18. அமரர் - தேவர், பதி - தேவலோகம், தந்தி - இந்திரன் யானை ஐராவதம், தார் - இரத்தின மாலை, மணி - இரத்தின மணி, தேனு - காமதேனு. வரமாதர் - ஊர்வசி அரம்பையோர் செருக்கடை - கருவங் கொண்டது.

19 கடையுகக் கடலொலித் தெனவொலித்தெழுங் கைவயவர்க்
கிடைமுகிற்குல மொலித்தென ஒலித் தனிவிளக் களிறுமேல்
வடவைதீச் சுடரொலித்தென ஒலித்தன மணிக் கொடியதன்
பொடை யொலிக்கின்ற வொலித்தன வொலித்தன
பொரும் புரவியே.

20 எழுச்சியிற் படை யொலிக்கு மொலி வானுலக கெழுந்
திமையோர்
முழுச்செவிப்பட மயங்கினர் முயங்கினர் முதற்புலவியோர்
குழிச் செறிப்பினர் விழந்தனர் அழுங்கின குலப்புலியினம்
தெழிகலற்றுழைப் பதைப்புற வயர்த்தனர் சிலர் தேவரே.

21 உங்கள் செந்திரு வையர்முன் வெழுந்தன வுமக்கினி யுற்றநா
மங்குவென் புழுதி யென்றமரர் வாயடை மடுப்பதென்னவே
பொங்கு கின்ற துகள் மேலெ்ழ வெழும் படைபுறப்படவவண்
எங்குமில்ல விசைவல்லதொரு தேரினிடையே நின்னரோ.

22 கறை படைத்த குலிசத்தில் எமை வென்ற கடனினிச்
சிறை படைத்தன முனைப்பொருது வருமிது
திண்ணமெனவே
பொறை படைத்தால் யெட்டினோடு பற்பல பொருப்
பெழுதல் போல்
முறைபடைத்த கொடியிற் புடைத்தெழுவ மூரியிரதங்கள்.

---

19. கடையுகம் - ஊழிக்காலம், வயவர் - திண்மையான வீரர், வடவைதீ - வடவை தீக்கொழுந்து, பொரும் - போரிடும். புரவியே - குதிரைப்படைகளோ.

20. முழுச்செவிப்பட - யாவருடைய செவிகளிலும் கேட்க, முயங்கினர் - சேர்ந்திருந்தனர். செறிப்பினர் - இணைந்திருந்தனர். தெழிகல் - என்ன வென்பது தெளிவில்லாமல்.

21. செந்திரு - மேலான செல்வம், அவண் - அவ்விடத்தே, துகள் - புழுதிப்படலம், விசைவல்ல - வேகத்தில் மிகுந்த.

22. குலிசம் - இந்திரனது படை, பொருதும் - போரிடுவேன், பொறை பொறுமை, எட்டினோடு - எட்டு மலைகளோடு, பொருப்பு - மலைகள், மூரி - வலிமை.

23 கீழுமோருல கென்றது கிடைக்கவது மேல் வாழு
மோருலகு நாகருலகானது மறித்ததிது மென்றாழ்
ஏழ்கடலுடுத்த புவிநாகம் அவை யாவும் எழல் போல்
சூழிமாமுக மதக் காரடை யானைக் கடர்ந்தன னரோ.

24 முதிரும் வேனலின் வறந்து சுருள் கானிடை முழங்கு படர்தீ
வெதிர் பட்ட சட சடன்றெ வருவ தென்னவர் விண்ணுல கெலாம்
அதிர் முற்றியேகினான் நச்சி வினைவித்தனர்க ளசூரரெனப்
பிதிர் படப் புடைபெயர்ந்தனர் பயந்தமரர் பெற்றி புகல்வான்.

25 மெய்ப்புத் திசை காவல் வீரரொடு மேவி முப்பத்து முக்கோடி தேவர்புடை
மொய்ப்புற் றமைச்சரோடு சேரவுமவை யூடேயிப் பெற்றியான்
நைப்புற் றோடிய அமரரும் நாடியினிதென் செய்வதென்
றுய்ப்புற் றமரர் இறைவர்க் கின்னவாறென்றே விசைத்தார்.

(வேறு)

26 வசை பெற்றுக் கொள்ளா மனங்கொண்டு மகுட
மசையுந் தோறுங் கண்ணழற்சிந்த வங்கண்
விசையின் படைத்தூசினை செய்ய நாமிங்
கிசைகின்ற தென்னென்றி சைந்தா னெழுந்தான்.

---

23. புவி - நிலவுலகம், எழல் - எழுந்து வந்தது. சூழி மாமுகம் - முகபடாத்தினையுடைய முகம் - யானை

24. முதிரும்வேனல் - முதுவேனில் காலத்தில். வறந்து - வறண்டுபோய், அதிர்முற்றி - ஆரவாரம் மிகுந்து, வித்தனர் - செய்தனர், பிதிர்பட - கலைந்து நிலை குலைந்து.

25. மெய்ப்பு - உண்மையான, மொய்ப்புற்று - ஒன்றாகச் சேர்ந்து, நைப்புற்று - தப்பிக்கலாகுமென்ற நம்பிக்கை பெற்று, உய்ப்புற்று-புத்துயிர் பெற்று. அமரர் இறைவன் - இந்திரன்.

26 வசை - பழிச்சொல், மகுட மசையுந்தோறும் - தலையை அசைக்கும் பொழுதெலாம், அழல் - நெருப்பு. தூசினை - குற்றமான அழிவினை, எழுந்தான் - இந்திரன் கோபத்தோடு எழுந்தான்.

27 அயிரா பதத்தி னவனேர அமரராதி
மயிடாதியிற் றொடர்ந்து வானவர் முந்திச்
செயிராசுரர்க்கு வெதிர் சென்றனர் சினத்தால்
புயலார்கடல் பொருவதொத்தமர் புரிந்தார்.

28 பாலாழியைப் புடைவளைந்து புடை சூழுங்
கோலாகலக் குறைகடற்கப் பொருவதே போல்
மேலா மிசைப் பிலிமையோர் படைகள் மேல்போய்
ஏலாவசுரப் படையையென்று புகலுற்றார்.

29 பொற்கால் மணிக்கொடிய தேரின் விசை
புக்கான் முற்கால வங்கயின் முருக்குகின்ற
மொய்ப்பான் றனக்கா செக்காவிரியுந்தி பொருமா போற்
செய்க்கார் நிறத்த அவுணருஞ் சினவலுற்றார்.

30 சேனாபதிக் கனவி செற்றது தெரிந்தான்
வானாருட னிக்குளிவனால் மாமலைப்பான்
யானா மொதிர்ப்பதென் றொரு கணத்தின்
நானாவிதப்படை யொழித்தெதிர் நடந்தான்.

---

27. அயிராபதம் - இந்திரனதுபட்டத்துயானை, செயிர் - வருத்துகின்ற
புயலார் கடல் - புயலால் எழுர்சி பெற்றகடல்

28. பாலாழி - பாற்கடல், கோலாகலம் - நிலையற்ற ஆரவாரம்,
பிலிமையோர் - தேவர்கள், ஏலா - வெற்றிபெறா.

29. பொற்கால் - பொன்னலாகிய தேர்க்கால், மொய்ப்பான் - ஒன்று
கூடியவளவில், பொருமாபோல் - போரிடுவது போல், செய்க்கார் -
செய்யப்பட்ட கருமேகம். அவுணரும் - அரக்கரும்.

30. கனவி - கோபங்கொண்டு, வானாடர் - தேவர்கள், நானாவிதப் -
படை - தேர், யானை, குதிரை, வீரர் ஆகிய நான்கு வகைப்படை.

31 சென்றா னெதிர்ந்துன்னி தீக்கடவுள் நெற்றி
தன்னொளி செற்றது தெரிந்தான் வானாடருக்கு
நின்றாழ் தடக்கை கொடு முட்டிதேர் தொக்க
பொன்றாதுயி ரத்துவீழ்ந்து புறக்கிட்டான்.

32 வாயுப் பதைபதைத்தானென மறலிக் கடவுளுங்
காயுக்கவா தெண்டாயுதங் கைக்கொடு செங்கண்
தீயுக்கிடா மயிடத்திடை சென்றானினி வென்றான்
நீயுயர்த்திடு படையாதென நிமிர்தேரிடை யடைந்தான்.

33 நக்கான் ஒரு முசலங் கொடு நாகஞ்செலுமாபோற்
புக்கா னரனைப் பரவி புடைத்தான் புடைத்தலுமே
மைக்காரிடி யெனவீழ்ந்தான் மரித்தானோ
ருக்கையொடு வோடுகாலையில் வருணன் எதிர்நின்றான்.

வருணன் அசுரனை எதிர்த்தான்.

(வேறு)

34 நின்ற தானவர் சேனையங்கண் நெளிவு கண்டது அகன்றன்
சென்ற தானையை நின்மி னென்றி வையஞ் செலுத்தி மேல்
குன்றமாதி பொழிந்திடும் புயல்குரைகடற்கிறை யவர்களை
தன்றனாயுத தண்டமிட்டொடு சாடினா னவரோடினார்.

---

31. தீக்கடவுள் - அக்கினி தேவன், தேர்தொக்க - தேர்கள் ஒன்றோ டொன்று சிக்கிக்கொள்ள, பொன்றாது - போகாது அத்து வீழ்ந்து - தேரிலிருந்து வீழ்ந்து.

32. வாயுப் பதைபதைத்தானென - வாயுதேவன் போரிட்டுப்பதை பதைத்ததைப் போன்று, தீயுக்கிடா - தீயை உமிழும் எருமைக்கடா.

33 முசலம் - குந்தப்படை, நக்கான் - சிரித்தான், புடைத்தான் - ஓங்கி அடித்தான், மைக்காரிடியென வீழ்ந்தான் - கருத்த மேகம் இடியால் வீழ்ந்த தென இமயன் கீழே வீழ்ந்தான்.

34 தானவர் - அசுரர், வையம் - தேர், கடற்கிறை - வருணன், சாடினான் - கடுமையாக அடித்தான்.

35 வருணராசனும் வெஞ்சினம் கொடு மஞ்சின்மே
ஓலுகைந்து போய்
சுரனவன் தந்தன வமைந்ததோ வென்று பாச மெடுத்தனன்
கரணமாள வெறுத் திறுக்கிய காசினான் மிக வீசினான்
அரணமேதுள னென்று நின்றனன் அஞ்சினானென
விஞ்சினான்.

36 பாசம் வீசி யிறுக்கி நின்று வரித்திழுத்தலு மவ்வழிப்
பூசலின்றி முயன்று வந்து பொற்பெருந்தகை மார்பினைக்
கூசலின்றி யெடு தண்டது கொண்டு மிண்டி யடித்தனன்
பேசலின்றி விழுந்தனன் சுரன் பேது கொண்டு பெயர்ந்தனன்.

37 பண்ணவப் படை மாருதம் படு பஞ்சு பட்டிட வாயிரங்
கண்ணவற் குள நெஞ்சழற்பட நின்றமாகளி யானையோ
டெண்ணகப் படு மெட்டுமிட்டவன் மார்பு குத்தி யெடுக்கெனப்
புண்ணகப் படவெண்மருப்பை யழுத்த வந்த பொருப்பெலாம்.

38 காரடிப்பின் முழங்கு கின்ற களிற்றினங்கள் பிளிற்றினால்
வீரிடக்கதை இரண்டடித்தனன் வெற்றினா மெனுமற்றெலா
மோரடிக்கு மருப் பொசித்தன மத்தகங்க ளுடைத்தன
சோரிடத்தலம் வந்தன சிற்சில செங்களத்தன சிறகில.

---

35. மஞ்சு - மேகவாகனம, கரணம் ஆள - போர்ச்செயல வல்லதாக, அரணமேதுள - பாதுகாப்பு என்னவுளது.

36. பாசம் - வலியகயிறு, பூசலின்றி - போரிடுதலில்லாமல், பேசலின்றி - பேச்சில்லாமல், சுரன் - அசுரன், பேது - தடுமாற்றம்.

37. பண்ணவப் படை - வருணனது படை, எட்டு - திக்குளமலைகள் எட்டும், மருப்பை - தந்தத்தினை, பொருப்பெலாம் - யானைகளெல்லாம்.

38. காரடிப்பின் - மழைமேகங்கள் பெய்யும், ஒசித்தன - உடைந்தன, சோரிட - சோர்விட, சோர்வு கொள்ள.

39 இச்செயற் படை யாவும் எழுந்ததிர்ந் தழிந்தன
உச்சையிச்சிரவா வெனும்பரி யூடிருந்து பறந்தன
முச்சகத்து மிவற்பொருந்திறம் மாயமோ வென வும்பரில்
வச்சிரப்படை தொட்டெடுத்தவன் மார்புநேரெழ மடுத்தனன்.

40 வந்து பட்டது வச்சிராயுதம் மார்பி ளெண்ண மயங்கியே
வெந்திறற் பெயரோனிறந்தன னென்ன வீழ்ந்தனன் வீழ்ந்திடத்
தந்திரத் தரசுப் பெரும்படை தானொளித்தன வானமே
லிந்திரப்படை மேலெழுந்து களித்தொளித்த தத்தினமே.

41 இத்தகைக் கொலைக்கார னிருந்தவகை யிப்பால்
அத்தகு கயித்தியரோடவ் வசுரர் கோமான்
வைத்த விசையத்தின் மிகுவாகை முடிசூடிச்
சித்த மகிழ்ச்சுரர் வெற்றி கெழு பத்திரர் நல்வரந்தான்.

42 இரதனியமனாதி யோரை யெரிக் குதவி யேகி
இரணிய புரிக்குனிர விஃபுற விருந்து
தாரணிய கருப்பன் வரமெய்திய செருக்கா
லிரணிய முதற் பெயர னென்னு விசையத்தோன்.

[ தேவாசுர யுத்தம் முற்றும் ]

---

39. உச்சை - உச்சித்தலையாட்டம், ஊடிருந்து - படையுள்ளிருந்து, முச்சகம் - மூன்றுவுலகம், நேரெழ - நேராக நிற்க.

40 வெந்திறல் . கொடுமையான வலிமை, தானொளித்தன - படைதான் அஞ்சி ஓடி ஒளிந்தன.

41. விசையம் - திக்குவிஜயம், வாகை - வெற்றி, பத்திரர் - பிரமன்.

43 இங்கிவன் இயற்கை யிஃதிந்திரன் விழுங்காற்
செங்களம் மறைந்ததொரு சேமவிரதங்கொண்
டங்கணுற்று சாரதி யணைந்தவனை யேற்றிய
பைங்கண் மேருவிடைப்போய் பரிகரித்தான்.

44 மேரு முழையிற் சிலர் விளங்கிலர் மாந்தர்
வாருதி நடுச்சிலர் மறைந்தன ருறைந்தார்
காருறை இருட்பிலனிடைச்சிலர் கரத்தார்
பாருலகு புக்கனர் பயந்து சில தேவர்.

45 சம்பரொருபாலு மாமாதரொரு பாலும்
நம்ப வருடாயர் இலங்கிய மகார் போற்
றம்பய மிகுந்து நெடு நாட்டனி திருந்தார்
அம்பொன்வரை மேலிறையரமர்ந்தமை யறிந்தார்.

46 ஒவ்வொருவராக வொளிவிற் கனக வெற்பிற்
றெவ்வொருவ ராலலைவ வெல்வதென வெண்ணா
இவ்வொருவனா யிவணிருத்தி லரிதேயென்
றவ்வொரு புறந்தாடோ டெண்ணின ருளைந்தார்.

---

43. சேமவிரதம் - பாதுகாப்பிற்குரிய தவவலிமை. பைங்கண்மேரு - பசிய சோலைகள் சூழ்ந்த தடங்களையுடைய மேருமலையில்.

44. மேரு முழையில் - மேருவிலுள்ள குகையில். மாந்தர் வாருதி - மக்களாகிய கடலில், இருட்பிலம் - பாதாள வுலகம், கரந்தார் - சென்று மறைந்தார்.

45. சம்பர் - சிவனடியார் (சம்பு - சிவன்) மாமாதர் - தேவ மாதர்கள், அம்பொன்வரை - கைலாய மலை.

46. கனகவெற்பு - பொன்மயமானமலை (கைலைமலை) ஒருவரால் - அசுரரால், எண்ணா - எண்ணி, உளைந்தார் - மனம் வருந்தினர்.

47 மற்றவ ரிருந்து தெரி மந்திர மனைத்தும்
ஒற்றர் சிலர் கண்டன ருணர்ச்சியிவை பன்னச்
சொற்றவர் சயப்பெயர் சுமந்தவனோ டெங்ஙன்
மெற்றென வெழுந்தவ ரிருந்த திசை செற்றான்.

48 ஆய்ந்து செலு மொற்றருரை யாலாம்போ
ரேய்ந்து தமை யின்னமிகலா லெனக் கொண்டு
ஆய்ந்த சுரரோடும் கவனுமுயர் வேதா
வாய்ந்ததொரு லோகமிசை வந்தனர் விரைந்தே.

49 சத்திய புரிக்குள் அயன் வாழ்நகர் தன்னிற்
பொய்த் தகைமையை வாயிலவருக் கினிதிசைத்து
மெத்திசை முதற்கடவுள் வேளையொடு சேர்ந்தாரு
யத்திரென வத்திற முரைக்க வருத்த லுற்றார்.

50 நெஞ்சு செல்வழி நெடுங்கண் நெடு
நஞ்சு செல்வழி நடப்ப மலர்க்கை
பஞ்சு மெல்லடி பயந்து பெயர்க்கும்
வஞ்சி யன்னவர் நடஞ்சுவை வாய்ப்ப.

---

47 சொற்றவர் - எடுத்துக் கூறியவர், சயப்பெயர் - வெற்றியால் பெற்ற பெயர், மெற்றென - அமைதியாக,

48 ஆப்போர் - உண்டாகும் போர், ஏய்ந்து - பொருந்தியதால், கவனுமுயர் - வானில் உயர்ந்த, வேதா - பிரமன், வந்தனர் - வருணனோடும் தேவர்கள் வந்தனர்.

49 சந்தியபுரி - பிரமனின் சத்தியலோகம், பொய்த் தகைமை - பொய்யான உரை.

50 நஞ்சு - விடம், பெயர்க்கும் - அடியெடுத்து வைக்கும், வஞ்சி - வஞ்சிக் கொடிபோன்ற மகளிர், நடம் - நடனம்.

51 பாடலின் குரல்நரம்பு பணிப்ப
நாடருஞ் சுருதி நாரதராதி
மாடகங் கெழு மணித்திய வியாழ்கொண்
டுடகங்க ளுருகும் படி யோத,

52 நலத்தியான முனிவோர் குழு நண்ணப்
புலத்தியாதி விதியோர் புடைமொய்ப்ப
நிலத்தினாரண நடத்தொடு சாகைப்
பலத்தினோ ருருவு பற்றினர் சுற்ற.

53 அங்க மாறு மளவில்கலை நாலுஞ்
சங்கமார் கடலின்று தழங்கத்
துங்கமா மணி துவன்றிய செம்பொற்
சிங்கவரசன் நிறைந்து சிறப்ப.

54 கையும் வாரடியும் கடைக் கண்ணுஞ்
செய்யளா யளகமுஞ் சிலை போலும்
தொய்யி நீள்புருவமும் முலைக் கண்ணும்
மையளா யொரு மடப்பிடி போல்வாள்.

---

51. குரல் நரம்பு - இசை நரம்பு, மாடகம்கெழு - மாடகம் என்ற பகுதியோடு கூடிய யாழ், ஓத - இசைபாட.

52. நண்ண - நெருங்க, புடை மொய்ப்ப - பக்கங்களில் சூழ, ஆரண நடத்தொடு - வேதங்களின் ஒலி நடையோடு

53. அங்கம் ஆறு - நான்கு வேதங்களின் உட்பொருளாகிய ஆறு அங்கம், சிங்கவரசன் - சிங்கங்களின் அரசசிங்கங்கள் தாங்கிய ஆசனம்

54. வாரடி - நீண்ட பாதங்கள், செய்யளாய் தூய்மை உடையவளாய் மையளாய் - மைபூசப்பட்டவளாய், மடப்பிடி இமையான பெண் யானை போன்றுள்ளவள்.

55 சொல்லும் வெண்ணகையு மேனியுந்தூய
நல்ல தன்மையவே நாவினமர்ந்த
அள்ளலில் வெண்கமல வண்ணமோடன்பாற்
புல்லி யங்கரியினைப் பொழிவுற்றான்.

56 பைம்பொன் மாமணிய வல்லி படர்ந்தோர்
செம்பொன் மால்வரை திகழ்ந்த சிறப்பின்
வெம்புமாமணி யணிப்பணி வேய்ந்தாங்கு
அன்புயர்த் தன்ன மாந்தனன் மாதோ.

57 சிகர நான் முடிகள் செங்கதிர் நல்
மகர வார் குழைகள் வானவில்
நிகரில் மார்புரி நூல் மின்னிறைக்கப்
புகரில் சோதி விரிப் பொன்னிற மன்ன.

58 கோயிலூடினிற் குலவிய வெல்லை
வாயிலோரிசைவின் வானவ ரோடும்
போயினான்வரு புரந்தர னென்ப
தாயிலா மகவுபோல் தளர்நெஞ்சான்.

---

55 வெண்நகை - தூய புன்னகை, அள்ளல் இல் சேறு இல்லாத, வண்ணம் - நிறம், புல்லியங்கரி - பொருந்தியுள்ள அழகிய கலைமகள்.

56 வல்லி - வல்லிக்கொடி - வல்லிக்கொடி போன்ற. மால்வரை - கயிலை மலை, பணி - பாம்பாபரணம், அம்புயர்த்த - அழகே உயர்ந்து எழுந்ததைப் போன்று.

57. சிகர நான் முடிகள் - சிகரம் போன்ற நான்கு திருமுடிகள், மின்னிறைக்க - மின்னலைப் போன்று ஒளி நிறைக்க, புகரில் - குற்றம் இல்லாத,

58 கோயில் - இருப்பிடம், குலவிய - நெருங்கிய, மகவு - இளமையுடைய பிள்ளை.

59 புண்டரீக னிரு தாட்புணை போதிற்
றொண்டினோடு மலர் தூயத்தொழு தன்பால்
பண்டைவேத மொழியாற் பலகாலுங்
கொண்டலூர்தி குழைவாற்றுதி செய்தான்.

60 அன்னமூர் புனித வன்னமுயிர்த்தோய்
முன்ன மூவரின் முதற்றொழில் வல்லோய்
பன்னகர் பானன்புடைத்த நாயக
நின்ன தாளினை நினைந்துரை செய்கோம்.

61 தாதை தாதை யுலகந் தருந் தூய
நீ தயாவொடு நினைத்தருள் செய்யும்
ஏதமேதுமில மெங்குறை நின்பால்
ஓது கோமுனை யல்லாற் புகலுண்டோ.

62 அய்ய கேளினி கொடிய வசுரனென்போ
னுய்யு மாதவ முஞற்றியதவ வழித்தாய்
செய்ய வாழ்வு கயமாதலிற் றீயோன்
வெய்ய வாளமர் எமக்கு விளைத்தான்.

---

59. புண்டரீகன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், பண்டை வேத மொழி - பழமையான வேதங்களால் மொழிந்து, கொண்டல் ஊர்தி - மேகத்தை வாகனமாகக் கொண்ட வருணன்.

60. அன்னம் ஊர் புனித - அன்னவாகனத்தில் ஏறிவரும் புனிதனே, முதற்தொழில் - படைக்கும் தொழில், செய்கோம் - விண்ணப்பம் செய்கின்றோம்.

61. தாதை தாதை - பிரமன், ஓதுகோம் - விண்ணப்பம் செய்கின்றோம். புகலுண்டோ - பாதுகாப்பிடம் உண்டோ.

62. உஞற்றிய - வலிந்து செய்த, கயமாதலின் - கயமையானதினாலே, வெய்ய - கொடிய, வாளமர் - வாள்போர்.

63 சாடினா னெதிர் தருக்கொடு நில்லாது
ஓடினோ முறையும் ஊரொடும் தோற்றோம்
வாடினோ மிகவும் மற்றவன் தன்னாலே
வீடினோம் அலமந்து மேவினோம் நலிந்தோம்.

64 பொற் புடைக் கொடி புலம்பியழுங்கக்
கற்பகத்தினை யகழ்ந்து கவர்ந்தான்
நற்பசுக்களை நடுங்க வலங்கொண்டான்
இற்புறத்திடை யிறங்க மிக வசைத்தான்.

65 கொண்ட மங்கையர் கொழுங்குவளைக் கண்
விண்டு நுண்டுளி விடாதவ னில்லிற்
றொண்டி னேவல் செய்து சோர்ந்தனரின்று
மண்டுகம் பணிகள்வாய் பாடுறுமா போன்று.

66 குன்று பொடி பட்டுடைய வென்ற குலிசம்போ
யன்று அவனுரத்திடை யுதைத்து விழுமன்னா
யின்று வரையவனி ருந்ததினி யென்னால்
என்று வயிர்ப்புடையேனும் பெயர்ப் படைப்பேனான்.

---

63. சாடினான் - ஆயுதங்களால் அடித்தான். தருக்கொடு - வீரத்துடன் எதிர்த்து நிற்க ஆற்றாது, உறையும் ஊரொடும் - வாழும் ஊரெங்கும், வீடினோம் - வீழ்ச்சியடைந்தோம், நலிந்தோம் - செயலிழந்தோம்.

64 பொற்புடைக்கொடி - இந்திராணி, வலங்கொண்டான் - வெற்றி யாகப் பற்றிக் கொண்டான், இறங்க - நாங்கள் தாழ்வுபெற, வசைந்தான் - தாழ்மையுடைய வசை மொழிகள் கூறினான்.

65 கொண்ட மங்கையர் - அசுரன் கவர்ந்து கொண்ட தேவமகளிர், ஏவல் - ஏவிய பணிகள். மண்டுகம் - தேரை, பணிகள் வாய் - பாம்புகளின் வாய்களில் - பாடுறுமா - அகப்பட்டுத் துன்பப் படுதல் போன்று,

66 குலிசம் - குலிசப்படை, உரத்திடை - மார்பின் நடுவே, என்னால் - என்ன காரணத்தினால்,

67 மான மிழந்து வலியிழந்து நீங்கா
தான மிழந்து தனித்தனியே நெஞ்சழிந்தோம்
போனக மிழந்து புவியுமிழந்து போவதெங்காம்
ஈனமெண்ணி யிளைத்தோ மினியென் படுவோம்.

68 ஆலம்போல் முப்புரம் போந்தகல்வ போலசுரர்
சாலம்போல் மாளச் சிவனுமருளச் செய்திலனால்
ஆலம் போதித் துயிலும் பண்ணவனுந் திண்மதமா
வோலம் போலெங்கும் எமக்கொன்று மருள் செய்திலனால்.

69 நீயே கொடுத்த வாம் நீயழிப்பதில்லை யென்னிற்
றாயே யெம்புன்கண் தவிர்க்கும் வாயாருரைப்பார்
சேயே யனையோஞ் சிறுமையுறு மூழ்வினையும்
போயகல வாழ்வருளி எங்கள்குறையே தீர்த்தருள்வாய்.

[ தேவர்கள் முறைப்பாடு முற்றும் ]

பிரமன் அஞ்சே லென்றல்

70 இவ்வாறிறைஞ்சி யழுதேத்து மிமையோருக்
கவ்வாறிசைத் தன்ன வபயகர மளித்துச்
செவ்வார் சடையோனை சித்தத் தியானத்தா
லொவ்வு முளங்கொண்டொரு முகுத்த மங்கிருந்தான்.

---

67. வலியிழந்து - எங்கள் வலிமையினை இழந்து, தானம் - இருப்பிடம், போனகம் - அவிவுணவு, புவி - வாழுமுலகம், ஈனம் - உண்டான தாழ்வு.

68. ஆலம் போல் - கொடியவிடம் போல், சாலம் போல் - மாயா சாலம் போன்று, ஆலம் போதி - ஆதிசேடனாகிய மலரணையில், பண்ணவன் - திருமால், மதமா ஓலம் - கஜேந்திரன் என்னும் யானையின் அடைக்கலக்குரல் செய்திலன் - செய்யவில்லை.

69. தாயே - தாய்போன்றவனே, புன்கண் - மிக துன்பம், வாய் - ஆதரவுச் சொல், சேயேயனையோம் - தங்கள் மக்களைப் போன்ற நாங்கள்.

70. இறைஞ்சி - பலவாறு குறையிரந்து, அவ்வாறிசைத்தன்ன - அசுரனுக்கு அன்று ஆதரவு சொன்னதைப்போன்று, முகுத்தம் - முகூர்த்தம் - 3¾ நாழிகை.

( வேறு )

71 உருவ மாதியிற் கவிழ்த்திடும் புலன்க ளுள்ளொடுங்க
கரும விந்திரியப் பிணிப்புறக் கரணமும் நனிதொன்ற,
அருவமா யுருவாயுரு மாயப் பலவாகியுற்
றொருவராலு முணரான்தனை வுளங்கொண்டு மகிழ்ந்தான்.

72 உள்ளத் தாமரை மணமெனத் தோற்றின னொருவன்
வள்ளற் கருந்திறஞ் செய்தனன் பூசனைகள் மற்றுங்
கள்ளத் தானவன் செய் காரியங் கருத்தினால் வினாவத்
தெள்ளத் தற்பர னருளினன் செய்வகை முறை சிறப்பால்.

73 புந்தியிற் சிவனுணர்த்திய வாறெலாம், புலம்பு
மிந்திரர்க்கு முன்னிமையவர் யாவர்க்கு மிசைப்பான்
கந்தரக்கறை புனிதனின் கருணையங் கடலில்
விந்தமொப்ப நின்று மிழற்றிய கருத்தினை மீட்டான்.

74 பாரிற் பார்த்த தானபதியிற் பைந்தமிழ் கூண்டத்
தேரிற் காவிரி நாட்டளவில் அமைபதிகளுக் குள்ளும்
பேரில் பஞ்சநதித் தலமென்பது பேசின்
சேரிற் சேரும் நலம் பயங்கள் தவிர்த்திடும் தேவீர்!

---

71. புலன்கள் - மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளால் ஆகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன, அருவமாய் - உரு இல்லாததாய்,
72 தோற்றினான் - தோன்றினான், வள்ளல் - சிவபெருமான், தானவன் - அசூரன்.
73. புந்தி - மனத்தில், இசைப்பான் - பிரமன் எடுத்துக் கூறினான், கந்தரக்கறை - கழுத்தில் விடத்தால் கறைகாணும் சிவன், விந்தம் - விந்தியமலை
74. பாரில் - உலகத்தில், தானபதி - சிவனுறையும் நல்லிடம், டீரின் - ஆராய்ந்தறிந்தால், பஞ்சநதித்தலம் - திருவையாற்றுத்தலம், பேசின் - கூறினால், சேரின் சேரும் - அடைந்தால் ஆதரவு சேரும்.

75 பிரணதார்த்திகர்த் தலமென்றொரு பேர்கொண்
டரண தாயுயிர் யாவுமளிக்கு மையாறு
மரண வேதினை வெம்பிறவித்துயர் மாற்றும்
கரணமாய் வரும்பிணி தீர்ப்பது கண்டீர்!

76 விலங்கினாற் பகையால் வருமச்சம் விலக்கும்
கலக்குமால் மிடியால் வருந்தாவகை காக்கும்
அலங்கு பாதகமாழ் நரகத்தொடு மாய்க்கும்
இலிங்க மேலிது போலான வேறிலை யென்றான்.

77 ஆதலா லுமைக் காப்ப தற்கோ ரடையாளங்
காதலால் வருமின்பம் அவ்வூரயல் கண்
டாதலாலிலை வேற்றரண் யாமினி யெண்ணிற்
போதலே கடனென்றய னன்று புகன்றான்.

78 வேதவித்தகனால் விடை பெற்றவர் மெய்யாற்
பூதலத்தி லுளத்தொடு வந்து புகுந்தார்
தாதுக் கயல்பாய் முறுக்கவிழ் தண்பூக்
காதமுப்பது மொய்ப்ப மணங்கமழ் காவு.

---

75. அரணம் - பாதுகாவல், வேதினை - துன்பத்தினை, கரணம் - வினைப்பயனாய்.

76. கலங்குமால் - மனத்தைக் கலக்கும் மயக்கம், அலங்கு - வருத்தும், மேலிது - மேலானது இது.

77. இலை - இல்லை, வேற்றரண் - வேறு பாதுகாப்பிடம், அயன் - பிரமன் போதலே கடன் - ஐயாற்றுத்தலத்திற்குந் போய்ச் சேர்வதே கடமையாகும்

78. வேதவித்தகன் - பிரமன், விடை பெற்றவர் - தேவர்கள், கயல்பாய் - கெண்டைமீன் பாயும், காவு - பூஞ்சோலை.

79 தேனளாவிய வண்டுகள் சந்தனச் சேறாய்
பானிலாமடற் பாளைகள் சாய மரைப்பாங்காய்த்
தூனமாமயி லாலவட்டத் தொழில் தானாய்
தூனிலா விருந்தெதிர் கொண்டது சோலை.

80 கற்பகாடவி பூமரக்காடெனக் கண்டார்
பொற்ப வானதி காவிரி யாறெனப் புக்கார்
சொற்க மாதவர் பூசுரர் மேனச் சூழ்ந்தார்
நற்பதங்கொள் சிலம்பொலி மாதரென்றாய்ந்தார்.

81 தொன்னகச் சிறப்பி னோக்கி துறக்கத்தை மறந்து நின்றார்
அன்னகர்ச் சீவனைச் சேவித்தா ரமுதிகழ்ந்து நின்றார்
பன்னகப் பணியாய் போற்றி பரமனே போற்றி யென்று
பொன்னகர் திருத்தா ளேத்திப் புகழ்ந்தனர் புகுந்தோ
ரெல்லாம்.

82 எத்திறத் தினர்க்குந் துன்பம் யாவையும் தீர்ப்போ னும்பர்
அத்திற மீங்கு காப்பத் திசையம் போல்வ தன்றே
மத்தமத் தடுக்கம் போல மதனதிக் களிற்றை மாய்க்கும்
முற்றமர் சிங்கம் மற்றோர் துடியடி யுடற்றா தன்றே.

---

79. தேன் அளாவிய - மலரில் தேனினைத் துளாவிய - வண்டு. மரை - தாமரை, தூஅன - தூயனவாகிய, ஆலவட்டம் - அசை விசிறி, தூநிலா - தூய்மையான நிறைமதி
80. கற்பக அடவி - கற்பகக்காடு, வான்நதி - வானகங்கை, புக்கார் - நீராடினர், சொர்க்க மாதவர் - தேவவுலகத்து மிக்க தவமுனிவர், பூசுரர் - அந்தணர்.
81. துறக்கம் - மோட்சம், பன்னகம் - பலமலைகள், பரமன் - சிவபெருமான்
82 தடுக்கம் - தடுத்துக்காத்தல், முற்றமர் - வலிய போர், துடியடி - கரடிகள், உடற்றா - துன்பஞ் செய்யா.

83 மலையெலாம் பிளந்து நிற்கும் வயிரவாண் விசையஞ் சிந்துஞ்
சிலையிலோர் திரளைக் கல்லின் திண்ணிய
இடையுடையளன்றோ
தொலைவிலாப் பாதகத்தின் துயர் தவிர்த்திடும் ஐயாறு
கொலையிலோர் அசுரன் செய்யுங் கொடுமைகள்
வாரா தன்றோ?

84 பரிந்தருள் சூழ் மகத்தீப் பசியறிந் தருத்து நன்றாய்
வருந்தி நின்றழுத போழ்தின் மணிமுலை சுரக்குந் தீம்பா
ல நந்து மாறன்பினூடே யருளி ஐயாற்றின் கோயில்
இருந்தவன் சுரர்க் கிரங்கா னல்லனோ என்ன சொன்னார்.

[ அஞ்ச லென்றல் முற்றும் ]

85 மாரியாம் புலம் படைத்த வான் பயிரமுத வெள்ளம்
பூரியா நிறைந்ததே போற் புனிதன் வாய் பையச் சொல்லி
நேரிவாய் நீறிற் றேரி வந்தன ரிமையோரிப்பால்
வேரியார் கமலத்தோனும் விருப்பினோர் கருமஞ் செய்தான்

86 அடைந்தவர்க் கின்னல் தீர்க்கும் ஐயனை ஐயாற்றிற் றேனர்
மிடைந்தனர் விசையன் வாணாள் வீழ்ந்தது வித்தகத்தோ
யுடைந்தன ரவனா லவ்வா றவன்பட வுஞற்று கென்று
கடைந்தயாழ் வல்ல காதல் முனிவர்க்குக் கழறினார்கள்.

---

83. சிலை - மலை, திரளைக் கல்லின் - திரண்ட கல்லில், துயர் - துயரம்.

85. புலம் - நெல்வயல், வான்பயிர் - உயர்ந்த நெற்பயிர், பைய- மெதுவாக, வேரியார் - தாமரையிலமர்ந்தவன்.

86. இன்னல் - மிகுதுன்பம், விசையன் - அசுரன், உஞற்று - செயல் புரிவாயாக, முனிவர் - நாரதர்.

87 வானின்றிழிந்து வானதிபோல விண்ணமுதமா வருவதெனத்
தானங் கிழிந்து நாரதனுந்தடங் காவிரியிற் சேர்ந்தமிழ்ந்தி
(வூனின்றகலா வுயிரு முயிருண வாகி யுணர்வரிய)
ஞானமா திரண்ட பஞ்சநதியை வானமுத யாழில் பாடினான்
மோனமதாகச் சிந்தித்த தேவர் முக்கண்ணினானை மனம் வைத்தார்.

88 அளைவா மூலவன் கண்கண்டமைந்த வாணிமாண் பத்தர்த்
துளைவாய் மறுப்புத் தேன்வார்ந்த சுகிர்வாய்ந்த நரம்பின் யாழின்
விளைவா லொலித்தல் முதற்புறமாக விளையாட்டி னகத் தொழிலின்
களைவார் போக்கி மிடற்றிசையோடு பாணியகானம் தொடங்கினான்.

89 எப்பேச்சும் போல் இடையிடையே யொவ் வொருக்காற்
செப்பேச்சுரப் போதின் புகல மாட்டார் தினம்
புகல மாட்டார் சிவமாயிரண்டற் றின் (புற்றே)
புகலு மின்ப மியைத் துணவு (கொள்ள) மாட்டாரே.

---

87 தானம் - வான இடம், இழிந்து - இறங்கி, விண் - மேலுலகம், யாழில் - யாழ்பாடலில, முக்கண்ணினான் - ஐயாறுடைய சிவன்.

88. அலவன் - நண்டு, பத்தர் - யாழின் குடப்பகுதி, சுகிர் வாய்ந்த - முறுக்கமைந்த, மிடற்றிசை - கண்டப்பாட்டு, பாணிய-தாளத்தோடு கூடிய.

89. எப்பேச்சும் - எத்தகைய உரையாடலும், புகலுதல் - தன்குறை கூறுதல், இரண்டற்று - தான்வேறு ஐயாறப்பன் வேறு என்றில்லாமல் ஒன்றாய்க் கலந்து.

90 பாடுந் தேவ கீதத்தாற் பரம னுருகி வெளிநின்று
நீடுந் தவத்தோ யுன்விருப்பம் நினைவே தென்றானின் திருத்தாள்
வீடும் பொருளொன்றுடையோம் வேண்டும் பிறவேண்டேன் விண்ணோரைச்
சாடுஞ் சருவ விசையனவ னிழற்றற் காவென்றுதாள் பணிந்தார்.

91 அருளிற் கால வயிரவனை யழைத்துத் தேவர் அவுணரால்
வெருளிப்புகுந்தாரிவ ணெய்தில் விலக்கிப் பாதுகாத்தியெனத்
தெருளிய தவத்தோன் விடைகொண்டு தேடி யசுரர்க் குணர்த்திடுவான்
மருளிற் பவந் தீர்ந்திடத் தலங்கள் வணங்கு வோரின் வழிபட்டான்.

92 வாளைக்களிறு மதர்த்துகள் மணிவான் பணிலஞ் சூலுளைந்து
தாளைத் தழுவிச் செழுஞ்சாலி தலைப்பூங் கரும்பிற் றவழ்ந் தேறி
காளைப்பகட்டின் வய நீங்கிக் கதலிக்காடு கடந்து போய்ப்
பாளைக் கமுகின் வழியிறங்கும் பழனஞ் சேர்ந்து வணங்கினான்.

---

90. கீதம் - இசைப் பாடல் வீடும் - அழியும், சாடும் - போரிட்டழிக்கும், சருவவிசையன் - அசுரன், நிழற்ற - செய்தால், கா - காப்பாற்றுவாயாக.

91. கால பைரவன் - கால பைரவதேவர், வெருளி - அஞ்சி, மருளில் - குற்றமில்லாமல்.

92. வாளைக்களிறு - ஆண்வாளைமீன், மதர்த்து - திமிர்த்து எழுதலால் எழும் நீர், பணிலம் - வானகங்கையில் வளரும் சங்குகள், சூலுளைந்து - கருப்பெற்று, செழுஞ்சாலி - செலுமையான நெற்பயிர், பகடு - காளைமாடு, கதலிக்காடு - வாழைத்தோட்டக்காடு, கமுகு - பாக்கு மரம், பழனம் - திருப்பழனத்தலம்

93 வணங்கி வருங்காலமாக வானோரெவரும் வந்திறைஞ்சி
இணங்கு மெமக்குப் பஞ்சநதம் யிருக்கைக் கினிதே
யென்றாலும்,
அணங்கு புரியுஞ் சகவிசையற் கழிவு வருநா ளென்னாளென்
றுணங்கு நமக்குக் கூறுகென வும்பர்க் குரைத்தான்
உரவோனே.

94 ஆற்றலவுணன் வாழுநாள் அண்ணி தாயிற் றவ்வளவு
நோற்ற லுடனிப் பஞ்சநதத் தணவா திருத்திரெனும்
பொருட்டுப்
போற்றலிலையேற் புகலடைந்தோர்க் கிடும்பை தீர்க்கும்
புகட்பெரும்பேர்
சாற்றல் பதிக்கு மிப்பதிக்கு மென்னாமென்று தானகன்றான்.

95 செழுஞ்சாலி யரிவிளையும் திருச்சோற்றுத்துறை சேவித்
தெழுஞ்சாமம் வண்டிசைக்கும் வேதிக்குடி யிறைஞ்சிப்போய்
உழுஞ்சாலில் வளர்நீல மலர் துவளுங் கண்டியூர்
தொழுஞ் சால்பிற் பொன்னிமலர் தொகுக்கும்
பூந்துருத்தியுடன்.

96 நெய்மணக்கும் புகை வேள்வி நெய்த்தானஞ் சேவித்து
மைமணக்க மயிலாலும் பெரும்புலியூர் நடம் வாழ்த்திப்
பொய்கை மணக்கும் பிணிதீர்க்கும் பாடியாடி போந் தேத்தி
மெய்மணக்குஞ் சிவஞான மிகுமானைக் காப்பணிந்தான்.

---

93. இணங்கும் - வந்து பணியும், அணங்கு - துன்பம் செய்யும்,
உணங்கு - நலிந்துவருந்தும், உரவோன் - திருப்பழனத்துச்சிவபெருமான்.

94. அண்ணிதாயிற்று - மிகநெருங்கிவிட்டது, தணவா - நீங்காமல்,
பதி - தலம், சாற்றல் - எடுத்துக் கூறுதல்.

95. செழுஞ்சாலி - வளமையான வயல், அரி - செந்நெல்,
எழுஞ்சாமம் - வைகறைப்பொழுது, வேதிக்குடி - திருவேதிக்குடி.

96. வேள்வி - யாகம், மைமணக்க - மேகத்தைக் கண்டு விரும்ப,
பொய்கை - நீரோடை. பாடி - மழபாடி.

97 செவ்வந்தி மணம் நீங்கா திருச்சிராய் மலை போற்றி
அவ்வந்தி நிறத்தோனை யப்பாலும் சிவபதிகள்
மெய் வந்திப்புடன் போற்றி மீண்டு கழைவளர் சாலிக்
கைவந்தியில் காட்டுப் பள்ளியுங் கடந்தான்.

98 பாலாவின் பயனாடும் பசுவதீச்சுரம் நண்ணி
சூலாருமுகில் சோலைத்துஞ்சிய பாலைத்துறையும்
சேலாரும் நறுங்கழனி திருநல்லூருடன் தொழுது
மாலாசைச் சுழிநீக்கும் வலஞ்சுழியும் வலம் வந்தான்.

99 வடநீழற் றிருமருந்தை புறம்புயத்தில் வாய்த்தெய்திக்
குடமூக்கிலாரமுதைக் குழைந்தின்பமுடன் பருகிப்
படநீழற் சிரமணியை பட்டீச்சரந்தனிற் பலித்துத்
திடநீடத் தித்திக்கும் தேனை மருந்திடைத் தெரிந்தான்.

100 நச்சுவார்க் கினியானை நாகயீச்சுரத் தெண்ணி
மெச்சுவார்க் கெளியானை ஆவடுதண்டுறைவணங்கி
கச்சுவா ரரவானை வாஞ்சியத்துக் கண்டிறைஞ்சி
விச்சுவாதீதனைப் போய் வீழிமிழலைப் பணிந்தான்.

---

97. செவ்வந்தி - செவ்வந்தி மலர், கழை - கரும்பு,
காட்டுப்பள்ளி - திருக்காட்டுப்பள்ளி.

98. பாலா - பால் ஆ, பாற்பசு, பயன் - பஞ்சகவ்யம், நண்ணி - அடைந்து
சூலாரும் - மழைக்கருகொண்ட, மாலாசை - மயக்கந்தரும் ஆசைகள்.

99. வடநீழல் - வட ஆலமரத்தின் நிழல், குடமூக்கு - குடந்தை
சிரமணி - சிகாமணி மருத்திடை - திருவிடைமருதூரிடை, புறம்பயம்,
குடந்தை, பட்டீச்சுரம், இடைமருதூர் - சிவத்தலங்கள்.

100 நச்சுவார் - தன்னைப்பழித்தவர். மெச்சுவார் - தன்னைப்புகழ்வார்.
அரவானை - பாம்பாபரணனை (சிவனை) விச்சு ஆதிதனை - எல்லாவுல
கங்கட்கும் மேலான முதற்கடவுளை, நாகயீச்சுவரம், (நாகேச்சுரம்)
ஆவடுதுறை, திருவாஞ்சியம், திருவீழிமழலை.

101 வள்ளளைச் சிந்தனை செய்து மயிலாடுதுறை நீங்கிப்
புள்ளிருக்கும் வேளூரில் பண்டிதத்தைப் புகழ்ந்தேத்திப்
வெள்ளமிக்க திருத்தோணி வித்தகத்தைக் கண்டகன்று
கள்ளலைக்கும் புனம்பழனத் தில்லை வனங்கண்டடைந்தான்.

102 ஆனத்தத் திருக்கூத்துக் கன்புருகி விசைபாடி
பானந்தம் முரன்றலைக்குங் கழிப்பாலைப் பணிந்துபோய்
வானந்தத் தருமுல்லை வாயிலகமகிழ்ந் திறைஞ்சி
யூனந்த மறலியைக் காய்ந்தொறுத்தக் கடவூர் வந்தான்.

103 செக்கர்ப் பவளச் சிவக்கொழுந்தைதிருவெண்காட்டிற் கும்பிட்டு
முக்கட்கனியைச் செங்காட்டில் முடிதாழ்த் தெழுந்து நள்ளாற்றுச்
சொக்கப் பெருமான்தனைப் போற்றிப் புகலூர் புலவர்பசி நீக்கும்
நக்கர்க் கிசைநூல் வழிபாடித் திருவாரூரில் நண்ணினான்.

104 ஆடுமாவடிக் சிண்கிணிக்கால் ஆவிகுளிரச் சேவித்துக்
கோடி மூழ்கி மறைக்காட்டிற் கோமானடிக்குக் கைகூப்பிக்
காடு பவளம் படப்படருங் காயாரோணங் கைகூப்பிச்
சேடுபடு தென்கரைப் போய் திருவிராமீச்சரம் புகுந்தான்.

---

101. புள்ளிருக்கு வேளூர் - திருவைத்திய ஈசுவரன்கோவில். பண்டிதன் - முருகப்பெருமான், திருத்தோணிபுரம் - சீர்காழி, தில்லைவனம் - சிதம்பரம்.
102 பானந்தம் - வண்டுகள், கழிப்பாலை - திருக்கழிப்பாலைத்தலம்,
ஊனந்த மறலி - அந்தகனாகிய எமன். காய்ந்தொறுத்த - சினந்து அடங்கிய
கடவூர் - திருக்கடவூர்
103. செக்கர் - சிவந்த, சொக்கப்பெருமான் பொன்மேனிப் பெருமான்,
நக்கர் - சிவபெருமான்.
104. கோடி - திருக்கோடிக்காவல், மறைகாடு - வேதாரண்யம்,
காடு - பவளக்காடு, புகுந்தான் - சென்றடைந்தான்.

105 வானவரிடந் துருவி வந்தவிசையத் தோன்
தானவர் செகுத்த செயல் கண்டு தெரியனாய்க்
கானவரி வேங்கையெதிர் கண்கடலு மாக்கட்
கூனமுற வெட்கியென வடங்கியுள நொந்தான்.

106 தெட்டின ரெனத்தலை துளக்கு நகை செய்யுந்
தட்டுமிரு கைத்தல முயிர்த் தழனாசிச்
சுட்டுவிரல் நொடித்திடு மினிச் சுரரெறும் பேர்
கெட்டதென உள்தெளிவு கெட்டவென நிற்கும்.

107 திக்கொடு நகைக்கும் அவனுக்கெதிர் சினக்கும்
பக்க மலையைக் கறுவும் மைக்கடல் பனிக்கும்
அக்க திருக்கிடு முடுக்களை வியர்க்கும்
நக்கது செயற்கையி தெனத்தனை வெறுக்கும்.

108 எண்டிசை புகைந்தன விருண்ட துலகெல்லாம்
மண்டல நடுங்கியது வானிரவி யச்சங்
கொண்டது மயங்கியது கொண்டல் முதனாலும்
விண்டுவிசை யன்றனி வெகுண்ட பொழுதம்மா!

---

105. வானவர் இடம் - தேவர்கள் உள்ள இடத்தை, துருவி - நன்றாக ஆராய்ந்து, விசையத்தோன் - அசுரன்.

106. தெட்டினர் - தெளிவடைந்தனர், துளங்கும் - அசைக்கும், நாசி - மூக்கில், உள்தெளிவு உள்ளத்தில் கொண்ட தெளிவு

107. வான்கதிர் - சூரியனைப்பார்த்து, சினக்கும் - கோபங்கொள்ளும். அக்கம் - சார்ந்த இடங்களில் உள்ள, உடுக்களை - விண்மீன்களை (நட்சத்திரங்களை)

108. எண்டிசை - எட்டுதிசையும், வானிரவி - வானிலுள்ள சூரியன், கொண்டல் - கார்மேகம், வெகுண்ட - கோபங்கொண்டு எழுந்த.

109 ஏழுகட லேழுபுவி யேழுமுகி லெட்டிக்
கீழுலகு மூழுமிசை யேழினொடு கிட்டிச்
சூழும் வன்கொடுமை அன்றுவரைச் சூழ்வான்
வாழியவனார் வருந்திசையில் வந்தான்.

110 வந்தவனை யாசியில் வழங்கி இசை யோதிச்
சிந்தனை தளர்ந்த செயலென்னை யென வன்னான்
இந்திரனிருந்த விடமின்னதென வெண்ணேன்
அந்திலத னாலலது நெஞ்சினயர் வில்லேன்.

111 எங்கு மெவர்பாலு மெளிதின்பமுற வன்பாற்
றங்கிய னினக்கலது சார்பு தெரியாதாற்
றுங்க புகலென்றிட வுவக்குமது சொல்லா
னிங்கிவ னிசைந்தன னெனத் தவனிசைப்பான்.

112 கயிரவ்விதக் கரிய மெய் வாய் கால்
வயிரவ னொருத்த னவன் மாடு திரிகின்றான்
செயிர்வனுனைப் பொருவனன் றொருசெருக்கா
லுயிர்வரப் படைத்தனர் களிப்பினுரைகின்றார்.

---

109. புவி - உலகங்கள், சூழ்வான் - திட்டமிட்டுச் செயலாற்றுபவன், கிட்டி - நெருங்கிச்சென்று.

110. ஆசியில் - ஆசிகூறுதல் வழி. என்னை - என்னகாரணம், அன்னான் - வந்த அசுரன், அந்தில் - அத்தகைய குறை.

111. எவர்பாலும் - எத்தகைய தேவர்களிடத்தும், சார்பு - சென்றுள்ளஇடம் துங்க புகல் - தூயவனே சொல், இசைந்தனன் - தங்கியுள்ளான்.

112. கயிர் - கரிக்குருவி, வயிரவன் - வயிரவமூர்த்தி, மாடு - பக்கமாகவே செயிர்வன் - அழிப்பன், களிப்பினுறைகின்றார் - தேவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள்.

113 பெருபுவி படைத்தருள் பிதாமகன் வரத்தால்
சருவ விசையப்பெயர் தரித்திடு முனக்குக்
கருவலவனைப் பொரக் கருத லிடமோ
ரிலக்கோ வறுதியினி யத்தலனுனக்கு மாமென்றான்.

114 உன்வரவு கேட்கி லவரோடவும் நினைப்பார்
மின்வரவிற்குமுன் விரைந்திடுக வென்னத்
தன்வரவுரைத்தபடி தாபதனு முன்னீர்
தென்வரைய மாதனவரைத் திசைப்படர்ந்தான்.

115 வஞ்சமில் மனத்தால் வணங்கி வருகென்றென்
கஞ்ச மலர் வாவி செறி காவிரியினோர்பாற்
பஞ்சநதி யென்றொரு பதிக்குள் மகவானுந்
தஞ்சமென வானவர்கள் தம்முடனிருந்தான்

116 தனுக்கோடி முதல்கோடி தீர்த்தமெலா மகிழ்ந்தாடித் தசரதன் சேய்
மனுக்கோடி யருச்சித்த சிவலிங்கம் மருங்கோடி வணங்கியேத்து
மினுக்கோடிய விரகனூர் ரதனும் விரைந்தடைந்தான் விண்ணோர்க்கின்னல்
அனுக்கோடி யிழைக்க வல்ல தானவனுந் திருவையாறணையு முன்னம்.

---

113. பெருபுவி - மிகப்பெரியய உலகம், பிதாமகன் - பிரமன்.

114. தன்வரவு உரைத்தபடி - தன்வரவினைச்சொன்னவாறு, மாதனவரை-கந்தமாதனமலை, திசை - பக்கம், படர்ந்தான் - நோக்கிச்சென்றான்.

115. கஞ்சமலர் - தாமரை மலர், வாவி - தடாகம், மகதான் - இந்திரன்.

116. மனுக்கோடி - உலகமக்களெல்லாம், சிவலிங்கம் - இராமநாதனின் அருவுருவாகிய சிவலிங்கம், இன்னல் - துன்பம், தானவன் - அசுரன்.

117 வந்தமுனி யிமையோர்க்கும் மகவார்க்கும்
முனிவருக்கும் மறையோர் யார்க்கும்
இந்தவகை யுரைத்தினிர் பிரணதார்த்திகனைச்
சென்றேத்தியுங்கட்
கந்தமில் தானவன் கெடுமாறளிக்கும் வரங்
கேட்டீரெனவழைத்துள் புக்கான்
சந்தமிகு செழுஞ் சுருதிப் பதப்பொரு ளாற்றுதி
செய்தார் தக்காரெல்லாம்.

118 புரந்தராதி யெத்தேவரும் புவியிடைத் திரிந்தால்
இரந்த நல்வினை யியற்றி யோர் நிலப்பயனுகர்வான்
அரந்தையில் பதந் துறக்க மென்றமைத்தது மன்றாய்
கரந்து தானவ ருலகமாய்க் கிடப்பது தொடர் கடனோ.

119 அண்டருக்கிடர் விளைத்தவ னவனியி லின்னம்
தண்டுடைப் படையிற்சின மிகுந்தன்னோ ரடியினிற்
படவான்
கண்டிறக்கு முனிமெய்வாக்காக அவர்கட்காம் கடன்
முண்டகத்த தின்ன வரத்தோடு முடித்திட முடிப்பாய்.

( வேறு )

120 காவி பட்ட கண்ணரம்பையர்கள் படக்கண்ட
பாவி பட்ட பிலனது பாழ்படஅசுரர் பதியும்
பூவி பட்டிட வாழ்வுறாதென முனி புகல
நாவி பட்ட பூண்முலை யுமைபாகனு நவில்வான்.

---

117. இமையோர் - தேவர்கள், மகவான் - நூறுயாகம் செய்த இந்திரன், அந்தமில் - முடிவில்லாத, சுருதி - வேதம்.

118 புரந்தரன் - இந்திரன், அரந்தையில் - துன்பமில்லாத, கரந்து - மறைந்து துன்புறுத்தும், தானவர் - அசூரர்.

119. அண்டர் - தேவர், மெய்வாக்க - உண்மை வாக்காக, முண்டகம் - தாமரை

120. காவிபட்ட - நீலோற்பல மலர்போன்று பொருந்திய, பாவி - அசூரன், பூவிபட்டிட - புழுதியடைந்திட, நாவி - புனுகு.

121 கலகனாரதற் கொருகுறு நகைத்தொழில் காட்டிப்
புலவர்மேல்வரு மசூரரை பொடிபடுத்துக வென்
றகிலதேசனுரைத்தனன் வயிரவர்க் கமைவு,
விலக வங்ஙமை மதிற் புறஞ் சுற்றினன் விசையன்.

122 வளைத்த தானவ ரொலித்தலும் வயங்கிய வானோர்
களைத்துயிர்த்தனர் பகைஞரைக் கடுஞ்சினக்கவும்
விளைத்த நெஞ்சின் படைக்கலம் விடுத்திடில் வீயவ
ரிளைத் துயங்குவ ரெனக் கொதித்தெறிந்தனர் யாவும்.

123 வாழு மூவிலைச் சூலமும் வயிரமு மழுவும்
மூளு மாரழற் கப்பணந் தோரம் முசலம்
நீளு மீட்டியும் குந்தமும் விட்டனர் நிறைந்தார்
ஆளு மேகமிச் சோனையு மெனப் பொருமவுணர்.

124 வட்ட மாமதிலுட்படும் வானவர், தவத்தோ
ரிட்டமார்பு நூல் மறையவர் யாவரு மேங்க
விட்டவன் படை யாயிர மாயிரம் ஏவப்
பட்டதொவ்வொரு பெயர்க் கென்பதைத்தயர்ந்தார்.

---

121. கலக நரரதர் - கலகஞ்செய்யும் நாரதமுனி, புலவர் - தேவர், கமைவு - பொருந்திய ஆணை, விசையன் - அசூரன்.

122. வளைத்ததானவர் - தேவரை வளைத்துக்கொண்ட அசூரர்கள், உயங்குவர் - வருந்துவர்.

123. மழு - மழுவாயுதம், குந்தம் - முள்முனை ஆயுதம், நிறைந்தார் - மிகுதியாகப் பயன்படுத்தினர், மேகம் - கருமேகம், சோனை - பனிப்படலம்.

124. வன்படை - வலிமை மிகுந்தபடை, மறையவர் - பிராமணர், தைத்தயர்ந்தார் - பட்டு அயர்ந்தார்கள், தளர்ச்சியடைந்தார்கள்.

125 அலமந் தோடி அடைக்கல மடைக்கலம் நீக்கென
கலம் வந்தோடிய காக மொத்தயர்ந்தன மென்றார்
வலம் வந்தோடி யவ்வயிரவர் கண்டு தாள்வணங்கிட
தலம் வந்தோது முன்னடந்தனன் தனிப்படைவீரன்.

126 கால வங்கியி னுருத்திர னெழுச்சி கதுவக்
காலதிர்ந்து நடைக்கின்ற தென்றமைக் கழலொலிக்
காலருந்தி னவையில் வைத்தொரு கருப்புயலெனக்
காலமுந்து வடுகக்கடவுன் காத வருவான்.

127 செக்கர் வாயிரு பேறைக் கதிர் செவிக்குழையார்
நக்க நாவிரி புதைத்தசைய நஞ்சு மிடறா
டொக்க நீலமணி தாளிருகை கொளுமரைக்
கக்க மாலையுடனாடரவு சுற்றி யமைய.

128 படிப்படைக் கக்கமாலைப்பிறழ மார்பொடுபத்த
தடிபடிக்கர மெடுத்த தலையச்ச மருள் மேவ
வொடி படைத்திடு பிறப்பொருவ துற்றவுடல்
முடிபடைத்த கழுமுட்டலைக் கனன்று முனிய.

---

125. அலமந்து - தடுமாற்றமடைந்து, கலம் - மரக்கலம், தலம் - தன்னிடம், வீரன் - பைரவதேவர்.

126. உருத்திரன் - உருத்திர மூர்த்தியாகிய பைரவர், கதுவ - எதிர்த்துப் போரிட, காத - அசுரனை அழிக்க.

127. செக்கர் - சிவந்த, பேறை - கோரைப்பற்கள், அரைக்கு - இடையணியாக, அக்கமாலை - உருத்திராக்க மாலை, ஆடரவு - படமெடுத்தாடும் பாம்பு.

128. இப்பாடல், வயிரவ மூர்த்தியின் அங்க ஒப்பனைத் தோற்றம் கூறியதாம்.

129 அஞ்ச லஞ்சலென வானவ ரிடத்தபைய
முஞ்ச லஞ்சலங் கசடருக்குறு கெனுந்தொகை
செஞ்சிலம்பு புரியுந் தோறு மிகுஞ்சின மிகா
மஞ்சிலம் புரிசைப்புறன் விரைந்து மருவி.

130 துட்டவாளவுணனிட்ட தொழில் கண்டு துடியா
முட்டனா மிவண் முடித்து மெனிலின்று முடியா
தொட்டு பொருவோரில் இலக்கமுள கோடியுளதாற்
சுட்டநீறு படவட்டிடுது மென்று துணியா.

131 மூல வென்றியுள் பாதபதமுன்னி மொழியச்
சீலர் பஞ்சநதி பாதக மறுத்தல் செயல்
போலதிர்ந்த படைகேட்டிட விரைந்தடுகெனச்
சூலவெம்படைச் சுழற்றினன் விடுத்தனனரோ.

132 சூலமொன்று சுழற்றி நின்றது கண்டபோது ஒல்லை நீர்
ஞாலமெங்கு முடிக்குவெங் கனன்று மென்று நடுங்கினார்
மேலவன்கால் நின்றமர்க்குள் விழுந்த போது விழுந்தனர்
பாலமன்ற விளக்கின் முன்பு பதங்கராகி படிந்த போல்.

---

129. அஞ்சல் - அஞ்சாதீர்கள், கசடர் - தீயோராகிய அசூரர் மஞ்சு சிலம்பு புரிசை - மேகங்கள் தழுவி ஒலிக்கின்ற மதிள், மருவி - சென்றடைந்து,

130. துட்ட - கொடுமை நிறைந்த, துடியா - மனத்துடிப்படைந்து, முட்டனாம் - போரிட்டுத்தாக்கும் நாம், இவண் - இவ்விடத்து, இலக்கமுள - பகைவர் எண்ணளவிற்படாதவராக உள்ளனர், நீறு - திருநீறு, வட்டிடுதும் - மந்திர மோதி சுழற்றி வீசி எறிகின்றேன்.

131. மூலவென்றியுள் - திட்டமான வெற்றியில், பாதபதம் உன்னி - சிவபெருமானின் பாதங்களை நினைந்து, அடுகென - போரிடுங்கள் என்று,

132. ஒல்லைநீர் - பெருங்கடல் நீர், ஞாலமெங்கும் - உலகமெங்கும், கனன்று - எரிந்து, பதங்கராகி - சூரியராகி,

133 அரிகரந் திரிச் சக்கரங்க ளனந்த கோடியெனச் சுழன்
றெரிகரந்தனி நின்று நம்ப னெறிந்த வட்டமெனக் குலாய்க்
குரிசிலிந்திரன் வச்சிராயுதக் கொடி கோடியெனப் படும்
பரிகரந் துளைப் பட்டயானை பட்டது பதை பதைக்கவே.

134 மலையிடிக்கு மிடிக்குழாமென மார்பிடிக்கு மிடர் சமன்
தலை புடைத்த கதைக் குழாமென மிக்குமஞ் சிதகாக்கு நீ
ருலை வடித்த மழுகற் குடிப்ப தெனத்துவற்ற வறுக்கும் வெஞ்
சிலை விடுத்த குழுக்கணைக்கிணைச் செந்தழற் சிதறித் தெழும்

135 செந்தழற் புரித்தக்கன் வேள்வி சிதைத்ததெனப் பொருமோர்புறம்
அந்தகற் பெயரோனின் மாள வழுத்தி நிற்குமதோர் புறம்
வெந்தழற் புலயோனின் மாய விதந்தடுத்திடு மோர்புறம்
முந்து முப்புர மட்ட செந்தழல் போல் மூள்வதோர் புறம்.

136 வயிரவக் கடவுளென்னு வனமிகுத் தெழுந்த சீற்றச்
செயிரு முத்தலை வேறாகத் தீச்சுவைக் கவை நானீட்டிற்
பசியின் மிக்கிரை கண்டாங்கு பைத்தனர் பாய்ந்து சுற்று
மசுர ராமமுத வெள்ளம் தரைப்பட நக்கிற் றம்மா!

---

133. அரி - திருமால், சக்கரம் - சக்கராயுதம், பட்டயானை - அரச பட்டத்து யானை, பட்டது - இறந்தது.

134. மார்பிடிக்கும் - வீரர் மார்புடன் மார்பு இடிக்கும், மழு - மழுவாயுதம், சிலை - வில், கணை - தொடுத்த அம்பு.

135. தக்கன் வேள்வி - தக்கன் செய்த யாகம், புலயோன் - அற்பத் தொழி லுடைய அசுரன், அட்ட - எரித்த, மூள்வது - பற்றிச் சூழ்வது.

136. முத்தலை - மூன்று தலைப்போடு கூடிய சூலப்படை, கண்டாங்கு - கண்டதைப் போன்று, அசுரராம் - அசுரராகிய.

137 இரண்டு நாழிகையில் சேனையாவு நீறாக்கி நின்ற
திரண்டரு சூலமென்றியா மதிசயம் நினைக்கி லென்னாந்
திரண்ட பேரண்ட மெல்லாஞ் செருத்தொரு நொடிப்போதில்
புரண்டிடப் பூழியாக்கிப் புனைந்தவன் கைய தென்றால்.

138 அடியவர்க் கடியார் செய்யு மருந்தொழிற் கம்பொற்சோதி
வடவினி லொருவன் கால வயிரவ னிலக்கக் கோடி
படியுறு சேனையெல்லாம் பாசுபதாத் திறத்தால்
முடிவுறப் புரிந்தா னென்று மொழிவது புகட்சி யென்றான்.

139 கூறிய சூலம் அயன் கூறிய கரும முற்றி
சீறிய சத்தி செய்கை திரண்டென செங்கை சேரக்
காரிய வுலகும் அண்டும் காரண மாயை நின்றார்க்
காரியன் வரத்தினாலே அவுணர்கோன் நின்றானம்மா.

140 நின்றவர் கண்டநாத நெருப்பெழச் சினமீக் கொண்டு
தன்திருத் தாள்பெயர்த்துச் சகமெலாம் நடுங்க ஆர்த்துச்
சென்றவன் மார்பினூடு செங்கையா லோங்கிக் குத்த
வன்றவ னாயுள் மாண்ட தாகமும் துகளாயிற்றால்.

---

137. நீராக்கி - பொடியாக்கி அழித்து, திரண்தரு - திரண்டிருந்த பூழியாக்கி - புழுதிபோன்றதாக்கி, புனைந்தவன் - வெல்லுமாறு அனுப்பிய வயிரவன்.

138. வடவினில் - வடப்பக்கத்தில், படியுறு - வந்து சேர்ந்த அசுரர் சேனைகளெல்லாம், முடிவுற - அடியோடு அழிவுறுமாறு புகட்சி - புகழாக்கும் செயல்

139. காரிய உலகு - காரியமாகிய உலகம், காரியன் - மூலச்செயலான பிரமன், அவுணர் கோன் - அசுரர் மன்னன்.

140 சகமெலாம் - உலகம் யாவையும், ஆர்த்து - ஆர்ப்பரித்து, சென்றவன் மார்பினூடு - அசுரனிடத்துச் சென்று அவனது மார்பின் நடுவே, ஆயுள் மாண்டது - அசுரனின் ஆயுட்காலம் அழிந்துபோயிற்று, ஆகம் - அவனுடைய உடல், துகளாயிற்று - தூள்தூளாகப் பொடிந்து போயிற்று.

141 முரணுடை யவுணன் மார்பின் முனிந்தவன் தாக்குங் குத்தால்
இரணிய புரத்தோராதி யிமையவர் பகைமை யெல்லாம்
தரணியிற் றழங்கு மாயத் தன்கணை மாண்டதேபோல்
அரணிட மின்றி மாய்ந்தார் அமரர் கண்டணைந்து ஆர்த்தார்.

142 அரும்பொறை யிறைக்கி யென்ன அருந்திறல் பயிரவர்க் காம்
இரும்பெருங் கலக்கம் நீங்கிப் புனலெல்லாம் தெளிந்து செல்லக்
கரும்புமாங் கழியப் பொன்போல் கனவலம் சுழிப்பக் காலும்
வரும்புதுத் தென்றலாக வானெலாங் களங்கம் நீங்க,

143 அந்தணர் வேள்வி மல்க வானுடன்ஆன் சுரப்ப
தந்தநற் குடிக ளோங்க நாடெலாம் தழைப்ப தேவர்
சிந்தனை களித்து நிற்ப திசைமுகன் நெடுமால் போற்ற
வந்தன னய்யன் ஐய்யா றுடையவன் மகிழ்ந்தான் மாதோ.

144 இருமருங் கிரு மாணிக்கச் சுடரெனக் குமரர் எய்த
ஒருபுற னறை பழுத்த சோலையாயுமையாள் மேவத்
திருவளர் பவளக் குன்றம் திருந்து வெள்விடையில் வந்தான்
கருவளர் நந்தி கேசன் துதிக்க வந் தருளினானே.

---

141. முரணுடைய - மாறுபாடுடைய அசுரன், இரணியபுரம் - தேவவுலகம் பொன்னுலகம், அரணிடமின்றி - பாதுகாத்துக்கொள்ளும் இடமில்லாமல்,

142 அரும்பொறை - தேவர்கட்குண்டாகிய அரிய பெரிய பாரத்தை. அருந்திறல் - சிறந்த வலிமை, காலும் - காற்றும்.

143. வேள்வி - யாகங்கள், ஆன் - பசுவினம், தந்த - அருளிய, திசை முகன் - நான்முகனாகிய பிரமன், நெடுமால் - திருமால், வந்தனன் ஐயன் - பைரவமூர்த்தி வந்தார்.

144. குமரர் - விநாயகர், முருகன் இருபுதல்வர், நறை - தேன், வெள்விடை - வெண்மையான இடபம்,

145 தற்பர சயசய முக்கண சயசய தத்துவ சயசய முத்தி தருஞ்
சிற்பர சயசய நித்திய சயசய தக்கண சயசய சித்தி தருஞ்
சுற்பர சயசய கனகசபை யாடும் சுத்திய சயசய வென்
றற்புத னிணையடி பற்பல துதியுட னத்திற னமரர்
துதித்தனரால்.

146 சரணம் பசுபதி சரணம் சரணம் சத்தளவிழியாளமர்
சரணம் புனைதரு சரணம் புயவியன் சரணஞ் சரவணபவ
சரணம் பாசுபத சரணஞ் சிவசிவ சரணம் சரண் என்றே
சரணங்களில் மறையந்தணர் பலசார் முறையார்
சரணென்றார்.

147 விசைய னூழ் வினையை வேதாவரத்தினை
வியக்கோ வென்றீங்கு
இசை வினை வியக்கோ வென வியந்தன னின்றாள் காறும்
வசைய நின்றவனவத்தைக் கால வயிரவன் தனை
நின்னன்பாம்
இசைவினை வியக்கோ வென்றென் றிரந்தான்
வியந்து நின்றான்.

---

145. நித்திய - என்றும் உள்ளவனே, சுத்திய - தூய உள்ளத்தில் இருப்பவனே, துதியுடன் - போற்றுதலாகிய துதியுடன்,

146. புனைதரு - கற்பகதரு, சரவணபவ - முருகனது தந்தையே, பாசுபத - பாசுபதமெனும் வலிய ஆயுதத்தை உடையவனே, பலசார் முறையார் - வேத நெறிக்குறிய பல வழிமுறையினர்.

147. விசையன் - சருவ விசையன், ஊழ் - முற்பிறப்பால் வரும் வினை, வேதா - பிரமன், வியக்கோ - நினைந்து ஆச்சரியம் பெறுவதா? இசை வினை - உத்தரவினை,

148 அரும்பெறற் புதல்வர் செய்த வறனல் லானிற் பெற்றோர்
திரும்பு இன்னறத்தி னிற்பச் செலுத்துதல் முறையே யன்றோ
விரும்பரிவினா லிமையோர் துன்ப நீ விடுத்தா யென்று
பெரும்பெயர் பிரமன் மாயன் இருவரும் பேசி நின்றார்.

149 பவம் பகை கலி விலங்கு பறவை நோய் பயந்தடைந்தோ
ரவம்புகா தளிக்கு மையாறென வடைந்திடு மென்ப தீரார்க்
கவம்பிற மூமையங் கானங் கள்ளாதி முதற் பயந்தார்
சிவம்பெற நினையார் தம்பொருள் நயப்பில் சேரா.

150 பெருந்திரு வையாறுற்றோர் பிரணதார்த் திகர னென்னும்
அருந் திருப் பேரில் நம்மை யழைத்தவர் சிந்தை செய்தோர்
வருந்திய பயங்கள் நீங்கி மாறிலா வின்பந் துய்ப்பார்
இருந்தவர் பாக்கியத்தை யாவரே வகுக்க வல்லார்.

151 மாறிலாப் பிறப்புள் மக்கள் பிறவியின் மகத்தாதல்
ஈறிலா துலர்த்திலாத லெந்தனா ளனுமோர்நாள்
தேறிலாக் காவிரிக்குள் திருவையா றணைந்து மூழ்கும்
பேரிலார்க் கில்லை கண்டீர் பிறவிநோ யறுக்கு மாறே.

---

148. அரும் பெறல் - அருமையாகப் பெற்ற, அறனல்லானில் - நற்செயல் இல்லாத பிள்ளையிடத்து, விரும்பரிவினால் - விரும்பத்தக்க அன்பினால், பெரும் பெயர் - அளவிடற்கரியபெயர்கள், பிரமன் மாயன் - பிரமனும் திருமாலும்.

149. கலி - வறுமை, கள்ளாதி - களவு செய்வார் முதலான, நயப்பில் - அனுபவிப்பதில்.

150. சிந்தை செய்தோர் - மனத்தால் நினைத்தார், மாறிலா - மாற்றமில்லாத, பாக்கியத்தை - செல்வ வளத்தை.

151. மாறிலா - மாற்லமில்லாத. மகத்தால் - சிறப்பினாலாவது, ஈறிலா - முடிவில்லாத, உலர்த்திலாதல் - வறிதாக வாழ்தலினாவது, அணைந்து - சென்றடைந்து.

152 சோந்தவ ரின்னல் தீர்க்குந் திருவையா றீங்குசேர்ந்து
போந்தனிர், பகையா லெய்தும் பெரும் பயம் விசையன் றானு
மாய்ந்தன னாதலாலே யுமது வாழ் பதியிலின்றே
போந்தனி ராகச் செல்வம் போற்றியே புரத்தி ரென்றான்.

153 தானவர் முதலோர் செய்யுந் தறுகணாரழல் விடத்து
கானகர் உடமை யாதென் றென்னுதிர் அயர்த்திடாதீர்
வானவர் போதீ ரென்றும் மறைந்தவ னுறையும்பூதத்
தானைய னென் றாத வூரில் எய்தினர் மகிழ்ச்சியோடும்.

154 போற்றரும் பொருள்க ளீட்டிப் புரந்தரன் திருவையாற்றில்
ஆற்றலில் வாழ்ந்தா னென்றால் அஞ்சலென் றளித்த திவ்வாறு,
ஏற்றதே வலனளித்தங் கிருச்சிர மீசர் சூழ்தல்
சாற்றுமிச் சிவயோகத்தின் தன்மையைப் புகலுகிற்பாம்.

[ சருவ விசைய னத்தியாயம் முற்றும். ]

---

152. சோந்தவர் - வாழ்வில் சோர்வடைந்தவர், இன்னல் - துன்பம், போந்தனிர் - திருவையாற்றுப் பதியில் வந்தடைவிராயின், புரத்தி - காப்பாற்றியவராவீர்.

153. தானவர் - அசுரர், அயர்ந்திடாதீர் - தளர்ச்சியடையாதீர்கள், வானவர் - தேவர்கள்.

154. போற்றரும் - போற்றுதற்கு அரியதாகிய, ஈட்டி - சேர்த்து, புரந்தரன் - இந்திரன், ஆற்றலில் - வலிமையுடன், புகலுகிற்பாம் - மேல் சொல்லுதற்காகும்.

## தேவலனத்தியாயம்.

1 காவல் விரிகுழல் கனியல் மொழியுடை நீ கேள்
ஏவல் விழியினையுடை யியல்லுள்மயிலாய் கேள்
தேவலென வொருதிரு முனிவனெண் நொடியிற்
பூவலம் வரவலன்செய் வியல்பது புகல்வாம்.

2 அதிதிகள் பூசனை அனுதினமுடையான்
கதிதரு வேள்விக் கடனென முயல்வான்
மதியணி வேணியன் மலரடி மறவர்ன்
நிதிதிரு நீறென நினைவொடு வருவான்.

3 நயநீல மறையவ னண்புறு மனையிற்
சயகீட வியனெனுந் தவசிவ யோகிய
நீடிய முனியின் பொடு நினைவொடு வரலும்
நாடிய பயனீதென வந்தடியிணை பணியா.

4 ஆதன முய வருமன்பொடு மகிழப்
பாதனம் விளக்கி யருச்சனைப் பண்ணா
நீதமியற் குளமுவப்ப நேய முளாயேல்
ஓதன மற்றிவை யுண்டகல்க வென்றான்.

---

1 காவல்விரி - சோலை போன்று செறிந்து விரிந்த, குழல் - கூந்தலையுடையவளே!, ஏவல் விழி-விழியசைவாலேயே பிறரை ஏவல் கொள்ளும், தேவல்-தேவரைப் போன்று வல்லமை பெற்ற, பூவலம் - பூமியை வலமாக.

2. அதிதிகள் - புதியவிருந்தினர்கள், பூசனை - வழிபடும் செயல், வேணியன்-சடையினையுடைய சிவன், நிதி - தனது பெருஞ்செல்வம், நீறு - திருநீறு.

3 நயநீல அந்தணனது மனையிடத்து - சயகீவிய முனிவன் வந்தருளினா னென்பதாம்.

4. ஆதனம் - ஆசனம், பாததனம் - பாதங்களாகிய செல்வம், தமியற்கு தமியற்கு உளம் ஒப்ப - அடியேனுக்கு உள்ளம் மகிழ.

5 நன்றென வன்னம் பாலுண்ணப் பரிந்து
பின்றைய நாளுமவன் பெரியோ ரிடத்து
நன்றின்று நமதில்லி னருந்திடி லெம்பேர்
ஒன்றுக வென்றலு மொள்ளிய தென்றான்.

6 மற்றைய பகல் மாதவ னுண்கென்
றுற்றவ னில்லிடை யுண்ணலு முன்னான்
நிற்றலும் நெஞ்சி நிறைந்துணவு நீங்காப்
பிற்றைய நாளுமவ்வாறு பெயர்ந்தான்.

7 உச்சிய நாடொரு முவந்துமே னிற்பமே
யச்சிவயோகியு மேவிமுன் னின்றான்.
கச்ச தினித்ததெனா னுரைக் காட்டான்
விச்சை கொலென்றனன் வேதிய னோர்நாள்.

8 நினைத்திடில் வந்துமுனிற்பவ னென்றால்
அனைத்தும் படுப்பனென அங்கிருத்து போய்க்
கனைத்திரைவார் கடலில் கரைநண்ணி மனத்தில்
நினைத்தலும் வந்து முன் நின்றான்.

---

5. பரிந்து - பற்றுடன் விரும்பி, பின்றைய நாளும் - மறுநாளும், ஒள்ளியது- மேன்மையுடையது.

6. முன்னால் நிற்றலிம் - முன்வந்து நிற்றலும். பிற்றைய - அடுத்துத் தொடர்ந்த.

7. உச்சிய - உச்சிக்காலத்தில், உவந்து மேல் - மகிழ்ந்து உயர்ந்து, இனித்தது கச்சது எனான் - இனிமையான உணவு திகட்டி விட்டது என்று சொல்லான், விச்சை - வித்தை.

8. படுப்பன் - பெறச் செய்வேன், கனைத்திரை - ஒலிக்கும் அலைகள், கரை நண்ணி - கரையிடத்தையடைந்து.

9 வாருதியின் கரை நின்று மறைந்தாங்
கூருற வெய்துமுன் யோகிப்பு முற்றான்
மேருவி னுற்றனனங்கு முன் மேவப்
பாருலகிற் றிசை மீது படர்ந்தான்.

10 போக வெடுத் தெதிர் பொள்ளென
வேகம் பதத்துற மேவினன் மேலோன்
மாகதிர் வெய்யவன் மலர வந்தான்
யோகமுனித் தவனுற்றன னாங்கும்.

11 சந்திர னாதியா தாரகை யூர்வாய்
வந்திட வந்தனள் கற்பின் வாழ்விற்
சிந்தையி னெய்தியதெனு வடத்தோ
டிந்திர னூர்புக வெய்தினன் முன்னோன்.

12 சித்தர் கிம்புருடர் தேவர் செய்யெனச் சிறந்து நின்ற
மெத்தவசயதீடன் சூழ் வித்தகந் தெரிந்து வேறா
யெத்தகு கருமஞ் செய்தோமென முனிநிற்ப மீதா
யுத்தமன் படரக் கண்டானுருவு மிணங்கக் காணான்.

---

9. வாருதி - பெருங்கடல், யோகிப்பு - யோக நிலை, திசை மீது - எல்லா திசைகளிலும்.

10. பொள்ளென - விரைவாக, வெய்யவன் - சூரியன், யோக முனி - யோகத்தீற் சிறந்த முனிவன்.

11. தாரகை - தாரகை என்பாள், ஊர்புக - ஊரினுள் புகுந்து, எய்தினன் - அடைந்தான்.

12. கிம்புருடர் - தேவகான முனிவர், வித்தகம் - திறச்செயல், படர - தொடர்ந்து செல்ல.

13 வழுத்தியங்கறிவன் பின்போய் வயப்படா திறங்கி நின்ற
முழுத்தவச் சித்தர் தம்பாற் தேவர் முனிவனேய
குழுத் தொழப் போகும் போதி குறுகியெவ்வளவில் மூளும்
பழுத்திடும் யோக மேற்றாற் பலித்தது பகரும் என்றான்.

14 அயனரி சிவலோகத் தளவாய் மீள்வ னின்னோன்
செயலுரு கருமயோகச் சிறப்பினாற் றுறக்கம் மட்டு
முயலவை நாவுண் மருப்பின் முடிவுறாச் சிவயோகத்தைப்
பயன்உயர் திருவையாற்றி லியற்றலால் பலித்ததம்மா.

15 சத்தி மன்றினுள் திருவையாற்றி லுஞற்றிய யோக தேக
நித்தனே யாகியெங்கு நிகழ்வனத் தலத்தி னீர்மை
யெத்தகு யோக மெனும் ஞான யோகத்தி னோர்க்கு
மெத்தவர் சிவ யோகத்தை இழந்திடில் விளம்புகிறேன்.

16 அப்பதி யோகம் வாய்க்கில் அகிலமும் வாகைக் குள்ளாம்
முப்பெருந் தேவ ரேவல் முயலுவர் முனிவரெல்லாஞ்
செப்புவா ருஞற்றுந் தீயுஞ் சிறுபொறி திரைகளேழும்
அப்புறு குளப்படிப் போலாகும் நஞ்சமு தினாகுமுண்மை.

---

13. வயப்படா - அவர்கள் விருப்பத்திற்குட்படாமல், பழுத்திடும் - நிறைவு பெற்ற திண்மை பெறும், பகரும் - கூறும்.

14. அயன் அரி - பிரமன் திருமால், சிவலோகம் - திருக்கயிலாயம், கரும யோகம் - முத்தி நெறிக்கமைந்த யோகம், இயற்றலால் - செய்தலால்.

15. சத்தி - உமாதேவி, உஞற்றிய - செய்தருளிய, மெத்தவர் - மேலோர் சிவயோகம் - சிவபதம் பெறுதற்கான யோகம்.

16. அப்புறு - நீர் நிறைந்த, உஞற்றும் - செயலாற்றும், நஞ்சு அமுதினாகும் - விடம் அமுதாகும்.

17 வேண்டிற் புவனமெல்லாம் விண்டிடு மிட்டு முன்போல்
ஆண்டிட வைப்ப ரன்னோ ரறிவினை யளக் கொணாது
கொண்டரு நினைவிற் பின்போய்க் கூடவு மரிது நீயே
காண்டியிங் கிவனா லென்னக் கருத்ததிசயித்து மீண்டான்.

18 மண்ணுலகில் தன் மனையில் வந்து புகு முன்னம்
விண்ணுலகத் தேறு முனி மேவியுள் ளிருந்தான்
கண்ணிணையிற் கண்டு மெய்நடுங்கி யிருகையாற்
புண்ணிய னடித்துணைகள் புல்லினன் விழுந்தான்.

19 நின் பெருமை சற்று நினையா திது நினைத்தேன்
என்பிழை பொறுத்தருள்க வென்னணையா தெய்திய
தன்போடு பொறுப்பர் துணையன்னவர்க ளன்றோ
இன்ப சிவயோகமென வின்னன வியம்பும்.

20 குடும்பமென நின்றுட லொன்று குணமிக்கோய்
அடும்புலவலைத் தொழிலி லாசையரு நீர்மை
இடும்பை யொரு மூவகை யெனுஞ் சுறவம்தின்ப
னெடும் புனலாவது சினச்சுழி நெறித்தால்.

---

17. புவனம் - உலகங்கள், விண்டிடும் - விளக்கிக்கூறும், அளக்கொணாது, அளக்கமுடியாது, காண்டி - காண்பாய்.

18. விண்ணுலகத்தேறுமுனி - தேவருலகத்திற்குச் செல்லும் முனி, கண்ணிணை - இருகண்கள், புல்லினன் - தொட்டு வணங்கினன்.

19. அணையா - வந்தடைந்தது, இன்னன - இவ்வாறாக, வியம்பும் - எடுத்துக் கூறும்.

20. அடும் - போரிடும், நெடும்புனல் - கடல், சினச்சுழி - கோபமாகிய நீர்ச்சுழி.

21 மோகமொடு சோக மலைத்தி லழுந்திப்
பாகமுறவோ புனையிலாது படியெனுக்
கேகசிவ சித்தின் நல்லிடத்தோடு மியம்பிப்
போக பரயோக வெனு நற்கரை புகுந்தாய்.

22 வேள்வி யினியற்றுவ விண்ணுலக மல்லால்
ஆழ்வதிலை யெவ்வுலகு மாதலினாலே
கேள்வியின் விளங்கு நெறி கிட்டியது மேனாள்
ஆழ்வலியன் றவமெனத் தவனிசைத்தான்.

23 தானென்ற காதலுடலைச் சடமெனாதா
யானெனு மகத்திலுறு பற்றிலேன்
தேனறங்காண் புறனுற்றதொரு பற்று வருமற்றால்
ஈனமுதலற்றல தெனா தென்றா னாதலால்.

24 என்றதெனும் வழக்கால் இருவல் வினையும்
ஏறுங் கணைக்கடலெனப் பிறவிகாணு மதனாலே
மனமழிய விச்சையெனு மாசுபடர் கால
முனையொளி யொளிக்குமது வுயிர்க்கே.

---

21. மோகம் - பற்றாசை, சோகம் - வருத்தம், புனை - கரையேறும் வகை.

22. வேள்வி - யாகம், கேள்வி - கல்வி கேள்வி, உபதேசம்.

23. தானென்ற காதல் - தான் என்ற அகங்காரமுடைய ஆசையால், மகம்-யாகம், ஈனம் - தாழ்வு

24. வல்வினை - பற்றித் தொடர்ந்த வலிய வினை, கணைக்கடல் - ஒலிக்கும் கடல், மாசு - குற்றம்.

25 நெஞ்சலிழி நீலமிகு காசமது நீங்கா
கஞ்சன மருந்து சிவஞான மதனுக்குப்
பஞ்சநதி வாசமது பற்றிய சலாகை
தஞ்சமது கைக்குள் வருமாறரிது தக்கோய்.

26 பாகமிக வரம் பரமர்தம் காதல் பார்வைக்
காசமிகலிற் பெரிதும் நீலமிரு கண்டர்க்
காசில் கனுக்கள விலஞ்சன மிதாக
வாசன சலாகையில் மருந்தலது காணோம்.

27 ஞான வொளியத்தமன மென்னு நயனத்துக்
கீனமிது நன்மையிது வெண்றுணர் வொண்ணா
தான் செயலிற் பிறவியந்தக ரெனப்பா
மானவா நித்திய மென்னார் வருவதெண்ணார்.

[தேவலனத்தியாயம் முற்றும்[

---

**25.** கஞ்சன மருந்து - தங்கபற்ப மருந்தாகும். வாசம் - வாழ்வது, சலாகை- இரும்புக் கவசம்.

26. பாகமிக - பக்குவபாகம்மிக, காசில் - குற்றமற்ற, கனுக்களம் - நெக்கு வினோட மைந்த கழுத்து இலஞ்சனம் - பூசும் மருந்துக் குழம்பு.

27. ஞானவொளி - ஞானத்தான் அறியப்பெறும் பேருண்மை, நயனம் - கண்கள், கீனம் - குறைவானது, அந்தகன் - குருடன், நித்தியம் - அழி வில்லாதது, என்னார் - என்று கூறார், எண்ணார் - சிந்தனை செய்யார்.

## அனித்திய ரத்தியாயம்.

1 ஓருட லிருகாற் பெயத்தேர் முப்பகை யுறையுந்துச்சில்
தேரு நாயகன் அடைத்த சிறுகுடிலைங் கயிற்றி
லூர் பொறியருவகைத் தீயுகு மாமெழு முழைக்குட்
சோர் புகை யெண்சாண் கூடென்றறி கிலார் சுமந்து செல்வார்.

2 ஒன்பது துவாரந் தோறு மொழுகிமல நீரானார்
துன்பமென்றுணரார் வீழுஞ்சுமையெனார் தமது
பொன்போலின்ப முற்றிடுவர் தாமாயெண்ணுவ ரெழிற்
பூணவேயவரன்பு கொண்டயிற் சரீரத்தானு முறவந்தோ.

3 அய்யுழக் காழாக்குப்புத்தன் பாதிவீரியத்தா
னெய்யுறு மச்சை மேதி தசையிறைச்சி வெண்ணீரிரத்த
கையுறா வொன்றுக் கொன்று நான்மடங்கென்பு பாதி
மெய்யினுட் சுமையை வாளா சுவைப்பரே வெறுக்கிலாரே

4 பல்லீரண் டடுத்த முப்பான் மிக்கிருபஃதொன்மேல்
வல்லிய காண்ப காணா மயிர்கள் மூன்றரையிதைச்
சொல்லிய கொடி நாடி தோகையுமாந் தொன்னூற்றாறாய்
புல்லிய வீரனவுமெண்ணி முன்ன......................

---

1. இருகால் - இருவகை மூச்சின் காற்று, சந்திரகலை சூரியகலை, முப்பகை- ஆணவம், கன்மம், மாயை, துச்சில் - ஒட்டுயிர் சிற்றில், பொறி - மெய் - வாய் கண் மூக்கு செவி, முழை - உள்புழை, இப்பாடல் மானுட சரீரவுண்மை அறிவித்ததாம்.

2. பொன்போலின்பம் - மிகமேலான இன்பம், பூணவே - பெற்றணிதற்கு, சரீரம் - மானுடவுடல்.

3 மச்சை-தோல், மேதி-நிணம், தசை-சதை, மெய்-உடல், சுமையை - உடல்பாரத்தை.

4. மானுடவுடற் கூறின் உள்ளிணக்கத்தத்துவத்தை இப்பாடல்வுணர்த்துதுகின்றது.

5 மருப்பொழிற் றிருவையாற்றின் வந்ததற்
கிடையீடெண்ணார்

விருப்புறக் களிப்பான் மாந்தர் துணிவையென்
விளம்புகேனோ

............................................................

(இப்பாடலின் மற்றைய இரண்டு அடிகள் ஏட்டில் சிதைந்து விட்டன)

6 பாம்பொடு பழகிலென்னைப் பகைஞரோ யேர்விலென்னைத்
தேம்படு கிளவி யார்தஞ் சிந்தையைத்துணிந்தா லென்னைத்
தாம்படு நிலவை மின்னின் றன்மைய திதற்குள் வாழ்கை
மேம்படு பொருளின் மாந்தர் வேந்தர்பின் திரிவரம்மா.

7 மணிய முத்து மாவயிற்றகம் பதிந்து வாய்த்திறுகித்
தணிவினாடோறுங் கனத்துறப் பனைத்துமாய்த் தாயின்
பிணி பசித்தழல் வாதநீர் பெருக்குதல் முதலாக
வணியுறப் புவிவிழப்படுந் துன்பம் முற்றி னாரரோ.

8 புழுமழப் பருவத்தொன்று மறிவிலாத் துன்பம் பின்பு
விழுபொருட் டெரிகிலாதும் வெட்டவை விளம்ப மாட்டா
பொழுது போது உண்பவெண்பற் புதுமணற் கிணறு நாணற்
கெழுமுளை யெழுந்தாபோலக் கீறுநாட்டின்ப மன்னோ.

---

6. தேம்படு - தேன்பொருந்திய, கிளவி - சொல், கிளவியார் - இனிய சொல்லையுடைய மகளிர், மேம்படு - மேன்மை பெறும்,

7. மணிய - இரத்தினங்களும், அகம் - உள்ளீடாக, கனத்துற - பெருமிதமாக, பனைத்து - கிளைத்துப்பெருகி, அணியுற - அழகு பொருந்த.

8. மழப்பருவம் - இளமைப் பருவம், விழுபொருள் - மேலான பொருள், விளம்ப - சொல்ல,

9 முனைந்தனள் விழுந்து மீள முளைக்கவுந் துன்பமங்கு
மளைத்திடு மவுட்டியாதி சேயுரு கிரக மனேகம்
விளைத்திடு மாதினோவால் மேகத்திடுந் துன்பதாகங்
களைத்திடும் பசியினாலும் மருந்தினுங் கலங்குந்துன்பம்.

10 அன்னை வந்தாற்றுமுன்ன மலஞ்சலமரு வந்தறுப்ப
பின்னர் மென்காது வாரப் பெருக்கு நாட் பெரிது துன்பம்
தன்னெழுத் தறிய வைக்க தான்படு துன்பமாக
பன்னரும் பிறப் பிறப்பால் பருவமா துன்ப மாதோ.

11 இளங்குழக் கன்று பாலிக்கு மெல்லையுங்
குளம்புறக் குதித்துடற்கு ஆற்றா லென்ன
வளங்கெழு குமரராய் மறுகி நல்லறந்
துளங்குறச் செய்துபின் துன்ப முண்பரோ.

12 அவ்வனக் கள்ளினாற் காமமென்ப தோர்
செய்வனைச் செயகலா மயக்கம் சேர்ந்திடு
முய்வன தெளிகிலாது ஒருவன் மாதரார்
மெய்வனப் பழுக்கறா மேவுந் துன்பமே.

---

9. அளைத்திடும் - நிலைகுலையச்செய்யும், ஆதிநோயால் - பிறவியிலிருந்து வரும் நோயினால், சேய் - குழந்தை.

10. அன்னை - பெற்றதாய், பெருக்கு - மிகுகின்ற

11. இளங்குழக் கன்று - மிக்க இளமையான சிறு பசுக்கன்று, வளங்கெழு - வளமெனும் செல்வம் மிகுந்த,

12. கள் - மயக்கந்தரும் செயல்கள், மாதர் - மனைவியர், மெய்வனப்பு - இயற்கையான மேனி அழகு, மேவும் - உண்டாகும்.

13 செல்லுமுன் காமனாற் றுன்பஞ் சென்றுடன்
புல்லினும் பயிற்றினாற் றுன்பம் புல்லிடை
வல்லவன் கண்டிடல் மாயுந் துன்பமே.
சொல்லிய பிறர்மனை இன்பந் துன்பமே.

14 ஊரவரிகழ்த லாதபழி யுறுத் தலாற்
பேர் சரிந்துயரப் பேது செய்தலால்
சீருறத் தேடிய செல்வம் மாய்தலாற்
சோர்வுறு புணர்ச்சி மாதுன்பம் துன்பமே.

15 அளவுயி ருடலின் வாழ்வளவுந் துன்புற்
றிளகிய காதனாட்டுன்பம் அங்கதில்
வளனறனல்லது துன்ப மற்றதின்
களவுறு பிறர்மனை காமர் துன்பமே.

16 காசினார் கடக்கை பொருளாற்றிடச்
சீசியென்னச் சென்னாட் செல்லுமாறுபோற்
றூசு மாசுரச் சுற்றிய துன்பினால்
மாசை யாசை மனத்துற வைப்பரோ

---

13 காமனால் - காமன் தரும் மோகத்தால், புல்லினும் - மங்கையரைக் கூடின், பயிற்றுதல் - அவர்களோடு செயல்படுதல், பிறர்மனை - பிறனுடைய மனைவி

14 இகழ்தல் - தாழ்ச்சியுறப் பேசுதல், பேர்சாந்து - பெயர்கெட்டு, பேது - நிலைதடுமாற்றம், மாய்தல் - அழிந்துபோதல், புணர்ச்சி - மகளிரோடு கூடுதல்.

15. அளவுயிர் - அளவிட்டு இயங்கும் உயிர், காதல் நாள் துன்பம் - காதல் செலுத்துகின்ற நாள்களிலும் துன்பம், களவுறு - பிறர் அறியாமல் நிகழ்த்தும் பிறர்மனை - பிறனுடைய மனைவி.

16. காசினார் - உலகத்தவர், குற்றமனத்தினர், செல்நாள் - கழிந்த வாழ்நாளில், மாசை - பொன்னின் மேல்.

17 சினக்குங் காலையிற் கண்கள் சிவத்தல்
இனத்திலோர் கொடு கூற்ற மிழைத்தல்போல்
மனத்த காதற் மருவத்தின் வைத்திடுந்
தனத்திலாசை தரும்பல துன்பமே.

18 வாளெடுத்து மலைந்து மலைந்துவே
றாளொருத்தனுக் கென்று யிரற்றியுந்
தாளுழப்பொடு சந்தையிற் கொண்டு தாம்
மீளவிற்றும் விளக்குவ துன்பமே.

19 உழுது வாழ்வுழைப்பது மென பசுப்
பழுதிலாது படைப்பதுங் கல்வியாற்
றொழுதிடத்தகு சொல்லுபு வாதியா
முழுதும் மாந்தர் முயற்சிகள் துன்பமே.

20 காற்றினால் மழையால் குளிர் காலமாங்
கூற்றினாற் பனியாற் கடுங்கோடையால்
ஆற்றினால் ஒழியா சுரத்தால் வன்
தாற்றினால் ஒழியா தரும் துன்பமே.

---

17. சினக்கும் - போபம் கொள்ளும், மருவத்தில் - நெஞ்சகத்தில், தனத்திலாசை - பெண்களின் அழகின் மேலாசை.

18. மலைந்து - போரிட்டு, தாளுழப்பொடு - மிக்க பிரயாசையோடு, மீளவிற்றும் - மறுபடியும் விற்பனை செய்வதும்

19. உழுது வாழ்வுழைப்பது - உழுது பயிரிட்டு வாழ்வினை உழைப்பாக்கு வதும், சொல்லுபு - சிறந்த அறிவியலை எடுத்துச் சொல்லுவதும்.

20. பனியால் - பனிகாலத்தினால், சுரத்தால் - பாலை நிலத்தால் தாற்றினால் - தேரும் முயற்சியினால்.

21 திளைத்து வாங்கி செலுத்திடும் போதுதான்
கிளைத்திடாது மனஞ்சழித்திடுந் துன்பம்
கிளைத்த ஞாதியெனக்கு வழக்கெனச் சேர
அழைத்தபோது வரும்பல துன்பமே.

22 வறிய னவ்வளவாயினு மாழைமால்
உறுவ னவ்வள வுற்றிடின் பின்னருஞ்
சிறிதெனச் சிலர் செல்வம் மறுத்
தறிவி லுண்ணுமவ் வாறுமங்கீட்டுமே.

23 வேந்தர் செல்வம் விரும்பு மிவ்வாறு
யேந்தலில் சந்திரனிலவு சீராய்
பாந்த பங்கயன் மால் திருவாதியாய்
மாந்தரிச்சையி லமர்ந்து வரல் துன்பமே.

24 மாசில் கனக மலையும் அலை கடலும்
யோசனையிற் றென்ன உரைக்கு மாதலினால்
பூசல்மடவார் பொருட்டுப் பொருளீட்டும்
ஆசை யொருவ ரளவுக் கடங்காதே.

---

21. திளைத்து - மனதில் பெருமிதம் கொண்டு, ஞாதி - தாயாதி, கிளைந்த - தோன்றிய, வழக்கென - பாகபந்த வழக்கென,

22. வறியன் - செல்வமில்லாதவன், மாழை - பேதமை, அறிவிலுண்ணும் - அறிவினால் சிந்திப்பதும்.

23 வேந்தர் - மன்னர்கள், ஏந்தலில் - தாங்குதலினால், பாந்த - தோற்றமான, பங்கயன் - பிரமன், இச்சை - ஆசை.

24. மாசில் - குற்றமற்ற, கனகமலையும் - பொன் மேரு மலையும் - அலை கடலும் - அலையோடு கூடிய கடலும், பூசல் - மனப்போரில் சிறந்த,

25 மாகாதலர் காயம் வைத்து நிறுத்தாலும்
ஆகாய மேலாயதன் கீழ் நிறையாகும்
போகாது காதலெனிற் பொன்றாது துன்பமெனில்
வாகாயவின்ப வருவாயுந் தோன்றாதே.

26 அரவுரி பெற்றோ ரிரைய முத்தாலு மாசை
யிரவு பகலினிளமை வளந்தேறு மூரல்வலியி
னுரக்க முடையரேனுங் பெருக்கமுறு
குரவு கமழும் குழலாரிற் கூத்தாட்டும்.

27 ஆசையெனு மாதினடிமைப் பருவமெல்லாம்
பேசரிய துன்பம் பெறுவர் பிறந்தொரு காற்
றாசியெனப் படைக்கிற்றாதலின்ப முறுந்
தேசறிவிலீனர் சிறிது மறியாரே.

28 செல்வ நிலையாமைச்சிந்தியார் பேராசை
யல்லலெனார் இன்பமறியார்கள் வாழு
மெல்லையில் வீட்டிலென்னா ரருந்துங்காற்
கொல்லு மிகினுங் குறைந்தாலு மாரமுதே.

---

25. மாகாதலர் - மிகப்பெரிய காதலர், காயம் வைத்து - நிலையாக வைத்து, ஆகாயம் - படர்ந்த வானம், பொன்றாது - நில்லாது, வாகாய - நன்னெறியாக.

26. அரவுரி - மெல்லிய ஆடை, மூரல்வலி - சிரிப்பின் வலிமை. குரவு - குரவமலர், குழலார் - கூந்தலழகியரான மகளிர்.

27. அடிமைப்பருவம் - வாலிபப்பருவம், பேசரிய - பேசுவதற்கு அருமையான, தேசறிவு இல் - தெளிந்த அறிவு இல்லாதவராகிய, ஈனர் - அற்பர்.

23. நிலையாமை - நிலைத்து இல்லாத இயல்பு, அல்லலெனார் - துன்பமென்று நினையார், வாழுமெல்லையில் - வாழும் நாட்களில், வீடு - மோட்சம், கொல்லு - நச்சு.

29 விடியல் மலநீர் விடுமாறு துன்பம்
கடிய பசித்தீக் கடும்பகலிற் றுன்பம்
மடிவி லிருள் மாலை மதனத்தாற் றுன்பம்
ஒடிவி லரைநாளுரக்கமுந் துன்பாகுமே.

30 மனையிறந் திருந்த வைத்த மனத்தினால் மாலை சூட்டிப்
புனைமணம் புரிந்தமங்கை புந்திவேறாதல் துன்பம்
நினைவொரு மிக்கென மக்களின்மையினிறந்த துன்பம்
வினைவழி யியல்பின் மற்றோர் மெல்லியல் மணத்தல் துன்பம்.

31 அன்னவர்க் காயும் வெம்போர்க் கிடைப்பட வரிய துன்பம்
பின்னவர் கருப்பந் தாங்கிற் கண்டலார் பெரிது துன்பம்
மின்னவா னிலத்தி லீனுங் காலை கண்டிறங்குந் துன்பம்
சொன்னவர் நோவிற் சாவிற் றுடைக்கருந் துன்ப மாதோ.

32 வளர்த்த சேய் தன்சொற்கேளா மறத்தினாற் றுன்பந் தாமும்
தளர்ந்து மண் மனை பொன்மாடு தாங்குவாரின்மை துன்பம்
கிளர்ந்த பல்வளமொவ் வொன்றாக கேட்டருங் கூத்துப் போந்த
களந்தக மிடிவந்தெய்தக் கண்கனிந் திரத்தல் துன்பம்.

---

29 விடியல் - காலைப்பொழுதில், மதனத்தால் - காமவிச்சையால், ஒடிவில் - குறைவில்லாத,

30. மனையிறந்திருந்த - இல்லத்தினின்றும் நீங்கியிருந்த, புந்தி - புத்தி, நினைவு வொரு மிக்கென - சிந்தனை ஒன்றுபட்டதாக, மக்களின்மை - பிள்ளைகள் பெறாதிருத்தல், மெல்லியல் - பெண்ணை,

31. அன்னவர் - இருமனைவியர், காயும் - சினங்கொண்டு தொடங்கும், இடைப்பட - கணவன் இடைப்பட்டு நிற்க, கண்டலார் - மூத்தமனைவி.

32. சேய் - குழந்தை, மறத்தினால் - மாற்றத்திண்மையால், கூத்துக்களம் - கூத்தரங்கும், மிடி - வறுமைத் துன்பம்,

33 இரத்தலு நிரந்தோர்க் கில்லையென்பது துன்பம் மக்கள்
இரத்தலிற் குடும்பந் தாங்கி நிற்றலுந் துன்பம்மாண்பே
ரறத்தொடு புணர்த்தல் துன்பஞ் சாதல் கண்டால் துன்பம்
வரத்தகுமுயிர் போமட்டும் துன்பமே மாந்தர்க் கெல்லாம்.

34 இத்திறத் துன்பம் யாக்கை யிருக்கு நாட் சிறிதேயஃது
மெய்த்துயிர் பாதிபோக விஞ்சிய கால மற்பந்
துய்த்திடல் மோக சோகம் பிணியொடு தொலைந்து போதும்
புத்திளம் பருவமூப்பிற் போனது முன்னும் பின்னும்.

35 விளக்கு நெய்யற லற்றாங்கு இணைய வாழுநாளச்சந்
துளக்கது நிலைமையென்று துணியினுங் கதியொன்றில்லை
கொளத்தகா நிலைமைத்தென்று கூறினுங் குற்றந் தீரு
மளக்கரும் பிறப்பினில் அழிந்தினோர் அறியாரந்தோ!

36 சோபமே யறக்கே டல்லற் குடும்பநோய் கொடுக்குங் காமம்
பாபமேற் பிறப்புப் பயிற்றும் மெய்யுறச்சீர் கல்வி
ஆலமே லழுக்காறென்றா யருமிடி நாக துன்ப
மீலதே யென்றி மூன்றும் விடுதலே யார்க்கு மின்பம்.

---

33 இரத்தல் - பிச்சையெடுத்தல், மாண்பு உயர் சிறப்பு, அறத்தொடு - அறநெறியோடு, புணர்த்தல் - இவற்றிற்கு மாறுபட்டவைகளோடு ஒப்பிட்டுக் கூறுதல்.

34. யாக்கை - மனிதவுடல், அற்பம் - சிறிது காலமேயாகும், சோகம் - வருத்தம், மூப்பு - வயோதிகம்.

35. நெய்யற - நெய்வற்றிப் போக, துளக்கது - தெளிவானது, அளக்கரும் - அளவிடற்கு இயலாத,

36. சோபமே - வருத்தமே, பயிற்றும் - உண்டுபண்ணும், ஆலமேல் - விடமானால், மிடி - மிகுதுன்பம்,

37 பிறவியி னாலல்லா தவைத் துன்பமே பெறுவ தாக்குந்
துறவியின் ஞானத் துன்பந் துய்த்திடும் தாக்கு மேது
மறலியி னாமனாமே யன்றல் வழிசெலுமனத்தை மீண்டு
நறலிரி பொழிலையாற்றிற் செலுத்திடார் ஞானமில்லார்.

38 அந்தணர் குலத்தொழுக்கத் துயர்த்தலார் மீறுந்தம்
புந்தியைத் திருவையாற்றிற் செலுத்திட்டார் புலையார்க்கு
நிந்தனை புலையரேனும் பஞ்சனதேசஞ் சேரும்
சிந்தைவைத் தடைந்தாரன்றோ யாந்தொழுந்தேவ ராவார்.

39 தேவருந் திருவை யாற்றிற் சேர்தலால் தாமு மொப்பான்
தேவரே யுரைப்ப ரெண்ணா துரைத்தனன் யானுந்
தேவரோ அரும் விழியால் மண்ணிலுதித்த லெண்ணிரையம்புக்கு
மேவரு மின்பந் துன்பா லிழைச்ச ராதலாலே.

40 தென்றிருவை யாறெய்திச் சேவியாதவரைக் கண்டால்
பன்னி நாயக சேரிக்கு நீசர்பதிதாலெந்தேற
லுண்போ ரென்றவர்முக நோக்கற் கிகழ்ந்தவருடன் பெயர்க
நன்றென வவரை நட்டோ ரல்லரோ நரகராவார்.

---

37 நாமம் - பெயர், நறல்இரி - இடர்பாடுகள் நீங்கும், செலுத்திடார் - திட்டமான அறிவினைப் பயன்படுத்தார்.

38 புலையார்க்கு - தாழ்ந்த வாழ்வினர்க்கு, பஞ்சநதேசம் - திருவையாறு, சிந்தை - மனம்,

39. எண்ணாது - நினையாது, இழைச்சர் - செய்தவர், மேவரும் - சிறப்பாகப் பொருந்தும்.

40. தாலந்தேறல் - பனைக்கள், நட்டோர் - நட்பினர், நரகராவர் - நரகமடைபவராவர்.

41 பயத்தினா லடுத்த நட்பாற் பண்பினால் மாதராசை
நயப்பினால் நவிலாதெல்லாற்றி னானண்ணி னாலும்
புயத்தினா னுணர்வோன் பஞ்ச நதிப்புகுந்திறைஞ்சினாற் காணில்
வயத்தினால் வலம்வந்தெய்திற் சிவகதி வாய்க்கு மன்னோ.

42 உடலின் மிக்கதொன்றிலை, வாய்மையின் மிக்க
இடமறிந்த தலம் வேறிலை, முத்தியின் மிக்க
கெடலருந் திருவில்லை, நற்கேள்வியின் மிக்க
நடலையற்றதோர் நன்னிதிச் செல்வமில்லை.

43 ஒழுக்கின் மிக்க நல்லறனிலையும் நல்வழிக்கா
மழுக்கறுத்திடலால் தீதின்றி நற்றுணையின்
இழுக்கும் இன்றிலனே லரியினாவினா லூற்றா
னழுக்கு வந்திடலென்றியல்லா லிலையிவைபோல்

44 தலங்கொள் பஞ்சநதித் தலத்து
இலங்கொப்புமிக்குள பிரணதார்த்திகரனை
மலர் தவிர்த்திடு கடவுளு மில்லை
தலத்துறை யோர்கள்போற் புனிதருமில்லையால்.

---

41. நண்ணினாலும்-சேர்ந்து அனுபவித்தாலும், வயத்தினால்-நற்பயனாய்.

42. திரு - அழியாத செல்வம், நடலை - வருந்துன்பம், நன்னிதி - சிறந்த செல்வம், வாய்மை - உண்மை, தலம் - திருவையாறாகியதலம்.

43. ஒழுக்கின் - வாழ்வியல் ஒழுகலாற்றின், இழுக்கு - தாழ்ச்சி, அழுக்கு - மனத்தினிடத்தாம் பொய்மை.

44. இலங்கு ஒப்பு - விளங்குகின்ற ஒப்புமை, மிக்குள - மற்றைய மூர்த்தங்களினும் மிகுதியாக உள்ளன. மலர்தவிர்த்திடு - மலர் தூவிவழிபடுதலினின்றும் தவிர்த்திடுதற்கு, புனிதர் - தூயமனத்தினர்.

45 திருவற்றுடல் கிடக்க வுயிர் சென்று
செரியா நாநெருப்புந்திலந்து விழுமி
னொரு பத்தியோடு நாதனுரை பஞ்சநதியா
லருதற் கொருமியாத மனமென்ன மனமே.

46 தாயார் நற்சேய் தாங்கச் சமன்றூ
தேயாயெனச் சொல்லெழா லிருக்குமுன்
நேயரா மையாற னென்றெ லாம்
வாயார வாழ்த்தாதார்க் கென்ன வர்க்கே.

47 நெருக்காலை யுடலாவி நெரிகின்ற கழையென்ற
தருக்காலனாலிடு தூதரொலியேறு முன்ன
மருக்காலி மதி வீசுவயற் பஞ்ச நதியின்
திருக்காதை கேளாத செவியென்ன செவியே.

48 ஞாலமெலாம் பங்கிடலாகு ஞாதியர் கொண்டால்
மேவுலரென்ற லைந்து வருந்திச் சலியாதே
சீலமெல்லாம் பஞ்சநதி சேர்துமென்னக்
காலமோடுயிர்க் காலென்னக் காலே.

49 வரு காகந்தி நதியினீரை நாளுமறவாதீர்
பொரு காவிரி பஞ்சநதிவந்து புகுந்தால்
ஒருக்காலு நயவாதவுட லென்ன வுடலே
வருபஞ்சநதி நாதனை வணங்காத் தலையென்ன தலையே.

---

45. செரியா - பக்குவமடையாத, கொருமியாத - ஒருமனப்படாத, நாதன் - தலைவன்.

46. நற்சேய் - நல்லபிள்ளை, சமன் - சமனான மனம் நேயராம் - நட்பினராம்,

47. நெருக்காலை - கரும்பை நெறித்துச் சாறெடுக்கும் யந்திர சாலை, மருக்காலில் - மணம்பொருந்திய காற்றில், திருக்காதை - மேலான வரலாறு,

48. ஞாலமெல்லாம் - உலகமெல்லாம், ஞாதியர் - பங்காளிகள், சீலமெல்லாம் - சிறப்பியல்புகளெல்லாம்

49. நயவாத - பற்றுடன் பொருந்தாத, வருபஞ்சநதிநாதன் - வளர்ந்தர வரும் ஐயாற்று நாதன்.

50 இருள் நிறக்குஞ் சடம் வெளிதாயிரங்குங்கா
லரண்தனக்கென பஞ்சடைந்திடா முன்னம்
பிரணதார்த்தி பஞ்சநதி யெங்கள் பெருமான்
கருணையைக் காணாத கண்ணென்ன கண்ணே.

51 மின்னென விறக்கு முடல் மெய்யென மெய்யின்
நன்னுறவிலிருக்கும் நமனென்று பெரிதெண்ணி
நன்னினைவெடுத்து பஞ்சநதி நாதன்கோயில்
சன்னிதி வணங்காத தலையென்ன தலையே.

52 சேல் கொண்ட கண்ணார் செய் செறிந்தோர்
மால் கொண்ட கூத்தூரி லுள்ளார்க ளன்றே
பால் கண்டெனக் கண்டு பஞ்சநதி நாதன்
கால் கண்டு கூப்பாத கையென்ன கையே.

53 கரந்தனிற் பொருள்துஞ்சு காலையிற் கழன்றாங்
குரந்தனிற்குவை வெறுத்த பேர்க்கு முன்னம்
பரந்து நித்தமும் அண்ணல் பஞ்சநத மென்னும்
புரந்தனில் கழிக்காத பொழுதென்ன பொழுதே.

---

50. இருள் நிறக்கும் - வாழ்வில் செயலற்ற நிலை தொடரும், அரண் - பாதுகாப்பிடம், கருணையை - அர்பர்க்கருளும் மெய்த் திறனை.

51. மின்னென - மின்னலைப்போன்று, நன்னுறவிலிருக்கும் - சென்றுத் தொடரும் செயலில் இருக்கும், நமன் - எமன், நன்னினைவு எடுத்து - நல்ல நினைவு உண்டாகி,

52 சேல்கொண்ட - சேல் மீனைப்போன்று வடிவு கொண்ட, செய் - சேற்றுப்புலத்தில், மால்கொண்ட - மயக்கத்தால் தெளிவு பெறாத, கூத்தூர் - காமக்கூத்து வாழ்வில்,

53. கரந்தனில் - கையில், பொருள்துஞ்சு - செல்வம் தங்கிய காலத்தில், உரந்தனிற்குவை - வன்மை நீங்குவதானமை,

54 நீயுமினி யத்தில் நெருங்கி நின்ற பொன்னிப்
பாய் புனல் படிந்து பரமாவெழுந்து போற்றி
காசின் மயக்கமொடு காதலலை மேவி
தூய செயலோடொருவர் சூழவரு மிடத்தாய்.

55 முழைவழி தோறும் வழியும் புனல்கள் போல
பொழையுடலிற்பெறு வழிப்பெறும் புலத்தில்
ஆழ்வது தடுக்கும் வகையோர் தமியனாகிக்
கேழ்கிளர் சுவத்திக மிருந்து கிளையாதாய்.

56 வானவர் வலியுளது வஞ்ச மனமவ்வா
றான தொருமிக்கும் வகையம்புவி முனைந்துந்
தான மருமாத்திரைக் கண்வாயிலொடுக்கித்த
மான முதல் முத்தேவையு மாயையுட னென்றே.

57 ஒவ்வொரு பொருட்பெருமை யுண்மையி னடும்போர்
தவ்விய மறுத்தோர் அருமையாகு மையத்திற்
செவ்விய மனக்கமலனுளாய் திருவையாற்றுத்
தெய்வமில் பராபரனை யெண்ணியிரு காண்பாய்.

---

54. அத்தில் - அத்தலத்தில், பொன்னி - காவிரியாறு, பரமாவெழுந்து - வேறு சிந்தனையில்லாமல் தூய்மையான மனத்துடன் எழுந்து.

55. முழைவழி - தொளையின் வழியே, புனல்கள் - நெகிழவிடும் நீரணைவன, ஆழ்வது - அழுந்திக்கிடப்பது, சுவத்திகம் - மங்கலமான இருப்பு நிலை, (ஆசனம்)

56. வானவர் - தேவர், வலியுளது - வலிமை உள்ளது, அம்புவி - அழகிய நோற்றமுள்ள உலகம்,

57. அடும்போர் - தத்தமது வெற்றிக்காகும் போர், செவ்விய - தகுதி பெற்ற, மனக்கமலன் - மனமாகிய தாமரைமலரில், பராபரன் தெய்வங்கட் கெல்லாம் மேலான பரம் பொருள்,

58 எம் பிரணதார்த்திகரனைத் தனியிருந்தே
அம்பையுட னெண்ணில் திருவையாறடிபடியார்
தம் பவனாகும் நினைவாதி தவறாததாய்
பம்பினிறைவா யொருவனானபடி யானவன்.

59 ஞான பரிபூரணனை நாடியவானா னென்
றான தொழு தன்னிய மனைத்து மிலையாகு
மீனமிகு தாகமிலை யானென தெனும் பேர்
போன கருமறினோடு பொன்று முறிதன்னால்.

60 இன்ன சிவயோக மலயோக மல வீனம்
பன்னரிது மற்றிது பலக்கில் மறையாகி
சொன்ன வொழுக்க மானானை யதுசூழ்வான்
முன்னது விடார்விரதம துணர்வினோரே.

61 கரிச்சித வொழுக்கங் கணக்கேகு மச்செயல்
தரிச்சனை மனத்தினி லாரிடி லையயாறனுக்குச்
சுருவறுத்த விதையாகும் வகை காணும்
திருச் சிவமளிக்கு மீதுசெய்க வெனவோதும்.

[ அனித்தியர் அத்தியாயம் முற்றும் ]

---

58. அம்பையுடன் - உமாதேவியுடன். தம்பவனாகும் - தமது பாபச் செயலாகும், பம்பின் - உரத்த குரலில்,

59. அன்னியம் - தன்னைப் பற்றிய தீவினைகள் இலையாகும் - இல்லை யென்றாகும், ஈனமிகு - தாழ்ச்சி மிகுந்த,

60. பன்னரிது - செய்தற்கரியது, பலக்கில் - விருத்தியாக்கில், சொன்னன - செல்லியவை,

61. கரிச்சிதம் - பொறுப்பான உயர்வு, சுறுவறுத்த - யாகத்தின் அவிர்பாகப் பலனை யொத்த, சிவமளிக்கும் - சிவபதமளிக்கும், எனவோதும் - என்று சொல்லுவாரானார்.

# கிரிச்சிர ரத்தியாயம்.

1 யோக வொழுங்கு புகன்றாய் வொன்று கிருச்சிர மென்றால்
யாக வெனத்தவை யெல்லாமைய வெனக் கருளென்ன
மோக மறுத்த வன்னனான் முன்னமொழிந்தன நின்னாட்
கேகய மன்னமடந்தாய் கேளென வோதின்ன மாதோ.

2 நித்திய நற்புனல் மூழ்கா நேயமிகுத் தேவருக்கும்
பொய்த்தய விள்றி விழைச்சினம் போகுமாடென்
எண்ணெய் தொடாம லுழுந்தோடென விலகும்
மண்ணிய சீர்பெறின் மருவுமையாற்று மருவுமினே.

3 தேனூற் றண்ணியன்ன மூரளிற் றள்ளிய
பற்றொடு தள்ளிப் பண்ணிய பாதகர் கீழோர்
பண்பு கொளா துரைப்படாத செயலழுந்தி
தொண்ணிற வங்கியிலீசற்குப் பலியாக வருந்துவரே.

4 எல்லினி னூணொரு நான்மூன் றெல்லியுணாவொரு நான் மூ
றொல்லும் யாசகன் நான்மூன் றூணில் நாளொரு மூன்றாய்
பல்லவர் சொல்லல் பிராசாயத் தியனோன்பு பலித்தாற்
சொல்லிய பாதக மெல்லாந் தூளெழுமாறு துடைக்கும்.

---

1. யோகவொழுங்கு - யோகமுறைமை, மோகமறுத்தவன் - மோகப் பற்றறுத்தவன், அன்னான் - அத்தகையவன், கேகயம் - மயில் அன்ன - போன்ற, மடந்தாய் - பெண்ணே,

2. நித்திய - அழிவில்லாத, விழைச்சினம் - விரும்பிய கோபம், உழுந்தோடு - உழுந்தின் தோல், மருவுமினே - சென்றடையுங்கள்.

3. மூரல் - காமச்சிரிப்பு, உரைப்படாத - சொல்லவியலாத, தொள்நிறவங்கு - பழமையாக வரும் தீங்கு.

4. எல்லினில் - இரவுக்காலத்தில், பல்லவர் - பல்வேறுபட்ட பெரியோர்கள், பாதகம் - கீழான பாபச் செயல்கள்.

5 புன்பிணி போரா வலியில்லோர் பூவையர் பாலா லிருந்த
இன்பமோடி வருநாளா லெட்டின முடிக்க விதற்கு
மன்பினரிட்டடுப் பயிர்த்தா மத்த கிரிச்சிர
மென்றது காண வல்லவர்செய்தார் சொல்விரதப்
பயனில்லை.

6 அன்ன மருந்திடலற் போதா திருகைப்பிடி யுண்பார்
பன்னரு நன் புகலுண்டாற் பற்றுட னைந்து பிடித்தா
முன்னெவ ராயினு மிட்டால் மட்டா மென்பார் விரும்பியதே
சொன்னபடிக்களவிட்டார் சொல்வதற்குக் குடவண்டம்.

7 அத்திறமுஞ் செய நோலா ரந்தணர் கைப்பசு வொன்றீந்து
உத்தமனைத் திருவையாற்றி லுள்ளவனைத் தொழ வல்லார்
பத்தினீரிரட்டி கொணா லரம்பை போல் நல்குவ தாங்குஞ்
சத்தமிலாப் பனிரண்டா றீகவலாதவர் தாமே.

8 ஒவ்வொரு கைப்பிய வன்னம் உண்பது நாளொரு மூன்றா
யவ்வொரு மென்பிடி தானும் யாசக நாளொரு மூன்றா
யெவ்வுண வின்றிநாள் மூன் றிப்படி மூவிரவுண்டாற்
செவ்வதிகச் சிரநோன்பாம் சிற்சில நாவியல் கேண்மோ.

---

5. புன்பிணி - கொடுமையான பிணிப்பு, பூவையர் - மகளிர்.

6. இருகைப்படி-இரண்டு கைப்பிடியளவு அன்னம், பன்னரு - பல்லாற்றானு மருமையரன, மட்டாம் - போதுமானதாம்.

7. நோலா - நோன்பு செய்தாது, சத்தமிலா - ஓசையில்லாத

8. நோன்புக்குரிய நாட்களில் அன்னம் உண்ணும் அளவு முறைமைகளை இப் பாடல் குறிக்கின்றது.

9 அன்று கொம்பில் விளைத்த மென்பழத்தின் நற்சுவையாகி
நின்று பன்னிரண்டு நாளிருப்பது செப்பும் பெயர் வன்பிலா
ரொன்றும் பன்னிரு நாளுமோர் பதினைவ ரந்தணருக்குணவு
நன்றிடிற் பலனாகும் நற்புன லெங்கும் நிறைந்த பான்மையாம்.

10 நற்பசுப் பொழி பாலை மூவெழு நாளருந்தி யிருந்திடிற்
சொற்படைத்த கிருச்சிராதி கிருச்சிரஞ் சிலர் சொல்லு நூல்
முற்பகுத்திடு நாள்கள் நீருண வென்று நான்கொரு மூன்று நாள்
அற்பகற் பெறு மூணிலாதமர் கென்று மோதுவரல்லதும்.

11 பன்னிரண் டிருபத்திரண்டு படைத்த நாளும் நல்லுணவே
என்னவும் புகுவாரிதற் கியலாத பேரிருபத்தோடொன்
றன்ன நாளொரு முப்பது அந்தணருக் குணாவிடலாகுமே
லின்ன பஞ்சநதி தலத்தேவை செய்யினுங் குறையில்லையால்

12 கொதிக்கு நீர் சுடுபாலெறிந்த நெய்கொண்டு நாளொரு மூன்றுமே
மதிக்க வொன்று மிலாமல் மற்றொரு நாளிருக்க வகுத்தமோ
விதித்த மெங்கொடு வேணல்வா யொரு கலமெந்
திதிக்குள் மூழ்குக மூன்றுகால் நயந்து மூழ்கி நடுக்குளான்.

---

9 அன்று - நோன்பு கொண்ட அன்று, பன்னிருநாள்-பன்னிரண்டு நாளும், பதினைவர் - பதினைந்து பேர் பிராமணர்க்கு, உணவு - சிறப்புணவு, நன்றிடில் - நல்லமுறையில் செய்தால்

10. கிருச்சிரம் - சாந்திநோன்பிற்குரிய ஆசாரம், அற்பகல் - இரவு பகல், ஊண் இலாதமர்கென்று - உணவு இல்லாமல் இருப்பதென்பது.

11. 12+22 = 34 நாட்கள், இயலாதபேர் - செயலாற்ற இயலாதவர்கள், நாளொருமுப்பது - நாள் தோறும் ஒரு முப்பது, உணா - சிறப்புணவு, தேவை - செயத்தக்க செயல்

12. எறிந்த நெய் - காய்ச்சிக் கடைந்தெடுத்து உருக்கிய நெய், மூன்றுகால்- மூன்று காலம்.

13 சீதநீர் துளிர் பால்குளிர்ந்த நெய்கொண்டிருந்திடு
செய்தியாதல்

சீதகிரிச்சிரஞ் செயவல்லாலவ்வவ ரிருபதோடோது
மொன்றுள நாள்நாற்பது

வேதியற் குணவிட்டிடிற் சிரபேதநல்விரதப்பயன்
வருபுண்ணியந்தருமத்தலம்.

14 அறுபல நீரிற் கொள்க விருபலமான பாலேற்க
நறுநெய்யும் பலமொன்றாக நயக்கவிக் கிருச்சிரத்தை
யுறும்வகை திருவையாற்றிற் செய்திடிலோரனந்தங்
குறையினினிற்ற வரமென்று கூறினன் பின்னு மாதோ.

15 குசப்புனலானைத் தோடு கூட்டியுண்டொரு நாட்போக்கி
வசத்துண வின்றியோர் நாள் வைகல் சாந்த மன்னோன்
பரமிசைத்திடு மொவ்வொன்றோர் நாளாக நாளேழுமெனு
மிசைத்தவக் கிருதச் சிரப்பேர் விளம்புவர் விளங்கி யோரோ.

16 சலமயம் பல வொவ்வொன்றுந் தயிர்ப்பயிலிரண்டு
பலமும் நெய்க்கு ஒத்ததின் பலன்களாய வொன்றுமாக
நிலமுற்றவரவர்க்கு நவின்றுமந்திரத்தாற் கூட்டித்
தலனதின் விதியிற் கொண்டாற் சணத்திலேதுவுன் பாபம்.

---

13. சீதநீர் - குளிர்ந்த நீர், வேதியர் - வேதபிராமணர், தரும் அத்தலம் - அம்புண்ணியத்தினை திருவையாற்றுத்தலம் தரும்

14. பால் ஏற்க - பாலினைப் பருகுக அனந்தம் - அனேகம் குறையினில் இற்ற - குறையினில் தனித்தான், வரம் - நல்வரம்.

15. குசப்புனலானை- தருப்பைப் புல்லோடு பொருந்திய தீர்த்த முடையவனை, பரம் - மேலுலகம், கிருதம் - நெய்யினால் அமையும், விளம்புவர்-சொல்லுவர்.

16. சலமயம் - பஞ்சகவியம், நிலமுற்று - ஒன்றாகத்திரட்டி, தலனதின் - பிராய சித்தத்திற்கமைந்ததில், சணத்தில் - ஒரு நொடியில்.

17 ஒவ்வொன்று நாள் மூன்றா லுண்பது மாசாந்தபன
மவ்வொன்றை நாளிரண்டால் அருந்தி லதிசாந்தபன
மிவ்வைந்து மோர் நா ளுண்டிருப்பது நாள் நற்பபிலைத்
துவ்வந்தப் பாலுணவுஞ் சொல்லுமதன் பேதமே.

18 பத்தொன்று நான் மறையோர்மு வேண்டாதாள்கடொழு
தன்னமிடர்
சாந்த பன்மூவகையிற் கோளுருவுறு பேருண்டாகுங்
கூறுதிருவையாற்றில் வேள்வி மறையோதும்
தேறு தவவியாதமுனி தெய்வநெறி கிரச்சிரம் புரிந்தான்.

19 வேதமுனி யிவ்விரதம் அனுட்டித்தற்
கேதுவெவனன் றிசைத்தி ரென்றிந்து குலத்
தாது கமழ்தார்வேற் சந்தனுவினவ மைந்தரிரு
காதலரவர்க்குக் கற்புடையா ரோரிருவர்.

20 அம்பையுடன் பாலிகை யென்னு மின்னார்க்கு
நம்பு கணவர்துறத்தலுமே நற்குலத்துத்
தம்பமகவிலையாய தம்மாமி யோசனைக்கும்
வப்பவிழுமேனிமடவா ளிது நினைந்தாள்.

---

17 பாபங்களுக்குரிய பிராய சித்தமாக வேதாகம ஸ்மிருதிகளால் கூறப்படும் பக்குவ மார்க்கம் இப்பாடலும் புகலுகின்றது.

18. திருவையாற்றில், வியாதமுனிவன் பிராயசித்த நெறியினைச் செய்தார் என்பது பாடற்கருத்து

19. வேதமுனி - வியாதமுனிவன். அனுட்டித்தற்கு - தவறாமல் அனுபவப் படுத்தற்கு, கற்புடையார் - மனைவியர்.

20. அம்பையுடன் - அம்பாதேவியுடன், பாலிகை - பாலிகையென்னும்தேவி.

21 ஆனைந்தொடு கூட்டி யுண்டொரு நாள் போக்கி
பானைந் துணவின்றியோர் நாள் இருந்து நலமெய்தி
நீநினைக்கிலாங்கு அப்பொழுது வந்தெண்ணம் நன்றென
நான் நினைந்தறிவ லென்றுநின்று தாணினைந்து நீங்கான்.

22 அத்தவ வியாத னென்னும் குமரன் வந்தடியிற் றாழ
வுத்தமன் புகழ்ந்து மைந்த உனக்கிரு தம்பி மார்கள்
மெய்த்திறச் சித்திராங்கன் விசித்திர வீரியத்தோ
ரித்திறத்த ரிறந்தாரவற் கிலை மகப் பேறென்றான்.

23 கரையிலா வேரியேரிக் கட்டிலா கழனி யந்தப்
புரையிலாக்க மினியில்லா நகரி போனகரிலாநா
உரையிலா நாடிலாத பேரரசு வந்து காக்கும்
மாசிலா வுயிர்களெல்லா மணிநிலத்தழியு மன்னோ.

24 செழுங்கலை யிழந்து நின்ற திங்களிற் றிங்கட் புத்தேள்
கொழுங்குல மகவின்றாகி கேட்டது கண்டு நன்றாய்
அழுங்குத னோக்கிக் கைலாயம் பாலித்தம்பால்
விழுங்களியினை் விழைச்சின மேயினான் வேதங்கண்டான்.

---

21. ஆனைந்து - பசுவினிடத்திலிருந்து பெறும் பஞ்சகவ்யம், நீ நினைக் கிலாங்கு - நீ நினைத்த பொழுது.

22. தாழ் - தாழ்ந்து வணங்க, உத்தமன் - உத்தமனாகியவன், மகப் பேறு - பிள்ளைப்பேறு,

23. ஏரிக்கட்டு - கலிங்கு, கழனி - நெல்வயல், நகரிலா நா - பண்பாடில்லாது பேசும் நாக்கு.

24, திங்கள் புத்தேள் - சந்திரனாகிய தேவர், பாலித்து - குறிப்பிட்டு, விழைச்சினம் - விரும்பும் கோபம்.

25 கண்புதைத் தொருத்தி நிற்ப கலந்தனன் காய மெல்லாம்
வெண்புதுத் துகிலால் மூடிப் புணர்ந்தன னொரு மின்னாளை
மண்புரந்தளிக்குமாறு மாதவக் கருப்ப மன்றே
வொண்புகழ் விளைக்கு மைந்தர் தோன்றினா ருணர்ந்து கண்டான்.

26 மனுவழி புரிந்தோ மெனும் வலிதினாம் புணர்த லாலே
நினைவறு கற்பழிந்தோமென்று கெதி யற்ற தென்ற
வினைவழி யின்றிவந்தால் ஒருவன் மற்றொருவனெலாத்
தனுவிளர்ப்புற்றா னென்று தாபதன் மிகவு நொந்தான்.

27 பூப்பிலார் பூப்பொழிந்தார் பூத்தவர் கருப்பப் பூவார்
காப்பிலார் விரத முண்பார் பிணியிலார்க் கருத்திலாதார்
நீப்பிலார் தாமே விழந்த நேரத்துந் தடுத்து நின்று
பாப்பிலார் தாமே பின்னர் பழங்கணுற்றழுங்கு வாறே.

28 அருளொடு செய்த பாவ மறமெனு மாறு நெஞ்ச
மிருளுறு காமப் பாவ மன்றியென்றுள்ளத் தெண்ணி
மருளது தீர்க்க நாடி வண்டிருவை யாற்றெய்தி
தெருளுமிக் கிருச்சிரத்தைச் செய்து தீர்ந்துய்தானன்றே.

---

25. கலந்தனன் - வியாதமுனி கூடினான், துகில் - ஆடை, மாதவக் கருப்பம் - முனிவன் தந்த கருப்பம்

26. மனுவழி - மனுதர்மவழி, வினைவழி - முன்செய்த செயல்படியே, தாபதன் - முனிவன்,

27. பூப்பிலார் - பூப்படையாதவர் பூத்தவர் - பருவமலர்ச்சியடைந்தவர், பாப்பிலார் - தன்னைப் பார்த்துக் காப்பவரிலார், பழங்கணுற்று - மிக்க துன்பமுற்று, பழைய வினைப்பயன்.

28. இருளுறு - மனத்தெளிவு போன நிலையில், மருளது - குற்றமது, தெருளும் - முனிவர் தெளிவாகவுரைத்த, கிருச்சிரத்தை - பிராயசித்தத்தை, உய - உய்ய, பிழைப்பது.

29 குளச் சென்னலரிக் கஞ்சி செம்பஞ்சுக் குழம்பு தயிர்
வளர்க்கின்ற கறிச்சரக நெய் பால் மற்றிவை யொன்
றளக்கின்ற மூன்று நாழி ரரகரா மூன்று நாள்
தளைக்கிரை விரைத்ததைத் தேவ கிருச்சிரமென்னும்.

30 இக்கடவுட் கிருகச் சிரத்தை ஐயாற்றி லியற்றினாற்
றுக்கம் நப பாதகங் கடுகளாக்கு மாட்டாதார்
மிக்க விருபத் தோரு நாள் வேதியர் மூவெண் மருடன்
தக்க விருவருக் குணாவு தந்திடினும் பேறு தரும்.

31 குயப் புல்லுந் தாமரையின் பாசினையும் வில்வத்தின் கொத்து மத்திப்
பயத்தினையும் தனித்தனியே துவைத்திறுத்த சாரருந்திற மென்னும்
பெயர்த்த திருச்சிரமிவற்றைப் புனல்விட்டுக் கனவ காயத்திற் பின்புறுத்த
நயத்த கழாயம் பருகுந்தன்மையும் சத்தர்க்கு நவிலக் கேண்மோ.

32 இருபத் தாறந்த ணருக் கிருபத்தோர் நாளிட வித்தலத்தில்
கருவத்தா மலவகமே வன்னத்தி னுடன் கலந்த கஞ்சிமோர்மா
முரிவுற்ற கணமிவற்றை மும்மூன்று நாளை யிம் மூன்று
மொருவுற்ற வுணவின்னா விருக்கிலது சளமியக்க வுரைக்கலாகும்

---

29 அரி - அரிசி, சரகம் - தேன், தேவகிருச்சிரம் - தேவர்கட்குரிய சாந்தியமைந்த பிராயசித்தமாகும்.

30. நவபாதகம் - ஒன்பது வகையான பாதகம், கடுகளாக்கும் - குறையச் செய்யும், மூவெண்மர் - இருபத்து நான்குபேர்,

31. குயப்புல் - தருப்பைப்புல், துவைத்து - நசுக்கி, புனல் - தூயநீர், கனவ - கணவர் என்பதாம், பருகுந்தன்மை - குடிக்கும் தன்மை,

32. ஆமலகம் - கருநெல்லிக்காய், கணம் - அப்பொழுதே, ஒருவுற்ற - ஒன்றாகச்சேர்ந்த,

33 கணமொரு நாள் புண்ணாக்கு மூன்று நாளைந்து
நாட் கமழு நீர் மோர்

வணமுறு மாவேழு நாள் மற்னைய நாளுபவாசம் வசிக்கிலிது

குணமருவு துலாபுருட கிருச்சிரமாக கணத்தினோடு
கோதில் பிண்ணாக்

குணால் வறிதே நீரிதன்றியிவை மும்மூன்று நாளு
முரைக்கலாகும்.

34 நாளிருபா மூவர்க் குணவளிக்க விவ்வா றையாற்றுத்

தலந்தன்னிற் செயற்காற் பாதகமென்றுட காழ் ரொகண்டு

செல்லா வனமா காட்டிற் படுதீயாம் வருந்திச்

சில்நீர் மாநதி வலார் நாளிருபத்தொன் றிருக்கிலது
வருணகிருச்சிரமாமாதோ.

35 பாற்பிர நெய்க்கு சோதிக மூன்றிரண்டொன்
றொன்றாயப் பலமயந் தானெறுபெறு

வீரற் பாதி கொண்டளவு கவ்விய தகையினத்
தருப்பை யூறுடைய

சுருக்கு வினாலுரிய சீமந்திரத்தா லோமம் பண்ணி

வெருசிலர் விஞ்சியத்தைப் பலராவர் சிலையினடு
விலையால் விரும்பிக்கொண்டே.

---

33. துலாபுருட கிருச்சிரம் - குருபகவானனுக்குரிய பிராயச்சித்த முறைமை யினை இப்பாடல் விளக்குகின்றது.

34. வருணகிருச்சிரம் - இப்பாடல் வருணகிருச்சிரத்தின் முறைமை கூறுகின்றது.

35. கிருச்சிர பிராயசித்தத்தினொரு முறையினை இப்பாடல் விளக்குகின்றது.

36 தாமரையினிலை செப்புப் பாத்திர மங்கையர் தாங்கிக்
கொண்டு

பாமரு வீராசனத்து வெண்கலப் பாத்திரத்தான்
பால்பருகி யல்லாற்

றேமருதீ தயிர் மோர் நீர் குளச் சென்னலரிக் கஞ்சி
தெளிவே யாதல்

சாமரு நீர் முப்பொழுதும் படிந்து நாட்கால்ம் போக்கில்.

37 யாகத்தின் பலன் தீர்த்த யாத்திரையின் பேறெல்லா
மெளிதி நீங்குங்

கோகத்தி தாய் தந்தை கொலைபாவந் தீர்க்குமது
கொள்ளுந்தோறும்

பாகத் தெள்ளுடன் சமனுக் கங்கைநீர் கொடுத்தாலிப்
பாரின் மீ

சோகத்து தான் பிறந்த நாட்டொடுத் தன்றளவு
செயத் துரிசு நீங்கும்.

38 வச்சிரப் போக்கிருச்சிர மிதை மும்மூன்று நாள்நோற்க
மாட்டாதராகில்

மெச்சுமூவர் இரண்டினொருநாள் பஞ்சநதித் தலத்திவ்
விதியே செய்யின்

நிச்சயமா பாதகங்கள் போயகலு மாதலி லிப்பதிசார
நினையா ரந்தோ

நச்சுமமுதினை மறந்து பசிதீரு மவரொப்ப நவிலிங் காலே.

---

36. இப்பாடல் கிருச்சிரவிரத அனுட்டிப்பு முறையினைக் கூறுகின்றது.

37. கோகத்தி - பசுவதையால் வரும் பெரும் பாவம், மீசோகம் - மிக்க வருத்தம், துரிசு - குற்றம், பாவம்,

38. வச்சிரப் போக்கு - வலிந்து பாபம் தீர்க்கும் வழி, பாதகங்கள் - கொடிய பாவச் செயலால் வரும் தீமைகள், நச்சும் - விரும்பும்.

39 அறும்படிப் புகன்ற நோன்பா லற்றிடப் பாவமெல்லாம்
செறும்படித் தோன்று சாந்திராயணஞ் செப்பலுற்றால்
எறும்பிடை நெல்லிடை போன்று கோயிலிற்செப்பேசென்று
உறும்பிற் பின்னுமதிற் பின்னுமோர் சாரமற்றெலா
முரைக்கக்கேண்மோ.

40 சந்திரன் தேய்ந்து வெய்யோன் சாருநாளமுதம் நாடான்
வெந்திடு முணாவின் றாக்கித் தலைமயிர் வீழ்த்துப் பின்னாள்
வந்தொரு பிடியுமற்ற நாளிரு பிடியுமாக
விந்தவா றியற்றிற் றேயு பிறைமுடி விற்கியிட்டால்.

41 இருதலை குவிந்த நெற்போற் சாந்திராயண மென்றோதூங்
கருது பூரணையைத் தொட்டுக் கணையிருருள் ளிருக்கத்
திருவளர் பிறை பினெற்றின் சிறுத்திருபால் மிக்க
ஒருதலை யெறும்பின் போத்தாய் நோன்பென வுரைக்க
லாமே.

42 சந்ததம் பிடியோ ரெட்டாத் தானொரு மாத முண்டால்
வந்தநேரெங்கு மொப்பா மானதெண்டப்போது நோன்பா
னந்தமோ தனத்திலைய்ய மேற்று வுண்டானேல்மேன்மை
அந்தவூணனு மாவாகில் அதிகமா யறையலாமே.

---

39. அறும்படி - தீவினை அறும்படி, உறும் - பொருந்தும், சாரம் - அதன்பலன்.

40. சந்திரன் தேய்ந்து - சந்திரன் குறைந்து காணும் நாட்களில், பிறை முடிவிற்கு இட்டால் - பிறை முடிவிறும் நாளில் செய்தால்.

41. பூரணை - நிறைமதி, பிறை - வளர்பிறை, சிறுத்திருபால் - தேய்பிறை யாகி இருபக்கமாய்.

42. பிடியோரெட்டா - பிடியளவு உணவு எட்டாக, அந்தமோ - அதன் நிறைவோ, ஊணினும் - உணவினும்,

43 மாவினுந் தவிடு செம்பதிகமா மானபால் சள்ளை
யோவி நெய்கிழங்கு தீந்தேங் கனியுணவொன்றுக்கொன்று
மேவிய மேன்மையாகும் விரும்பலிவ் விரத மொன்று
பாவியா நோற்கிற் செய்த பாதகம் பாரு மாதோ.

44 நற்பசு விளங்கன் றூட்டி நாண்முலை பொழி பாலெந்நாட்
பொற்பின் மும்முலை பொழிந்தா லெழு போதிரண்டு
கற்புள முலைப்பாலெழ நாளொரு முலைப்பாலெழ நாளாய்
சொற்பெறு மொருசராசரந் திராயண மென்று சொல்லும்

45 மற்றொரு விரத மொக்க தோற்றிடில் வானந் தன்னில்
சுற்ற மூவகையுந் துன்ப நாதத்திற் சுழலாவணம்
முற்றிட வைக்கு மோராண் டுயற்றிடி லமுதுதரும்
பற்றிய மதிபதத்திற் பண்ணவர்க் கிறைவராவார்.

46 செழுந் திருவைய்யாறெய்தி செய்யவிவ் விரதந் தன்னைக்
கெழுந்திரு நினைத்த தெல்லாம் எளிதினிற் கிடைக்கும் பன்னும்
அழுந்திய பாவம் நீங்கியருள் சிவலோகம் சேர்வார்
தொழுந்தவ ரனேகஞ்செய்ய சுத்தராய் முத்தரானார்.

---

43. மா - மாவுணவு, சள்ளை - சுருக்குதல், பாதகம் - மிகுபாவம்.

44. நற்பசு - கன்றையுடைய பசு, பொற்பின் - மேன்மையாக, இப்பாடல் சராசரந்திராயண விரதம் குறித்ததாம்.

45. கிரிச்சிரவிரதவகையின் பிறிதொருவகை கூறியதாம்.

46. செய்ய - தூய்மையான, கெழுந்திரு - பொருந்திய நன்மை, பன்னும் - பற்றிய, அழுந்திய - வலிதாகிய.

47 உருத்திரா பதினோர் தேவ ருதையர் பன்னிருவ ரோடு
மருத்துவர் வசுக்களேனோர் வரதவித் தலத்தி னொற்று
திருக்க வுடையா ரானார் ஆதலாற் றிருவையாற்றிற்
கிருக்சிர விரதமொன்று கோடியாக கிளக்கு மன்றே.

48 நோற்றிட வல்லார் நல்ல நோன்புடையோன் மூவைவர்க்
காற்றுக பசிதினந் நோற்றிரு மறையவர்க்கேனு
மாற்றரு மப்பான் முப்பா னிரண்டதிற் பாதியல்லாற்
சாற்றிய வதனிற் பாதி தரிற்றரும் பயனையாறே.

49 பஞ்ச நதேசம் பாடா நாவினருமா பாடி
நஞ்சுனக் கோடு நில்லார் செவிடர் காணார் கண்ணில்லார்
கஞ்சனாய்க் கெரிக்கு நீசர் நினைத்திடாசன மனத்தால்
தஞ்சமென் றடையாரன்றோ பஞ்ச பாதகம் தாமாவார்.

50 பழவினைப் பாவ மிக்கார் பஞ்சநதேச மெண்ணார்
தொழவினைப் புரிந்தாய் நீயே யாதலாற்றுரிசு நீங்க
விழவினை யறாத விதி பெருந்தலமதற்கு வாழ்த்த
கிழவனை நோக்கி மைந்த கிருச்சிரம் புரிதி யென்றான்.

---

47. மருத்துவர் - தேவமருத்துவர், வசுக்கள் - அஷ்ட வசுக்கள், கோடியாக - மிகுந்த பலனளிப்பதாக.

48 நோற்றிட வல்லார் - விரதம் செய்தற்கு வல்லவர், தரில் தரும் கொடுத்தால் பயன் கொடுக்கும்.

49. பஞ்சநதேசம் - திருவையாறு, பாடா - துதி செய்யாத, கெரிக்கும் நீசர் - மனம் சுருங்கிவாழும் அற்பர்.

50. பழவினை - முற்பிறவி தொட்டு வரும் தீவினை, துரிசு - பாபம், கிருச்சிரம் - பிராய சித்தமான விரதம்.

51 இருஞ்சிய சீடனென்பான் தேவலன் தனைக் கொண்டெய்தி
அருஞ்செயற் கிரிச்சிரங்க ளனைத்தையு மனுட்டிப் பித்தான்
பொருஞ் செயற் பிறவித் துன்பப் புணரியின் கரையா யின்பந்
தருஞ் சிறப்புடைய பஞ்சநதித்தலந் தன்னுலன்றே.

52 தேசிகனவனே யென்று தேவலன் றெளிந்து கொண்டு
மாசறு பொன்னி மூழ்கி மாண்பொரு மடத்தி னாங்கண்
ஆசன சமாதி யோங்கு மறிவுடனனேகங் காலம்
ஏசிலா நோற்கும் போழ்தி லிறைவன் வந்தெதிர் நின்றானே

53 திளைத்தவ ரிடும்பை தீர்க்குந் திருவையாற் றுடையா னெய்தி
கிளைத்த பன்மிருதி கிருச்சிரனோன் பாலாகம்
இளைத்தனை யாது வேண்டிற் றொழுகெனத் திருக்கரத்தால்
இளைத்தவ னங்கந் தொட்டு மகிழ்ச்சியுற்றிட வந்தானே.

54 செம்பொற் சோதி தொட்ட பொருளியாவுஞ்சம பொனாகுமால்
அம்பொற் கிரியிலன்று கண்டோ மையாற்றின்று கண்டோமென்
றும்பர்க் கடவுளோர் துதிக்க வுடலமெல்லா மொளிவீசும்
பைம்பொற் பருதிபோ லிமைப்பனவ னெழுந்து பரவினான்.

---

51. இருஞ்சிய - உடனிருந்த, அனுட்டிப்பித்து - செய்யுமாறு நல்கி, புணரி - பிறவிக்கடல்.

52. தேசிகன் - குரு, மாசறு - குற்றமற்ற, பொன்னி - காவிரி, ஏசிலா - பழித்தலில்லாத

53. திளைத்தவர் - அனுபோகத்தல் செழித்தவர்கள், மிருதி - ஸ்மிருதி, ஆகம் - உடம்பு, அங்கம் - சரீர உருப்புக்கள்,

54. செம்பொற்சோதி - திருவையாறுடைய சிவன், அம்பொற்கிரி - கயிலை மலை, உம்பர் - தேவலோகத்தவர், பருதி - சூரியன்.

55 மெய்யா றுடையா றிடையே விழிமுன் வருவாயுருவாய்ப் போ
யய்யாறுடையாய் கடையேன் புகுதாய தகுதாய் அனையாய்
நைய்யாறுடையாய் தூயா நீயென் நானுரியேனானே னென்
றையா றுடையா றுடையா யடிகளே சரணஞ் சரணம்.

56 கண்ணாக கையா லுதிராற் காலாலிருகைப் படையா
வெண்ணாரிசை வென்றிடுவர் யெந்தாய் பரமானந்தா
நண்ணால் வினையால் வருதீ தென நானுரியேனானே
னண்ணா திருவையாறா வடிகேள் சரணம் சரணம்.

57 போற்றி னேன்திருத்தாள் வீழ்ந்து புல்லினாள் கிடப்பக் கிட்டி
யேற்றினான்று தீயினாலு மகிழ்ந்தன னெடுத்துக் கையா
னொற்றிடக் கிரிச்சிரத்தால் எந்தனை விரும்பே தென்ன
சாற்றினா னருளா லென்ன தாடொழு துரைக்க லுற்றான்.

58 பிறவியங் கடலில் வீழ்ந்தேன் பேதையர் கரமென்னுஞ்
சுறவியங் குதலி நேர்ந்தே நின்பதத் துணைத் திறத்து
மறவியங் கொழியச் சேர்த்து வரந்தரிற் தாழ்கிடப்போர்
துறவியங் கெய்தும் பேரே தருகென்றே தொழுது சொன்னான்.

---

55. விழிமுன் - காணுதற்கு முன்னாக வருவை, நைய்யாறு - வான நதியாகிய கங்கையை உடையவனே, தூயா - தூயவடி வினனே.

56. நண்ணால் - நானே அடைந்ததினால், அண்ணா - தலைவனே, திருவையாறா - திருவையாற்றுத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவனே.

57. புல்லினாள் - தழுவியமர்ந்த உமாதேவியார், கிரிச்சிரத்தால் - கிரிச்சிரவிரதத்தால், தாள்தொழுது - தாளை வணங்கி,

58. பேதையர் - மகளிர், சுறவி - சுறாமீன், குதலி - கடித்துக் குதறுதலினால், மறவி - மறத்தலாகிய தன்மை, தாழ்கிடப்போர் - வாழ்வில் தளர்ந்து இருப்போர்.

59 பிழைபல புரிந்தா ரேனும் பின்னரடியிணையில் வீழ்ந்து
குழைவொடு காத்த நல்லோர் குணமது வாதலாலே
தழையன சயகீடத்தோன் சார்பிலென் குறை எண்ணாதே
உழையறி வுணர்த்தி வந்திவ் வுடனிருந் தனனென் றோத.

60 உத்தம னவனும் வந்த யோகம் வேண்டி
அத்த நின்றிருவை யாற்றி லமர்கென வமர்ந்தா னின்னாட்
சித்தனால் வர மகிழ்ந்தத் தேவலர்க் கருளி யருள் கோன்
ஒத்தவ னுரைப்பவிவ் வாறாக வென்றுரைத் தானயன்.

61 தேசிகனெனக்குச் செப்பிய சிவபோகந் தான்
மாசற வனுபவத்தின் வெளிப்பட வந்து நீயும்
ஏசற வுலக மெங்கு மியங்குக விவனை நெஞ்சிற்
பூசனை புரிக சற்றும் புறநினைவற்க வென்றான்.

62 எமக்கொரு குறை செய்தக்கா லெம்மை நெஞ்சுடையார் சார்வாந்
தமக்கொரு குறைசெய் தார்க்கு சார்பு நாமல்லோ மென்றார்
சுமக்கும் வெம்பாவம் நீக்கத் தொடங்கியோர் நம்மை வேண்டின்
நமக்குள வன்பர்க் கணியாய் நாடோறுந் தொழுவ ரென்றான்.

---

59. குழைவொடு - தாழ்மையோடு. உழையறி - அருகார்ந்த அறிவினைப் புகட்டி,

60. அத்த - அத்தனே!, இன்னாள் - இவ்வாறமைந்த நாளில், அருள்கோன் - அருளுமரசனான சிவன், அயன் - பிரமன்.

61. தேசிகன் - ஞானகுரு, ஏசற - பிறர் குறை கூறுதல் ஒழிய, புறநிலை - புறமாய்கைச்சூழல்கள்.

62 சார்பு - மற்றுக்கோடு, உதவி, அணியாய் - அடியார்கள் வரிசையில் அழகு பெற்றவராய்,

63 இன்ன தாபதர்க் குள்ளகத் திருந்தளி யிட்ட
வன்ன மானொளி புழுவெனத் தோற்றலு மந்த
தொன்னபாவ மென்றெண்ணினன் மவுனியாயிருந்தான்
தன்னமாதவன் மேன்மையாற் புனிதமாய்ச் சமைந்தான்.

64 நேசன் பஞ்சந தேசன் மேல் வைத்து நீவந்து
வாசஞ் செய்து பல் கிரிச்சிரமுடித்தலில் மறையோர்
நாசஞ் செய்ததே நின்ற பாவமு மறிவேறு நயனக்
காசந் தீர்ந்தது முந்தியுங் கண்டனை கண்டாய்.

65 துவர் யாவையுந் தீர்ந்து நல்வீடு வருந்துணிவாற்
கவரு கின்றனை யுன்னினை வப்படிக் கருவாம்
தேவரே ஆச்சிரமத்தினரெனு மித்தலத்திற் றங்கிய
எவரு மெய்ப்பயன் தருமே யக்கதி தருதும் நாமென்றான்.

66 நாலொழுக்க நாற் குலத்தினார் நாயக கெரித்திடுவோர்
மேலொழுக்க மீனீசரும் மித்தலத்து மேவிடிற்
சாவமுத்தியோர் வகையலாற் றனித்தனி யில்லையால்
சீலமுற்ற வில்லறத்தி நீ நிற்கெனச் செப்பினான்.

---

63. தாபதர் - தபோதனர், உள்அகம் - உள்ளத்தமைந்தமனம், மவுனி - பேசாத நிலை பெற்ற தவயோகி, புனிதமாய் - தூயபக்குவ நிலையாய்.

64. வாசம்செய்து - தங்கிவசித்து, கிரிச்சிரம் - பாபவிமோசன விரதம், நயனக்காசம் - கண்மாசு நோய், முத்தி - மோட்சம்.

65 துவர் - வெறுப்பான துன்பம், நல்வீடு - மோட்சம், ஆச்சிரமத்தினர் - ஆச்சிரமத்தில் வசிக்கும் முனிவர், அக்கதி - அவ்வாறான நற்கதி,

66. நாற்குலம் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆகிய நான்கு சாதிகள், சீலம் - மேன்மை,

67 இல்லறத்தி லிக்காயத்தி லிச்சை நாளெல்லை
யல்லலுற் றுலகெங்குமாய்ச் சஞ்சரித் தமர்ந்தா
லெல்லையற்ற நல்லின்பவீ டெய்த வேண்டினையேல்
வல்ல யாக்கை விட்டடைக வென்றமலனு மறைந்தான்.

68 பெற்ற பயனென்றே வரன் பணியேற்கும் பணிபேணிச்
சொற்ற வாக்கி லையாற் றிடைவிடாது தொல்யோகங்
கற்றவர் கெடச் சஞ்சரித் துலகெலாங் காய
முற்ற வீழ்த்தி மேலுல கெய்தினான் முத்தியினுலகம்.

69 ஓதருஞ் சயகீடனு முலகெலாஞ் சஞ்சரித்து
காதரந் தருமுடல்மே காந்தமா மின்பத்துப்
போதரும் படியாயின் புண்ணிய நதி சூழா
ஆதரம் பெறத் திருவையா றறந்தருள் பயத்தால்.

70 திருந்து தேவலன் காதையீ துரைத்தனர் செவியின்பத்
தருந்தி னோர்க்கருங் கிருச்சிர முழுது மடைவிற்
பொருந்தி னோர் சிவயோகம் புரியடைதல் புரிந்தோ
ரிருந்தவப் பயனெய்துவரென இன்பமுடன்
முனியிசைத்தான்.

[ கிரிச்சிர ரத்தியாயம் முற்றும் ]

---

67. இக்காயம் - இவ்வுடல், சஞ்சரித்து - திரிந்தலைந்து, அமர்ந்தால் - திருவையாற்றில் தங்கினால்,

68. சொற்ற வாக்கில் - சொன்ன வாக்கின்படி, தொல்யோகம் - பழமையான வேதநெறிப்பட்ட யோகம், காய - பற்றுவிட, முத்தி - முத்திப்பேறு.

69. காதரம் - பற்றுக்கோடாகும், போதரும் - செயலாற்றும், ஆதரம் - பயனுள்ள ஆதரவு,

70. திருந்து - வாழ்வில் திருந்திய, காதை - கதை, புரி - செய்து, அடைதல் - நற்பயனடைதல், இருந்தவப்பயன் - உறுதியான தவத்தான் வரும் பயன்.

# பிரதக்கணம்

1 கிருச்சிர விரத மெல்லாங் கிளைத்திடி லெவரும் நேரலா
ரருச்சனை தியான ஞானங் கலியுகத் தரிதே யென்று
முருச்சிறு மக்கட் கெல்லா மும்பார முத்தியாகுந்
திருச்செறி வெய்தி நின்ற சேயிழைக் கவனுஞ் சொல்லும்.

2 முன்னொரு காலத் தய்யா ரெய்திய முனிவ ரேவளள்
மின்னவரவரைப் போற்றி இசைத்தலு மிறைவன் தோன்றி
பன்னிய மறைத் தலத்திற் பாரின விலிங்கந் தன்னை
பொன்னியல் கோவில் சூழும் புண்ணியன் மேன்மை யென்றான்.

3 வலம் வரும் பொருட்டுக் கோயில் வைத்திடும் அடியொன்றுக்குப்
பலமொரு புரவி வேள்வி சூழ்வரிற் பரம முத்தி
நலனுற வடிப்படுத்த நீர்மையா மாதலாலே
புலனுறத் தெரியிலீது போலொரு தவமு முண்டோ.

4 வலத்தினால் சுழலுத லன்றி வலமுட னிடமுஞ் சூழ்தல்
சொலத்தகு மிடத்தாற் சூழ்தல் சோம சூத்திரத்தாற் சூழல்
தலத்துடல் புரண்டு சூழ்தல் தண்டெனப் பணிந்து சூழ்தல்
பலத்தவை அறுவகைத்தா னமை வலம் வருதல் மாதோ.

---

1. கிளைத்திடில் - வளர்ந்து வருமாயின், உருச்சிறு - வாழ்க்கையில் எளிமையான, செறிவெய்தி நின்ற - திண்மையாக நின்ற, சேயிழைக்கு - சிறந்த அணிகலன்களணிந்த மங்கைக்கு.

2. ஏவளள் - பணிப்பெண், இசைத்தலும் - சொன்னவுடன், பாரின விலிங்கம் - அருள் பெருக்கும் சிவலிங்கம்.

3 புரவிவேள்வி - அசுவ மேதயாகம், புலனுற - அறிவிற்குப் பொருந்த, ஈது - இப்பிரதக்கணப்பலன்.

4. கோயில் வலம் வருதற் கமைந்த ஆறுவகை முறை களை உணர்த்திற்று இப்பாடல்.

5 நிறைத்த முன்னான்கு நான்கு நிலமையோர் கடவே
யீற்றின்
உரைத்திடு மிரண்டும் யார்க்கும் உரியவாம் பிரமசாரி
தரைத்தரு வலமூவர்க்குந் தவநிலை இல்லறந் தான்
புரைத்தவ மிருவர் பின்னோர் புரியலாம் புகலுங் காலே.

6 வனத்திடை நோற்கின் றோர்க்கு வகுத்தது துறவிக் காகும்
கனத்திடு துறவின் யோகி கானகந் தன்னி னோர்க்கும்
எனத்தவர் விதியுஞ் செய்க இலங்குதல் துலங்கும்தங்கள்
மனத்துள ஞானி சோம சூத்திரம் பெருக வென்றான்.

7 கலங்கழி மகளிர் தாமே துறவினர் கதியே செய்க
நலங்கல மின்னார் தங்கள் நாயகர் உய்தல் செய்க
துலங்கு பன் மூன்றாம்மந்திர சோமசூத்திரத்தானம்மை
வலங்கலந் தெய்தல் யார்க்கும் உரித்தென வழங்கினானே.

8 அவரவர்க் குரிய வாற்றிற் செய்யி லொன்றாகிச் சேர்ந்து
வரமதிச் சூத்திரத்திற் செய்யிலொன்றிரண் டிலக்கத்
தவர் மகிழ் தண்டச் சூழவே கோடி தனங்கச் சூழ்வு
நவமுட னொன்றுள் பெற்ற நொடியர் நவிலுங் காலே.

---

5. நிறைத்த - நிறைவாகக் கூறிய, பிரமசாரி - பிரமசரிய விரதம் பூண்டவர், புரைத்தவம் - ஒத்ததவவொழுக்கம்.

6. வனத்திடை - காட்டின் நடுவே, இல்ங்குதல் - விளக்க மாகுதல்.

7. கலங்கழிமகளிர் - மங்கலம் கழிந்த பெண்கள், கதியே - முறைமை யினையே, நலங்கலமின்னார் - மங்கலப் பெண்கள், நாயகர் - கணவன்.

8. தண்டச் சூழல் - தண்டனிட்டு வலம் வருதல், தன் அங்கச் சூழ்வு - தன்னுடைய அங்கப் பிரதச்சினம்.

9 அங்கத்திற் புரளுஞ் சூழ்வை வலத்துட னிடமு மாகிற்
அங்கத்தி லொன்றனந்தஞ் சனிப்பிரதோட மாகிப்
புங்கத்திற் றெரிசித் தேற்றிச் சூழ்ந்திடிற் புலவராதி
தங்கட்கு மகிழ்ச்சி செய்து கடனெலாந் தனக்கு மாதோ.

10 ஏற்றின் பின்னின்றி டத்தாற் றண்டிபாலேகி மீள
வேற்றின பின் வலப்பாற் சோமசூத்திரத்தளவு மீண்டாங்
கேத்தினைச் சண்டனைச் சூத்திரத்தினைச் சண்டனொடு
மேற்றினைப் பின்னுங் காணிற் சோம சூத்திர மென்றோதும்.

11 சோம சூத்திரப் பாலமிதுண்டு சூழ்தலால் தனுக்கந்த
நாமமா மதன தெல்லை நாமிவண் வகுத்த லுற்றார்
கோமுகை கொடுத்து நம்பர்க் காட்டிய கொதிதீர்த்தம்
போமிட மடியிரொன்பா னளவுண்டு புனித மாதோ.

12 யாதொரு வலம் வந்தாலு மிப்பெருஞ் சூத்திரத்தாற்
போதுறா தப்பாற் சூழினொன்று மூன்றவை யிதம் போற்றார்
மீது போய் மிதிக்கி லொன்றாகவே மேவு மிப்பாற்
காதலாற்றலை கை கூப்பி கண்கணீர் பொழியு மப்பால்.

---

9 இப்பாடல் அங்க பிரதக்கணம் செய்யும் முறைமையும் பலனும் கூறியதாம்.

10. ஏற்றின் - இடபதேவரின், தண்டிபால் - தண்டீசர்இடத்து,

11. சோம சூத்திர விரதத்தின் அனுசரிப்பு கூறியதுடன் அதனால் ஆகும் பலனும் கூறப்பெற்றது.

12. யாதொருவலம் - ஆறுவகை வலங்களிலொன்று, போதுறா - இதுவல்லாமல் பலன் வராது,

13 பயமிகுப்பயன் நடந்து ஒன்றுபற்று தலாத நாத
நயத்துதி யறாது சொல்லி வேறொன்று நாவிற் கூறா
தயற் பெயருடன் கூடாது நிழல்களி னடியிடாது
பெயர்ச்சி கொண் டெய்தலிதே பேறெனப் பின்னுஞ் சொல்லும்.

14 அறந்தயங்கு மையாற்றி லெவ்வாற்றி லாயினு மோர்
திறஞ் சுழன்றன ராயினும் விதிப்படி சிறிது மாறி
மறந்தியங்கின ராயினு மறக்கரு முத்தியின்றிப்
பிறந்திடும் பிறப்பொன்றிலே யெய்துவர் பெரிதும் காணீர்.

15 செம்பொற் சோதியர் தமை வலஞ் செய்திடில் வேறா
யிம்பர்க்குள வலமாயிரங் கோயி னிலக்கம் காணின்
பம்பிச்சேர் பயன் பெறுவர் நாமவரெனப் பயில்வோ
ரும்பர் சூழ்பயன் யாவையு மெளிதினில் பெறுதல் லுண்டாம்.

16 பரிச்சித் தர்ச்சனை செய்து முன்பணிந் திசைத்துப் போற்றித்
தெரிசித்தோர் வலஞ் செய்யினு மிவற்றினோர்க் கேவலாற்
குரிசிற் கனபுரப் புரியினுங் கோடி முற் பிறப்புப் பெற்றே
புகிரிபுன்ற தென்றெழுவத் திடுந் தொழிலதால் என்றான்.

---

13. பயமிகுப்பயன் - பயனினும் மேலான நற்பயன், துதி - போற்றி செய்தல், பெயர்ச்சி கொண்டு - மேல் அடி பெயர்த்துவைத்து.

14. அறம் தயங்கும் - அறச்செயல்கள் நிலைக்கும், மறந்து இயங்கின ராயினும் - மறந்தும் செயற்பட்டாராயினும்,

15. இம்பர் - இவ்வுலக மக்கள், பம்பிச் சேர் - ஒன்றாகக் கூடிச் சேர்ந்த, பயில் வோர் - விரதம் அனுட்டிப் போர்,

16. பரிச்சித்து - ஸ்பரிசம் செய்து, குரிசில் - மேலானவன்,

17 அந்திநெய் விளக்கிட்டொரு வலம்வரி லில்லில்
இந்தனத் திடை கனலேர் யிட்டவர் னோக்குஞ்
சிந்தை முத்தியி லுண்டெனிற் திருவை யாறெனு
மெந்திருத் தலத் தெமை வலம்புரிக வென்றிசைத் தான்.

18 நாடி மாத மோர் நாள்வந்து நமது நலந்தரு பொன்னி
யாடி செப்பேசன் கோயிலோர் வலம்வரிலனேக முற்பிறப்பு
கோடி கோடியிற் கட்டிய பாதகக் குழுவைச்
சாடி யப்பரு வெற்பலையாம் கடற்றகாதது போக்கிக்
காக்கும்.

19 இன்னவன் புகன்றனனென முனிவர் உரைத்தார்
இன்னவாறு நீயோது ஈது வேதப்பிரியன் சிர
மன்னன் வெற்றி வெண்குடையினோன் மாண்பதாய்
வகுத்துச்
சொன்ன ஆரண முத்தியின் சுரித மேற் றொகுப்பாம்.

பிரதக்கணம் முற்றும்
யோகச்சருக்கம் முற்றும்.

---

17. அந்தி - அந்திப் பொழுதில், இந்தனம் - தீக்குண்டம், சிந்தை- அறிவு, முத்தியிலுண்டெனில் - முத்தியிலுண்டானால்,

18. பொன்னி - காவிரிநதி, கட்டிய - தீவினையாற் சேர்த்த, பாதகக் குழுவை - பாபச்செயல்களாகும் பொதியை, சாடி - தாக்கி, போக்கி - முழுவதும் போக்கி, காக்கும் - பாது காக்கும்.

19. நீயோதுஈது - நீபிறருக்கு எடுத்துரைப்பாயாக, இந்நெறி, மாண்பதாய் - மேலானதாய், சொன்ன ஆரணமுத்தி - வியாசர் முதலியோரால் சொல்லப்பட்ட வேதங்களின் தத்துவார்த்தம், சுரிதம் - வேதங்களின் கருத்தாகும் ஸ்மிருதிகள், தொகுப்பாம் - வேதாகமஸ்மிருதி களின் கருத்துத் தொகுப்பாகவே இப்புராணம் பயன் தருவதாகும்.